
உ

மஹான் வண்ணச்சரபம்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் அருளிய

# பழனிப் பிள்ளைத் தமிழ்



பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தான

கும்பாபிஷேக வெளியீடு

29—8—1960

அறங்காவலர்கள் (*Trustees*) :

1. திரு. P. S. K. லக்ஷ்மீபதி ராஜு, M.L.A., அவர்கள்
(Chairman, Board of Trustees)
2. திரு. V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள்
3. திரு. P. S. சீனிவாசன் செட்டியார் அவர்கள்
4. திரு. S. R. ஆறுமுகம், M.P., அவர்கள்
5. திரு. A. S. மாணிக்கம் பிள்ளை அவர்கள்

ஆலய நிர்வாக அதிகாரி

திரு. C. S. தீனதயாளு, B.Sc., B.L., அவர்கள்

உ

வேலும் மயிலும் துணை

மஹான் வண்ணச்சரபம்

## ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்

அருளிய

# பழனிப் பிள்ளைத் தமிழ்

அணிந்துரை :

உயர்திரு. அ. உத்தண்டராம பிள்ளை, B.A., B.L., I.A.S. அவர்கள்

சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர்

உரையாசிரியர் :

## குகஸ்ரீ ரசபதி அவர்கள்

5 MAY 1975

பழனி

ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தான

கும்பாபிஷேக வெளியீடு

சார்வரி
ஆவணி, 14 } 1960 விலை ரூ. 1-50

முதற் பதிப்பு 29-8-1960

OFFI... 5 MAY 1975

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| | அணிந்துரை ... | ரு |
| | பாராட்டுக்கவி ... | எ |
| | முன்னுரை ... | க |
| | ஆசிரியர் வரலாறு ... | கரு |
| | ஊஞ்சல் பாட்டு ... | உஎ |
| | ஆசிரியர் (படம்) ... | உஅ |
| 1. | காப்புப் பருவம் ... | 1 |
| 2. | செங்கீரைப் பருவம் ... | 42 |
| 3. | தாலப் பருவம் ... | 68 |
| 4. | சப்பாணிப் பருவம் ... | 91 |
| 5. | முத்தப் பருவம் ... | 115 |
| 6. | வருகைப் பருவம் ... | 142 |
| 7. | அம்புலிப் பருவம் ... | 167 |
| 8. | சிற்றிற் பருவம் ... | 190 |
| 9. | சிறுபறைப் பருவம் ... | 211 |
| 10. | சிறுதேர்ப் பருவம் ... | 234 |


சாது அச்சுக்கூடம்

மயிலாப்பூர், சென்னை—4

# அணிந்துரை

(திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., ஆணையர்,
அறநிலையத்துறை, சென்னை)

'ஆறுசமயக் கடவுள் வேறுவேறின்றி யான்
ஒருவனே அங்கங் கிருந்(து)
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே'

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தில்' என்பது யாவருமறிந்த ஒரு பழமொழி. தெய்வத்தையே குழந்தையாக அநுபவித்துப் பாடுவது நம் நாட்டின் மரபு. அந்தப் பாடல்களைப் பிள்ளைக்கவி, பிள்ளைத்தமிழ் என்று கூறுவர். தமிழ் இலக்கியத்திலுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் பிள்ளைத்தமிழ் ஒன்று. அது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்ற இரு பிரிவாக வுள்ளது. பிள்ளைத்தமிழில் பத்துப் பகுதிகள் பத்துப் பருவங்களாகப் பாடப்பெறும்.

குழந்தை பிறந்த ஏழாவது நாள் காப்பிடலை யொட்டியது காப்புப் பருவம். பொருள் தெரியாத ஒரு ஒலியை எழுப்புதல் அல்லது ஒருதாளூந்திக் குழந்தை ஆடுதல் இதைச் செங்கீரைப் பருவம் என்பர். குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல் தாலப் பருவம். (தால் ஆட்டுதல் - நாக்கு அசைத்தல்.) குழந்தை இரண்டு கைகளையும் கொட்டிக்கொண்டு, கைகளின் வலிமையால் நகர்ந்து செல்வது சப்பாணிப் பருவம். முத்தப் பருவம் என்பது குழந்தையை முத்தந் தர அழைப்பது. வாரானை அல்லது வருகைப்பருவம் என்பது தளர்நடையிட்டு வரும் குழந்தையை வா என்று

அழைப்பது. **அம்புலிப் பருவம்**, சந்திரனைக் குழந்தையுடன் விளையாட வாவென்று அழைத்தலைக் கூறுவது. மேற் சொன்ன ஏழுபருவங்களும் இருவகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை.

பெண்பால் பிள்ளைத்தமிழில் **அம்மானைப் பருவம்** பாட்டுடைத் தலைவியை அம்மானையாடக் கூப்பிடுவது; **நீராடற் பருவமும், ஊசல் பருவமும்** நீராடவும் ஊசலாடவும் அழைப்பது. ஆண்பால் பிள்ளைத்தமிழில் சிறுமியர் சிறு வீடுகட்டி விளையாடுவதைப் பாட்டுடைத் தலைவர் அழிக்காதிருக்க வேண்டுவது **சிற்றில் பருவம்.** அத்தலைவரை சிறுபறை முழக்கும்படியும், சிறுதேர் உருட்டும்படியும் வேண்டிக் கொள்வது **சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம்** என்பன.

பிள்ளைத்தமிழ் கடவுளர் பேரிலும் அடியார் பேரிலும் பாடப் பெற்றிருக்கின்றன. விநாயகர், அம்பிகை, முருகன்மேல் பாடப் பெற்றவை பலவுள. குமரகுருபரரின் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், வைத்தீசுவரன் கோயில் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தர் இயற்றிய திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், சிவஞான சுவாமிகள் அருளிய குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், சிதம்பர சுவாமிகள் பாடிய திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ், மார்க்கசகாய தேவரின் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், கவிராஜ பண்டாரத்தையாவின் திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், இலக்கண விளக்கம் - வைத்திய நாத தேசிகர் இயற்றிய மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் முதலியவை சிறந்த பிள்ளைத் தமிழ் நூல்களாகக் கருதப்படுகின்றன. இவற்றோடு ஒத்த சிறப்புடன் சேர்த்து எண்ணப்படும் பெற்றியது தண்டபாணி சுவாமிகளின் **பழனிப் பிள்ளைத்தமிழ்** என்னும்

சிறந்த நூல். இந்த ஆசிரியர், திருநெல்வேலியில் சைவ வேளாளர் குலத்தில் செந்தில்நாயகம் பிள்ளைக்கும் பேச்சி முத்தம்மைக்கும் கி. பி. 1839-ஆம் ஆண்டு திருமகனாய்த் தோன்றினர். **சங்கரலிங்கம்** என்பது இவர் பிள்ளைத் திருநாமம். கருவிலே திருவாய்க்கப் பெற்ற இவர் இளமையிலேயே கவிபாடுவதில் வல்லுநராய் விளங்கினர். வள்ளியூர்மலை சென்று முருகன் திருமுன் கோவணம் காவியுடை தரித்து, துறவுக்கோலம் பூண்டார். முருகப் பெருமானையே தமது வழிபடு கடவுளாகக் கொண்டார். திருப்புகழின் சந்த நயம் அமையப் பாடல்கள் பாடியமையின் **திருப்புகழ்ச் சுவாமிகள்** என்றும், கையில் தண்டுன்றிய படியே எப்போதும் காட்சியளித்தபடியால் **தண்டபாணி சுவாமிகள்** என்றும், முருகன் தொண்டரானமையால் **முருகதாச சுவாமிகள்** என்றும், எளிதில் எவரும் பாடமுடியாத வண்ணப் பாக்களை விரைவில் பாடும் வல்லமையுடையவராய்த் திகழ்ந்தமையால் **வண்ணச்சரபம்** என்றும் அழைக்கப்பட்டனர். அடிகளார், சென்னை, திருவண்ணமலை, மதுரை, இராமநாதபுரம், காரைக்குடி, குன்றக்குடி முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டுக் கடைசியாக திருவாமாத்தூர் என்னும் சிவதலத்தில் வந்து தங்கினர்கள். வண்ணத்தியல்பு, தமிழலங்காரம், புலவர் புராணம், தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், திருவாமாத்தூர்த் தலபுராணம் முதலிய பல நூல்களை இயற்றியருளினர்கள். கி. பி. 1898-ல் 59-வது வயதில் முருகன் திருவடி நீழல் அடைந்தார்கள்.

சுவாமிகள் இயற்றிய நூல்களில் ஒன்று **பழனிப் பிள்ளைத் தமிழ்** என்னும் அரிய நூல். இது, சொல்நயம், பொருள்நயம், பக்திச்சுவை பொதிந்த சிறந்த பிள்ளைப் பாட்டு. முத்தப் பருவத்தில் "கோங்கே அனைய........" என்று தொடங்கும் பாட்டில், திருமலைமே லிருந்து உயிர் விட எண்ணி உருண்டபோதும், வேங்கையினல் வெருட்

டப்பட்ட போதும் முருகன் காத்தருளிய தம் சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

வடதிசையில் தலைவைத்து மறலிதிசைக் கால்நீட்டி
உடலையந்தக் குன்றத்தின் உச்சியினின் றுருட்டிவிட்டேன்
விடலையிடுந் தேங்காய்போல் வேறுபட்டுச் சிதருமல்
மடமடெனக் கொண்டங்கோர் மண்தரையில் விட்டதுவே.

இவ்வரிய **பழனிப் பிள்ளைத்தமிழ்**, 29—8—60-ல் நடக்க இருக்கும் **பழனியாண்டவர் கோயிலின் மகா கும்பாபிஷேகத்தின்போது** வெளியிடப்பெறுவது மிகவும் பொருத்தம். இந்த நூலுக்கு **குகஸ்ரீ ரசபதி** அவர்கள் சிறந்த உரையொன்றையும் எழுதி யிருக்கிறார்கள். அதில் அவர்கள் பொழிப்புரை, விரிவுரை முதலியவற்றை எளிய இனிய நடையில் யாவரும் படித்து உணர்ந்து பயன்பெறும் வண்ணம் அரும்பாடுபட்டு எழுதித் தந்துள்ளார்கள். அவர்களுக்கும், இந்தச் சிறந்த நூலை வெளியிடும் பழனி தண்டாயுதபாணி தேவஸ்தான தருமகர்த்தர்களுக்கும் தமிழுலகமும் சைவ உலகமும் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி !

அ. உத்தண்டராமன்

உ

குருவே துணை

## பழனிப் பிள்ளைத்தமிழ் விரிவுரை குறித்த

# பாராட்டுக் கவி

(தி. செ. முருகதாச ஐயா அவர்கள்)

திருநெல்லைப் பதியினிடை தோற்றுதண்ட
பாணியண்ணல் செவ்வே ளன்பால்
வருதன்னோர் இளவயது முதற்றமிழ்ப்பாட்
டளவிலவா வழுத்தி மேன்மை
மருவும்பல் பதிதொறுஞ்சென் றேத்திவரும்
நாளிலன்பர் வழுத்துஞ் சீர்தோய்
தருசீர்த்தென் பழனிமலைத் தண்டபா
ணியின் றுதிப்பாச் சாற்றி னனால். க

ஆயிரமா யிரமாகப் பனுவல்பல
அறையுமின்னோன் அருட்சீர் வேண்டி
மாயிருஞா லம்புகழ்சீர்ப் பழனியா
யிரப்பனுவல் வழுத்த லுற்றான்,
தோயிசைப்பிள் ளைக்கவியென் றதனிலுற்ற
இசைத்தனியே துலக்கி யன்பர்
வாயிசைக்கும் படிபதிக்க வேண்டுமென
மனத்தாவல் வளர்ந்த தன்றே. உ

அந்நிலையில் இறைபணியேற் றிடும்விவே
கானந்த அண்ணல் தூண்டச்
செந்நிலையார் பொருள்விளக்கத் தொடுபதித்தல்
பலர்க்கும்நலம் செய்யு மென்று
முன்னியெழிற் சென்னையுறை ரசபதியாம்
பெரியனிட மொழிந்தா ரன்னோன்
சென்னையிலேற் றுரைவகுத்தான் இனியரசம்
பலபதியும் சிறப்ப தாயே. ௩

அறநிலயப் பாதுகாப் புக்கழகத்
தவிராணை யாள ராகித்
திறமுறத்தொண் டாற்றிடுமுத் தண்டரா
மப்பெயரிற் றிகழுஞ் சீலன்
உறவுறுமெய் யன்பதனு லணிந்துரையோ
டாணையுந்தந் துதவ லாலே
நறவமைதீங் கனிச்சுவைபோற் பழனிப்பிள்
ளைத்தமிழ்சீர் நண்ணிற் றம்மா. ௭

ஆண்டவன்றன் தெரிசனமும் திருநீற்றுப்
பிரசாத அருளும் கொள்ளப்
பூண்டநற்பே ரன்புகொடு வருமன்பர்
கைக்கொண்டு புகழ்ந்து பாடி
நீண்டபே ரன்பினராய் வாழஇந்நூல்
ஒருதுணையாய் நிலவி யென்றும்
காண்டகுநல் இன்புதவு மெனலறிவார்
உண்மையுணர் கருத்தி னோரே. ௮

தேவத்தா னப்பதிப்பா யிந்தநூல்
வெளிவரச்செய் சீரி யோரும்
பாவிற்காம் இனியவிரி வுரையெழுதும்
ரசபதிப்பேர் பாவ லோரும்
ஆவற்கோ ரிலக்கியமாக் கொண்டிதனைப்
படித்துணரும் அன்பி னோரும்
சேவற்கே தனப்பழனித் தண்டபா
ணியினருள்சேர் திறத்தி னோரே. ௯

இங்ஙனம் :

சார்வரி ஆண்டு
ஆவணித் திங்கள் 14-நாள்
29—8—1960

ஸ்ரீதண்டபாணி சுவாமிகள் பெயரர்
தி. செ. முருகதாச ஐயா,
ஷை தண்டபாணி சுவாமிகள் மடம்,
அடிவாரம், பழனி.

மயிலுமயிலுந் துணை

உ

தெய்வமே துணை

# முன்னுரை

சித்தியெட்டும் நல்கித் திரும்பாதுன் தாளுள்வைகும்
முத்தியினும் சேர்த்தருள முன்னுவாய் — எத்திசையும்
போற்றும் பழனிப் பொருப்பிற் புகழ்திருக்கூத்(து)
ஆற்றும் சிவகுருநா தா (பழனி வெண்பா மாலை)

அருட்கோல் தாங்கிய அத்தன் பழனி ஆண்டவன். அவன் திருவருள், நலம் விளைய உலகை நடத்துகின்றது. அனுபவிகள் கூறும் அறிவிப்பு இது. அதன் உண்மையை, ஒன்றும் போதா எளியேனும் உணருமாறு செய்யும் அத்திருவருட்கு, யாது கைம்மாறு செய்ய இயலும்?

ஒரு சமயம், சிறந்த பழனியைச் சேவிக்கச் சென்றேன். முதல்வன் வழிபாடு முடிந்தது. தனியிருந்தேன்; நிமலனை நினைந்தேன்; அதன்பின் எழுந்தேன். அப்போது காலை மணி ஆறு.

எந்தவூர்? என்றது ஒரு குரல். திடுக்கிட்டுத் திரும்பினேன். வைதிகக் கோல அந்தணர் ஒருவர், எதிர் நின்றார். அவர் கோலம் கண்டு கும்பிட்டேன். பிரசங்க பூஷணம் குகஸ்ரீ நீங்கள்தானே என்ற கேள்வி எழுந்தது. அப்படித் தான் அன்பர்கள் அழைக்கிறார்கள் என்றேன்.

தண்டபாணி சுவாமிகள் அருளிய பழனிப் பிள்ளைத் தமிழ் அருமையாக இருக்கிறது. அதற்கு உரை எழுதப்படாதா என்றார் அவர்.

சுவாமி! அப்படி ஒரு நூல் இருப்பதை அடியேன் அறியேனே என்றேன்.

காலம் வரும்; இனிய அப்பணியில் ஈடுபடுவீர்; இப்படி வாரும் என்றார். தொடர்ந்தேன். ஒரு கொத்து

வாழைப் பழம்; ஒரு படி பஞ்சாமிர்தம் அன்பொடு வாங்கி யளித்தார். எழுதும் உரைக்கு இது அச்சாரம் என்றார். கலகல என்று நகைத்தார்.

விதிர்த்தது உடல். மீட்டும் வணங்கினேன். ஆசி செய்தார். வருகிறேன் என்று விரைந்தார். விரும்பிப் பெயரை வினவினேன்; வேங்கடசுப்பையர் என்றார். இருப்பிடம் வினவினேன்.

நாடு முழுதும் நடமாடும் உத்யோகம். ஓயாது ரயில் பயணம். அடுத்த வண்டியைப் பிடிக்க வேண்டும் என்று அதிவேகம் காட்டி நடந்தார்.

காணாத நூலிற்கு உரையெழுதக் கட்டளை; அதற்கு அச்சாரம் வேறு என்று அதிசயித்தேன்.

அதன் பின் சென்னைக்குத் திரும்பினேன். அந்நூல் எங்குளது என்று பலரிடம் வினவினேன். நூல் கிடைத்து, சிந்தித்து, உரை எழுதிய பின், அதை வெளியிடுபவர் யார் என்ற நினைவும் இடையிடை எழுந்தது. நாலைந்து ஆண்டு கள் இடையில் நடந்தன.

பழனிப் பிள்ளைத் தமிழ்க்கு உரை யெழுதி உதவுக என்று, பழனி தேவஸ்தானத்திலிருந்து, ஒரு நாள் திடீ ரென்று ஒரு திருமுகம் வந்தது. அதனுடன் பழனித் திரு வாயிரமும் இருந்தது.

காலம் வரும் என்று அன்று பழனியில் கட்டளை. இன்று அதே இடத்திலிருந்து உத்தரவு. நினைந்த நெஞ்சம் நெகிழ்ந்தது. அவ்வமயம், கண்ணீர்தான் பழனிக்கு நான் சமர்ப்பித்த காணிக்கை.

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகளின் பெயரரும், திரு. செந்தில் நாயகம் தந்த செல்வருமான திரு. தி. சே. முருகதாச பிள்ளையவர்கள், கௌமாரக் குறிப்புப் பல, அன்பொடு அஞ்சலில் அனுப்பினார்கள். அக்குறிப்புகள், பலவகையில் அடியேற்குப் பயனளித்தன.

உரை எழுதும் பணியில் உறவு பூண்டேன். நிறைவு பெற்ற பின், பதிப்பவர் முதலில் முன்னனர். பின் அதிக செலவு ஆகுமென்று அஞ்சிப் பின்னனர்.

உயர்திரு. T. H. விவேகாநந்தம் பிள்ளை B.A., L.T. அவர்களிடம், ஒருநாள் இதைக் குறிப்பிட்டுக் கூறினேன். அவர், எங்கள் வித்தகத் தலைவர்; அருங்கலை விநோதர்; பரம கருணையர்; பக்த சிரேட்டர்; அவர்களிடம் இது குறித்து விண்ணப்பிக்கிறேன்; நீரும் வாரும் என்றார்கள். அப்படியே சென்றேன். அருள் காட்டும் இன்மொழியும், அன்பு காட்டும் திருமுகமுமான அறநிலயப் பாதுகாப்பு ஆணையாளர் உயர்திரு. A. உத்தண்டராமன் பிள்ளை I. A. S. அவர்களைக் கண்டோம். விவரத்தை அவர்களே விவரித்தார்கள்.

புனிதச் செயல்களால் புகழ்கொண்ட அப்பெருந்தகை, என்கடன் பணி செய்து கிடப்பதே என்று இருப்பவர்கள். அப்பரது உழவாரப் படையை உணர்பவர்கள். சிறந்த அவர் செயல்களை, பரந்த தமிழ்நாடு பறையறைகின்றது. அறநிலயப் பாதுகாப்பிலாகா நிர்வாக மாளிகையில் உள்ள கோபுரமும், வேலும் மயிலும், அவர்களது நினைவிலிருந்து உருவாகி நிலைத்தவை. இவைகளை என்றும் நாடு எண்ணி மகிழும்.

அவர்கள் அவ் விண்ணப்பத்தை ஏற்று, பழனித் தேவத்தானமே இதைப் பதித்து வெளியிடும் என்றார்கள். அதற்கு ஆன யாவும் செய்தார்கள்; அதனுடன் இவ்வுரைக்கு ஒரு அணிந்துரையும் அன்பொடு அருளினர்கள்.

அதன் பின்னும் மூன்று இறைபணியாளர்கள் நினைவில் ஊறியிருந்து, பதித்தனுப்பும் பொறுப்பையேற்ற பரந்த மனமும் சிறந்த குணமும் கொண்ட சென்னை மல்லீசர் கேசவர் திருக்கோயில் மானேசர் உயர்திரு. L.P. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்மூலம், சாது அச்சகத்தாரால் அழகாகப் பதிக்கப்பெற்று, இன்றைய பழனி இறைபணியாளர்

உயர்திரு. C. S. தீனதயாள நாயுடு, B. Sc., B.L. அவர்கள் காலத்தில் இந்நூல் வெளிவருகின்றது.

இவ்வொரு நூல் வெளிவர இவ்வளவு காலமா என்று முதலில் அயர்ந்தேன். தனது கும்பாபிடேக காலத்தில் இது வெளிவர வேண்டும் என்பது எம்பெருமான் திருவுள்ளம் போலும். அதை எண்ணும் போது, முன் வருந்திய மந்த மதி இன்று மகிழ்கிறது. இது தான் உயிர் இயல் என்பதையும் உணர்கிறேன். இவ்வுரையின் மூலம் பலர் ஆசிக்கு என்னைப் பாத்திரன் ஆக்கிய, திரு. தி. செ. முருகதாச பிள்ளை; அறநிலயப் பாதுகாப்பிலாகா அதிகாரிகள்; ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான தருமகர்த்தர்கள் முதலினோர்க்கு, சால்புடைய என் வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

என் புல்லிய உரைகளில் பிழை பல இருப்பது இயற்கை. மும்மல வயத்தால் முறைமறக்கும் என் போன்றாரை, மேலோர் திருத்துதற்கு இது போன்ற உரைப்பணி பயன்படுமேல், எடுத்த பிறவி யீடேறியது என்று, என்றும் அடியேன் இன்புறுவேன்.

பழனியப்பா! தண்டபாணீ! என்று பல்லாயிரம் அன்பர்கள், அரோகரா என்று ஆவலித்து அழைக்கும் நிறை முழுக்கு விழாவில் அரங்கேறும் இந்நூல், எம்பெருமான் திருவருள்போல் நின்று என்றும் நிலவுவதாக!

வாழ்க தண்டபாணி அருள்!
வாழ்க நிர்வாகிகள் வளம்!
வாழ்க அன்பர்கள்! வணக்கம்! ஓம்.

முருக நிலையம்
97, சஞ்ஜீவிராயன் கோயில் வீதி
பழைய வண்ணை, சென்னை-21

இங்ஙனம்: அன்பன்,
ரசபதி
29—8—60

உ

தூய தண்டபாணி துணை

# ஆசிரியர் வரலாறு*

" வாரணம் கூவ மயூரம் அகவ மறிசெறுமக்
கூரண வும்கதிர் வேல்மின்னத் தோன்றும் குருபரனைக்
காரணம் கோடி குலவும் பழனியிற் கண்டுகொள்வார்
ஆரணம் பேசரும் ஆநந்த வெள்ளத் தமிழ்பவரே "

—தண்டபாணி சுவாமிகள்.

பூமகள் திருமுகம் போல், பொலிவு காட்டுகிறது பொதிகைமலை. உத்தம அம் மலையில் உதித்து, பயன்தரு கீழ்த்திசை நோக்கிப் படர்ந்து, தனிப்பெரும் வளம் தருகிறது தாமிரபரணி. இனிய அந்நதியின் இருபுறத்தும், பரமன் தலங்கள் பலவுள. அவைகளுள் ஒன்று, திக்கெலாம் புகழும் திருநெல்வேலி மாவட்டம்.

நீர்வளம் நிலவளம் நிறைந்து, தொழில் வளம் குடிவளம் தோய்ந்து, மொழிவளம் சமயவளம் முன்னேறி, வாழுமாறு அப்பதி எவர்க்கும் வழிகாட்டுகின்றது.

அப்பதியில், சிறந்த வேளாண் குலதிலகர் செந்தில் நாயகம் பிள்ளை. தூய அவரது துணைவி, பேச்சு முத்தம்மை யெனும் பெயரினர். இத்தம்பதிகளின் அருந்தவப் பயனாக 120 ஆண்டிற்கு முன் உதித்த மைந்தர் சங்கரலிங்கர். முன்னைய தவக் குறையை முடிக்கவந்த அம்மைந்தர், இளம் பருவத்தில் கணபதியை, திருமகளை, அறுமுகனை இடையறாது வழிபடலாயினர்.

---

*வரையறை யிட்டு எழுதிய அடிகள் வரலாறு இது ; திருவருள் துணையால் விரிவு பிறகு வெளிவரலாம்.

தாய் பிறந்த சுரண்டையூரில், தமிழ் பயின்றார். ஓயாது மூலமந்திரத்தை உருவேற்றினார். அதனால் வளர்ந்தது புண்ணியம். மலர்ந்தது மனம். நெகிழ்ந்தது உணர்வு. உள்ளத்தில் ஒளிபுகுந்து உறவு பூண்டது.

சுரண்டையூரில், கோமள அம்பிகையின் கோயில் ஒன்று. சங்கரலிங்கர், ஒருநாள் சிறந்த அந்த ஆலயத்திற்குச் சென்றார். புனித தேவியின் திருப்பெயர் பூமிகாத்தாள். அம்பிகையை அங்கு ஆராதிப்பாரை அறிந்தார். இத் தேவிக்கு, இத்திருநாமம் எதனால் பிறந்தது? என்றார். பலர் பலவாறு பதிலுரைத்தனர்.

> அமுதம் கடையுநாள் ஆலம் வெடித்துத்
> திமுதமெனத் தீயெரித்துச் சென்ற(து)—அமுதமெனத்
> தீக்கடவுள் உண்டார் திருக்கண்டத் தைப்பிடித்துக்
> காத்ததனால் பூமிகாத் தாள்.

என்ற ஒரு வாக்கு, அவரை யறியாது அவர் நாவில் உதித்தது.

அன்றுதொட்டு, பாடும் நிலை பழக்கம் ஆயது. பதின் மூன்றாம் வயதில், பயன்தரு வண்ணப் பாப்பல பாடினார்.

வா முருகா! அருள் தா வரதா! எனும் குறிப்பு, எப் பாடல்களினும் இருந்தன. எவ்வளவு வேண்டியும், வரத கந்தன் சேவை தந்திலன். அதனால் வரவர ஏக்கம் வலுத்தது. உணவை மறந்தார். உறக்கம் துறந்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில், திருமலை என்பது ஒரு திருப்பதி. புனித அத்தலம் நோக்கிப் புறப்பட்டார். எடுப்பான அம் மலைமேல் ஏறினார்.

அயில் பரமா! குயில் இரு புறமுள குமரேசா! கெட்ட எண்ணமும் கேடுகெட்ட புத்தியும், வம்பும் வழக்கும் வளரும் உலகைப் பார்க்கிறேன். கண்கள் குளிருமாறு நின்னைக் கண்டிலனே! இந்த நீசமான வாழ்க்கை நாசமாகட்டும்! உன் திருமுன் உயிர் ஒழியட்டும்! என்று, வீரிட்டுக் கூவி

வீழ்ந்தார். கடகட என்று கீழ்நோக்கி, உருண்டது அவர் திருவுருவம்.

என்ன அதிசயம்! எவரோ இடைவந்து நிறுத்தியது போல், தடைப்பட்டது திருமேனி. சிறந்த தோளில்மட்டும் சிறிது புண்.

அன்று இரவு அவர் கனவில், பெருமான் முருகன் பிரசன்னம் ஆயினன். உருண்டது வீண்! இறந்திருந்தால் என்னாகும்? தாங்கினம் யாம் என்றான் தற்பரன்.

விமலா! வினையுடல் அழியின், வேறு உடல் தர வேதன் உளன். அடியேற்கு முதன்மை நின் சேவையே முக்கியம் என்று, இன்பக் கண்ணீர் பெருக்கி இறைஞ்சினார். அதைக் கேட்டு, கண்ணருள் பாலித்தான் கந்தப்பிரான்.

மற்றொருநாள், கனவில் வள்ளியம்மை காட்சியாயினள். புனித நீற்றைத் தோளில் பூசினள். விழித்து வியந்தார். இரண்டொரு நாளில் புண் மறைந்தது.

இக்கனவுக் காட்சிக்குப் பின், கடன்மடை திறந்தது போல் சங்கரலிங்கர், கவிமழை பொழியும் காளமேகம் ஆயினார்.

அவரது வளர்ச்சிகண்டு, பொய்ம்மைப் புலமை புழுங்கியது. பின்புறத்தில், நிந்தனைப் படலங்கள் நிழலிடலாயின. அடிகளை யணுகலாம்; உரிய பயனை அடையலாம்; இவர்கட்கு எளிது தெரிவது இல்லை; இதுதானா உலகம்? அட பாவமே! உத்தம அடிகள் இதனை உணர்ந்தார்.

வள்ளியூர் எனும் திருப்பதிக்குச் சென்று, ஒரு நாள் வரத முருகனை வணங்கினார். உலகைத் திருத்த எவரால் ஆகும்? இறைபணியில் ஈடுபடலே இயல்பு. அமைதியும் இன்பமும், அதன் வழிதான் அமையும் எனும் தூய வைராக்யம் தோன்றியது.

கையில் தண்டம். முழுநீற்றுத் திருமேனி. கீள்கோவணம். இடையில் சிறு காவியுடை. குணஞ்சிறந்த இக்

கோலம் கொண்டார். கண்டவர் தண்டபாணிசுவாமி யென்று கைகுவித்தனர். முருகதாச சுவாமிகள் என்று முன் வணங்கினர் பலர். சந்தமணம் கமழ் அவர் செந்தமிழ் சிரவணித்து, திருப்புகழ்ச் சுவாமிகள் என்று ஏத்திப் போற்றி இறைஞ்சினர் சிலர். பெற்றோர் இட்ட பெயர் மறைந்தது. வாய்மையன்பர்கள் வைத்த பெயர்களையே ஊன்றி உலகம் உணர்ந்தது.

இந்நிலையில் அடிகள், பல தலங்களை யடைந்தார். பாடல் பல பாடிப் பாரைப் பரவினார்.

ஒரு சமயம் சென்னைக்கு வந்தார். கந்தகோட்டம் முத்துக்குமாரசுவாமி கட்டளையிட்டபடி, அப்பரமன்மேல், உள்ளம் அள்ளும் பல பாடல்களைப் பாடினார். அவைகளுள் ஒன்று, கந்தகோட்டப் பிள்ளைத்தமிழ். அந்நூல், பல பெருமக்கள் நிறைந்த அவையில் அரங்கேறியது. அங்கு இருந்து இன்புற்ற பல ஆயிரம் பெருமக்களுள் ஒருவர், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்.

பிள்ளைத்தமிழ் நூறு என்று இலக்கணம் வகுத்தது பிழை. ஆயிரம் என்று இருந்தால், அடிகள் கவிச்சுவையை அனுபவித்திருக்கலாம் என்று,மாபெரும் புலவர் முதலியார் மனம் வருந்தினார். அவரது அறிவு நுட்பம் கண்ட அடிகள்,

சந்தமலி அட்டாவ தானச் சபாபதிக்(கு)
எந்தச் சபாபதியும் ஈடில்லை—கந்தனருள்
பெற்றோன், அறிவால் பெரியோரைப் பேணுநலம்
உற்றோன், முழுப்புலமை யோன்.

என்று கூறி உவந்தார்.

அருளறிவிப்பின்படி, ஒரு சமயம் திருஅண்ணாமலைக்குச் சென்றார். தனிப்பெரும் ஈசானிய மடத்தில் தங்கினார். அங்கும் அத்தன் அருளாடல் பல அறிந்தார். அந்த உவகை, பல பாடல்களாக உருவெடுத்தது. அங்குப் பலநாள் அருந்தவம் செய்து இருந்தார். சித்தி முத்தி அனுபவம் சித்திக்க

வில்லை. எண்ணினர். உள்ளம் கண்ணினர். உடனே எழுந்தார்.

கோதுபடாத் தென்னருணைக் கோபுரத்து வேளூறவு
போதும்போ தும்போதும் போதமே—வாதுசெயும்
பொல்லார் பகையும் பொடிப்புநோ யுங்கொடுத்தான்
நல்லான்ஆ றுற்,பார்க்க லாம்.

என்று, புந்தி நைந்து பாடிப் புறப்பட்டார்.

புனிதமானது பொதிகைமலை. அருந்தவச் சித்தர் பலர் அங்குளர். அதைக் கனவில் அறிந்துள அடிகள், சிறந்த அம்மலை நோக்கிச் சென்றார். மலைமேல் ஏறினர். நெடுந் தூரம் சென்றார். குறித்த ஒரு இடத்தில், சித்தர்களான முத்தர்களைச் சிந்தித்தார். அவர்களை உணர உணர, உள்ளம் உருகியது. அம் மனநிலை, சித்தர் அந்தாதி எனும் பெரியதொரு கவிமழையாகப் பெருகியது.

அங்கிருந்து செய்த அருந்தவத்தில், விமல முருகன் விண்ணில் விளங்கினன். அளவிலாது பெருகிய அன்பால், எழுந்தார். வரத முருகா! என்று விழுந்து வணங்கினர்.

யாது உனது விருப்பம்? என்றான் எம்பிரான். தன்னை மறந்த தனி இன்பத்தால், பெரும! வாய்க்க சருவபிரசாதம் என்றது திருவாய். நகைமுகம் ஆன நம்பன், பன்னீர் இலையில் திருநீறு பாலித்தான். அவ்வளவில், கந்தன் திருவுருவம் கரந்தது. அதன்பின், திருவருள் ஞானத் தெளிவு பிறந்தது.

ஒரு சமயம், அடிகள் வடலூர் இராமலிங்க சுவாமிகளைச் சந்தித்தார். அவருடன் அதிகம் அளவளாவினர். பயனுள அச் சுவாமிகள், மாதவர் இவரது வண்ண வளங்கண்டு மகிழ்ந்தார்.

முன்னொரு சமயம் புதுவைக்குச்-சென்று, தானப்பர் முதலியோர் செய்த ஒப்பானதும் மிக்கானதும் இல்லாத உபசாரத்தை ஏற்று, அங்குக் கோயில் கொண்ட புனித

யான்மேல் பாடிய பிரபந்தம் புதுவைப் பிரபந்தம் எனப் பெறும். அப்புதுவைக்கு மற்றொரு சமயம் சென்றார். வாரி வழங்கும் வள்ளல் தானப்பர் இறந்தார் என்று அறிந்தார். நல்லவர்கட்கு உலகில் இல்லையிடம் என்று மனம் நைந்தார். அவ் வருத்தம்,

மானப் புலவர் மகிழ வழங்குசெங்கைத்
தானப்பன் இல்லாத் தனிப்புதுவை—வானத்தில்
எல்லாப் பொருளும் இருந்தும் இலங்குதிங்கள்
இல்லாத தன்மையொத்த தே.

எனும் பாடலாகப் பரிணமித்தது.

அடிகள் வேல் வழிபாட்டில் ஆர்வம் மிகுந்தவர். சிறக்க அப்பூசையைச் செய்பவர்.

புனித அவ் வழிபாட்டிற்கு, இடையிடை பொருள் வேண்டியிருந்தது. அதுகருதி அடிகள், சிலரை அணுகுவது உண்டு.

ஒரு சமயம் அந்நிலையில் கேரளம் சென்றார். மூன்று திங்கள்வரை முயன்றும், வேந்தர் சேவை வாய்த்திலது. அரசர் முன் செல்பவர்கள், கைகட்டி வாய்பொத்த வேண்டும் எனும் மரபை, சிலர் அறிவித்தனர். அதுகேட்ட அடிகள்,

'எங்கும் புதையா(து) இலங்குதமிழ்ப் பாடலெனும்
பொங்கு மதூரம் பொழியும்வாய்—நங்குகவேள்
இன்னருளால் தேயா(து), இலங்குபுகழ்க் கேரளத்து
மன்னனிடம் போய்ப்புதைக்கு மா'

என்றார்.

அதுகேட்ட பலர், அடிகளது மனவுரம் கண்டு அதிசயித்தனர்.

ஒருநாள், திருவனந்தபுர மன்னர் வீதியுலா வந்தார். அதை அடிகள் அறிந்தார். உள்ளம் துணிந்தார். முன் வந்தார்.

‘ உன்றனது கோளநா(டு) ஒன்றுமே இங்கிலகும்
என்றனது நாடுலகம் எங்குமே—பொன்தரநீ
மாட்டாயோ சேரமக ராசனே! நீமதுரப்
பாட்டாசை யின்றே பகர் ’

என்றார்.

மன்னன் பதிலுரைத்திலன். கொதித்தது மனம். நிமல குமரன் திருவுருவை நினைந்தார்.

ஆயிலியச் சேரன் அநியாயக் காரனவன்
வாயிலிற்போய்ப் பிச்சையின்றி வந்தேனே—நீயிலையோ
வேலாயு தக்குகனே வெள்ளிமலை போற்குலவும்
காலாயு தக்கைமுரு கா.

என்று பரிந்து வருந்திப் பாடினார்.

“ சிறியரோ மதிக்குமிந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுளார் மூகர் ஆவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடர் ஆவர்
குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவர் அன்றே ”

என்று உரைப்பதில் உள்ள உண்மையை உணர்ந்தார்.

அங்கிருந்து விரைந்து அகன்றார். கோச்சிக்குச் சென்றார். காதடைத்தது கடும்பசி. நடை தளர்ந்து வந்தார். குறிப்பை அறிந்தார் ஒரு அந்தணர். எதிர்கொண்டார். ஆர்வம் காட்டி அழைத்தார். பயனுன பரிவு காட்டி, அறுசுவை உணவை அன்புடன் அளித்தார். உண்டபின், உபசரித்த அந்தணர் உருக்கரந்தார். என்ன வியப்பு! எங்கே அவர் ?

‘ குருவணப்புக் கண்டறியாக் கொச்சிவள நாட்டின்
பெருவனத்தில் என்னையன்பிற் பேணி—அருமையுடன்
அன்னம் கொடுக்கவந்த அந்தணனே ! அந்தவண்ணம்
சொன்னம் கொடுக்கொணு தோ ?’

என்று பாடி மகிழ்ந்து, இறையருளைப் பரவினர்.

ஒரு சமயம் பழனிக்குச் சென்றார். அங்கே இடும்பனுக்குச் சிலர் இறைச்சி நிவேதித்தலை யறிந்தார். வருந்தியது மனம்.

பாடுமன்பர் போற்றும் பழனிமலைப் பாதியினின்(று)
ஆடும் இடும்பா அறையக்கேள்—நீடும்
கொலைகண்டு மாமிசமுள் கொண்டுவக்க வேண்டா
நிலைகண்டு மெய்யருளில் நில்

என்று வேண்டினார். பிறிதொரு சமயம் இராமநாதபுரம் சென்றார். சேதுபதியைக் காண அவாவியது மனம். அடிகளார் சிறப்பைப் பிறர்மூலம் அறிந்திருந்தும் அரசர், யாது காரணத்தாலோ அவைக்கு அழைத்திலர்.

எனினும் ஒருநாள் மன்னர், 'கண்விண்பெண் பொன் பண் கனி' எனும் ஒரு வெண்பாவிற்கு உரிய இறுதியடியை ஏட்டில் எழுதி, இப்பாட்டை நிறைவு செயச் சொல்லும் பார்ப்போம் என்று, புலவர் ஒருவரை அனுப்பினர். அரசரது கட்டளையை உரைக்க அஞ்சிய அப்புலவர், இதை நிறைவு செய்யக் கட்டளை ; எப்படி நிறைவுபடுத்துவது ?' விளங்கவில்லை என்று, விநயம் காட்டி விளம்பினர். நரபதி குறிப்புணர்ந்த அடிகள், நகைத்தார். உடனே,

முருகனுக்கு மூவாறு முன்புதொட்டுக் காத்தல்
உருகுமயல் ஈதல் உறுபூண்—பெருகுசெவி
உண்மகிழ்ச்சி சேர்ப்ப துலகதனைச் சூழவிடல்
கண்விண்பெண் பொன்பண் கனி.

என்று, அநாயாசமாகப் பாடி அப்போதே நிறைவு செய்தார்.

முருகனுக்கு மூவாறு கண் ; முன்பு தொட்டுக் காத்தல் விண் ; உருகுமயல் ஈதல் (வள்ளியெனும்) பெண் ; உறு பூண் பொன் ; பெருகு செவியுள் மகிழ்ச்சி சேர்ப்பது பண்; உலகதனைச் சூழவிடல், (மாதுளங்)கனி.

இப்படி நிரல்நிரைப் பொருள்கோள் தோன்றப் பாடி யளித்து, அப்போதே அங்கிருந்து அகன்ருர். சில அன்பர்கள் வேண்டுகோளின்படி கொழும்புவிற்குச் சென்ருர். அங்கு உத்தமர் பலரால் உபசரிக்கப் பெற்று, வேல் வழிபாட்டிற்கு வேண்டிய பணவுதவி பெற்ருர். அங்கிருந்து திரும்பினுர்.

தனவணிகர் நகர்கள் பல. அவைகளுள் ஒன்று தேவகோட்டை. அங்குள பெருமக்களுள் ஒருவர், மேலவீடு வீர. லெ. சிதம்பரம் செட்டியார். அடிகள் அவ்வூர்க்கு வந்த அமயம், அப் பெருமகர், ஆர்வம் காட்டி வரவேற்ருர். அவரும் அவர் துணைவரும் செய்த உபசாரம் பல. அக்குடும்பம் மகப்பேறின்றி வருந்தி யிருந்தது. அதை யறிந்த அடிகள், அக் குடும்பத்திற்கு மகப்பேறு அருளுமாறு, குன்றக்குடிக் குமரன்மேல், பயன்தரும் ஒரு பிரபந்தம் பாடினுர்.

சேயவேள் ஆதியாய தேவரும் பொதியைக் குன்றின்
மேயவன் முதலா வுள்ள மேலவர் தாமு மன்றித்
தேயமா னிடரில் என்னைத் தெரிந்தவர் தேவகோட்டை
வீயன்ன ரானு லேனு மேலவீட் டினிலுள் ளாரே.

என்று, சிந்தை மகிழ்ந்து பாடி அக் குடும்பத்தைச் சிறப்பித்தார்.

நெடுங்குளம் என்ற ஓர் ஊர்க்குச் சென்ற அமயம், அடிகள் பசியோ டிருக்கும் நிலையைப் பார்த்து, ஒரு அந்தணத் திருமகளார், உவகை தோன்ற உபசரித்து உண்பித்தார். அதற்காக அளித்த காசையும் மறுத்தார்.

நெடுங்குளத்தில் பார்வதியை நோமம்ஓர் அம்மை
கொடும்பசியைத் தீர்க்கும் குணத்தாள்—இடும்பரிசு
வேண்டாதாள், உண்மை விவேகம் மிகவுடையாள்
ஆண்டாள் அருளே அவள்.

என்று, பாடி அடிகள் அவரைப் பாராட்டினுர்.

ஒருநாள் கோட்டூர்க்குச் சென்றார். பசிதோன்றி அங்கே பாதித்தபோது, ஒரு சைவர் எதிர் வந்தார். அடிகள் கோலத்தை அறிந்தார். அன்பு காட்டினார். அழைத்தார். உவந்து அன்னம் ஊட்டினார். அவரது பரிவு கண்டு வியந்து,

'கோட்டூரில் சைவன்முகம் கோணுமல் கூடத்தில்
ஈட்டுதென்னை ஓலை இலைகொணர்ந்து—போட்டெனக்குச்
சோறும் இலைக்கறியும் சுண்டைக்கா யும்பருப்புச்
சாறுமிட்டுப் பெற்றான் தவம்'

என்று பாடி, உள்ளும் புறமும் ஒத்தவர்க்கு, தவம் எவ்வெவ் வகையில் உருவாகிறது என்பதை உணர்த்தினார்.

பழனிக்குப் புறப்பட்டார். இடைவழியில், துமிசம் பட்டி என்று ஒரு கிராமம். அங்குத் தங்கினார். நாள்தோறும் செய்யும் வேல் வழிபாட்டை, சிறக்க நடத்தினார். எழுந்தார். வழிபட்ட இடத்தி லிருந்து வெளிவந்தார். எதிரில் ஒரு கோயில். கூட்டமாக மக்கள் அங்குக் கூடியிருந்தனர். அங்கே என்ன விசேடம் என்று அறிய அணுகினார். என்ன வேதனை!

வயிற்று வலி பிள்ளையை வாதிக்கிறதாம். அக் கோயிலில் இருக்கும் சந்நாசி யப்பன் எனும் பேய்த் தேவதைக்குப் பலியிட்டால், நலம் விளையுமாம். இப்படிப் பலர்கூற, அதை நம்பிய பேதை ஒருவன், ஆடு பலி தர முயல்வதை அறிந்தார். இப்படியும் அறிவிலிகள் இருக்கிறார்களே என்று, புண்ணுகி உள்ளம் புலம்பியது.

அடே! நில் என்று அதட்டினார். குறுக்கிட்டுப் பலியைத் தடுத்தார். பழம் தேங்காய் படை! பாலன் வயிற்று வலி பறந்தோடுகிறது பார்! என்றார்.

'அயில்தலைவா! தென்பழனி அப்பா! இச்சேய்தன்
வயிற்றுவலி முற்றுமற மாற்றி—வெயில்புழுப்போன்(று)
ஏழைகள்வா டப்படுத்தும் இப்பேய் உயிர்குடித்திட்(டு)
ஊழைவென்றோன் உண்டென் றுணர்த்து'

என்று வேண்டிப் பாடினார். சிறுவன் வாயில் நீறிட்டார்.

வயிற்றிலும் தடவினார். உதரநோய் ஒழிந்தது. பிழைத்தது பிள்ளை. வாயில்லா ஆடும் வாழ்ந்தது.

பிறகு பழனிக்குச் சென்று, பழனித் திருவாயிரம் பாடினார். அந்த ஆயிரத்துள் சேர்ந்த நூறு பாடல், பழனிப் பிள்ளைத் தமிழ். அதனிலுள்ள ஒவ்வொரு பாடலும், உள்ளத்தைத் தொட்டுப் பல செய்திகளை உபதேசிக்கின்றன.

யாத்திரையும், சென்ற இடமெலாம் பரனை எண்ணிப் பாடுவதும், வேல் வழிபாடும் தொடர்ந்து கொண்டிருந்த அடிகள், ஒரு சமயம் திருவரங்கம் சென்றார். அரங்கன் அருளாக்கங்களை, திருவரங்கத் திருவாயிரம் எனும் பிரபந்தத்தில் அறிவித்தார். நூல் அரங்கேறும் அமயம், அடிகள் பால் அன்புடைய அந்தணர் ஒருவர் மகளை, அரவம் ஒன்று தீண்டியது. அதை யறிந்த அடிகள்,

‘ அரங்கன் திருமுன் அமரும் கருடா
இரங்கிரங்கிப் பார்ப்பனப்பெண் ஏங்கச்—சிரங்கொண்ட
பொல்லா விடத்தைப் பொடியாக்கிப் பூவுலகோர்
நல்லானென் றோதஅருள் நல்கு ’

என்று படபடத்துப் பாடினார்.

கருடாசாரி என்ற ஒரு அந்தணர், கடுகடுத்துக் கூட்டத்தில் தலை காட்டினார். விடத்தைத் தீர்க்கிறேன் என்று விரைந்தார். செய்த அவர் செயலால், மகள் பிழைத்தாள். ஆனால் அந்தக் கருடாசாரி போன இடந்தான் எவர்க்கும் புரியவில்லை. விவரம் உணர்ந்த அடிகள் வியந்தார். உடனிருந்த புலவர் அரன்வாயல் வெண்பாப் புலி வேங்கடசுப்புப் பிள்ளையவர்கள், வியந்து அரிய இந் நிகழ்ச்சியை யமைத்து,

‘ ஓதும் கருடன் ஒருமனிதன் போலுருக்கொண்(டு)
ஏதும் அறியான் எனத்தோன்றிப்—பேதமிலா
நம்மோ(டு) உறவாடி நான்கருடா சாரியென்ற(து)
அம்மா மிகவதிச யம்!’

என்று உவந்து வெண்பாப் பாட்டு ஒன்று ஓதினார்.

மதுரைப் பாக்கம் என்று ஒரு கிராமம். அப்பதியில் வேமன்ன குலத்தில் உதித்தவர், துரைசாமி ரெட்டியார். அவர் அடிகளை வணங்கி, எம்மூர்க்கு எழுந்தருளி எம்மை உய்வித் தருளும்; அதன்பின் திருவாமாத்தூரில் என்றும் அமர்ந்து இரும் என்று, விநயம் அதிகம் காட்டி வேண்டினர்.

அவர் அன்பை மறுக்க இயலவில்லை. சென்றார். சிலகாலம் அப்பதியில் இருந்தார். ஒரு சிவாலயம், கிராமத் தில் இலமாகி யிருந்தது. அதை யறிந்தார். மகப்பே றிலாது வருந்தி யிருந்த ரெட்டியாரை விளித்தார்.

‘ சாம்பசிவ ரெட்டியன்பிற் றந்ததுரை சாமிரெட்டி
ஆம்பல்மலர் வாவியொன்றும் ஆலயமொன் றும்செய்தால்
காம்பவிர்தோள் கன்னிஒன்றும் காளையொன்றும் பெற்றிடுவன்
நாம்பகர்ந்த தல்லஇது நாமடந்தை சொன்னளே ’

என்றார். அவர் அருளியபடியே ரெட்டியார் திருப்பணி யால், கோயிலும் எழுந்தது. பிள்ளைகளும் இருவர் பிறந்த னர். அதன்பின், புனித திரு ஆமாத்தூர்க்குப் புறப்பட்டார்.

அடிகள் கனவில் முன்னரே அபிராமேசர் அறிவித்தபடி, அத்தல அன்பர்கள் பலர் எதிர்கொளல் அறிந்து மகிழ்ந்தார். அவர்களது வழிபாட்டை ஏற்று, அப்பதியில் குடியாய் அமர்ந்தார். திருஆமாத்தூர்த் தலபுராணம் அருளினர். புலவர் புராணம் முதலிய தூய பல நூல்களைத் தோற்றுவித்தார்.

ஆலயத்தில், புனித சில பொருள்கள் கொள்ளை போயின. கவர்ந்தவரை யானறிவேன்! ஆனல் அவரைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்றாள் ஒரு கணிகை. எவ்வளவு வற்புறுத்தியும் அவள் இணங்காமையால்,

‘ கூத்தாடிச் சிக்கிழவி கோயில் திருட்டதனைப்
பார்த்தாள் மறைத்துப் பகர்ந்ததால்—ஆத்தாடீ
அப்பாடீ யென்ன அலறும் பெருந்துயரம்
இப்பாரில் துய்ப்பாள் இனி ’

என்றார்.

அவர் வருந்தி யுரைத்த வாக்கின் படியே, கதறி யிருந்து அறிவழிந்து மாய்ந்தாள் அவள்.

வண்டிப் பாளையம் மல்லய்யர் என்பார் ஒருவர், இருந்து விணைவலியால் கண்களை இழந்தார். ஆமாத்தூர்க்கு வந்து, இம் முருகதாசரிடம் அழுது முறையிட்டார்.

'மல்லைய னுக்கு மலர்விழியின் பார்வைநல்கித்
தொல்லைவினைத் துன்பம் துடைத்தருள்வாய்—அல்லைமிகர்
கண்டத்தான் மைந்தா! கதிர்வேற்கைக் காவலவா!
அண்டத்தார் சேனை அதிபா!'

என்று, பெருகிய ஒரு வாக்கு அடிகளிடம் பிறந்தது. அருளொடு நீறு அளித்து அவரை யனுப்பினர். மல்லய்யர் அப்பாடலை, ஒரு மண்டலம் வரை பரமன் வழிபாட்டில் வைத்துப் பாராயணம் செய்தார். அதிசயமாம்படி ஒரு நாள் அவர் கண்கள் ஒளி பெற்றன.

வேலாயுதம் பாளையம் எனும் ஊரிலிருந்து, கறுப்ப வேல் கவுண்டர் எனும் ஒரு அன்பர் வந்தார். ஆண் குழந்தை இல்லை எனும் அவர் கவலையை அறிந்து,

'வேலுக் கவுண்டன் விருப்பப் படிஒருநல்
பாலன் பிறக்கும் படியருள்வாய்—சீலமறை
ஆகமங்கள் போற்றும் அயில்வேல் குருபரனே
ஏகபிரான் பெற்றமைந்த னே'

என்று, ஓதித் திருநீறு உதவினர். அக்கவுண்டர்க்கு அடுத்த ஆண்டில் பேறுதரும் ஒரு ஆண்மகவு பிறந்தது.

திருநெல்வேலியில், பழனியில் அடிகட்குத் திருமடங்கள் அமைந்திருந்தன. திருவருள் குறிப்பின்படி, விழுப் புரத்தை யடுத்த ஆமாத்தூரிலும் ஒரு மடம் அமைந்தது.

எல்லை தாண்டா நியமத்துடன், அங்குத் தங்கி இருந்து தவம் இயற்றினர். அதன் பயனாக, இலட்சக் கணக்கான பாடல்கள் கொண்ட பல நூற்களை யருளிய அருட்பெருஞ்

திருவான அடிகளார், கலி ஐயாயிரம் விளம்பி யாண்டு ஆனித்திங்கள் திருவோணத்தன்று திருவருட்பேறு எய்தினர்.

அடிகளாரது ஆரம்ப நல்லறமான இல்லறத்தில் திருமதி சுந்தரத்தம்மையால் உதித்த மைந்தர் செந்தில் நாயகம் பிள்ளை. புலவர் ஏறு என விளங்கிய செந்தில் நாயகர் அருளிய செல்வர்கள் இருவர். மூத்தவர் திரு.தி. சே. முருகதாசர். இவர்கள், அருளார் கலைகளில் ஆர்வம் கொண்டவர்; இரக்கம் மிக்கவர்; தவமார் திருவினர். தண்டபாணி ஸ்வாமிகளின் தலை மாணவர், தவம் கைவந்த திரு. இராமானந்த அடிகளார். கோவை சிரவணபுரத் திருமடத்தில், அவர்கள் அண்மையில் சமாதி கொண்டுளர். அடிகளார் வழி வழி வந்த மாணவர்கள் பலர், அமுதினும் இனிக்கும் அருந் தமிழ் சுவைக்கும் அறிஞர் பெருமக்களாய், இன்று எங்கும் இன்புற்று இருக்கின்றனர்.

வாழ்க தண்டபாணி அடிகளின் கால்வழி !

வாழ்க சைவம் !!

உய்க இந்த உலகம் !!!

ஓம்.

உ

# ஊஞ்சல் பாட்டு

இல்லறமும் துறவறமும் தூண்க ளாக
இகபரசா தனப்பொதுச்சீர் விட்ட மாக
நல்லறமா திய நான்கும் வடங்க ளாக
நமுவருஞ்சத் தியமதுவே பலகை யாக
வல்லசத்தி ஓரா றும் போற்றி ஆட்ட
மாயன் மக்கள் இருவருடன் ஆடீ ரூசல்
பல்லவச்செஞ் சடைச்சிவனர் தவப்பே ருன
பழனிநகர்க் குழகர்மகிழ்ந் தாடீர் ஊசல்.

—ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்.

❊

பழனியாண்டவர்
பள்ளியறை ஊஞ்சலில் அமர் பொழுது,
நாள்தோறும் பாடப்பெறும் பாடல் இது.



மஹான் வண்ணச்சரபம்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்

உ

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை

# பழனிப் பிள்ளைத் தமிழ்

## 1. காப்புப் பருவம்

### திருமால்

ஆனைமுக முன்னவற்(கு) இளவலென மதிசூடி
அழல்விழியில் வந்து,விண்ணோர்
அன்றுபடும் இன்னலுடன் அவுணருறும் ஆர்வமும்
அழித்துத் தெழித்தபூத
சேனையொடு லாவுபெரு வடிவம் கரந்தெமது
சிறுமனமும் நாடுதற்காம்
தேசிக உருக்கொண்டு, பழனிமலை மிசைநிலவு
செவ்வேள் தனைப்புரக்கச் ;
சோனைமுகி லேயனைய தனதுரு மறைத்(து,) அலைகள்
துள்ளும்வெண் பாற்கடலின்வாய்
சுரகணமொ(டு) அசுரகணம் இடுமலை சுமந்(து,)எழு
சுதைத்திரள் பகிர்ந்திடற்கா
மானைநிகர் உருவம் சமைந்து,தகு வர்க்(கு)இறுதி
வருவித்(து,)அரன் றன்உள்ளம்
மருளுற மயக்கி,ஒரு மதலையும் அளித்தஅரி
மலரடி வழுத்துதுமரோ. 1

---

1. இளவல் - தம்பி. மதிசூடி - பிறை யணிந்த சிவபிரானின். இன்னலுடன் - துன்பத்துடன். கரந்து - மறைத்து. தேசிக உரு - குரு திருமேனி. சோனை முகில் - நீருண்ட மேகம். சுர கணம் - தேவர் கூட்டம். இடுமலை - மத்தாக இட்ட மந்தர மலை.

(பொழிப்புரை.) (முந்திய) யானைமுக முதல்வரான (எம்மான்) கணபதிக்கு இளையவன் எனும்படி, இளம்பிறை யணிந்த இறைவனின் அழலும் (ஞானக்) கண்களி லிருந்து அவதரித்து ;

(தூய) அமரர் அன்றுபட்ட துன்பத்துடன், அவுணர்கள் அடையும் இன்பத்தையும் (ஒரு சேர) அழித்து ;

ஆரவாரித்த (சிறந்த) பூத சேனைகளுடன், (பரவி எங்கும்) பவனிவரும் (தன்) மாபெரும் திருவுருவை மறைத்து ;

(சால்பிலாத) எமது சிறுமை மனமும், தெரிந்து சேர்தற்கு ஆன குருவாம் திருமேனி கொண்டு ;

பழனி மலைமேல், (வித்தக அனுபவம் வெளிப்பட) விளங்கும் செவ்வேள் (பிள்ளைத்) தமிழ்க்குச் சேமம் தருக என்று ;

கருமுகிலை போன்ற தனது (மாபெரும்) திருவுருவை மறைத்து,

அலைகள் மோதுகின்ற (பயனுள) வெண்மைப் பாற் கடலில், அமரரொடு அவுணர் இட்ட மந்தர மலையாகிய மத்தை, (தனிப்பெரும் ஆமை யுருவாய்த்) தாங்கி ;

(கடைந்தபின், திரண்ட) அமுதத் திரட்சியை(த் தாராள மாய்)ப் பங்கிட்டுத் தருவதன் பொருட்டு,

மான்போல் மருளும் (மோகினி) உருவம் கொண்டு, (மோக அலைகளை மோதவிட்டு,) அவுணர்கட்கு (அவர்கள் மூலமே) அழிவை உண்டாக்கி ;

மாபெரும் சிவனுளம் மருள மயக்கி, (அதன் வழி அரிகர மைந்தர் எனும்) ஒரு மதலையை அருளிய திருமால் திருவடிகளை(த் தினமும்) துதிப்பம், (எ - று).

---

சுதைத் திரள் - திரண்ட அமுது. மானை நிகர் உருவம் - மான் போல் மருளும் மோகினி வடிவம். சமைந்து - தாங்கி. தருவர்க்கு - அசுரர்க்கு.

### விரிவுரை

அருள்மழை பொழிந்து அன்பரைக் காப்பார்; அம்பு மழை பொழிந்து அரக்கரை அழிப்பார். இத்தகைய திருமாலை, 'சோனைமுகில்' என்னும் அருமை சொல்லி முடிவதில்லை. அவ்வளவுதானா!

மாபெரும் தம் திருவுருவை மறைப்பார்; ஆமை உரு அமைவார்; சுர அசுரர் இட்ட மலையைச் சுமப்பார்; அமுதம் திரண்டபின், மகத்தான ஆமை உருவை மறைப்பார்; மோகினி உரு ஏற்பார். அமரர்க்கு அமுதை ஊட்டுவார். அவுணர்க்கு மோக லாகிரியை மூட்டுவார்.

எனக்குத்தான் மோகினி, உனக்கில்லை; எனக்குத் தான்; உனக்கு இல்லை! உனக்கு இல்லை எனக்கே! என்று, அவர்கட்குள் அவர்களே இடித்து அடித்து இறக்கச் செய்து, வானவரை என்றும் வாழ வைப்பார்.

இது கண்ட இந்திரன், "ஆழி கடைந்து அமுதம் எங்களுக்கே யீந்தாய், அவுணர்கள்தாம் நின்னடிமை யல்லாமை உண்டோ" என்று திருமாலை வத்தினன்.

மேலும் முயன்றார். மயங்காச் சிவத்தை மயக்கினார். அரிகர மைந்தரை அருளினார்.

பிள்ளைகளைப் பெற்றவர்க்குத்தான் பிள்ளை யருமை தெரியும். தீமை தீர்த்துக் காப்பதில், அவர்போல் திறமுடையார் பிறர் இலர். இதுவரை திருமால் செய்தி.

தாய்வயிறு காணாத தருமத் திருமேனி தாங்கி, சிவனார் கண்வழி வந்த கந்தப் பெருமான், அவுணரை அடக்கி அமரரைக் காத்தான். தன் மாபெரும் பாரமேச்சுரத் திருவுருவை மறைத்து, எளிய கோலத்தில் பழனியில் எழுந்தருளி யிருக்கின்றான். அப் பிள்ளைப் பெருமான் மேல் பாடிய பிள்ளைத் தமிழ் இது.

மாமன் செயல்போல் உளது மருகன்செயல். பிள்ளைப் பேறுடைய திருமால், இப் பிள்ளைத் தமிழ் நிறைவுபெற

அருள்க என, என்றும் அவர் மலரடியை ஏத்துவம் என்பதை நினைவார் நெஞ்சம் நெகிழ்தலுறும்.

“ முன்னவனே யானை முகத்தவனே ” என்றார் பிறர். அதை ஒட்டி ‘ ஆனைமுக முன்னவற்கு ’ என்றருளினர்.

இளவல் - தம்பி, வலியுள இளைஞன் எனினுமாம். “ தம்பியுளான் படைக்கஞ்சான் ” என்பது பழமொழி.

சித்தை யகலாத ஆனந்தம், சத்தின் ஊற்றாம்போது சிவசுத கணபதி எனவரும். அதை ‘ஆனைமுக முன்னவன்’ என்பதில் அறிய வைத்தார்.

சத்தை விடாத ஆனந்தம் சித்தின் பெருக்கம் ஆம் பொழுது சிவசுப்ரமண்யம் எனவரும்; இச்செய்திகள், எவரும் என்றும் எண்ணத் தக்கவை.

இதை ‘ ஆனைமுக முன்னவற்கு இளவல் ’ என ஆரம்பத்திலேயே பெறவைத்தார்.

(யாவரும் நன்கு) மதித்தலால், சந்திரன் ‘ மதி ’ என ஆயினன். தீராப் பிறவித் துயர்தீர்க்க, அம்மதியைச் சிரமேல் அணிந்தார் சிவபிரான். அதனால் அவர், ‘மதிசூடி’ எனும் பெயர் பெற்றார்.

விண் விண் எனும் நாத நிலம், விண்எனப் பெற்றது. அங்கு வாழ்பவரை ‘ விண்ணவர் ’ என்றார்.

அவுணர் - தகுதியற்ற உணவினர் எனும்பொருட்டு. உணவிற்குத் தக்கபடி உணர்வமையும்; இதனை இங்கு உணரல் நலம்.

ஆர்வம் - அனைத்தும் தம்மதா அனுபவிக்க வேண்டும் எனும் பேராசை.

பெருவடிவம் - விஸ்வரூபம் எனும் பாரமேச்சுரத் திருவுருவம். இமையவரும் சூரபதுமனும் இவ்வுருவை அறிந்தவர். அப் பாரமேச்சுரத் திருமேனி, பழனியாண்டவரான பரமாசாரியத் திருவுருவம் கொண்டது. ஆதலின்; ‘ பெருவடிவம் கரந்து......தேசிக உருக்கொண்டு ’ என்றார்.

குருவடிவ பாவனை எய்தற்கு எளியது. பெருவடிவ பாவனை கடவுள் முனிவர்க்கே கைவரும்.

செம்மை முத்தி விருப்பளிக்கும் செம்மல் ஆதலின், 'செவ்வேள்' என்றார். செக்கர்-செம்மை; வேள்-விருப்பம்.

சோனைமுகில் - எழு மேகங்களுள் ஒன்று; இது நீருண்டு கருத்து நிமிர்கின்ற முகில். திருமால் வரத முகில் வண்ணர் எனும் வழக்காறு, இங்கு எண்ணத் தகும். வாய்=இடம்; ஏழனுருபு. ஹரன் - ஹரிப்பவன்; மல கண்டனன் என்றபடி. ஹரி எனும் பெயர், பகைவரை யழிப்பவர் எனும் பொருளது. மலரடி=உவமத் தொகை. அரோ=ஈற்றசை. (க)

## பரமசிவம்

தனனதான தத்ததன தனனதான தத்ததன
தனனதான தத்ததன தானத்தனத்தன

அசிபதாதி முப்பதமும் நினைகுவார்த மக்குதவி
அவிர்கலால்அ டிக்கண்உறை வாரைப், பிறப்புறு(து)
அளவில்கோடி சத்திகளும் மருவுசீர்பொ றுத்தவரை,
அமலஞான சித்தர்மற வாமற்குறிக் கும்ஈர்
அடியுளாரை, இத்தரையின் நடுவில்நீடு பொற்சிலையில்
அரவநாணி யிட்டிகல்வெல் வீரத்தரைப், பொன்ஊர்
அமரர்சேனை சுட்டபொடி நிறையுமேனி யிற்பகுதி
அறமெலாம்வ ளர்த்தவள்கொள் ஆர்வத்த ரைக்,கெடா
விசிகம்நாடி மெய்த்தவசு புரிகிரீடி யைப்புரையும்
விரதசீலர் முற்செயும்வி னைதத்தரைக், கையால்
விசிறும்வார்வ லைச்சமனும் மதனும்நான்மு கத்தவனும்
வெருளுமாறு றுக்கியெழு கோபத்த ரைத்,தெணீர்
விதுஅராஎ ருக்(கு)அலரி இதழிஆர்மு தற்சொல்பல
மிளிர்சடாட விக்கிழவ ஞரைத்,த மிழ்ச்சொலால்
மிகவும்நாளும் மெச்சுமொரு சதுரர்மாம னத்துலவும்
விடைவலாரை விப்பிரர்கள் தேவைப் பழிச்சுவாம்;

வசியமோக னக்கருணை கொடுமினார்ப லர்க்கவரும்
வளமையாள னைச்,சகல லோகர்க்கும் நட்பனு
வருகுமார னைப்,பொருவில் முருகநாத னைக்,கலப
மயில்விசாக னைச்,சமர்செய் சேவற்க ரத்தனு
வளர்குகேச னைப்,பரணில் உறையுமான்அ ளித்தமயல்
மலிவதால்ம ரத்துருவும் ஆம்முத்த னைச்,செவேல்
வலதுதோளில் வைத்தவுணர் குலமெலாம்அ றக்கறுவும்
வயவனை சற்குருவை, வானத்தர் வெட்கவே
பசியினோ(டு)உ றக்கம்அறு முனிவர்யாவ ருக்கும்மறை
பகர்கிலாமு தற்பொருள்சொல்வானைக்,க னற்கண்ஓர்
பருவதாக ரத்தில்வரு தகர்கடாவி வெற்றிபெறு
பலம்உளானை, அத்திமகள் கோனைப்,பல் பத்தர்சூழ்
பவளமேரு விற்பெரிய சலதடாக மத்திவரு
பரமசீல சற்குணவி லாசத்த னைப்,பொனேர்
பதுமகோம ளைக்கினியன் உயிர்கொல்வானை, முத்தர்உணர்
பழனிமாம லைக்குமர வேளைப் புரக்கவே. 2

(வசியமோக......சற்குருவை)

(பொ - ரை.) வசீகரிக்கும் (தெய்வ) மோகனத் திருவருளுடன், மின்னல் கொடிபோல் (பக்குவம் முதிர்ந்த ஆன்ம) மெல்லியலார் பலரை,(வயப்படுத்திக்) கைப்படுத்தும் வளம் உள்ளவனும்;

அனைத்துலக உயிர்கட்கும் (இனிய) நண்பனுய்க் குலவி வருகிற குமரனும்;

(நலம்தரும்) ஒப்பிலாத் திருமண நாதனும்;

தோகைமயில் ஏறி, விசாகநாளில் தோன்றுபவனும்;

(மாயா இருளை மாய்க்கப்) போரிடும் சேவல்கொடியை திருக்கரத்தில் பற்றி, இதய குகையில் வாழ்ந்து இருக்கும் ஈசனும்;

---

2. விசிகம் - கணை. கிரீடி - அர்ச்சுனன். சமன் - இயமன். விது - சந்திரன். பருவத ஆகாரம் - மலைபோலும் தோற்றம். தகர் - ஆடு. அத்திமகள் - தேவயானை.

(மாபெரும்) பரணில் இருந்த மானுன வள்ளியார் தந்த மையல் மிகுதியால்,(வேங்கை)மர வடிவமாகி,(தகாத காம) விடுதலை தருபவனும்;

செவ்விய வேல்படையை வலத் திருத்தோளில் சேர்த்து, அவுணர் குலம் முழுதும் அடியோடழியக் கறுவிய வீர விசால ஞான குருவும்;

**(வானத்தர்......வேளைப் புரக்கவே)**

உம்பர் நாணுற, பசியுடன் உறக்கம் அற்ற (அருந் தவ) முனிவர் அனைவர்க்கும், வேதம் (விளக்கிக்) கூறுத (உயர்ந்த) முதல் பொருளை உபதேசிப்பவனும்;

(நாரதர் செய்த வேள்வித்) தீயில், (மந்திரப் பிழையால்) மலைபோல் உதித்த ஆட்டுக் கடாவை ஏறி நடத்தி, வெற்றி பெற்ற வன்மை உள்ளவனும்;

(மாபெரும்) தெய்வயானை மணாளனும்;

பல அன்பர்கள் வலம்வரும் பவளநிற மேருமலை போன்ற தோற்றமுடன், (புனித) நீர் நிறைந்த தெய்வப் பொய்கை நடுவில் உதயமான மேலான வைதிக ஞான விலாசம் உடையவனும்;

திருமகள் போலும் (அழகிய) பதும கோமளைக்கு(க் கண்ணிறைந்த) இன்பக் கணவனை சூரபதுமன் உயிரை ஒழித்தவனும்;

ஜீவன் முத்தர்கள் தியானிக்கின்ற சிறந்த பழனிமலையில் எழுந்தருளி யிருப்பவனுமான குமரவேள் (பிள்ளைத்) தமிழைக் காப்பீராக என்று;

**(அசிபதாதி............ஆர்வத்தரை)**

அசிபதம் முதலான (பயனும்) மூன்று பதங்களையும், (ஊன்றித்) தியானிக்கும் (சனகாதி) முனிவர்கட்கு உதவி புரிந்து, (கம்பீரமாக) விளங்கும் கல்லாலின் கீழ் (இனிது) எழுந்தருளி இருப்பவரும்;

(என்றும்) பிறவி யில்லாமல், அளவில்லாத சத்திகளும் தழுவுகின்ற சிறப்பைத் தாங்கியவரும் ;

களங்கமற்ற ஞான சித்தர்கள், மறவாமல் கருதும் இரு திருவடிகளை யுடையவரும் ;

இவ்வுலக நடுவில் உயர்ந்து விளங்கும் பொன்மலையான வில்லில், (புனித) ஆதிசேடனாகிய நாணைப் பூட்டி, (முப்புரப்) பகையை வென்ற முதல்வரும் ;

பொன்னுலகப் படைகளைப் பொசுக்கிய நீறு பூசிய திருமேனியில் நின்று, முதலான அறம் முப்பத்திரண்டும் வளர்த்த எம்பிராட்டியை ஏற்ற இன்ப வடிவரும் ;

(கொடா..........தேவைப் பழிச்சுவாம்)

அழியாப் பசுபதி கணையை ஆவலித்து, மெய்த்தவம் புரிந்த அர்ச்சுனனைப் போலும் தவ (ஒழுக்கம் தழைத்த தனிப் பெரும்) முனிவர்கள் முன், விநோதம் பல விளைவிப்பவரும் ;

(உயிர்களைப் பற்றுதற்குக்) கையால் எடுப்பான வலையை விசிறி விடுகிற இயமனும், காமனும், பிரமனும் வெருளும்படி, உக்கிரம் கொண்டு எழும் கோபம் உடையவரும் ;

தெளிந்த நீர்நிறை தெய்வ கங்கை, திங்கள், அரவு, எருக்கு, அலரி, கொன்றை, ஆத்தி முதலாகப் பெறுபவை பல விளங்கும் (உயர்ந்த) சடைக் காட்டிற்கு உரியவரும் ;

தமிழ்மொழியால் பெரிதும் நாளும் பிரியமொடு புகழும் ஒப்பற்ற சதுரர்களாகிய (சமய) குரவர்களது (பயனான) திருவுளத்தில் பவனி வரும் விடையூர் வல்லாளரும் ;

(வாய்மை) அந்தணர் வழிபடுபவருமான (தூய) சிவ பிரானைத் துதிப்பம், (எ - று).

விரிவுரை

குமரவேளைப் புரக்கவே - விப்பிரர்கள் தேவைப் பழிச்சுவாம் என முடிக்க.

## முதலடியில் உள்ள செய்தி

தத் - அது ; துவம் - நீ ; அசி - ஆகிறாய் எனப் பொருள் தரும் (1) தத்துவமசி மகாவாக்கியம், சாமவேத முடிவான சாந்தோக்யத்தில் உளது.

அது என்பது எது ? என வினா எழுந்தபோது, பெரிய ஞானமே சொரூபமான பிரம்மம் எனும் பொருளில்,

(2) ப்ரஜ்ஞானம் பிரம்மம் என, மாபெரும் இருக்கு வேதம் வாய்மலரும்.

(3) அயமாத்மா ப்ரஹ்ம: என்று அடுத்து உரைக்கிறது அதர்வணம்.

அயம் ஆத்மா - இந்த ஆன்மா ; ப்ரஹ்ம - பெரியது என்பது இதன் பொருள்.

எனவே, ஆன்மாவிற்கு அந்தர்யாமியாக இருக்கும் பரமான்வாவே (அந்தப்) பிரம்மம் என்பது இங்கு அறியப் பெறும்.

இதனை யடுத்து, நான் (அப்) பிரம்மமாக இருக்கிறேன் எனும் பொருளில், (4) 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்று கூறுகிறது யஜுர் வேதம்.

இங்ஙனம் ஒன்றை ஒன்று ஊன்றிய நலம் தரும் மகா வாக்கியங்கள் நான்கும், நான்மறை குறிப்பிடும் அற்புதமான அருளுரைகள். வாக்கியங்கள் நான்கெனினும், பொருள் முடிபு ஒன்றே.

இந்நான்கும், சிவோஹம் எனும் அருமை மகா மநுவில் அடங்கும். இந்த விசாரணையின் ஆரம்பம் 'தத்துவமசி' யாதலின், 'அசிபதாதி முப்பதமும்' எனப் பெற்றது.

உயர்ந்த இம்முறையை உணர்ந்து, ஆதி அஸிபதமும் என இயைத்து, முதன்மை முப்பதமான தத்துவமஸியை எனப் பொருள் கோடல் ஒருவகை. காலமுன், இடமுன் எனும் விதிப்படி, இடமுன் இருக்கும் அஸிபதம் எனினுமாம்.

தத்பதம் - சித்தனுபவம் ; தொம்பதம் - சத்தனுபவம் ; அசிபதம் - ஆநந்தானுபவம் எனலும் ஒருவகை.

பிரமன் பெற்ற பிள்ளைகள் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் எனும் நால்வர். பிரபோ ! கற்பன கற்ளும் ; கருத்தடங்கவில்லை ; ஒடுங்க அருள் ; உணர்ந்து அடங்க அருள் என்று அவர்கள் வேண்டினர்.

உடனே சிவபிரான், கல்லால் மரநிழலில், தென்திசை நோக்கி, எவரும் உய்ய எழுந்தருளினன். அன்று மாவாக்கியம் நான்கையும், அதை உணர்ந்து அடங்கும் வழியையும் அருளினன் அந்த அம்மான். அன்றைய வரலாறு இது. இன்றும் 'நினைவார்க்கு உதவுகிறது' அந்நிமல தெய்வம் என்பதை, எண்ணும்போதே இன்பம் பிறக்கும்.

காட்சிப் படுவதெல்லாம் சத்தி சொரூபம். கருத்துப் பொருளாவது சிவ சொருபம். சத்தனைச் சார்பவர் சத்தியர். அச்சத்தியர் அளவிலர் எனலை, 'அளவில் கோடி சத்தியர்' என்றார்.

மல அறிவினர் சிவத்தை மறப்பர் ; பரிபூரண ஞானமே திருவடி யாதலின், 'அமல ஞான சித்தர்கள்,' மாபெரும் திருவடியை என்றும் மறவார் என்ற நலம், என்றும் மறக்க முடிவதில்லை.

மலையை வில்லா வளைப்பதும், ஆயிரம்தலை யரவை நாணியா அமைப்பதும், மும்மல கண்டனர்க்கே முடியும் என்பது நயம்பட உரைத்த நடை.

பிறந்து இறந்து சத்துக்கள் மேலும் பீடை யடை யாதபடி, புனித ஞானக் கனலால் அவர் மேனியைப் பூதியாக்கி, அப்பூதியைப் பூரித்த தம் திருமேனியில் பூசும் பெருமாட்டியை, ' பொடி நிறையும் மேனி ' என்று கூறிப் புளகித்தார். உவக்கும் இந்நிலை, சிவத்திற்கும் உரியது.

ஆதுலர்ச் சாலை, ஓதுவார்க்கு உணவு, சிறைச் சோறு, நடைத் தின்பண்டம், கண்ணுடி, காதோலை, கண்மருந்து,

தலைக்கெண்ணெய் முதலிய அறம் முப்பத்திரண்டு ஆதலின், ' அறமெலாம் ' என்றார்.

அறந்தான் அரனை அடைவிக்கும் ஆதலின், 'வளர்த்தவள் கொள் ஆர்வத்தர் ' என்றார்.

## இரண்டாம் அடியில் உள்ள செய்தி

விட்ட பசுபதி கணை, விரையம் ஆவதில்லை ; ஆதலின் அது, ' கெடா விசிகம் ' ஆகும். விசிகம்=பாணம் ; வடசொல்.

அர்ச்சுனன் தவ அருமையை, " அருந்தவம் முன் புரிந்தோரில், இவனைப்போல் மற்(று) ஆர் புரிந்தார் சிவசிவ என்(று) அரியவாறே " என்று, வில்லி பாரதம் விரித்துரைக்கும்.

விரத சீலரிடம் இறைவன் விளையாடும் அருமையை, பெரிய புராணம் முதலிய நூற்கள் பேசும். சொற்போரும் விற்போரும், மற்போருமாக விஜயனிடம் விமலன் விளையாடியதும் உணர்க.

இறப்பைத் தருபவன் இயமன் ; மயலை விளைவிப்பவன் மன்மதன். அவாவின்படி பிறப்பை யளிப்பவன் பிரமன். இம்மூவரும், சிவ சாம்ராஜ்ய ஆணையின்படி எண்ணும் பதவியில் இருப்பவர்கள்.

ஒரு காலத்தில் இவர்கள், தமக்குப் பதவியளித்த பரனையே பதம் பார்க்க முயன்றனர். பதம் பார்க்க நினைந்தாரைப் பதம் பார்த்தான் பரன். அந்த அருமையை, ' உருக்கி எழும் கோபத்தர் ' என்பதில் உணர வைத்தார்.

கிழமை = உரிமை; கிழவன் - உரிமை யுடையவன். நீரும், மதி நிழலும், அரவும், எருக்கும், அலரியும், ஆத்தியும் இயல்பாகக் காட்டில் இருப்பவை. அவைகள் சார்ந்த இடம், ' சடைக்காடு ' எனப் பெற்றது.

நலம் சிறந்த சமய குரவர் உளத்தில் நடமாடுவான் எனும் அருமையை, ஊன்றி உணர்பவர் உயர்வினராவர்.

இகத்தை மறந்து பரத்தைப் பாடும் மேலவராதலின், அவர்களைச் 'சதுரர்' என்றார்.

ஓம் பிராம்மணப் பிரியாய நம: எனும் மந்திர நினைவில், 'விப்பிரர்கள் தேவு' என்றார்.

விரத சீலம் - அகத்தும் புறத்தும் அமைந்த ஒழுக்கம். சமன் - நடுநிலை யுடைய இயமன். மதன் - மதர்த்துத் திரியும் காமன். நான்முகன் - நான்கு திசைகளையும் நோக்கிய நான்கு முகங்களை யுடைய பிரமன்.

### மூன்றாவது அடியில் உள்ளவை

வேல் வழிபாடு செய்யும் அன்புடைய வேலன் என்பான்மேல் ஆவேசித்து, வள்ளி வேடம் பூண்டு ஆடிப் பாடும் மலைநில மகளிர் பலரை வாரி எடுத்துப் பவனி வரும் வள்ளல் பிரானை, 'வளமையாளன்' என்றார். திருமுருகாற்றுப்படை 'குன்று தோறாடலில்' இக்குறிப்புளது.

முருகு - மணம்; முருகநாதன் - மணநாதன் எனப் பெறுவன். உண்மையில் எப்பந்தமும் இல்லாதான் ஆதலின் 'முத்தன்' என்றார். 'முத்தனாய் முருகனாய்' எனும் வழக்காரும் இங்கு எண்ணத் தகும். கட்டற்றவர்களே கந்த சாரூப கதி பெறுவர் என்பது குறிப்பு.

அவுணரைக் கருவியது மறக்கருணை.

### நான்காவது அடியில் உள்ள செய்தி

அமுதம் உண்டு கண்ணுறங்கிலர் அமரர்; போகமே நினைந்து புந்தி நொந்தனர்.

'உணவைத் துறந்து, உறக்கம் மறந்து, உமை மைந்தனையே உணர்ந்து, உள்ளம் உருகினர் முனிவரர்; இந்த அருமையை எண்ணவே இன்பம் பிறக்கிறதே.

ஆட்டு வாகனன், ஆனைமகள் கோன் என்னும் நயம், என்றும் எண்ணும் தகுதியது. (உ)

## அம்பிகை

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தந்தன தாத்தன

அருவம தத்தினர் சிறுமன மத்தியில்
அமரும்வி ருப்பறு சுந்தரப் பார்ப்பதீ !
அழகிய லட்சுமி சரசுவ திக்கொடி
அநுதின மெச்சிவ ணங்குபொன் தாள்பிடீ !
அருணவ ரைக்கரு(கு) ஒருகன விற்றமி
யனைஅவண் நச்சிய விர்ந்தசிற் றுக்கையாய் !
அசலஇ னத்திறை புரிதவ சிற்பெரு(கு)
அகமகிழ் வுற்றொரு குஞ்செனத் தோற்றினாய்!
சருவம தத்தரும் இகழிட எய்ப்பறு
சகளஉ ருப்பல தந்தசித் தாட்டுளாய்
சரதநி னைப்பொடு வழிபடும் உத்தமர்
தமரவ ருக்கும்வ ரங்கள்மிக்(கு) ஆற்றுவாய் !
தமிழ்கொடு செப்பிய புலவன்உ ணப்பல
தரம்உலே வைத்(து)அமு தும்சமைத்(து)ஊட்டினாய் !
தனதுயி ரிற்றிகழ் தருதிரி அக்கர
சவுரியம் நச்சிநின் முன்கைகள் கூப்புவேன் ;

---

3. பிடீ - பெண்யானை போன்றவளே. அருண வரைக்கு அருகு - நெருப்பு மலையான திருவண்ணாமலைக்கு அருகில். அசல இனத்து இறை - மலை நிலங்கட்கு மன். குஞ்சு - குழந்தை. எய்ப் பறு - சோர்வற்ற. சகள உரு - உருவத் திருமேனி. சித்து ஆட்டுளாய் - அருள் ஞானத் திருவிளையாடல் செய்பவளே. சரதம் - உண்மை. தமரவர் - இனத்தினர். ஆற்றுவாய் - தருவாய். புலவன் - கவிராஜ பண்டிதர். திரி அக்கர சவுரியம் - மூன்று எழுத்தால் ஆய தேவி மந்திர வலிமை. மருவலருக்கு - பகைவர்கட்கு. சத்திர

மருவல ருக்கெமன் என நிகழ் சத்திர
வயவர்வ ழூத்திய செஞ்சொல்மிக் கேற்றசேய்
மரகத ரத்தின மெலியும்நி றத்தனி
மயிலைந டத்துது ரங்கமஃைப் பாக்கொள்வான்
மறவர்கு றிச்சியில் ஒருகுடில் உற்றுமுன்
வளர்சிறு மிக்குந யங்கள்செப்(பு) ஆற்றலான்
மகபதி முற்றமல் கியகரி புத்திரி
வனமுலை முட்டிய இங்கிதப் போர்ச்செவேள்
பருவத முற்றுமொர் குடையினுள் வைத்துள
பழையவன் மொய்த்தக டம்பலர்த் தார்க்கொள்கோ
பறிதலை யிற்புழு நெளிதரு துட்டர்கள்
பதறிஅ ழப்பதி கங்கள்சொற்(று) ஆர்த்ததோர்
பனவனும் உக்கிர வழுதியும் முற்படு
பலரைஇ ழுத்துவி ழுங்கருள் கூத்தன்,மால்
பகர்பெரு மைக்குகன் வளமலி வுற்றுயர்
பழனிம லைக்கும ரன்றனைக் காத்திடே. 3

(அருவ...அழகிய...தாள் பிடி !)

(பொ - ரை.) அருவத்தை வழிபடும் கொள்கையர்தம் அல்பமன நடுவில் அமரும் விருப்பம் அற்ற, (மாபெரும்) அழகிய மலைமகளே !

புனித அழகுள பொன்மகளும், நாமகளும் ஆன பூங் கொடியர் இருவரும், (பொலிவுபெற) நாள்தோறும் போற்

---

வயவர் - வாள் வீரர். துரங்கம் - குதிரை. மறவர் குறிச்சி - வேடாது சிற்றூரில். மகபதி - இந்திரன். கரி புத்திரி - தேவயானை. இங்கிதம் - இன்பக் குறிப்பு. பருவதம் - குறிஞ்சி நிலம். தார் - மாலை. பறிதலை - மயிர் பிடுங்கிய தலை. துட்டர்கள் - துஷ்ட சமணர்கள். பனவன் - திருஞானசம்பந்தர். உக்கிர வழுதி - உக்கிர குமார பாண்டியர்.

றித் துதிக்கும் பொலிவுறு திருவடிகளை யுடைய பெண் யானையே !

(அருணவரை ....., ஆக்கையாய் !)

அக்கினி மலையான அண்ணுமலைக்கு அருகில், (அடியேன் துயிலுறும் சமயம்,) அகதியான என்மேல் அன்பு கொண்டு, அவ்விடத்தில் ஒளிவிளங்கச் சேவை தந்த இளந் திருமேனி யுடையவளே !

(அசலனை...தோற்றிஞய்!)

மலைக்குல இமய மன்னன் செய்த மாபெருந் தவத்தால் பேருள்ளம் மகிழ்ந்து, (அவனிடம்) ஒப்பற்ற குழவியாய் உதித்தவளே !

(சருவ...ஆட்டுளாய் !)

எச்சமயத்தவரும் இகழ்ந்துரைக்க, களைப்பற்ற உருவத் திருமேனிகள் பல கொண்டு, அருள் ஞான ஆடல் செயும் அம்மே !

(சரத...ஊட்டிஞய் !)

மெய்யுணர்வுடன் வழிபடும் உத்தம இனத்தவர்க்கு, வரங்கள் பெரிதும் வழங்குபவளே !

(பழந்) தமிழால் பாடிய கவிராஜ பண்டிதர் உண்ணுமாறு, பலதரம் உலைவைத்து உணவு சமைத்து ஊட்டியவளே!

(நனதுயிரில்... கூப்புவேன்)

உனது உயிர்போல் ஒளிரும் (அருமை) மூன்றெழுத்து மந்திர ஆற்றல் (கைவர) அவாவி, குவித்த கைகொண்டு உன் சந்நிதியில் கும்பிடுவேன் ;

(மருவலருக்கு....சேய்)

பகைவர்க்கு இயமன் என விளங்கிய வாள்வீரர்கள் ஏத்தும் செவ்விய துதிமொழிகளை ஏற்றுக்கொண்ட இளம் பிரான் ;

(மரகத...செவ்வேள்)

மரகதமணி நாணும் நிறமுள மயிலை, (ஏறிச்) செலுத்தும் குதிரைக்கு இணையாக் கொண்டவன் ;

குறவர்களது சிற்றூரில் உள்ள ஒரு குடிசையை யடைந்து, முன்னரே (அங்குப்) பருவமெய்தி யிருந்த இளஞ் சிறுமியான வள்ளியாரிடம், அருமை நயமொழி பல உரைத்த ஆற்றல் உள்ளவன் ;

(முதன்மை) இந்திர வாழ்வு முதிர, (அங்கு) வளர்ந்திருந்த தேவகுஞ்சரியின் அழகிய குயங்கள் அழுந்துமாறு சிறந்த இணைவிழைச்சுப் போர் செய்து, மோட்ச தாகம் மூட்டிய முதல்வன் ;

(பருவதம்...கொள்கோ)

குறிஞ்சி நிலம் முழுவதையும் (அருள்) குடை நிழலுள் அமைய வைத்த அநாதி நித்தியன் ;

மணம் நிறைந்த கடப்ப மாலையணி மன்னன்;

(பறிதலை...கூத்தன்)

பலதரம் மயிரைப் பறித்து, (அதனால்) புண்ணாகித் தலையிற் புழுக்கள் நெளியும் பொல்லாச் சமணர்கள் அகம் பதைத்து அழும்படி, (பயனுள) திருப்பதிகங்களைப் பாடிச் சிவஒலி எழுப்பிய திருஞான சம்பந்தரும், உக்கிர குமார பாண்டியரும் முதலாகச் சொல்லப்பெறும் பயன் தரும் பலரை யீர்த்து, (வித்தகத்) தன் கலையால் விளங்கச் செய்த (குதூகலமான) திருவருள் கூத்தன் ;

(மால்...காத்திடே)

(செம்மைத்) திருமால் புகழும் சிறப்புடைய இதய சிற்றம்பலத்தில் இருப்பவன் ஆன, நிலைத்த வளம் நிறைந்து உயர்ந்த பழனிமலைக் குமரன் (பிள்ளைத்) தமிழைப் பாதுகா, (எ - று).

விரிவுரை

உருவ வழிபாட்டில் ஒருமை வரும். அருவ வழிபாட்டில் அது அமைவது இல்லை. அவர் உளத்தில் தற்பர அன்னை நீ தங்கமாட்டாய்.

இன்புதரும் கல்வியும், இணையிலாத செல்வமும் உன் இரு திருவடிக ளாயின. அதை உணர்ந்த அலைமகளும் கலைமகளும், நின் திருவடிகளைப் பெரிதும் துதித்துப் பேறு பெறுகின்றனர்.

ஒரு சமயம் அண்ணுமலையில், பரிவொடு தங்கி ஒரு சதகம் பாடினேன். அன்றிரவு உண்ணுமுலைத் தாயே! கனவில் வந்து நீ காட்சி யாயினை.

அழகிய மஞ்சள் ஆடை அணிந்து, எட்டு வயதுக் கோலத்தில் இருந்தாய். அடியேன் மடியில் அமர்ந்தாய். பரிவொடு நின் கரம் பற்றினேன்.

"அம்மா! உன் பெயர் யாது?" என்றேன்.

"என்னை இன்னும் உணர்ந்திலையே! நான்தானே உண்ணுமுலை!" என்று உரைத்து, கலகல நகை செய்து எழுந்தாய்! வானில் கரந்தாய்! கனவும் கலைந்தது.

விழித்தேன். உளத்தால் வியந்தேன். நனவில் பாடினேன்! கனவில் வருகிருய்! வாழ்க அம்பா! வாழ்க தேவீ! என்று அன்று வாழ்த்தினேன். இப்பழைய வரலாற்றை எண்ணி,

'அருணவரைக் கருகு...சிற்ருக்கையாய்!' என்று இன்றும் ஓதுகிறேன் என்றபடி. ஊன்றி உணர்ந்து, இவ் வரியை ஓதும்போதே உள்ளம் உருகுகிறதே!

எடுப்பான தவத்தினர் முன் எளிமை தோன்ற, இளமை காட்ட, 'அசல இனத்திறை...குஞ்செனத் தோற்றினுய்.'

அம்பா! உனது அருள்பெற தவமேதான் தக்கவழி என்பதை, அரிய இவ்வரலாறு கொண்டு உலகம் அறிந்துளதே!

தோன்றிய உருவமெலாம், தாயே! உன்னி லிருந்தே தோன்றின. அவைகள் யாவும், உன் தொன்மை உருவங்கள் அல்லவா!

வனப்புடைய ஒரு திருவுருவை வழிபடுவோர், மற்ற திருமேனிகளை மறுதலிப்பர். அவைகளைக் கண்டு நீ அயர்வது இல்லை. வழிபடும் எவ்வுருவில் இருந்தும், வாவி வெளியாகி, நீடித்த அருளாடல் நிகழ்த்துகிறாய்.

மெய்ம்மை நினைவொடு வழிபடும் மேலோர்க்கும், அவரைச் சார்ந்த பிறர்க்கும், அளவிலா வரங்களை அளிப்பவளே!

தேவீ! நின் ஜீவ மந்திரம் திரியட்சரம். அது தரும் ஆற்றலை, ஆவலிப்பவன் அடியேன். கூப்பி நின் திருமுன், அதுகுறித்துக் கும்பிடுகின்றேன்.

கவிராஜ பண்டிதர் உன் பக்தர். உணர்ந்து நின்னையே உபாஸித்தவர். மனைவியை இழந்த அவர்க்கு, ஒரு மகள் இருந்தாள். அவள் வயது எட்டு. மகளை வீட்டில் இருத்தி, புலவர் காசியைச் சேவிக்கப் புறப்பட்டார்.

இடை வழியில் இருந்த, ஒரு பழஞ் சத்திரத்தில் படுத்தார். சிறிது நேரம் துயின்றார். பிறகு விழித்தார். எதிரில் மகள் இருந்தாள். புலவர் வியந்தார்.

"இருபது கல் கடந்து எப்படியம்மா வந்தாய் நீ?"

பசி வந்து பாதிக்கும் போது, உமது அருமையை உணர்ந்து உணவளிப்பார் யார் அப்பா! அதை உணர்ந்தேன். உம்மை யறியாது தொடர்ந்தேன். சத்திரத்தில் உணவு சமைத்து வைத்திருக்கிறேன். எழுந்து வந்து உண்ணும் என்று, நகைத்து உரைத்தாள் நங்கை.

"அரிசி முதலியன ஏது அம்மா?"

நான் கொண்டு வந்தேன். அது குறித்த விசாரணை ஏன்? எழுந்திரும் என எழுப்பினள். உத்தமத் தந்தையை நீராட வைத்து, மகள் உண்பித்தாள். தந்தை பாடும் சௌந்தர்ய லகரி, ஆநந்த லகரி கேட்டு ஆநந்தித்தாள்.

சிறிது சிரம பரிகாரம் ஆனதும், தோய்த்து உலர்த்திய வேட்டியுடன், புலவரைத் தொடர்ந்தாள். சென்று தங்கிய இடமெல்லாம், இதே செய்தி. உருண்டு ஆறு திங்கள் இடையில் ஓடின.

வாரணசியை வணங்கி, இருவரும் ஊர் நோக்கித் திரும்பினர். தம் பதிக்கு அண்மையில் இருந்த சத்திரத்தில் தங்கினர். பிறகு புறப்பட்டனர். வீட்டை யடைந்தனர்.

வீட்டில் இருந்த மகள், 'இப்போதுதானு அப்பா வருகிறீர் ?' என்றபடி, ஓடிவந்து கைப்பிடித்தாள்.

தொடர்ந்து வந்த மகள், கைப்பிடித்து நின்ற மகள் என இருந்த இருவரையும் நோக்கி, இது யார் ? அது யார்? என்று புலவர் ஐயுற லாயினர்.

" உன் மகள் உருவில், இதுவரை உதவினேன் ; என்றும் உன் பங்கில் இருப்பேன் " என்றபடி, மகள் உருவில் வந்த நீ, மாபெரும் ஒளி மயம் காட்டி மறைந்தாய்.

புலவர் மெய் சிலிர்த்தது. வாழி தாயே ! வாழி அம்பா என்று வாழ்த்தினர்.*

வாழ்வித்த இவ்வரலாற்றை யுணரும் போதே, எம் வாயும் கையும் ஊறுகிறதே !

மருவலர் • உள்ளக் கலப்பு இல்லாத பகைவர்.

குடைக் கூத்தும் துடிக் கூத்தும் நிகழ்த்தித் தனியிருந்து வெல்லும் குமரனை, மறவர்கள் ஏத்திப் போற்றும் இயல்பைப் புறப்பொருள் நூல்கள் புகல்கின்றன. அதை "வயவர்...சொல் ஏற்ற சேய் !" என்கிறேன்.

கொடிய குறவர் வாழிடத்தில், குறத்தி முன் அமைதியாக உரையாடுவாய். அத்தா! வித்தக உன் ஆடல் பல, அப்போது வெளிப்படுகின்றது. அந்த உரைநலங்கள், அனுபவ ஞான அருளுரைகள்.

*குகஸ்ரீ ரஸபதி எழுதிய அருமையான இவ்வரலாற்று விரிவை, அமிர்தவசனி மாத இதழில் அறியலாம்.

வள்ளியார் மூலம், நிலவுலகர்க்கு வாழ்வளித்தாய். மறுமை உலகம் மன்னி யிருப்ப, மாபெரும் தேவயானையை மணந்தாய்.

'இங்கிதப் போர்' என்பது, போகமுகமான யோகத் தொடர்பு; இக் குறிப்புமுகம் கோடிபெறும்.

குறிஞ்சியை இடமாகக் கொண்டு, அண்டம் பிண்டம் எங்கும் அருள் செங்கோல் நடத்தும் உன் அருமையை; 'ஓர் குடையினுள் வைத்துள பழையவன்' என்று குறிப்பிடுகிறேன்.

கடம்பு—அருள் சிவபோக அடையாள மாலை.

'உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்' என்பது திருமுருகாற்றுப்படை.

மணிபூரகத்தர் திருமால்: அநாகதன் அறுமுகன். கீழிடத்தார் மேலிடத்தாரை ஏத்தல் இயற்கை: அதை எண்ணி, 'மால் பகர் பெருமைக் குகன்' என்கிறேன் என்றபடி.

கைகள் கூப்புவேன்! குமரன்தனைக் காத்திடே! என முடிக்க. (௩)

## விநாயகர்

தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தானனத் தாத்தன.

கனியாதி மிக்கசுவை உணவால்ம கிழ்ச்சியுறு
கடமாமு கக்கடவு ளானை,நட் டார்க் (கு)ஓரேழ்
கடல்நேர் பிறப்பொழிய நினைவானை, ஒப்பில்பர
கதிஞான வித்தனைய தாரகக் கோட்டுளே
தனியான தத்துவனை, ஒருமூவ ருக்(கு)உவகை
தருகேள்வ னைத்,தண்வய லூர்முகப் பாச்சொல்சீர்
தகுசார விற்குலவு கணநாத னைப்,பெரியர்
தணவாது முற்றெருமொர் தேவினைப் போற்றுவாம்

அநியாய முற்றுபல தகுவேசர் சுற்றமுடன்
அழிவாகி டப்பொரும்வை வேலனைத்,தோட்கள்மீ(து)
அணிசாரு வைப்பரவு புலவோர் கவித்தொடையில்
அதியாசை யுற்றகும ரேசனைத், தூர்த்தர்நேர்
பணியாது றுக்கவல கவுமார ருக்கினிய
பயன்யாவும் நித்தமருள் வானைமைச் சூல்கொண்மூ
படர்சோலை சுற்றுகவின் உலவா(து)உ யர்ச்சிபெறு
பழனுபு ரிக்கிரிவி சாகனைக் காக்கவே. 4

**(அநியாயம்...அழிவாகிட...காக்கவே)**

(பொ - ரை.) *அநியாயம் முதிர்ந்த அவுணர் தலைவர்கள் தம் உறவினருடன் அழிய,* மோதிய *கூரிய* வேல் உடைய *வனும் ;*

*(தனிப் பெரும்)* தோள்மேல் *தங்கிய (அருணகிரியான) கிளியைக் கருதும் புலவர்கள் கவிமாலையில்,* அளவிலா *ஆசைகொண்ட குமரேசனும் ;*

*நல்லவர் அல்லாதார் முன் நடுங்காமல்,* கடிந்து அவர் *களை விரட்ட வல்ல கவுமாரர்கட்கு, இன்பப் பயனை நாள் தோறும் ஈபவனும் ;*

*கருப்பம் கொண்ட கருமுகில்கள் பரவிய சோலைகளில் சூழ்ந்துள்ள இயற்கை யழகு (என்றும்) குன்றாமல், ஓங்கி உயர்ந்த (வித்தகப்) பழனி மலையில் வீற்றிருப்பவனுமான (கருணை) விசாகன் (பிள்ளைத்) தமிழைக் காக்க என்று ;*

**(கனியாதி...போற்றுவாம்)**

*பழம் முதலிய நீடித்த சுவை யுடைய நிவேதனப் பொருள்களால், களிப்படையும் யானைமுகக் கடவுளும் ;*

---

4. *கடமா - மதயானை. தாரகக் கோட்டுளே - பிரணவ வட்டத்தில். ஒரு மூவருக்கு - ஒப்பற்ற (சித்தி, புத்தி, வல்லபை யெனும்) மூன்று தேவியர்க்கு. தணவாது - அகலாமல்.* **தகுவேசர்** *- அவுணர் தலைவரான சூரபதுமனாதியர். அணி சாருவை - அழகிய கிளியை. பரவு-பாராட்டும். மைச்சூல் கொள் மூ-நீருண்ட* **கருமேகம்.**

(புனித) நட்பை (உளத்தில்) பூண்டவர்க்கு, எழுகடல் போல் (விரவிய) எழு பிறப்பும் ஒழிய எண்ணுபவரும் ;

ஒப்பிலாத வீடு பேற்றிற்கு உரிய (புனித) ஞான வித்துப்போல், (வாய்த்த) பிரணவ வட்டத்துள் தனித்து உள் பொருளான உத்தமரும் ;

முதன்மைச் சித்தி, புத்தி, வல்லபையாம் முத்தேவியர்க்கும், (மாபெரும்) மகிழ்வளிக்கும் மணவாளரும் ;

தண்மையை யுடைய வயலூரின் முன்னிடமாகச் சொல்லப்பெறும் சிறப்புடைய தக்க (மலைச்) சாரலில், (கம்பீரம் தோன்ற) விளங்கும் கணநாதரும் ;

மேலோர் இடையறாது முன்வந்து தொழப் பெற்றவருமான தெய்வக் கணபதியைத் துதிப்பம், (எ - று).

விரிவுரை

வானவரை மச்சம் சுமக்க வைத்தார் ; குடிக்க மதுவைக் கொணர்கென்றார் ; கற்புடையோர்க்குக் கலக்கம் அளித்தார் ; தவமுனிவோரைத் தடுமாறப் பண்ணினர்; புண்ணியப் பொன்னுலகைப் பொசுக்கினர்; ஆன்றோர்களை அடிமை யாக்கினர். இப்படி 'அநியாயம் முற்றுபல் தருவேசர்' பலர், அகில உலகையும் ஆக்ரமித்தனர்.

அவர்களை வேருடன் அழித்த வேல், வானவர்க்கு என்றும் வாழ்வை அளித்தது.

என்றும் அவ்வேலை உடையவன் எம்மான் என்பதை, 'அநியாயம்...அழிவாகிடப் பொரும் வை வேலன்' என்பதில் அறிகிறோம்.

அருணை முனிவர் கிளியாகி, எம்மான் தோள்மேல் இருக்கின்றார் ; அங்கிருந்து அநுபூதி பாடி ஆநந்திக்கிறார் என்ற வரலாறு ஒன்று இருக்கிறது.

அந்த அருணகிரியாரை வழிபடும் அறிஞர்கள், அவர் சந்தப் பாக்களில் லயங்கொண்டு, அமைதி யின்பம் அடை-

வர். அந்நிலையில் அவர்கள் சூட்டும் பாமாலை, மாபெரும் அன்பு மணங் கமழும். அது கண்டு, குதூகலம் மிகும் குமரன் திருவுளம் எனும் குறிப்பு கோடி பெறும்.

துர் ஒழுக்கம் உடையவர், 'தூர்த்தர்' எனப் பெறுவர். அடியவர்க்கு, என்றும் அவர்களால் இடையூறு உண்டு.

குமரனை நம்பியவர் 'கௌமாரர்'. அவர்கள் தீயவர் களுக்கு அஞ்சுவது இல்லை ; அவர்களை வாக்கில், நோக்கில் வருத்தி விரட்டுவர்.

தவ ஆற்றல் தழைத்த அவர்கட்கு, இன்பப் பயன் எவையும் அருள்பவன் எம்பிரான் என்பதை, எண்ணும் போதே இதயம் நெகிழும்.

பழனம் - வயல் ; எனவே வயலூர் என்பது, பழனபுரி எனும் பெயரைப் படைத்தது. விசாக நட்சத்திரத்தில் உதயமான பிரான் 'விசாகன்' எனும் பெயருடையோன். மற்று, வி - சிறந்த ; சாகன் - (மயிலாகிய) ஊர்தியன் எனினுமாம்.

சுற்றிலுமுளது முகில்சூழ் சோலை. கண்ட இடமெல் லாம் வயல்கள் ; வளம் பெறும் இப்பகுதியில், பவனி வருபவன் மயிலூர் பரமன். அவன்மேல் பாடிய தனிப் பெரும் பிள்ளைத் தமிழ் இது.

நிவேதனம் கண்டு மகிழ் நிமலன் ; கருணை மதம் பொழியும் கடவுள் ; எண்ணுவார் பிறப்பழிக்கும் எம் மான் ; இன்ப ஓங்காரத்துள் ஏகாந்தன் ; முச்சத்தியர் முதல்வன் ; பழனி அடிவாரத்தில் இருப்பவன்; எக்கணத் திற்கும் அதிபன் ; மேலோர் எப்போதும் முன் வணங்கும் முதல்வன் எனப்பெறும் கணபதிப் பெருமான், கருணை யுடன் இப்பிள்ளைத் தமிழைக் காப்பதாக என்ற அருமையே அருமை.

(குறிப்பு) கனி - கனிந்திருப்பது எனும் பொருட்டு. கடம் - மதநீர். மா - யானை. கடவுள் - உள்ளிருந்து

எதையும் ஊக்குபவர் ; எண்ணும் மனவாக்கிற்கு எட்டாதவர் எனினுமாம். கட்டல் செய்தது கடல் ; அக்கடலிற்கு வரையறை யில்லை. ; அதுபோல் எடுக்கும் பிறப்பிற்கும் எல்லை யில்லை ; எழுகடல் உலகில் இருக்கின்றன என்பர். அதுபோல், ஏதம் தரும் பிறவியும் ஏழாகும் ; அவை தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் எனப் பெறும்.

தனியான தத்துவன் - ஒட்டு, பற்று இல்லாத அதிரகஸ்ய அனுபவ அமலன். தேவு - ஒளிமய விமலன் ; திவ் - பகுதி. அநியாயம் - நியாயத்தின் எதிர்மறை. வை - கூர்மை. வேல் - வெல்வது எனும் காரணக் குறி. பனியாமை - உளம் நடுங்காமை. கவுமாரர் - குமரனை வழிபடு கொள்கையர். கிரி - மலை. (௪)

## திருமகள்

தனதான தந்ததன - தனனதன தத்தன

பவளாச லம்புரையும் வடிவொடும லர்க்கண்மால்
பதையாத நெஞ்சிலுறு மனைவியைஇ மைப்பிலார்
தவயோகர் முன்பகர்பு ணியர்பலரும் நச்சவே
சலசாத னந்தனில்வை கியகொடியை மெச்சுவாம் ;
உவமானம் இன்றியசண் முகவரத னைப்,பல்நூல்
உணர்வார்பு கழ்ந்தகுர வனை,விடைஉ கைத்துவாழ்
சிவனார்ப யந்தசிறு மதலையினை, முத்தர்சூழ்
திருவாவி னன்குடியின் முருகனை அளிக்கவே. 5

---

5. பவள அசலம் - பவளமலை. புரையும் - ஒத்திருக்கும். இமைப்பிலார் - கண்ணிமையாத தேவர்கள். புணியர் - புண்ணியர் ; இடைக்குறை. நச்ச - விரும்ப. சலச ஆதனந்தனில் - கமல பீடத்தில். கொடியை - (பொற்கொடியான) திருமகளை. விடை உகைத்து - விடையைச் செலுத்தி. முத்தர் - கட்டற்ற மேலோர்.

(உவமானம்.........அளிக்கவே)

(போ - ரை.) (எந்த) உவமையும் கூற இயலாத அருள் வழங்கும் அறுமுக அண்ணலும் ;

பல நூற்களை உணர்ந்த புலவர்கள் பாராட்டித் துதிக்கும் பரம ஆசாரியனும் ;

(அற)விடை நடத்தி வாழும் அருளொளிப் பரன் (இனிது) அருளிய இளங்குமரனும் ;

விடுதலை நிலையினர் வலம் வருகின்ற திருவாவினன் குடித் திருப்பதியில் எழுந்தருளியவனுமான முருகன் (பிள்ளைத்) தமிழைக் கா அம்மா ! கா என்று ;

(பவளாசலம்.........மெச்சுவாம்)

பவளமலை போன்ற திருமேனியுடன், கமலக் கண்ணரான திருமாலின் தடுமாற்றம் இல்லாத் திருமார்பில் தங்கிய தேவியும் ;

இமையாக் கண்ணராகிய தேவர்கள், தவம்புரி யோகிகள், (உவந்து) முன் உரைத்த சிவபுண்ணிய கவுமாரர் (ஆகிய) பலரும் விரும்ப ;

தாமரையாகிய அணையில் தங்கிய பொற்கொடியாகிய (தூய) திருமகளைத் துதிப்பம், (எ - று).

விரிவுரை

திருமகள், அரிய எண்வகைத் திருவிற்கும் அதிதேவதை. இருக்க அவட்கு மார்பில் இடந்தந்த திருமால், என்றும் இடரை எய்துவது இல்லை. அக்கமலக் கண்ணர்க்கு ஏற்ப, கமலபீடம் அவள் இருக்கும் இடம்.

வாழ்க்கை மேலும் வளர, வானோர் திருமகளை வழுத்துகின்றனர். யோகானுபவம் சித்திக்க யோகத் திருவை,

சிறந்த தவத்தினர் சிந்திக்கின்றனர். சிவ புண்ணியம் சித்திக்க, கவுமாரர்கள் ஞானத்திருவை நாடுகின்றனர்.

ஆறு திசை, ஆறு அங்கம், ஆறு தத்துவங்கள், ஆறு ஆதாரங்கள், ஆறெழுத்துக்கள் முதலிய இடங்களில் இருந்து, அந்தந்த இடத்தின் அனுபவம் வழங்கும் அத்தன் அறுமுக வரதன்; இப்படி யிப்படி யிருந்து இன்னின்ன வாறு பரம அருளைப் பாலிக்கிறன் என்று எண்ணி மகிழ்வ தன்றி, உவமை முகமாகவும் சொல்ல அரிய சொருப தெய்வமாதலின், ' உவமானம் இன்றிய சண்முக வரதன் ' என்று அறிவித்தார்.

உயரிய நூல்பல உணர்ந்தார்க்கு, அவ்வுணர்வில் தங்கி உபதேசிப்பானை, ' உணர்வார் புகழ்ந்த குரவன் ' என்றூர்.

உயிர்கள் வாழுமாறு சிறந்த அறவிடைமேல் வாழ்கின்ற சிவனர் திருமுன், மூத்த பிள்ளையாரும் உளர்; ஆதலின் இவர் இளைய பிள்ளையார் எனும் பொருளில், ' சிறுமதலே ' என்ருர்.

பாசக் கட்டில்லாத பரம ஞானிகள், முத்தர் எனப் பெறுவர்; அவர்கள் வழிபடும் அருள்முதல் முருகன் என்பது, இறுதியடியில் எண்ணப்பெறும்.

(குறிப்பு) திரு - திருமகள்; ஆ - காமதேனு; இனன் - சூரியன்; கு - பூதேவி; டி - அக்கினிக் கடவுள்; இந்த ஐவரும் வழிபட்ட அருட்பதி திருவாவினன்குடி. இது,முதற் குறிப்பால் போந்த பெயர். 'முத்தர்சூழ் முருகன்' என்பது, அவர்க்கே அகப்படும் அமலன் எனும் ஒரு அறிவிப்பு.

முருகன் பிள்ளைத் தமிழை முன்னிருந்து கா என்று, கொடியை மெச்சுவாம் ' என்றது கோடி பெறும். (௫)

### சரசுவதி

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தானனத் தாத்தன.

அலர்கம லத்தவி(சு) உறைதரு விப்பிரன்
அகம்உரு கப்புணர் ஓதிமச் சீர்பெணாள்
அலைகடல் உட்கொளும் முனிவன்வ சிட்டன்முன்
அவிர்தரு மக்கள்பல் கோடிபெற்(று) ஆட்கொள்வாள்
தலமுழு திற்றிகழ் உயிர்கள்சி ருட்டிசெய்
தருமம தற்கொர்ச காயசித் தாட்டுளாள்
தவளநி றப்பிடி அனையவள் சத்திய
சரசுவ திக்கொடி தாள்களைப் போற்றுவாம் ;
அலகில்ப டைப்பொலி வுறுதகு வர்க்கெதிர்
அயிலைவி டுத்துவெல் வாகுவிற் பூத்தபூ
அவளவும் இட்டுள குமரன், மயிற்பரி
அழகன்எ மக்கொரு தாயெனத் தோற்றுசேய்,
பலபல வெற்பினில் வளர்எயி னத்திரள்
பணியும்உ வப்பவன், வானவர்க் காத்தகோ,
பரசணி அத்தரும் வழிபடு பொற்புறு
பழனிம லைக்குரு நாதனைக் காக்கவே ! 6

(அலகில்...குமரன்)

(போ - ரை) அளவிலாத படைகளால் பொலிவுபெற்ற அவுணர்முன், வேலை ஏவி வெல்லும் திருத்தோளில், மலர்ந்து

6. தவிசு - பீடம். விப்பிரன் - பிரமன். ஓதிமம் - பெண் அன்னம். முனிவன் - அகத்தியன். ஓர் சகாய சித்து - ஒப்பற்ற ஞான உதவி. தவள நிறப் பிடி - வெண்ணிறப் பெண் யானை. அலகில் படை - அளவிலாத ஆயுதங்கள் ; சேனைகளுமாம். அயில் - வேல். வாகு - திருத்தோள். எயினத் திரள் - வேடர் கூட்டம். பரசு - மழுப்படை.

மணங்கமழ் மலர்கள் அனைத்தையும் (குதூகலமாத்) தரித்துள குமரனும் ;

(மயில்பரி...சேய்)

(அருமை) மயிலாகிய பரிமேல் வரும் அழகனும் ; எமக்கு ஒப்பற்ற அன்னையென (இனிது) சேவைதரும் இளம்பிரானும் ;

(பலபல...காத்த கோ)

மலைகள் பலவற்றில் வாழும் மறவர்களின் உளம்கலந்த பணியை உவப்பவனும் ; தேவர்களைக் காத்த தெய்வமும் ;

(பரசணி...காக்கவே)

மழு ஏந்திய (மாபெரும்) சிவனும் வழிபடும் பொலிவுள பழனி மலையில் எழுந்தருளிய பரனுமான, (கருணைக்) குருநாதன் (பிள்ளைத்) தமிழைக் காத்தருள்க என்று ;

(அலர்கமல...பெணுன்)

அலர்ந்த கமல அணையில் அமர்ந்த அயனது உள்ளம் உருக அணையும், (பெருமையில்) சிறந்த பெண் அன்னம் எனும் பெயருடையவளும்;

(அலைகடல்...கொள்வாள்)

அலைகளை யுடைய கடலைப் பருகிய அகத்தியர், வசிட்டர் முதல், (பிறங்கும்) பலகோடி பிள்ளைகளைப் பெற்று அருள்பவளும் ;

(தலமுழுதில்...போற்றுவாம்)

உலகம் முழுதும் விளங்குகிற உயிர்களைப் படைக்கும் கடப்பாடான காரியத்திற்கு, ஒப்பற்ற அறிவை உதவும் ஆடலை உடையவளும் ;

புனித வெண்ணிறப் பெண்யானை போன்றவளுமான சத்தியசொருபப் பூங்கொடியாய் வாழும் சரஸ்வதி திருவடிகளை வணங்குவம், (எ - று).

விரிவுரை

கலைமகள் கலப்பால், இன்பம் காண்கின்றான் கமலத்தோன். அகத்தியர் போன்ற அறிவுடை மக்களை, அளிக்கின்றாள் கலைமகள்.

அரிய படைப்பு, நான்முகன் செயும் அறம். அந்த அறம், நல்கலைமகள் ஆதரவால்தான் நடைபெறுகின்றது.

இந்த அமைதி வாழ்வில், அழிவிற்குப் படையேந்துகிறது அறியாமைக் கூட்டம். இக்கூட்டத்தை அழிக்கின்றது அருள்ஞான வேல்.

வேல் ஏந்தும் தோளின் வாகைமாலைக்கு, வரையறையேயில்லை. இந்த அருஞ்செயல் புரியும் அமலன், அணிமயில் நடத்தும் அழகன்; அப்பரன், சிறக்கச் சேவைதரும் சேயானுன். கானவர் வழிபாட்டிற் களிக்கின்றான். கலையுணர் விண்ணவரைக் காக்கின்றான். அப் பழனிமலைப் பரனை, வரத சிவமே வழிபடுகின்றது. இத்துணைச் சிறப்புடைய பிரான்மேல் பாடும் பிள்ளைத் தமிழ்க்கு இடையூறு வாராதபடி, தாயே! கலாதேவீ! நீ முன்னின்று காத்தருள் என்பது கருத்து.

(குறிப்பு) கமலம் - நீரில் அசைவது எனும் காரணக் குறி. கம் - நீர்; அலம் - அசைவு. விப்பிரன் - வேதன் எனும் பொருளில் பிரமனை உணர்த்தியது. "வேதசம்பந்தோ விப்பிரஹ" என்பதறிக. பெணுள் - அருமைப் பெண்மையை ஆள்பவள்.

அருந்தமிழ் நுட்பம் அறிந்தவர் அகத்தியர்; வடமொழி மரபுணர்ந்தவர் வசிட்டர்; இவர்கள் போலும் பேரறிவுச் சேய்களைப் பெற்றுளை, 'கோடி பெற்று ஆட்கொள்வாள்' என்று குறித்தார்.

நான்முகர்க்குப் படைப்புத் தொழில், கலாதேவியின் அருளால் கைவருகின்றது; ஆதலின், 'சகாய சித்து' என்

ரூர். இது அவட்கொரு இளம் விளையாடல் என்பது 'ஆட்டுளாள்' என்பதில் வெளியாம்.

படை - சேனைகளைக் குறித்தது; ஆயுதங்களைக் குறித்தது எனினுமாம். பல ஆயுதம் தாங்கிய பல படைகளை, வித்தக வேல் ஒன்றே வென்றது. 'அயிலை விடுத்து வெல்' எனலில் இதை அறிவித்தார்.

எமக்குத் தாயென வந்து, சேயெனத் தோற்றுவான் எனும் மாபெரும் மரபு மறக்க முடிவதில்லை.

குருநாதனைக் காக்கவே - சரஸ்வதி......தாள்களைப் போற்றுவாம் என முடிக்க. (சு)

## நவக்கிரகங்கள்

தனத்ததன தானதன தானதன தந்தன

வருக்கர்மனம் நாணமுற வாழ்துருவன் அங்கையால்
வளைத்துவிடும் நேமிபுனை மாமணியில் ஒன்றியே
நருக்கெனஎ நாளும்வட மேருவைவ லஞ்செய்சீர்
நவக்கிரக தேவர்களை நான்மிகவ ணங்குவேன் ;
மருக்கமழும் நீபமலர் மாலைபுனை கந்தவேள்
வலக்கைஅக லாதவிர்அ கோரசெய தண்டுளான்
இருக்குமுத லாயமறை கோடிபுகழ் தம்பிரான்
எழிற்பழனி மேவுமுரு கோன்நலம் விரும்பியே. 7

(மருக்கமழ்...விரும்பியே)

(பொ - ரை.) மணம் கமழ் கடப்பமலர் மாலையணிந்த கந்தவேளும் ;

வலது கரத்தை(என்றும்)நீங்காது இருந்து, கோரமற்ற செயல் செய்யும் தண்டாயுதம் கொண்டவனும் ;

---

7. வருக்கர் - இனத்தவர். நேமி - சக்கரமாக. மாமணி - சூரியன். நருக்கென என்றது விரைவுப் பொருட்டு. மரு - மணம். நீபம் - கடம்பு. அகோர செய - கோர மற்ற வென்றியுள.

இருக்கு முதலான எண்ணிறந்த (புனித) மறைகள் புகழும் தம்பிரானும்;

எழிலுடைய பழனியில் எழுந்தருளியவனுமான முருகன் அருள் விரும்பிய (அழகிய இப் பிள்ளைத்) தமிழ்க்கு அருள்க என்று;

(வருக்கர்...வணங்குவேன்)

(விண்மீன்) இனங்கள் மனம் வெட்கம் அடைய, (மேருவின் உச்சியில் தொல்லையின்றி) வாழும் துருவன், (தனது) அழகிய கரத்தால் வளைத்து (உருட்டி) விட்ட ஆழி போல் (புனித) சூரியனில் பொருந்தி யிருந்து, எந்நாளும் வாவி மேருவை வலஞ்செய்யும் சிறந்த நவக்கிரக தேவர்களை, வகையாக அடியேன் வணங்குவேன், (எ - று).

விரிவுரை

துருவன் - இது, வடக்கே உள்ள விண்மீன்களுள் ஒன்று; தன்னைச் சூழ்ந்த எம்மீன்கட்கும் நடுவில், கம்பீரம் தோன்றக் காட்சி யாவது; நிலத்தின் வட பகுதியை நிர்ணயிக்க, அறிகுறியாக அமைவது; ஆழ்கடலில் பயணம் செய்யும் மாலுமிகட்கு, வடதிசையை அறிவிப்பது; சந்திர சூரியரையே இயங்க வைப்பது; எட்டுக் கிரகங்களும், சூரியனை முதலாக் கொண்டு, துருவன் இருக்கும் மேருவை, என்றும் வலம் வருவது இயல்பாயுளது.

தவப் பெருக்கம், தழைக்கும் வளர்ச்சியைத் தரும்; அவ்வரலாற்றை, துருவன் மண்டலம், அருமையாக எவர்க்கும் என்றும் அறிவிக்கின்றது.

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும்" நவக்கிரகங்கள் எனப்பெறும்.

இப்பிள்ளைத் தமிழ் நலமுற நிறைவுற, ஒன்பது கோள்களும் உதவுக என்று, அவர்கள் பொன்னார் திருவடிகளைப் போற்றுவேன் என்றபடி.

(குறிப்பு) மாமணி என்பது, சூரியனை அறிவிக்கும் அருமைத் தமிழ்ப் பெயர். நவம் - ஒன்பது. கிரகம் - கோள்கள். வேலாயிருப்பது ஒரு காலம்; ஞான மூர்த்தியான கோலத்தில் அது, வலத் திருக்கரத்தில் தண்டாகி வாழ்வது ஒருகாலம். அதனால்தான், 'அகோர செய தண்டு' என்றார். அகோரம் - கோரம் இல்லாதது; சாந்த சொருபமானது. கோடி - அளவின்மையைக் குறித்தது என்க. (எ)

## நல்ல தெய்வங்கள்

நாயும் நரியா தியபிறவும் நச்சி
அருந்தத் தரும்ஊனும்
நரரிற் கடையாம் அவர்பருக நாறும்
அரக்கும் நவைக்கள்ளும்
தோயும் கொடும்பூ சையின்விருப்பம் துகள்ஒன்
றளவா யினும்பொருந்தாத்
தூய கடவு ளினமுழுதும் துதித்தே
நாளும் தொழுதிடுவாம்;
தேயும் பிறைவா ணுதற்கவுரி செங்கைக்
குருந்தைச், சிவபெருமான்
செவியிற் பரம ரகசியம்சொல் சிறுவாய்க்
குமர குருபரனைப்,
பாயும் தகரும் மயிலேபோற் படியிற்
ககனத்(து) உறச்செலுத்தும்
பணைத்தோள் முருகப் பெருமானைப் பழனிப்
பதியிற் புரப்பதற்கே. 8

8. நச்சி - விரும்பி. நரரில் - மனிதரில். அரக்கு - சாராயம். துகள் - குற்றம். தகர் - ஆடு. படி - நில உலகம். ககனம் - ஆகாயம். பணைத்தோள் - பருத்த தோள்கள்.

MAY 1975

(தேயும்பிறை......புரப்பதற்கே)

(பொ - ரை.) தேயும் எட்டாம் பிறை போன்ற ஒளி நுதல் உமையின் செவ்விய திருக்கைச் செல்வனும்; சிவனார் திருச்செவியில் உயரிய நுட்பத்தை உபதேசித்த இளந் திருவாயுடைய குமர குருபரனும்; (ஆரவாரித்துப்) பாயும் ஆட்டையும், (ஆவரண) மயிலைப் போல் மண்ணில் விண்ணில் செல்லச் செலுத்தும் பருத்த தோள்களை யுடையவனுமான பழனிப் பதியில் எழுந்தருளி யிருக்கும் முருகப் பெருமான் (பிள்ளைத்) தமிழைப் பாதுகாக்க என்று;

(நாயும்...பொருந்தா...தொழுதெழுவாம்)

நாயும் நரியும் முதலாக வுள்ள விலங்குகள் யாவும் இனிது விரும்பி அருந்தத் தக்க இறைச்சியும், (பாழும்) மனிதரிற் கீழ்மையோர் பருக நாறும் சாராயமும், பழுதுடைய (பாழும்) கள்ளும் பொருந்தும் பொல்லா வழிபாட்டை, ஒரு அணுவளவாயினும் ஆவலித்து உடன்படாத புனிதத் தெய்வங்கள் அனைத்தையும், துதித்து எந்நாளும் தொழுவம், (எ-று).

விரிவுரை

நாயும் நரியும் ஊன் உண்ணும்; கள்ளும் சாராயமும் கடையோர் அருந்துவர். பொல்லாதவர்கள், இவ்விரண்டையும் கொண்டு துட்ட தேவதைகளைப் பூசிப்பர்.

குருந்தை, குமர குருபரனை, முருகப் பெருமான் பிள்ளைத் தமிழைப் புரப்பதற்கே, நாம் தூய கடவுளினம் முழுதும் நாளும் தொழுது எழுவாம் என்றது, ஆசிரியரின் கம்பீர சமய வாழ்விற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது அல்லவா.

“நரிப்பாய் நாயேன் இருப்பேனோ” என்னும் எட்டாம் திருமுறை இங்கு எண்ணத் தகும்.

சித்தின் செல்வன் ; சத்தான சங்கரற்கு ஓம் பொருளை உபதேசித்தோன் ; நாரதர் செய்த வேள்வியில், மந்திரப் பிழையால் ஆரவாரித் தெழுந்த ஆட்டுக் கிடாயை அடக்கிய ஆண்மையாளன் என்று, விமல முருகனை வியந்த செய்திகள், விம்மிதத்தைப் பெரிதும் விளைவிக்கின்றன. (அ)

**மெய்யடியார்**

சத்தசுர நான்மறைச் சமயங்கள் ஆறினும்
தரணிமண் டலம்ஆதியாச்
சாற்றுபுவ னங்களினும் என்றென்றும் உற்றபல
தரமாய தொண்டர்கட்கும்
புத்தமுதம் அனையதுதி சொற்றவர் பதாம்புயப்
பூந்துகள் முடிக்கணிந்து
புலையுடைக் கயவர்மனை புகுதாத விரதமொடு
போத அஞ்சலி செய்குவாம்
மத்தம் அறு(கு) ஆத்திகொக் கிறகாதி அணிசடில
வள்ளல்விழி உதவு மகவை,
மயிலேறி அண்டபகி ரண்டம்எங் கணும்உலவும்
வரதனைச், சரதம் இகழாப்
பத்தர்மன பங்கயத் திற்றனிய ஞநிலவு
பரமதே சிகனை,அந்தண்
பழனியங் கிரியில்வளர் குமரபுங் கவனை,நனி
பாதுகாத் தருளஎன்றே 9

---

9. சத்தசுர - ஏழுவித ஒலியை யுடைய. ஆறினும்-(சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணுபத்தியம், கௌமாரம் எனும் சமயம்) ஆறினும். தரமாய - பரிபாகம் மிக்க. பதாம்புயம் - திருவடிக் கமலம். பூந்துகள் - மென் புழுதி. கயவர் - கீழ்மக்கள். போத - மிகவும். மத்தம் - ஊமத்தமலர். சடிலம் - சடை. சரதம் - மெய்ம்மை. புங்கவன் - மிடுக்குடையவன்.

(மத்தம்...என்றே)

(போ - ரை.) ஊமத்த மலர், அறுகு, ஆத்தி, கொக்கின் இறகு முதலியவைகளைச் சடையி லணிந்த வள்ளல் மலர் விழி உதவிய மைந்தனும் ;

மயிலில் ஏறி, (இந்த) அண்டம், (இதன்) மேலுள அண்டம் எங்கும் உலவி வரங்களை வழங்கும் வண்மையனும் ;

மெய்ம்மையை வெறாத (கனிந்த) அன்பர் உள்ளக் கமலத்தில், (பரிவொடு) தனித்து விளங்கும் பரம ஆசிரியனும்;

அழகிய குளிர்ந்த பழனி மலையில் எழுந்தருளியவனுமான மிடுக்குடைய குமரன் (பிள்ளைத்) தமிழை, அதி விரைந்து காத்து அருள் செய்க என்று ;

(சத்தசுர...அஞ்சலி செய்குவாம்)

ஏழ் இசையுடைய நான்கு வேதங்கள் நவிலும் (சால்புடைய) ஆறு சமயங்களிலும்,

பூமண்டலம் முதலாகப் புகலப் பெறும் இருநூற்று இருபத்து நான்கு புவனங்களிலும், (அருமை பெற) எந்நாளும் உதிக்கும் பலதிறக் கொள்கை கொண்ட பக்தர்கட்கும் ;

தூய அமுதுபோல் இனிக்கும் துதிமொழிகள் பாடி, அவர்களுடைய அடிக்கமல மென்புழுதிகளைத் தலைமேல் அணிந்து ;

அற்பகுணக் கீழோர் அகத்தில் புகாத விரத சீலத்துடன், (அருளார்ந்த அந்த அடியவர்களையே) பெரிதும் அஞ்சலித்து இருப்பம், (எ - று).

விரிவுரை

எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில், ஏழுசுரமாகி மறைகள் எழும். அந்த வேதங்கள் சொல்லும் சமயங்கள் ஆறு. சித்தப் போக்குச் சிவப்போக்கு என்பர். அதற்கு ஏற்ப, தொண்டர் போக்கும் கொள்கையில் பலவகைப்படும் ; இதை, 'பல தாமாய தொண்டர்' என்பதில் பெறவைத்தார்.

அவர் கோலமும் கொள்கையும் யாதாயினும் ஆக.

வள்ளல் விழி உதவும் மகவு; மயிலேறி உலவும் வரதன்; இதய தகராகாசத்தில் தனித்து இருக்கின்ற தேசிகன் ஆன பழனிக் குமர புங்கவன் பிள்ளைத் தமிழைப் பாதுகாமின் என, அந்த அடியவர்களை நாம் அஞ்சலிப்பம் என்பது; நியதியுடைய அன்பர்கள்மேல் கொண்ட அன்பை நினைப்பிக்கின்றன.

போத அஞ்சலி செய்குவாம் - மிக்க வணக்கம் செய்வம்; மற்று, வாழ்விக்கும் உணர்வொடு வணங்குவம் எனினுமாம்; போதம் - தெளிந்த உணர்வு.

குறிப்பு: சப்தசுரம் என்பது, எதுகை நோக்கி, 'சத்த சுரம்' என்றாயது. தரணி - (எப்பொருளையும்) தரிப்பது; தாங்குவது எனும் பொருட்டு. வரதன் - வரம் பல வழங்குமவன். மனபங்கயம் - இதய கமலம்; இங்கு இறையும் உயிரும் தனிக்கும் சந்திப்பு உற்சவம் நிகழ்வுறும். பயனை அக்காலத்தில் உபதேசிப்பவனே 'பரம தேசிகன்' எனப் பெறுவன். 'அந்தண் பழனி' என்பது, இது சாந்தி நிகேதனத் தலம் எனும் குறிப்பு முகம். புங்கவம்-ஆண்பசு; வடசொல். புங்கவன் - கம்பீரமான காளை என்றபடி. (க)

## பொதுத் தெய்வம்

தனதன தத்தந்த தனதன தத்தந்த
தனதன தத்தந்த தானனத் தாத்தன

அகிலம் அனைத்துந்தன் வசமில கக்கொண்டும்
அமைவரு நிர்த்தொந்த மானதைச், சூட்டுவால்
அனம்இவர் பொற்கஞ்சன் உததிந டுத்துஞ்சும்
அரியொர்எ ழிற்கொங்கை பாதியிற் காட்டுவான்,
அனையர்வ ழுத்துஞ்சொல் வனைவதனைப்,பொங்கம்
அவிர்கரு ணைச்சிந்தை மோனவித் தாப்பலோர்
அறிபெரு மைக்குன்றை, வெளிநிறை யத்துன்றும்
அதிசயம் உற்றெஞ்சு ருதனைத் தீக்குநேர்

திகிலொழி யச்சந்த தமும்உணர் கற்பன்பர்
செபதவ முற்றுங்கொ(டு) ஆள்வதைக், காக்கைபோல்
சிலர்தெரி யக்கொஞ்ச மிளிர்பொருளைக், கண்கள்
செறியுட லத்தும்பர் கோன்இசைக்(கு) ஏக்கறூர்
திரள்முழு(கு) உத்துங்க மருவிய தைப்,பண்செய்
திருமறை கட்(கு)அந்த மாம்முதற் பேற்றை,ஊர்
தினகர சற்சங்க முழுமையும் வெட்(கு) எண்கொள்
சிவபர வத்(து)என்ற தேவைமிக்(கு) ஏத்துவாம் ;
வகிர்வடு விற்கண்கொள் குறமகளைக்கெஞ்சு
மகிமையு டைக்கந்த வேள்தனைக், கோட்டுமா
மகபதி தற்சொந்த அரண்மனை யிற்கொண்டு
வரவளர் பொற்கொம்ப னுள்முலைப் போர்க்(கு) அவா
மலிகுக னைக்,கும்ப முனிவன்மு தற்றொண்டர்
மலையம லைக்கண்ப ராவுசொற் பாக்களால்
மகிழ்பவ னைக்,கங்கை யருள்சுத னைச்,சிங்கன்
மடியஅ தட்டுங்கு ரூரனைத், தோற்றதோர்
பகிரத னுக்(கு)அம்பு வியின்அர சைத்தந்து
பகையும்அ றுக்கும்கை வேலனைப், பூக்கொய்தே
பதமல ரிற்சிந்து தொழிலினர் முற்பொங்கு
பதிதர்கு லச்சங்க நாசனைக், கோட்டிருல்
பலமது வைச்சிந்து பொழிலினி டத்(து)அண்டர்
பழகும்வி யப்புந்து சாரலிற் சேற்கொள்நீர்
பரவையெ னக்கண்ட வளமலி யக்கொண்ட
பழனிம லைத்தண்ட பாணியைக் காக்கவே. 10

---

10. அகிலம் - உலகம். நிர்த்தொந்தம் - சம்பந்தம் அற்றது. வால் அனம் - வெண்ணிற அன்னம். பொற்கஞ்சன் - பிரமன். உததி - கடல். எஞ்சுறுதது - குறையாதது. ஏக்கறூர் - ஏங்கார். உத்துங்கம் - தூய்மை. வகிர் வடு - பிளந்த மாம்பிஞ்சு போன்ற. கோட்டுமா - தந்தமுள்ள வெள்ளை யானை. மகபதி - இந்திரன். கும்பமுனிவன் - அகத்தியன். பராவு - வழிபடும். பரவை - கடல்.

(வகிர்......வேந்தனை)

(போ - ரை) மாவடுவின் பிளப்புப் போன்ற கண்களைக் கொண்ட குறமகளான வள்ளி யம்மையை, (கேண்மை முன்னிக்) கெஞ்சுகின்ற மகிமையை யுடைய கந்தவேளும்;

(கோட்டுமா......குகனை)

(வெண்) தந்தமுடைய வெள்ளை யானைமேல் (பவனி) வரும் இந்திரன், தனக்கே உரிய (வாழும்) அரண்மனையில் வைத்துச் சிறப்பாக வளர்த்த பொற்கொடி போன்ற தேவ யானையின், (வித்தகக்) கலவிப் போர்க்குக் குதூகலம் மிகவுறு குகப் பெருமானும் ;

(கும்பமுனிவன்...மகிழ்பவனை)

அகத்தியர் முதலான அருந்தமிழ் அடியவர்கள் பொதிய மலையில் துதித்த மாபெரும் பாடலின் சொல் நயம் கண்டு மகிழ்பவனும் ;

(கங்கை...குரூரனை)

கங்கை அருளிய காங்கேயனும் ; சிங்கமுகன் வீழ உங்காரம் எழுப்பிய உக்கிரனும் ;

(தோற்றதோர்...நாசனை)

(கோரன் எனும் அசுரனிடத்தில்) புறம் கொடுத்த பகீரதன் எனும் பார்த்திபனுக்கு, அழகிய நிலவுலக அரசை யளித்து,(அதனுடன் அவனது) பகையை அழித்த கைவேல் பற்றிய கடவுளும் ;

மலர் பறித்துத் திருவடி மலரில் இட்டு வழிபடும் (புனித) அடியார்முன், பொங்கி வந்த தீயர் குலத் தொகுதியைத் தேய்த்தவனும் ;

(கோட்டிருல்...காக்கவே)

கிளைகளில் இருந்த கூடுகளில் உள்ள ஏராளமான தேனைச் சிந்தும் சோலைகளிலும் ; விண்ணவர் பயிலும் (மாபெரும்) வியப்பிற்குரிய (மலைச்) சாரல்களிலும் ;

கடல் எனும்படி, சேல் மீன்கள் செறிந்த வளமான நீர் நிலைகள் நிறைந்த (கம்பீரமான) பழனிமலைத் தண்ட பாணி(ப்பிள்ளைத்) தமிழைக் காக்க என்று ;

(அகிலம்...நிர்த்தொந்தம் ஆனதை)

(இயங்கு திணை நிலைத்திணையான) உலகங்கள் அனைத்தும் தன் வயத்தில் விளங்கத் தழுவியும், (தான் அதனில்) ஒட்டுதல் சிறிதும் இல்லாததும் ;

(சூட்டுவால்...வனைவதனை)

உச்சிக் கொண்டை யுடைய வெண்ணிற அன்ன ஊர்தியனுய், பொன்னிறத் தாமரையில் தங்கியிருக்கும் பிரமனும், பாற்கடல் நடுவில் பள்ளிகொள்ளும் திருமாலும், அழகிய ஒரு குயத்தைப் பாதித் திருவுருவில் காட்டும் பரனும் ஆகிய அம்மூவரும் புகழும் பாமாலைகளைப் புனைவதும் ;

(பொங்கம்...குன்றை)

பொலிவொடு மிளிரும் கருணை உளத்துடன், (விளங்கிய) மவுன வித்தாக ஊன்றிப் பலர் உணரும் பெருமிதக் குன்ருகப் பிறங்குவதும் ;

(வெளிநிறை...எஞ்சுருதனை)

விண்ணில் நிறைவாக விளங்கி, (புனித) அதிசயம் பொருந்தி (என்றும்) குறை இல்லாததும் ;

(தீக்குநேர்...ஆள்வதை)

தீப்பிழம்பிற்கு ஒப்பான அச்சம்தீர, எந்நாளும் தியானிக்கும் சாதகரான பக்தர்களின் (முதன்மை) செப தபம் முற்றும் ஏற்று, (அருளொடு அவர்களை) ஆள்வதும்;

(காக்கைபோல்...பொருளை)

காக்கைபோல் ஒரு நோக்கினராய், (கூடிச்) சிலர் தேர்ந்து கொஞ்ச, (புனித அவர்முன்) விளங்கும் பொருளானதும் ;

(கண்கள்...மருவியதை)

உடம்பெலாம் கண்ணுடைய இந்திரன் பதவிக்கு இச்சைப் படாத பெருமக்கள், முழுதும் தூய்மை மருவியதும் ;

(பண்செய்...பேற்றை)

சிறந்த பண்ணமைதி யுடைய முதன்மை வேதங்களின் முடிவான உபநிடதங்களில், தலையான பயனுகத் தழைப்பதும் ;

(ஊர்...ஏத்துவாம்)

(விண்ணில்) இயங்கும் சூரியன்போன்ற (முதன்மைச்) சத்சங்கம் முழுதும் (தினமும்) விரும்பித் தியானிக்கும் சிவபரவஸ்து எனும் (பேரொளிப் பொதுத்) தெய்வத்தை, (தூயபெருங் குரலிட்டுத்) துதிப்பம், (எ - று).

விரிவுரை

எல்லாமாகியும், அல்ல ஆகியும், தூய மும்மூர்த்திகளின் துதி ஏற்பதும் ஆகிய நான்காவது பொருள் ஒன்று உண்டு. அது நீடித்த ஞான ஆகாயத்தில் நிறைந்துளது. இன்ப அன்பர் செபதபங்களை ஏற்கிறது. ஒருமை நோக்கினர் கொஞ்ச ஒளிர்கிறது. பற்றிலார் தோயும் பரம கம்பீரமானது. வேத முடிவாய் விளங்குவது, அச் சிவபரம் பொருள். அது அருள்மூலம் தழுவிய மோனமூலம் என்பதை, அறிகின்றோர் அறவோர். கல்லார்க்கும் கற்றார்க்கும் பொல்லார்க்கும் நல்லார்க்கும் பொதுவான அத்தெய்வம், கவி உருவான இப்பிள்ளைத் தமிழைக் காப்பதாக என்பது கருத்து.

'குறமகளைக் கெஞ்சும் மகிமை'யைக் கந்தவேளிடம் காண்கிறோம் ; தேவயானை கலவிப் போர்க்கு 'அவாமலிதல்' குகப் பெருமான்றன் குணம். 'பணியா என வள்ளி பதம் பணியும், தணியா அதிமோக தயா' நிலையை, அருமையாகக் கந்தர் அனுபூதி அறிவிக்கிறது.

பேசும் மோனப் பெருந்தேவி வள்ளியம்மை; பேசா மோனப் பெருமகள் தேவகுஞ்சரி. பின்னவரான வள்ளியார் வரலாற்றில், திருத்தி யாட்கொண்ட திறம் வெளிப்படும்; இது மார்ச்சால நியாயம். (மார்ச்சாலம் - பூனை.) இத்தேவி கீழ்நிலத்தள். சிறந்த தேவயானையார் மேல் நிலத்தர்; இவரிடம் மர்க்கட நியாயம் (மர்க்கடம் - குரங்கு.) மலிந்துளது.

வள்ளியாரிடம் கந்தவேள்; தேவயானையிடம் இதய தகராகாசத் தற்பரன் எனும் அருமையே அருமை. இவைகளை மேலும் விரிக்கில் ஏடும் இடந்தரா. சித்தாந்தச் செல்வர்களிடம் இதுகுறித்து வினவி யறியில், இதன் விரிவான நுட்பம் பல விளங்கும்.*

கெஞ்சல் கொஞ்சல் நாடக நம்பன், மதுரத் தமிழால் மகிழ்கிறான் எனலே, எண்ணும் போதே இன்பம் சுரக்கும்.

பகைவரை யடக்கி, பகீரதனுக்கு அரசளித்த பயனை வரலாறு, கந்தபுராண கந்த விரதப் படலத்தில் கமழ்கிறது.

ஆயிரம் தலை, ஈராயிரம் கைகளையுடைய சிங்கமுகாசுரன் அழிந்தடங்க அதட்டிய ஆக்கத்தை, மேற்படி புராணச் சிங்கமுகன் வதைப் படலம் சிறக்க உரைக்கும். (௧0)

காப்புப்பருவம் நிறைவுபெற்றது.

---

*இது குறித்து ரசபதியின் "கந்தானுபூதி" விரிவுரையில், இனிய பல நுட்பங்கள் எழுதப்பெற்றுள. ஆங்கு அதை ஓதியறிதல் நலம்.

## 2. செங்கீரைப் பருவம்

இது, பிரபந்தத்தலைவனை பிள்ளை, பொருள் விளங்கா ஒலி எழுப்பும் பருவத்தைக் குறிக்கும். ங்ங, ங்ங என்று சேய் இயம்பக் கேட்டு, தாய்மார் இன்பம்கொள் பருவம் இது. இந்த ஒலி, மழலையினும் இனிதாக இருக்கும். மழலை ஒருவகையில் பொருள் கொள்ளற்கு உரியது; இது வெறும் ஒலி மாத்திரமாக இருக்கும். சிறந்த தொடை அமைதி இலாதவற்றைச் செந்தொடை யெனல்போல், சொல்லிற்கு உரிய தன்மை இலாதவற்றைச் செங்கீர் என்றனர்.

கீர் - சொல் ; இது 'ஒரு நிருத்த விசேடம்' என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

மற்று, செங்கீரை - அழகிய கிளி ; இப்பொருளில், கீர எனும் வடசொல் கீரையெனத் திரிந்தது.

ஒரு காலைப் பதித்து ஒரு காலைத் தூக்கி, இருபுறமும் தலையசைத்துச் சாய்ந்தாடும் கிளிபோல், தவழும்போது ஒரு முழந்தாள் ஊன்றி, மற்றொரு முழந்தாளை மடித்துத் தூக்கி, இருதோளிலும் மாறிமாறித் தலை ஒன்றும்படிப் பல முறை சாய்ந்தாடும் பருவம் என்பதும் ஒருவகை.

செவ்விய கீரைத்தண்டு, அழகாய்க் காற்றில் அசைவது போல் ஆடும் பருவம் என்பாரும் உளர். இது குழந்தை பிறந்த ஐந்தாம் திங்களில் கூறப்பெறும்.

### முருகன் தோற்றம்

திங்கள்வெண் குழவிதவழ் சடிலச் சிவன்தனது
தேவியையும் நீத்து நெடுநாள்
தெக்கண முகத்தனக் கல்லால நீழலிற்
செய்தவம் முதிர்ந்திட்டதால்
பங்கயம் பொருதழல் விழிப்பொறிக ளாவந்து
பைம்புனல் சரவணத்திற்
பாலகன் உருச்சமைந்(து,) ஆறல்மின் னார்அறுவர்
பால்குடித் தும்பசித்துச்,

சங்கலம் புறுமென்கை உமையவள் எடுத்(து) அமுது
தரவுண்(டு) உவந்து,நீடித்
தகுவரை அழித்(து)அமரர் படுசிறை தவிர்த்(து)
சற்குரவ ளுகியப்பால் [அருட்
செங்கரும் பினன் நாளும் விளையாடல் பலசெய்வாய்!
செங்கீரை ஆடி யருளே
திருவாவி னன்குடியில் மருவுமுரு கேசனே!
செங்கீரை யாடி யருளே 11

(திங்கள்...பொறிகளா வந்து)

(போ - ரை) வெண்மதியான தனியிளம் பிறை தவழ்கின்ற (சிறந்த) சடையுடைச் சிவபிரான், (பிரியாத்) தன் தேவியையும் பிரிந்து, பலகாலம் தென்திசை நோக்கிய தெய்வமா யிருந்து, (நியதிசெய்) கல்லாலின் நிழலில் செய்த (முதன்மைப் பெருந்) தவம் முற்றிய பயனாய், செங்கமலம் போல் கனலும் (நெற்றிக்) கண்களி லிருந்த (வித்தகப்) பொறிகளாக வெளிப்பட்டு,

(பைம்புனல்...நீடி)

பசுமை நீருள சரவணப் பொய்கையில் இளம் சேய் உருவம் கொண்டு இருந்து;

ஒளி மேனியரான (மாபெரும்) கார்த்திகை மாதர் அறுவரின் (பயனுன) பாலைப் பருகியும் பசிதீராமல், வளையல்கள் ஒலிக்கும் மென்மைத் திருக்கர உமாதேவி எடுத்து; (பரிவுடன்) பாலூட்டப் பருகி, மகிழ்ந்து வளர்ந்து;

(தகுவரை...ஆடியருளே)

அவுணரை அழித்து, அமரர் அனுபவித்த (வீணை) சிறைத் துன்பத்தை விலக்கி, அருளுடைய ஞான ஆசிரிய

---

11. திங்கள் வெண் குழவி-இளம்பிறைச் சந்திரன். தெக்கணம்-தென் திசை. பங்கயம் பொருதழல் - தாமரைபோல் சிவந்த நெருப்பு. ஆரல் மின்னூர் - கார்த்திகை மாதர்கள். சங்கு அலம்புறு-சங்கு வளையல்கள் ஒலிக்கிற. செங்கரும்பினன் - கரும்பு வில்லினனான காமன்,

ஞகி, அதன்பின் சிவந்த கரும்புவில் காமன் நாணும்படி அருளாடல் பல புரியும் அத்தா! பயனுன ஒரு மொழி பகர்ந்தருள்; திருவாவினன் குடியில் எழுந்தருளிய முருகேசா! செம்மை ஒரு மொழி செப்பியருள், (எ - று).

### விரிவுரை

சிவம் - அருளொளிப் பிழம்பு எனும் பொருளது; சி - ஒளி; வ - அருள். தெக்கண முகத்தன் - தட்சிணமூர்த்தி. கல் ஆல் நிழல் - (கலை நுட்பம்) கற்பிக்கும் (மாபெரும்) ஆல மரநிழல். "கல்லால் நிழல்மலை வில்லார்" என்பது சிவஞான போதம்.

தற்பரன், தன்னையே மகவாகத் தந்தான். இப்படி தவக் கொள்கையில் உதித்த தநயன் சண்முகன். இது அனுபவ சமிக்ஞை.

வளர்த்த அன்புடைத் தாயர்களது பால் பருகி அடங்காத பசி, அம்மை பிரணவ வடிவி அளித்த பிறகு அடங்கியது.

சிகரமான சிவத்தைச் சிந்திப்பாரை, வா என்று வரவேற்பவள் வகரவடிவி. மாபெரும் அத்தேவி, என்றும் மங்கலை யாகிருள்; அதைச் 'சங்கலம்புறு மென்கை' என்பதில் அறிவித்தார்.

தீமை தீரவேண்டும்; கனிந்த நலத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பின்னரே அவர்கள், உயர்ந்த ஞான ஆதனம் ஏற உரியவர் எனும் நுண்மையை, 'தருவரை அழித்து அமரர் படுசிறை தவிர்த்து அருட் சற்குரவனுகி' என்பதில் இனிது அறியலாம்.

வள்ளியாரிடத்தும், பரிபாகம் முதிர்ந்த ஆன்மப் பாவையரிடத்தும் காதல் ஆடல் காண்பவன் கந்தன். அது, சிவயோகம் விளைவிக்கும் செம்மை நடை.

பவயோகம் விளைவிக்கும் காமன், நம்பன் ஆடல் கண்டு நாணுகிருன் என்பதை, இறுதி யடியில் அறிந்து இன்புறுகிறது நமது மனம். (க)

சைவமா தியஅருட் சமயங்க ளுக்கும்,
தடஞ்சிலை அனைத்தினுக்கும்,
சலதியுண் டவன்முதல் தவசிகள் எவர்க்கும்,
தமிழ்ச்சங்கம் யாவினுக்கும்,
மெய்வரோ தயஞான தேசிகர் எவர்க்கும், விறல்
வீரரொடு சாரதர்க்கும்,
விண்ணவர் திரட்கும்,அகல் மண்ணவர் தமக்கும்,
மிஞ்சுபல் புனங்களுக்கும், [வளம்
கைவழா(து) அமர்முடுகு சேனாதி பர்க்கும்,
கலாபமயில் சேவலுக்கும்,
கனலுதவு தகருக்கும், வெள்ளிவெற் பெனமிளிர்
களிற்றினுக் கும்,கருங்கண்
தெய்வயா னைக்கும்,மற வள்ளிக்கும் நாயகா!
செங்கீரை ஆடியருளே
திருவாவி னன்குடியின் மருவுமுரு கேசனே!
செங்கீரை யாடியருளே. 12

(சைவமாதிய ..யாவினுக்கும்)

(பொ - ரை) சைவம் முதலிய (அருமைத்) திருவருட் சமயங்கள் ஆறிற்கும்; அகன்ற மலைகள் அனைத்திற்கும்; (பரவிய) கடலைப் பருகிய அகத்தியன்முதல் (எண்ணத் தக்க) தவமுனிவர் எவர்க்கும்; (அருந்)தமிழ்ச் சங்கம் அனைத் திற்கும்;

---

12. சிலை - மலை. சலதி - கடல். மெய்வரோதய ஞானதேசிகர்- சிறந்த மெய்ஞ்ஞான ஆசிரியர். வீரர் - வீரவாகு முதலினோர். சாரதர் - பூதர்கள். திரட்கும் - கூட்டத்திற்கும். கைவழாது - கைலாவகம் தவறாமல் கலாபம் - தோகை. கனல் - வேள்வித்தீ. தகர் - செம்மறியாடு. களிறு - யானை.

(மெய்வரோதய ..சாரதர்க்கும்)

மெய்ம்மை மென்மேலும் விளங்கிய ஞானசாரியர் எவர்க்கும்; வெற்றியுள (நவ) வீரருடன் (கம்பீரமான) பூத கணங்கட்கும்;

(விண்ணவர்...புனங்களுக்கும்)

முப்பத்து முக்கோடி தேவர்கட்கும், இடம் பரந்த நிலவுலகில் இருப்பவர்கட்கும், வளம் மிகுந்த பல (புனித) தினைப் புனங்களுக்கும்;

(கைவழாது...சேவலுக்கும்)

வகுத்தமுறை வழுவாமல் முடுகிப் போர் முயல்கின்ற (அரிய) சேனை அதிபர்க்கும்; (மாபெரும்) தோகை மயிலுக்கும், சேவலுக்கும்;

(கனலுதவு...ஆடியருளே)

வேள்வித்தீ வெளிப்படுத்திய (ஆரவார) ஆட்டிற்கும்; வெள்ளி மலைபோல் (உயர்ந்து) விளங்குகின்ற திருஞான வேழத்திற்கும்; மையுண்ட கண்ணுடைய தேவயானைக்கும்; மறவர்குல வள்ளிக்கும் (வழிகாட்டும்) தலைவா! செம்மை (ஒரு) மொழி செப்பியருள்;

திருவாவினன்குடியில் எழுந்தருளிய முருகேசா! செம்மை (ஒரு) மொழி செப்பியருள், (எ - று).

விரிவுரை

சைவத்தில் சிவம்; சாக்தேயத்தில் சத்தி; வைணவத்தில் விஷ்ணு; காணபத்தியத்தில் கணபதி; கௌமாரத்தில் குமரன்; சௌரத்தில் சூரியன். இங்ஙனம் நலம்மிக்க அறு சமயத்திற்கும், முருகா! நீ நாயகனையினை! குறிஞ்சிக் குரியன் குமரன் என்பர்; இவ்வகையில், மலைநிலம் யாவும் உன்னால் மகிமை அடைந்தன.

முனிவர் யாவரும் உன் அருளால் மோனம் எய்தினர். தகுதிபெற்ற அகநூல் தலைவன் நீ; புறநூல்கள் யாவும் உன் வீரத்தையே புகல்கின்றன. அருந்தமிழ் நூற்கள் அனைத்தும், இந்த அகம் புறம் இரண்டையும் அறிவிக்கும். இவ்வரிசையில், தமிழ் வளர்க்கும் சங்கங்களில், அத்தா! உனது அருளாட்சி தழைக்கிறது.

ஞானபரிதியான நின் தொடர்பால், வளரும் ஞான குரவர்கள் வாழ்கின்றார். நவவீரர் பூதகணர் முதலினோர், குமரா! வாய்த்த பணிசெய்து நின் திருமுன் வளர்கின்றார்.

நீ தேவசேனாபதியா யிருத்தலின், பெருகிய போகத்தை விண்ணோர் பெறுகின்றார். நிலதல முழுதும் நின் கோயில்கள் நீடித்துள; வழிபடு மண்ணக வளம், அதனால் மலர்கிறது.

உனது அருளாடலால், புவனங்களில் தெய்விகம் பொங்குகின்றது.

சேனைபதிபர்கள், நினை எண்ணியே சிறப்புறுகின்றனர். மயிலும் மறியும் ஊர்தி யாயின; கொக்கரிக்கும் சேவல், கொடியாயது; திருஞான வேழம், நீ ஏறுகின்ற அழகிய யானை. வான்மகட்கும் மான்மகட்கும் மணாளன் நீ.

முழுச் சுதந்திர முழுமுதலான நீ, வாய்திறந்தொரு வார்த்தை வழங்குவையேல், வளர்ந்து பெருகும் எம் வாழ்வு என்று, விநயம் காட்டி வேண்டியபடி.

குறிப்பு:—சைவம் - சிவ சம்பந்தம் உடையது. சமயம் - அருள்மயமாக மேலோர் அமைத்த வழி. சலதி - நீர்த்திரளை யுடையது எனும் பொருளில் கடலைக் குறித்தது. வரோதயன் - உதயபரிதி; இது ஞானதேசிகர் நிலையைக் குறித்தது. களிறு - மதக் களிப்புடையது எனும் காரணக் குறி. நாயகா என்பது, கடைநிலை விளக்கு. (உ)

### வேலை ஏவிய இடம்

பொய்வேத னைத்தொழிற் கிரவுஞ்ச வெற்பினும்,
புலைவெங் களிற்றின் மீதும்,
பூதரொடு வீரரைக் கொடுபெரும் புணரியிற்
போம்மாய வாளியினிலும்,
தெய்வேந்தி ராதியர்கள் உறுதுயர் அனைத்தினும்,
தீயவெம் சூர்மாவினும்,
சிலையிறை தரும்கவுரி உறுபெருந் தாகத்
தியக்கத்தி னும்,பல் பொருள்தோய்
மைவேலை யுறழ்பனுவல் நுவல்கீரன் அடைபட்ட
வரையினும், நிறம்கறுத்த
வடவைபுரை அல்கையினும், மற்றுமிவை யன்னபல்
வயின்தொறும் வலம்புயத்துச்
செவ்வேல் விடுத்துச் செயம்பெற்ற சேவகா!
செங்கீரை யாடியருளே
திருவாவி னன்குடியில் மருவுமுரு கேசனே!
செங்கீரை யாடியருளே. 13

**(பொய்வேதனை...சூர்மாவினும்)**

(போ - ரை.) *பொய்யிற் புழுங்கி வேதனைபல விளைவித்த (மாயா) கிரவுஞ்ச மலையினும்,*

*புலைப்புசிப்புடைய உக்கிர யானைமுக தாருகன்மேலும்,*

*பூதகணங்களுடன், (வயவரான) வீரவாகு முதலினோரை (வாரி) எடுத்து, மாபெரும் கடலுள் மறைந்த மாயாஸ்திரத்தின் மேலும்,*

*தேவேந்திரன் முதலினோரை மோதிய துன்பம் முழுதினும்,*

---

13. *புலை - புலால். களிறு - யானைமுகத் தாருகன். புணரி - கடல். மாய வாளி - மாயாஸ்திரம். சூர் மா - சூரபதுமனுண மாமரம். சிலையிறை - மலையரசன். மைவேலை - கருங்கடல். வடவை - வடவைத்தீ. அலகை - கற்கிமுகி பூதம்.*

(பெரும்) தீமை விளைவித்துப் பேரச்சம்செய்யும் மாவீர சூர மாமரத்திலும்,

**(சிலையிறை....ஆடியருளே)**

மலைமன்னன் பெற்ற மகளான உமாதேவி யடைந்த தனிப்பெரும் தாகம் தவிர்க்கும் வழியிடையிலும் ;

பல பொருள் நிறைந்த கடல்போல், (பெருகக்) கவி பாடும் நக்கீரர் அடைபட்ட குகையுடைய பரங்குன்றிலும்;

நிறத்தால் கறுத்த, (செயலால்) வடவைத் தீப்போல் (வருத்தும் பொல்லாக்) கற்கிமுகி பூதத்தின் இடத்தும் ;

இவை போன்ற மற்றுமுள்ள பல இடங்களிலும் ; வலத்திருத் தோளில் (வாகைபெற) இருந்த ஞானவேல் ஏவி வெற்றி பெற்ற வீரா ! செவ்விய (ஒரு) மொழி செப்பி யருள் ;

திருவாவினன் குடியில் எழுந்தருளிய முருகேசா ! செவ்விய (ஒரு) மொழி செப்பியருள், (எ - று).

**விரிவுரை**

மாயா கிரவுஞ்சமலை, யானைக்கு உரியதல்லாத (தடித்த) புலால் உண்ணும் தாருகன், வீரவாகு முதலினோரைக் கடலில் காலாழச் செய்த மாயாஸ்திரம், மாபெரும் சூரனை மாமரம், அன்பர் நக்கீரரை அகப்படுத்திய பரங்குன்றில் இருந்த குகைப் பாறை, அவரைக் கடுஞ் சிறையிலிட்ட கற்கிமுகி முதலியவைகளில், கடுமை வேலின் மறக்கருணை காட்சியாயது.

அதே நேரத்தில் வானவர், வீரவாகு, நக்கீரர் ஆதியவரிடத்தில், அதன் வித்தக அறக் கருணை வெளிப்பட்டது.

ஒரு சமயம், சிவபிரானது திருக்கண் புதைத்தாள் தேவி. அந்த இளம் விளையாடலால், உலகம் இருண்டது. அந்த அதிபாவம் அகல, தவம் செய எண்ணிய தற்பரி, புனித அருணை நோக்கிப் புறப்பட்டார்.

இடைவழியில், வரத தேவியின் நாக்கு வறண்டது. அது கண்ட விசாகன் திருக்கைவேல் விரைந்தது. அங்கிருந்து தூய ஏழுமலையைத் துளைத்தது. அவைகளி லிருந்து சுரந்து பெருகிய சுனைநீர், நிலத்தில் பெருகி ஆறாக ஓடியது. அம்மலையில், மாபெருந்தவம் செய்த எழுவர் மறவரையும் ஈர்த்து வந்து, எம்மான் திருவடி நிழலில் இருத்தியது. தண்ணீர் பருகிய அம்பிகையின் தாகமும் தணிந்தது.* இந்த ஆறு, இன்று சேயாறு எனும் பெயரில் சிறந்துளது.

குறிப்பு :—கிரவுஞ்ச பட்சிபோல் தோற்றம் காட்டிய மலை, கிரவுஞ்ச மலை. புணரி - (ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் மூன்றும்) புணர்ந்தமையின், கடல் புணரி எனப் பெயர் பெறும். தேவாந்திராதியர் என்பது, எதுகை கருதி 'தெய்வேந்திராதியர்' என நின்றது. சூர் - அச்சம்; மாமரமான இறுதி நாள்வரை அச்சமே பெரிதும் விளைத்தானை, 'சூர்மா' என்றார். கவுரி - பசுமைநிறப் பார்வதி. கவுரம் - பசுமை. வடவை - பெண் குதிரை முகம் போன்ற வடிவுடன், நெடுங்கடலில் உளதொரு நெருப்புப் பிழம்பு. (வடபா - பெண்குதிரை.)

விசாகன் ஏவிய வேல், ஒவ்வொரு சமயத்தும் தன் பெயர்க்கேற்ப, வெற்றியே விளைவித்தது என்றபடி. (கூ)

மின்படு நெடுஞ்சடைச் சிவனிகர் அகத்தியனும்,
வீணைவல நாரதனும், நல்
விரதமுசு குந்தனும், கங்கைவரு மாறுதவ
மிகமுயல் பகீரதனும், ஓர்
வன்பனை மணந்துற்ற வணிகமக ளும்,புலமை
வலிபெறு தமிழ்க் கீரனும்,
மாறில்பொய் யாமொழியும், அருணைநக ரின்சிகரி
வடவருகில் உய்ந்துளானும்,

*திரு. ரசபதி அவர்கள் எழுதிய இவ் வரலாற்று விரிவை 'அமிர்தவசனி' எனும் தெய்வீக மாத இதழில் அறிக.

கொன்பரவை நீந்திப் பிழைத்தசிவ ஞானியும்,
கோவலூர் வந்து தொண்டன்
குறைதவிர் பிறப்புதவு முனிவனும், போரூர்
குலாவவரு வானும்,இவர்நேர்
அன்பரெதிர் மயிலேறி ஆடிவரும் அழகனே
ஆடியருள் செங்கீரையே
அணிபொழில் பழனிமலை யாளுமுரு கையனே
ஆடியருள் செங்கீரையே. 14

(போ - ரை.) மின்போல் ஒளிரும் சிறந்த சடையுடைச் சிவத்தை ஒத்த அகத்திய முனிவரும் ;

(நரம்புகள் ஆயிரம் கொண்ட) மகதி யாழ் வல்ல நாரதரும் ;

நலம் சிறந்த (முதன்மை) நோன்புகளை நடத்தி முடித்த முசுகுந்தரும் ;

(ஆகாய) கங்கை, (நிலம் நோக்கி) வரும்படி பயனுள பெருந்தவம் செய்த பகீரதனும் ;

ஒருமுரடனை மணந்து கொண்ட வணிகர்குல முருகம்மையும் ;

தமிழ்ப் புலமையில் நலம்மிக்க ஆற்றல் கொண்ட நக்கீரரும் ;

(என்றும் கொள்கையில்) மாறுதல் அடையாத பொய்யாமொழிப் புலவரும் ;

அருணை நகரின் வடக்குக் கோபுர அருகில் உயிர் பிழைத்த (முதன்மை) அருணை முனிவரும் ;

சிறந்த கடலை நீந்திக் கரை சேர்ந்த சிவஞான பாலய அடிகளும் ;

திருக்கோவலூரில் திருவவதரித்து, (ஒரு) தொண்டனுக்குக் குறையற்ற பிறப்பளித்த ஆறுமுக முனிவரும்,

---

14. வன்பன் - முரடன். சிகரம் - (கோயில் கோபுர) சிகரம். கொன் பரவை - பெரிய கடல். இவர் நேர் - இவர் ஒத்த.

திருப்போரூர் சிறக்க வந்த சிதம்பர சுவாமிகளும் ஆகிய இவர் போன்ற அடியார்களின் எதிரில், மயிலேறி விளையாடி வருகின்ற அழகுமய அத்தா! செம்மை (ஒரு) மொழி செப்பியருள்;

அழகிய சோலைகளை யுடைய பழனிமலையை ஆளுகின்ற முருகையா! செம்மை (ஒரு) மொழி செப்பியருள், (எ - று).

### விரிவுரை

#### அகத்தியர்க்கு அருளியது

'செழும் தமிழும் சிவஞானமும்' விரும்பி, அகத்தியர் தணிகையில் வந்து அருந் தவஞ் செய்தார். அவர் முன் வந்து அதை அருளினன் அமலன். வரலாற்று விரிவை, தணிகைப் புராண அகத்தியர் அருள் பெறு படலத்தில் அறிக.

#### நாரதர்க்கு அருளியது

சிறந்த ஒரு வேள்வியை, நாரதர் செய்தார். பேருண மந்திரத்தில் பிறந்தது பிழை. அப்பிழை, ஆடுருவம் கொண்டு அகில உலகையும் அதிர வைத்தது. தன்னால் விளைந்த தவறு நினைந்து வருந்திய நாரதர், சித்தர் போற்றும் சிவசண்முகா! அருள்க ஐயா என்று அலறினர். மயில்மேல் வந்த கந்தன், அதிர வந்த ஆட்டை ஊர்தியாக்கி, அடக்கினன்.

மற்றொரு சமயம் நாரதர், வள்ளி மணாளனைச் சேவை வழங்குக என வேண்டினர். அக்காட்சியையும் வழங்கினன் அத்தன்.

#### முசுகுந்தர்க்கு அருளியது

அரிச்சந்திர பரம்பரையில் அவதரித்து, திரு ஆரூரை அரசாண்டு, சஷ்டி விரதத்தைச் சதுரொடு நடத்திய முசுகுந்தர்க்கு, முதன்மை யருளைப் பாலித்தான் முருகபரன்.

#### பகீரதற் கருளியது

பரம கங்கையை நிலம் கொணர முயன்ற பகீரதன், கந்தனைப் பலகாலம் வந்தித்தான். அதன் பயனாக, மயில்

மேல் வந்த அறுமுக வரதன், கந்த லோகத்தில் அவற்கிடம் அளித்த காதை பிரசித்தம் ;

### முருகம்மைக்கு அருளியது

திருப்பரங்குன்றச் சோமேசம் செட்டியார் மகளான முருகம்மை, மாபெரும் தனஞ்சயச் செட்டியை மணந்து வாழ்ந்தார். பிறந்த நாள் முதல் முருகா முருகா என்றே உருவேற்றும் அம்மகள், எவரையும் வருக முருகா என்றே வரவேற்பள். பலர் இது கண்டு பாராட்டினர். முருகம்மை புகழ்கண்டு பொருத உறவினர், சோமேசம் செட்டியாரின் வியாபாரத்தலத் தலைமைக் காரியஸ்தன் முருகப்பச் செட்டியே இவள் கள்ளக் காதலன்; அவன் பெயரைத் தான் இப்படி முருக முருக என்று அழைக்கிருள் என்று கோள் மூட்டிக் குமுறல் எழுப்பினர்.

கணவன் தனஞ்சயன், இது பங்காளிகளின் பகைப் பேச்சென்று அறிந்தான். எதற்கும் முருகா என்னுதே! எவர் எதிரினும், அந்நாமத்தைச் சொல்லாதே என்று அறிவித்தான்.

நாவந்த பழக்கத்தால், மீட்டும் மீட்டும் முருகா என்ருள் முருகம்மை. சினந்த தனஞ்செயன் வீசிய வாளால், அன்புடையாள் வலக்கை அறுந்து விழுந்தது. மயில்மேல் வந்த வேலிறைவன், அறுந்த கரத்தை ஒன்றச் செய்து, கதறிய முருகம்மையைக் காத்தருளினன்.

### நக்கீரர்க் கருளல்

தியான காலத்தில் வேறு இடத்தில் சிந்தனை செலுத்திய நக்கீரரை, ஒரு பூதம் எடுத்தது. பரங்கிரிக் குகையில் அடைத்தது. அதை உணர்ந்த அவர், பயனுள திருமுருகாற்றுப் படை பாட, வேலை ஏவினன் விசாகன்; மாபெரும் வீரவேல், உக்ரமாக விரைந்தது. உரமான மலைப் பாறையை உடைத்தது. வித்தகப் புலவர்க்கு விடுதலை யளித்தது. அதன்பின் மயில்மேல் வந்து, செவ்வேள் பரமன் சேவை யளித்தனன்.

### பொய்யாமொழிக் கருளியது

புனித சிவபக்தர் பொய்யாமொழிப் புலவர், என்மேல் ஒரு பாடல் பாடுக என, முருகன் பலதரம் கெஞ்சிக் கொஞ்சினன். கோழியைப் பாடிய வாயால், குஞ்சைப் பாடேன் என்று மறுத்தார் பாவலர்.

ஒரு நாள் வேடுவர் உருவில் வழிமறித்த விசாகன், அகப் பொருள் துறையில் தன்மேல் பாடுமாறு, வலிந்து ஆண்டு சேவை வழங்கினன்.

### அருணகிரியார்க்கு அருளல்

எவ்வளவு பாடினேன்; வரதன் காட்சி வழங்கவில்லையே! ஏன் எனக்கு இவ்வுடல் சுமை? என்று வெறுத்து, அண்ணுமலை வடகோபுரத்தின்மேல் ஏறி, கீழ் நோக்கி விழுந்த அருணகிரியாரை, தாங்கித் தரைமேல் விட்ட தற்பரன், அடுத்து மயில் வாகனனாய் மாபெருங் காட்சி வழங்கினன்.

### சிவஞான பாலயர்க் கருளல்

விறுவிறுத்த கடலி லிருந்து வெளிப்பட்டு, சிறந்த மயிலத்தில் வந்தமர்ந்த சிவஞானபாலைய சுவாமிகட்குச் சேவையளித்த செவ்வேள்பரன், அவரை அரிய சித்தர் ஆக்கினன்.

### ஆறுமுக சுவாமிகட்கு அருளியது

திருக்கோவலூரில் திருவவதரித்து, விநயமுடன் தன்னை வழிபட்ட வீரபத்திரன் எனும் அன்பன் ஆயுள் முடிதலை யுணர்ந்து, அவ்வுயிரைத் தன்னுள் ஈர்த்து இருத்தி, காலம் பார்த்து வேறுஒரு கருவில் வைத்து வாங்கி, அப்பிள்ளைக்குச் சண்முகன் எனும் பெயரிட்டுக் காத்த ஆறுமுக அடிகட்கு, பரம கந்தன் அருள் பாலித்தான்.

### சிதம்பர சுவாமிகட்குப் பேறு தந்தது

மதுரையில் உதித்து, மீனுட்சியார் ஆணைப்படி திருப் போரூர்க்கு வந்து, முருகன் திருக்கோயிலை அமைத்த

*சிதம்பர அடிகட்கு, மயிலேறி அயிலேந்திச் சேவை அளித்து, உய்தி யளித்தான் உமாசுதன். இன்ன பிற வரலாறுகள் எண்ணிறந்தன.** (௪)

**விமல திருவடிகள் விளங்கும் இடங்கள்**

கொம்புடைக் கரியுரிவை போர்த்தவன் உரத்தினும்,
குன்றமகள் மடிமீதினும்,
கும்பமுனி யாதியர் சிரத்தினும், குஞ்சரி
குறக்கோதை அங்கைகளிலும்,
பைம்புனற் சாரல் குறிச்சிகளி னும்,பல
பருப்பதச் சென்னிகளினும்,
பாவலவர் சித்தர்மன் னவர்முதலி னோர்கள்அவை
பலவற்றி னும்,பனைக்கைச்
செம்புகர்க் களி(று)ஆடு மயில்இடப முதுகினும்,
திருவருணை யூர்ப்புலவனோர்
சீரியவர் கவியெழுது சுவடிகளி னும்,தினம்
தினமணம் கமழ்வதாய
அம்புயப் புதுமல ரெனக்குலவு பாதனே!
ஆடியருள் செங்கீரையே
அணிபொழிற் பழனிமலை ஆளுமுரு கையனே!
ஆடியருள் செங்கீரையே. 15

(பொ - ரை.) *தந்தம் கொண்ட யானைத்தோலை சிறக்கப் போர்த்த சிவனார் திருமார்பிலும்;*

*மலைமகளான உமாதேவியின் மடிமேலும், அகத்தியர் முதலிய அருந்தவர் சிரத்திலும்;*

---

*இவ்வரலாறுகள் கௌமார புராணத்தும், ரஸபதி எழுதிய அமிர்தவசனி தெய்வீக மாத இதழிலும் விரிவாக வெளியாகியுள.

15. *கரி உரிவை - யானையை உரித்த தோல். குன்றமகள் - மலைமகளான உமை. செம்புகர்க் களிறு - (முகத்தில்) செந்நிறப் புள்ளிகளுடைய யானை.*

தேவயானையார், குறவர்குலக் கோதையான வள்ளியார் ஆகிய இருவர்தம் அழகிய திருக்கரங்களிலும் ;

பசுமை நீருடைய மலைச் சாரல்களில் அமைந்த சிற்றூர் களிலும், பல மலைகளின் உச்சியிலும் ;

கவிவாணர்கள், சித்தர்கள், காவலர் முதலினோருடைய (சால்புடைய) சபைகளிலும் ;

பனைமரம் போலும் நெடிய துதிக்கையும், (முகத்தில்) சிவந்த புள்ளிகளுடைய ஞானவேழம், ஆடு, மயில், இடபம் (முதலிய ஊர்திகளின்) முதுகிலும் ;

திருவண்ணமலையில் திருவவதரித்த புலவரான அருண கிரிநாதர் போன்ற சிறந்த பாவலர் பாடல்கள் எழுதும் ஏடு களிலும் ;

என்றும் மணம் கமழ்வதான புதிய தாமரை மலர் போல், விளங்கும் திருவடிகளை யுடையவனே ! செம்மை (ஒரு) மொழி செப்பியருள் ;

அழகிய சோலைசூழ் பழனி மலையை ஆளுகிற முரு கையா ! செம்மை (ஒரு) மொழி செப்பியருள், ( எ - று).

## விரிவுரை

இளம்பிரான் திருவடிகளை, மாதேவர் மார்பிறுகத் தழுவுகிறார் ; மாதேவி, அத்திருவடிகளைத் தன்மடியில் வைத்து கொஞ்சுகிறாள்.

படைப்பவன் எழுதிய தலை எழுத்தைத் துடைக்க, முனிவர்கள் முடியில் எம்மான் திருவடிகள் ஏறு கின்றன ; சிறக்கத் தீட்சை செய்கின்றன.

" பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா !"

என்றபடி, இருதேவியர் வருடற்கு அத்திருவடிகள் இடம் தருகின்றன.

தனிப் பெருங் குறிஞ்சி தனக்கே உரித்தெனச் சார்தரும் சிற்றூர்கள்தோறும், மலை உச்சிகளினும், அத்திருவடிகள் இனிது நடம் இடுகின்றன.

பாவலர் கழகத்தி லிருந்து பாக்களைச் சுவைத்தல், சித்தர் சங்கத்தி லிருந்து சிவஞானம் வழங்கல், மன்னவர் அவைகளி லிருந்து மாபெரும் நீதி கற்பித்தல் முதலியன புரிகின்ற அப்புனித மலரடிகள், யானை முதுகின்மேல், ஆட்டின் மேல், மயில்மேல், விடைமேல் கம்பீரமாக விளங்குகின்றன.

இனிய கவி ஏடுகள் முதல், காணும் இடங்களில் மணம் கமழவைத்த மலரடியன் என்னும் அருமையை, எண்ணும் போதே இதயம் இன்பம் கொள்கிறதே! (ரு)

வேறு

செம்பொற் பணிகள் அவிர்ந்தாடத்
திருவாய் மலரில் நகையாடச்
சீரார் நுதலில் வெயர்வாடச்
செழுமா மலர்ச்சீர் அடியாடக்
கொம்(பு)ஒற் றையுளான் உடனாடக்
கோலா கலமா மயிலாடக்
கூவும் சேவற் கொடியாடக்
குழுவும் அமரர் குலமாடப்
பைம்பொற் கவுரி களியாடப்
பழமா மறையின் இசையாடப்
பலதா னவர்உள் பயமாடப்
பாம்பும் புலியும் பார்த்தாட
அம்பொற் சிலையோன் கூத்தாட
ஆடி யருளாய் செங்கீரை
அருள்கூர் பழனிக் குருபரனே
ஆடி யருளாய் செங்கீரை. 16

16. நுதல் - நெற்றி. கொம்பு ஒற்றை யுடையான் - விநாயகர். பாம்பு புலி - பதஞ்சலி வியாக்ர பாதர்.

(பொ - ரை.) உயர்ந்த பொன்னணிகள் ஒளி வீச, திரு வாய் மலரின் (புனித)புன்னகை ஒளி பூப்ப, அழகிய நெற்றி யின் வியர்வை அரும்ப, செழுமை யுடைய சிறந்த மலர் போன்ற சிறந்த திருவடி அசைவு பெற ;

ஒற்றைக் கொம்பரான கணபதி உடன் சேர்ந்தியங்க, ஆரவார மயில் ஆநந்தக் கூத்தாட, கூவுகின்ற கொடியான சேவல் குதிபோட, கூடிய தேவகணம் குதூகலிக்க ;

பசுமை யழகுடைய கவுரி களிகூர, அநாதியான வேத நாதம் வெளியாக, பல அவுணர்கள் உள்ளம் பயங்கொள்ள;

பாம்பு முனிவரும் புலி முனியும் பார்த்து மகிழ, அழகிய மேருவை வில்லாக் கொண்ட அமலர் (ஆநந்தக்) கூத்தாட, செவ்விய (ஒரு) மொழி செப்பியருள் ; அருள் மிகுந்த பழனிக் குருநாதா ! செம்மை (ஒரு)மொழி செப்பி யருள், (எ - று).

### விரிவுரை

நீ செங்கீரை யாடினால், இத்துணையும் ஆடும் என்பது குறிப்பு. 'கொம்பு ஒற்றையுளான் உடனாட என்பதில், அத்துவித அனுபவம் தோன்ற கணபதி அசைவர் எனும் அருமை யுளது. அத்துவிதம் - ஒன்றும் வேறுமான உட னாதல். (சு)

கணியார் புனங்காப் பிதண்மடவார்
கவணும் களமும் தரும்ஒலியும்
கரடி புலியா தியபிறமும்
கானற் றிரூலியும், கணைசொரிவில்
திணியார் புயவேட் டுவர்ஒலியும்
சிகியா தியபுள் திரள்ஒலியும்
தெய்வத் தகைசால் அரமகளிர்
தினம்ஆ டியதாள் சிலம்பொலியும்

பணியா மகிழ்மா தவர்ஒலியும்
பறைஆ தியல்பல் இயத்தொலியும்
பைங்கார் ஒலியும் எதிரொலியும்
பரவிப் பசும்பொன் னகர்வியக்கும்
அணியார் குறிஞ்சிக்(கு) இறையவனே!
ஆடி யருளாய் செங்கீரை
அருள்கூர் பழனிக் குருபரனே!
ஆடி யருளாய் செங்கீரை. 17

(பேர் - ரை.) வேங்கை மரங்கள் நிறைந்து விளங்கும் தினைப்புனம் காக்கப் பரண்மேல் இருந்த மறவர் பாவையர், (பறவைகளைக் கடியும்) கவண் ஒலியும்;

(அவர்தம்) நெஞ்சில் (இருந்து) பிறக்கும் (ஆலோலச் சொல்) ஒலியும்;

கரடி, புலி முதலிய (கடும் விலங்குகள் கீழ்மேலாகப்) புரள, (அவைகளை அடித்துக் கொண்டு) வரும் காட்டாற்றின் பேரொலியும்;

கணை பொழியும் வில் ஏந்திய திண்மை நிறை தோள்களை யுடைய வேடர்களின் ஆர்ப்பரிப்பு ஓசையும்;

மயில் முதலிய பறவைகளின் (கலகல) ஒலியும்; தெய்வத் தன்மை நிகழும் தேவமகளிர், நாள்தோறும் ஆடும் கால்களில் (சிறக்க அணிந்த) சிலம்பொலியும்;

---

17. கணி - வேங்கை மரம். புனங்காப்பு இதண் - தினைப் புனம் காக்கும் பரண். கவண் - கிளிகடி கருவி. களமும் - கழுத்தும். கானாறு - காட்டாறு. சிகி - மயில். தகை - தகுதி. அரமகளிர் - தேவமாதர். இயம் - வாத்தியம். பைங்கார் - பசுமை மேகம்.

வணங்கி மகிழும் தூய முனிவர் துதிஒலியும்; பறை முதலிய பல வாத்தியங்களின் ஓசையும்; பசுமை முகில் களின் இடி ஒலியும்; (இவைகளால் ஆன) எதிரொலியும் எங்கும் பரவி,

பசுமையான பொன்னுலகம் பாராட்டும் அழகு மிக்க குறிஞ்சி நில அரசே! செம்மை ஒருமொழி செப்பியருள்;

அருள் மிக்க பழனிக் குருநாதா! செம்மை (ஒரு) மொழி செப்பியருள், (எ - று).

### விரிவுரை

நீ செங்கீரை யாடினால், மேலுரைத்த ஒலிகள் யாவும் ஏக காலத்தில் எழும் என்றபடி. மாபெரும் வேங்கை மரங் களில் மலர்கள் மலர்ந்தால், மறவர் அக்காலத்தை மணநாள் என்று மதிப்பர். ஆதலின், அருமைச் சோதிடர் போல் அமைந்த அம்மரங்களை, 'கணி' என்று கணிப்பர் கானவர். ஒலிக்கும் இவ் ஒலியனைத்தும், குறிஞ்சி நில ஒலிகள். அந்நிலத்து அதிபா! குருபரா! செங்கீரை ஆடியருள் என்ற அருமை, எண்ணும் போதே இன்பம் பிறக்கும். (எ)

### வேறு

தனதன தனதன தனதன தனதன-தானன தந்தான

மறியணி கரதலன் முதலிய கடவுளர்
வாடல் ஒழிந்தார்கள்
மகபதி யுடன்உள புலவர்கள் அனைவரும்
வாழிமொ ழிந்தார்கள்
செறிதரு கடலினும் மிகைபடும் அவுணர்கள்
தீரம்இ ழந்தார்கள்
செபதவ நெறியிடை வழுவறு முனிவரர்
தீவினை விண்டார்கள்

பறிதலை அமணரும் அவரது பிறகுசெல்
பாவரும் நொந்தார்கள்
பதிதர்கள் குடைநிழல் நலமெனும் இழிவினர்
பாறினர் கண்டாய்,மெய்
அறிவினை யறிபவர் வழிபடும் இறையவ!
ஆடுக செங்கீரை
அழகிய பழனியில் அமர்சிவ குருபர!
ஆடுக செங்கீரை. 18

(பொ - ரை.) *மான் ஏந்திய திருக்கரத்து உருத்திரர், (மால், பிரமன்) முதலிய வானவர் வாட்டம் தவிர்ந்தனர்;*

*இந்திரனுடன் இருக்கும் இமையவர் யாவரும், (கூடி) வாழ்த்துக் கூறினர்;*

*அடர்ந்த கடலினும் அளவிலரான அவுணர்கள், தீரம் இழந்து திகைத்தனர்;*

*செப தப வழியில் குறையற்ற முனிவர்கள், (தீராத்) தீவினை தீர்ந்தனர்;*

*தலைமயிர் பறிக்கும் (அவைதிக) அவுணரும், (அவர் களைப்)பின்பற்றும் பாவியரும் நொந்தமனத்தினர் ஆயினர்;*

*கொடியோர் குடைநிழலே இன்புதரும் எனும் இழிந்தவர், அழிந்து ஒழிந்தனர்;*

*மெய்யான அறிவினை அறிபவர் ஆராதிக்கும் எங்குமான பெருமானே! செம்மை (ஒரு)மொழி செப்பியருள்;*

*அழகிய பழனியில் சிறக்க அமர்ந்த சிவ குருவே! செம்மை (ஒரு)மொழி செப்பியருள்,* (எ - று).

---

18. *மறி - மான். மகபதி - இந்திரன். புலவர்கள் - வானவர்கள், மிகைபடும் - பழுதுபுரியும். விண்டார்கள் - நீங்கினர். பறிதலை - தலைமயிரைப் பறித்துக் கொள்ளும். பாவரும் - தீவினையாளரும். பதிதர்கள் - துன்மார்க்கர்கள். பாறினர் - அழிந்தனர். கண்டாய் - முன்னிலையசை.*

விரிவுரை

கடவுளர் வாடல் ஒழிந்தார்கள்; புலவர்கள் வாழி மொழிந்தார்கள்; முனிவரர் தீவினை விண்டார்கள்;

இம்மூவர்க்கும் மாருக, அவுணர்கள் தீரம் இழந்தார்கள்; அமணரும் பாவியரும் நொந்தார்கள்; இழிவினர் பாறினர்.

'அழகிய பழனியில் அமர்சிவ குருபரன்' ஆன நீ, அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாள். பேருன அவ் வுபதேசப் பயனுக, மூர்த்திகள் மூவரும், இந்திரனுடன் இமையவரும், வழுவறு முனிவரும் வாழ்வை எய்தினர்; பிறர் தாழ்வெய்தினர்.

வாழ வைத்தது அறக்கருணை; தாழ வைத்தது மறக் கருணை.

ஒழிந்தார், மொழிந்தார் என்பன, எதிர் காலத்தை இறந்த காலமாச் சொன்ன கால வழுவமைதி எனக் கொண்டு, நீ செங்கீரை யாடினுல், அதன் பயனுக, கடவுளர் வாடல் ஒழிவர்; புலவர்கள் வாழி மொழிவர் என முறையே கோடலுமாம். அவ்வளவு விரைவில் பயன் விளையும் என்பது குறிப்பு.

குறிப்பு:—மறி - மான்; மடங்குதல் உடையது எனும் காரணப்பெயர். மகபதி - (நூறு) வேள்வி செய்ததால் வந்தபெயர். புலவர்கள் - சிறந்த அறிவினர்; புலம் - அறிவு. அமரர் முப்பத்து முக்கோடியர் எனின், அவுணர் அறுபத்தாறு கோடியர் ஆதலின், 'செறிதரு கடலினும் மிகைபடும் அவுணர்கள்' என்ருர்.

முனிவர் - முன்னுதல் உடையவர்; முன்னுதல் - தியானித்தல். பறிதலை - கொதி நீரைத் தலையிலிட்டு, அவ் வெப்பு நிலையில் மயிர் பறித்தல் சமணர் இயல். இரக்கம் என்று பெயர் கூறி அரக்கர் செயல் செய்தலின், அவரையும் அவரைச் சார்ந்தாரையும் 'பாவர்' என்ருர்.

"மலைகொண் டெழுவார் கடல்கொண் டெழுவார்
மிசைவந் துசிலா வருடம் சொரிவார்
நிலைகொண் டெழுவார் கொலைகொண் டெழுவார்
இவரிற் பிறர்யா வர்நி சாசரரே"

எனும் தக்கயாகப் பரணி, இங்கு எண்ணத் தகும்.

'அறிவினை அறிபவர்' என்பதை,

"அறியாமை அறிவகற்றி, அறிவினுள்ளே
அறிவுதனை அருளினல் அறியாதே அறிந்து;
குறியாதே குறித்(து)அந்தக் கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்;
பிரியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்,
பிரபஞ்ச பேதமெலாம் தானய்த் தோன்றி,
நெறியாலே இவையெல்லாம் அல்லவாகி,
நின்றென்றும் தோன்றிடுவன் நிராதாரனயே"

எனும் சிவஞான சித்தியாரும்,

"அறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள்
அறிவாக நின்ற நிலை"

எனத் தாயுமானரும் குறிக்கும் செய்திகள், இங்குக் குறிக்கத் தக்கன. (அ)

தத்தன தத்தன தத்தன தத்தன-தானன தந்தான

பத்திநெ றிக்கண்மி கத்துணி வுற்றவர்
பாழில்ம யங்காது
பற்பல சித்திகள் பெற்றில கத்துதி
பாடிநின் முன்போதி
முத்திவி ருப்பின்மு ழுக்குறு சற்சனர்
மூடரி டம்போய்வெண்
முத்தொடு பொற்பணம் நெற்குவை இச்சைகொள்
மோகம்அ ழிந்தேக

நித்திரை ஒக்கும்இ ருட்கண் உவப்புறு
நீசர்அ கங்கார
நெட்டுரம் அற்றிட மற்றையர் கட்டம்அ
நேகமும் விண்டோட
அத்திமு கக்கட வுட்(கு)ஒரு பிற்றுணை !
ஆடுக செங்கீரை
அற்புத மிக்கதி ருப்பழ னிக்குகன் !
ஆடுக செங்கீரை. 19

(பொ - ரை.) அன்பு வழியில் அழுந்திய துணிவு அமைந்தவர்கள், (மயங்கவைக்கும்) பாழ் வழிகளில் மயங்காமல் ;

பற்பல சித்திகள் பெற்றுப் பயனடையத் துதிபாடி, (விமல)நின் திருமுன் விண்ணப்பித்து, (வரவர அதையும் மறந்து) முத்தி விருப்பில் முழுகிய ஞானிகள், மூடரிடம் போய், பொன்னும் முத்தும் நெல் பொதியும் (ஆகியவற்றில்,)ஆசைகொண்டு அணுகும் மோகம் அழிந்து ஒழியவும்;

(கண்மூடித்) துயில்வார் போன்று அறியாமையில் ஆநந்தம் கொண்டுள, அநாசாரரது அகங்கார ஆற்றல் அடியோடு அழியவும் ;

மேற்கூறிய (தூய) ஞானிகளின் துன்பம் யாவும் தொலையவும் ;

யானைமுகக் கணபதிக்குப் பின்வரு (தொன்மை மிகும்) ஒப்பற்ற துணைவா ! செவ்விய (ஒரு)மொழி செப்பியருள் ;

(தெய்வ) அற்புதம் பலவுடைய திருப் பழனிப்பதியில், (குதூகலத்துடன்) எழுந்தருளி யிருக்கும் குகா ! செவ்விய (ஒரு)மொழி செப்பியருள், (எ - று).

---

19. பத்திநெறி - உபாசனை வழி. இருள் - உண்மை விளக்கம் அற்ற அறியாமை. விண்டு ஓட - விட்டு நீங்க. அத்திமுகக் கடவுள் - யானைமுக விநாயகர்.

விரிவுரை

பத்தி நெறியில் அரும்பி, வித்தக சித்தியில் மலர்ந்து, மூத்தி மணத்தை முகர்ந்து இருப்பவர் முதன்மை ஞானியர்.

இம்மை வாழ்க்கையில் இருக்கும்வரை, தம்தம் சூழ் நிலைக்குத் தக்கபடி, சோறும் மணியும் சொர்னமும் தேவை. அது கருதி, அறிவிலாரிடம் சென்று யாசிப்பது இயல்பு.

வேண்டும் அவர்களது அருமை யுணரா அறிவிலிகள், இதனால் மட்டரகமாக ஞானிகளை மதிப்பர்.

நீ செவ்விய ஒருமொழி செப்பி யருள்வையேல், ஞானி கள் தேவையும் நிறைவடையும்; அகங்காரிகள் கொட்ட மும் அடங்கிவிடும் என்பது கருத்து.

குறிப்பு :—சத்சனர் - மெய்ப்பொருள் அவாவும் மேலவர்; சத் - மெய். நிசிநிலை யறிவினரை நீசர் என்றார் எனினு மாம். இதற்கேற்ப, 'நித்திரை ஒக்கும் இருள்கண் உவப்புறு மவர்' என்ற அருமையே அருமை. (கூ)

தானன தானன தானன தானன-தந்தா னந்தான

பார்வயின் வாழ்பல ஊரவர் கூடிய
பந்தா னஞ்சோலை
பாகுறழ் பாடல்வ லார்இசை வால்உயர்
பண்பா டும்சீலம்
நார்வழு வாதசி வோகமெய் ஞானியர்
நண்பார் சந்தோட
நாரிய ரோடுவி ஞேர்கள் சதாவர
நந்தா வண்சாரல்

20. வயின் - இடம். பந்தானம் - வளமுடைய அல்லது பந்தாடு கின்ற. பாகு உறழ் - (வெல்லப்) பாகுபோன்ற. நார் - அன்பு. நாரியர் - மாதர். சதாவர - என்றும் வர. நந்தா - குன்றாத.

போர்வய வீரர்அ னேகர்கள் சூழ்தகை !
புண்பா டொன்றாத
பூசுரர் சேகர! நீர்வளம் ஆதிய
பொங்கேர் குன்றாத
சீர்வய லூர்மலை மேல்வளர் தேசிக!
செங்கோ செங்கீரை
சேவல்நி லாவிய கேதன மாரத
செங்கோ செங்கீரை! 20

(பொ - ரை.) உலகில் வாழும் பல ஊர் மக்கள், ஒருங்கு சேரும் வளம்பல வளரும் சோலையில், பாகுபோல் இனிக்கப் பாடும் அருமையான பாடகர்களும் ;

ஒன்றுபட்டு உயர்ந்த பண்பாடும் ஒழுக்கமும் அன்பும் குன்றாத சிவோகம்பாவனையரான சிவஞானிகளும் ;

மாபெரும் காதலால் மகிழும் மங்கையருடன், வானவர்களும் வந்தவர் வந்தபடியே இருக்கவும் ;

வளம் குறையாத மலைச்சாரலில் சிறந்தவரான போர் வீரர்கள் அளவிலர், தாழ்ந்து வலம்வரும் தகுதியனே !

என்றும் மனப்புண் இல்லாத அந்தணர் சிரமேல் அமர்ந்த மாணிக்கமே !

நீர்வளம் முதலிய குலவிய அழகு குன்றாத சிறந்த வயலூரில் உள்ள, (மாபெரும் பழனி) மலைமேல் அமர்ந்த பரமகுருவே ! செவ்விய (ஒரு)மொழி செப்பியருள் ;

வித்தகச் சேவல்கொடி விளங்கும் மாபெரும் தேரில் வருவோனே! செவ்விய (ஒரு)மொழி செப்பியருள், (எ-று).

---

வயம் - வெற்றி. ஒன்றாத - அடையாத. பூசுரர் - அந்தணர். சேகரம் - முடியணி. பொங்கு ஏர் - மிக்க அழகு.

## விரிவுரை

பார் - (யாவராலும்) பார்க்கப்படுவது; அல்லது பருமை யுடையது என பூமிக்குக் காரணக் குறி.

வயின் - ஏழனுருபு. பந்தானம் - பந்தாடும் இடம். இதைப் " பந்தினை யினையவர் பயிலிடம் " என்பர் கம்பர்.

உறழ் - போல எனப் பொருள்தரும் உவம உருபு சிவம்+அகம் என்பது, சிவோகம் என்றாயது. நாரம் உடையவர் நாரியர் ; நாரம் - அன்பு.

தகை - (சிறந்த) தகுதி யுடையவன் ; விளியுருபு தொக்கது. பூசுரர் - பூதேவர் எனும் பொருளில், ஒழுக்க முள்ள அந்தணரை உணர்த்தியது. சேகரம் - முடியணி ; சிரோ ரத்தினம் ; சிகாமணியெனவும் இது வழங்கும். தேசிகன் - ஒளிமயமான தெய்வக் குரவன். (௧0)

செங்கீரைப் பருவம் முற்றிற்று.

# 3. தாலப் பருவம்

*தாயர் சேயைத் தொட்டிலில் இட்டு, பயனுன நா அசைத்துப் பாடும் பருவம் இது. (தாலம் - தாலு ; நாக்கு.) தாலோ தாலேலோ என்பது அநுகரணம். இது தாலாட்டிப் பாடுவதால் போந்த பெயர்.*

சீரார் குறிச்சி தொறும்நடித்துச்,
சிறுமென் முலையார் பலபேரைத்
திருடிப் புணர்ந்து, தமிழ்ப்புலவர்
சிந்தை கவர்ந்து, சிறிதேனும்
பாரா தியின்மால் அணுகரிய
பரமா னந்தத் தவசிகளுள்
பதுமம் புரையும் மனத்தவிர்ந்து,
பங்கே ருகனைச் சிறைப்படுத்திக்,
காரார் வடிவத் திருநெடுமால்
களிக்கத் தகுவர் களைத்தடிந்து,
கண்மூன் றுடையார்க்(கு) உபதேசம்
கழறி,இருமா தரைக்கலந்து,
தாரார் கடம்பு புனைந்தகுகா !
தாலோ தாலோ தாலேலோ
தண்டேந் தியகைப் பழனியப்பா
தாலோ தாலோ தாலேலோ. 21

21. *குறிச்சி - (குறிஞ்சி நிலச்) சிற்றூர். பார் ஆதியின் மால் - மண், பொன், பெண் எனும் மூன்று வேட்கை. உள் பதுமம் - உள்ளக் கமலம். பங்கேருகன் - கமல பீட நான்முகன். கார் - கருமேகம். தகுவர் - அவுணர். மாதரை - வள்ளி தெய்வயானையரை. தார் - மாலை.*

(போ - ரை.) சிறப்பு மிகுந்த சிற்றூர்கள் தோறும் (நாடக) ஆவேசம் பல நடத்தி;

மென்மைக் குயமுடைய தெரிவையர் பலரைத் திருடி, (அவர்களில்) அத்துவிதமாக ஒன்றி;

(கவிஞர்களான) தமிழறிஞர்கள் மனத்தைக் கவர்ந்து;

மண், (பெண், பொன்) முதலியவைகளில் மயக்கம் ஒரு சிறிதும் சாராத சிவாநந்தமான சிறந்த தவத்தினரது (உயர்ந்த) கமலம்போன்ற உளத்தில் ஒளி மயமாக இருந்து;

(கர்வித்த) கமல பீட நான்முகனைக் கடுஞ்சிறையில் அடைத்து;

திருவின் கேள்வரான கருமுகில் வண்ணத் திருமால் களிக்க, (வீணர்களான) அவுணர்களை வேரறுத்து;

முக்கண் முதல்வர்க்கு (ஓம் பொருளை) உபதேசித்து;

(இச்சை, கிரியை யென்னும்) இரு தேவியருடன் இணங்கி;

(சிவலோகாதிபன் எனற்கு உரிய அடையாளமான) மணம் நிறை கடப்ப மாலை புனைந்த குகா! தாலோ! தாலோ! தாலேலோ;

(யோக) தண்டம் ஏந்திய (பாக்கியமான) திருக்கரம் உடைய பழனியப்பா! தாலோ, தாலோ, தாலேலோ, (எ - று).

விரிவுரை

குறிஞ்சி நிலச் சிற்றூரில், செவ்வேள் பரனைச் சேவிக்கும் மகளிர் பலர்; அக்குமரன் புகழைப் பாடும் அணங்கினர் பலர்; அவன் கைகொடுக்கப் பிணைந்து கூத்தாடும் கோதையர் பலர். அந்த 'மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு,' குறவர்களும் சேர்ந்து குமரனை வழிபடுகின்றனர். அச்சமயம், வழிபடும் பூசாரியான வேலன்மேல் ஆவேசித்த விமலன், வள்ளி வேடம் தாங்கி வழிபடும் பாவையர் கைகளைப் பற்றுகிறான். குன்றுதோறும் சென்று கூத்தாடுகின்றான்;

'முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைதந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே'

எனத் திருமுருகாற்றுப்படை, அருமையாக இதனை அறிவிக்கின்றது. இப்பகுதியை,

'நடித்து, பலபேரைத் திருடிப் புணர்ந்து'

என்பதில் அறிகிறோம்.

'புணர்ப்பதொக்க எந்தை யென்னை
ஆண்டு பூண நோக்கினாய்'

எனும் இன்பத் திருவாசகம் இங்கு எண்ணப் பெறும்.

புணர்தல் - அத்துவிதமாக உயிரில் ஒன்றும் உறவுநிலை. 'உள்ளம் கவர் கள்வன்' என்று ஆளுடைய பிள்ளையார் அறிவித்தபடி, கவிஞர் உளத்தைக் கவர்கிறான்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை மூன்றும் ஈடணை எனப்பெறும்; தகுதியற்ற இம்மூன்று பற்றும் அற்றவர்க்கே தவம் கைவரும். ஈடணைப் பயன் சிற்றின்பம்; பெருந்தவப் பயன் பேரின்பம்.

கடுந் தவத்தால் பிரம பதவி கைவந்தது; கனந்தங்கிய பதவியால், பிரமன் கர்வித்தான். அதன் பயன் சிறைவாசம் ஆயிற்று. கரிய முகிலான கருணைத் திருமால், வினையுருவான அவுணரை முருகன் வீழ்த்தியது உணர்ந்து, அளவிறந்த ஆநந்தம் காண்கிறார்.

ஐந்தெழுத்துச் சிவத்திற்கு, ஓரெழுத்து உபதேசம் செய்தான் ஓம் பொருளோன். கடம்பு, சிவபோக அடையாள மலர் மாலை.

நடித்து, புணர்ந்து, கவர்ந்து, அவிர்ந்து, படுத்தி, தடிந்து, கழறி, கலந்து புனைந்த குகா! எனத் தொடர்புபடுத்தி ஓதுநர் தொல்லை வினையனைத்தும் தொலைந்துபடும். ஆ! என்ன அருமையான பாடல். ஓதி உணர்ந்து தெளிவ

*தன்றி, உரைவகையால் இப்பாட்டின் அருமையை உரைக்கல் ஆகுமோ!* (க)

முன்னம் பனுவல் துறைவகுத்த
முனிக்கோன் விதிக்கா, இப்பருவம்
மொழிகின் றனன்; நீ இதுதானே
முற்றும் நலமாம் எனும்துணிவால்
இன்னம் துயிலக் கருதாதே,
இந்நாள் துயிலும் அறல்வேண்டும்;
ஏரார் ஊசல் துதியாக்கொண்(டு)
ஈனர் குடைத்தீங்(கு) ஒழித்தெமையாள்;
கன்னங் கரிய விழிமடவார்
கலவிப் போதும், மெய்யடியார்
கருதும் போதும் உபநிடதக்
காட்டின் முடிவிற் கவின்றுங்கு,
தன்னந் தனியாய்த் திகழ்முருகா !
தாலோ தாலோ தாலேலோ
தண்டேந் தியகைப் பழனியப்பா !
தாலோ தாலோ தாலேலோ. 22

(போ - ரை.) *ஆதியில், (வளரும்) தமிழ்ப்பாத் துறைகளை வகுத்த அருந்தவத் தலைவர் அகத்தியர் (இயற்றிய) இலக்கணப்படி, (பயனுள) இத் தாலப் பருவம் பாடுகின்றேன்;*

*இதுதான் முற்றும் நல்ல முறையாகும் என்று நிச்சயித்து, மேலும் உறங்க நினையாதே; இன்றைய நித்திரையும் நீங்கல் வேண்டும்.*

*தூய்மை எழும் துதியாக (இத் தாலாட்டை) ஏற்றுக் கொண்டு, தீயவர் வருத்தும் தீமையைத் தீர்த்து, (அருமை பெற) எம்மை ஆண்டுகொள்;*

---

22. பனுவல் - பாடல். முனிக்கோன் - அகத்தியர். விதிக்கா - இலக்கணப்படி. ஏர் - அழகு; எழுச்சியுமாம்.

(மை தீட்டிய) கருங்கண் தேவியர் கலவி நேரத்தும், மெய்ம்மை யடியவர் எண்ணும் பொழுதும், உயர்ந்த உப நிடதங்களின் உச்சியில் ஒளிர்வதுபோல் வித்தகத் தனியாய் விளங்கும் முருகா! தாலோ தாலோ தாலேலோ;

தண்டாயுதம் ஏந்திய திருக்கரப் பழனி அப்பா! தாலோ தாலோ தாலேலோ, (எ - று).

## விரிவுரை

உறங்கச் செய்தல் தால் நோக்கு; பழந்தமிழ் அகத்தியர் விதிப்படிப் பாடுவதன்றி, உம்மை உறங்கச்செய் நோக்கு எமக்கு இல்லை. நீ இதுதான் சரியென்று உறங்கிவிட வேண்டா. நீ உறங்கினல், உலகே உறங்கிவிடும். உண்மை இது.

இதுவரை இருந்த சோர்வும் இப்போதே நீங்கட்டும். இதை ஊசற் பாடலாக் கொண்டால், குறையில்லை. நீ யார் என யான் உணர்வேன். மடவார் கலவியன் என்பது, சொருப நிலையில் காணும் ஒரு தத்துவம். அவ்வளவே.

அடியார் நினைவில் அமர்கின்ருய். அப்படியும் ஒரு நிலை யுண்டு. எது மெய்ம்மை யெனில், நீ என்றும் உபநிடத உச்சியன் என்று அருமைபெற அறிவித்தபடி. (உ)

அருவும் உருவும் அருவுருவம்
ஆம்ஓர் மூன்றும் தனவேயென்(று)
அறிவார் தமக்கும், ஒருபடித்தே
ஆவாய் எனப்போற்(று) இசைப்பார்க்கும்,
கெருவச் சமணு தியர்பலரும்
கெடுமா(று) இயற்றத் தவம்புரியும்
கிளர்ச்சி யினர்க்கும், கொடுங்கோன்மைக்
கீழோர் மருமம் கிழிப்பார்க்கும்

23. படித்து - அளவு. போற்றிசைத்தல் - துதித்தல். மருமம் - மார்பு. பான்மை - முறைமை.

பருவ மதிநேர் முகமடவார்
பரவும் பெருமை படைத்தோர்க்கும்
பகரும் பிறர்க்கும் அவரவர்தம்
பான்மை யளவில் அருள்புரியும்
சருவ குருதே சிகமுருகா
தாலோ தாலோ தாலேலோ
தண்டேந் தியகைப் பழனியப்பா
தாலோ தாலோ தாலேலோ. 23

(போ - ரை.) அருவம் என்றும், உருவம் என்றும், அருவுருவம் என்றும் ஆன ஒப்பற்ற அம்மூன்று நிலையும், உன்னுடையனவே என்று அறிகின்ற அறிஞர்க்கும் ;

எவர்க்கும் சமமாக இருக்கின்றாய் என்று, பரவித் துதித்துப் பாடுவார்க்கும் ;

கர்வம் மிக்க சமணம் முதலிய பல சமயத்தவரும் கெட்டழியச் செய்கின்ற தவக்கிளர்ச்சி யுடையவர்க்கும் ;

கொடுங்கோல் நடத்தும் கீழ்மையரான மறமன்னர் மார்பைப் பிளக்கும் வீரர்க்கும் ;

நிறைமதி போன்ற திருமுக மாதரை வழிபடுகின்ற உலோகாயதக் கொள்கை உடையோர்க்கும் ;

(இப்படி மாறுபட்டுப்) பேசும் மற்ற எவர்க்கும் ;

அவரவர்தம் தன்மைக்குரிய அளவில் அருள்பாலிக்கும் சர்வ சமய பரமாசாரியா !

முருகா ! தாலோ தாலேலோ ; தண்டாயுதம் ஏந்திய திருக்கரத்தை யுடைய பழனியப்பா ! தாலோ ! தாலோ தாலேலோ, (எ - று).

விரிவுரை

மாபெரும் அருவமே முதலென்பர் மாயாவாதிகள். பரம உருவமே முதலென்பர் பாஞ்சராத்திரிகர். அருவுருவமே முதலென்பர் ஐக்கிய வாதிகள்.

நிரீச்சுர சாங்கியர், பாடாண வாதியர், சங்கிராந்த வாதியர், சிவசமய வாதியர், பாற்கரியர் முதலிய பலப்பல சமயத்தரை, 'பகரும் பிறர்க்கும்' என்றார்.

"அவரவர் விதிவழி அடைய நின்றனரே" என்றபடி, 'அவரவர்தம் பான்மை அளவில் அருள் புரியும்' என்றார்.

சிவம், சக்தி, விந்து, நாதம் எனும் அருவத் திருமேனி நான்கும்; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன் எனும் உருவத் திருமேனி நான்கும், சதாசிவம் ஆன அருவுருவம் ஒன்றும் ஆன் ஒன்பது நிலையும் உடையவர் என உணர் வார்க்கு, ஏகனுயிருந்து இனிதருள் புரிபவனை, 'ஒருபடித்தே ஆவாய்' என்று ஓதினர்.

"சும்மா யிருக்கச் சுகமுதய மாகிவிடும்
நம்மாணை நம்மாணை நம்மாணை—அம்மாகேள்!"

என்று அருள்வானை, 'சருவகுரு தேசிக முருகா'; அதற்குரிய 'தண்டேந்திய கைப் பழனியப்பா!' என்பதில் பெற வைத்தார்.

"பூதலய மாகின்ற மாயைமுத லென்பர் சிலர்;
பொறிபுல னடங்கு மிடமே
பொருளென்பர் சிலர்;கரண முடிவென்பர் சிலர்;குணம்
போனஇட மென்பர் சிலபேர்;
நாதஇட மென்பர்சிலர்; விந்துமய மென்பர்சிலர்;
நட்டநடு வேஇருந்த
நாமென்பர் சிலர்;உருவ மாமென்பர் சிலர்;கருதி
நாடில்அரு என்பர் சிலபேர்;
பேதமுற உயிர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்;
பிறவுமே மொழிவர் இவையால்,
பாதரச மாய்மனது சஞ்சலப் படுதலால்
பரமசுக நிட்டை பெறுமோ?
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண னந்தமே"

எனும் தாயுமானர் பாடல், இங்கு நினைவிற்கு வருகிற தல்லவா! (௯)

கண்ணு யிரத்தான் மகள்கணவா !
கானக் குறத்தி பணிபுரிவாய் !
கதிர்வேற் படைக்கைக் காவலவா !
கயிலைக் கிரியார் விழிப்புதல்வா !
எண்ணார் குடிக்கோர் நெருப்பாவாய் !
ஈரே ழுலகும் தகர்உகைப்பாய் !
எல்லாம் உணர்ந்த முழுப்புலவா !
இரங்கா மனத்தார்க்(கு) உணர்வரியாய் !
மண்ணாட் டினிற்சிற் சிலமனித
வடிவும் சமைவாய்! மரகதமா
மயிலூர்ந்(து) உகைப்பாய்! உலகளிக்கும்
மாயோன் மருகா! மழைமலிவால்
தண்ணார் பொழில்சூழ் பழனிமலைத்
தலைவா! தாலோ தாலேலோ
தவத்தோர் பலர்க்கும் ஒருகுருவாம்
சரதா! தாலோ தாலேலோ. 24

(போ - ரை.) ஆயிரம் கண்களை யுடைய இந்திரன் மகளான (மாபெரும்) தேவயானை மணவாளா !;

காட்டுக் குறத்தியான வள்ளி யம்மையின் சிறந்த பணியைச் செய்பவனே !;

ஞான சக்தியை, (வலக்) கரத்தில் பற்றி உயிர்களைக் காக்கும் வல்லாளனே !;

(அப்பிராக்குத) கயிலை அத்தர் கண்வழி வந்த கான் முளையே !;

அவுணர் குடியை (எரிக்கும்) நெருப்பா யிருப்பவனே!;

---

24. கண்ணுயிரத்தான் - இந்திரன். எண்ணார் - பகைவர். தகர் - ஆடு. மனித வடிவு - குரு திருமேனி. உகைப்பாய் செலுத்துவாய்- மலிவு - பெருக்கம். சரதா - மெய்ப்பொருளே.

பதினான்கு உலகிலும் ஆட்டின்மேல் பவனி வருபவனே !

யாவும் உணர்ந்த முழுமைப் புலவனே !;

இரக்கமற்ற மனத்தார்க்கு உணர இயலாதவனே !;

குவலயத்தில் சில சில மனித உருவும் கொள்பவனே !;

(உயர்ந்த) பசுமைநிற மயிலில், (ஊர்ந்து) உலா வருபவனே !;

(பயன் விளைய) உலகிற்குப் படியளக்கும் (மாபெரும்) திருமால் மருமகனே !;

நிறைந்த மேகங்களால் குளிர்ச்சி நிறைந்த சோலைகள் சூழ்ந்த, (தனிப்பெரும்) பழனி மலையில் இருக்கும் தலைவனே !; தாலோ தாலேலோ;

(மேம்படு) சாதகர் பலர்க்கும், ஒப்பற்ற குருவான மெய்ம்மையனே ! தாலோ தாலேலோ, (எ - று).

## விரிவுரை

கண்கள் ஆயிரம் உடையான் மகளின் கண்ணிற்கு இனியானை, 'கணவா' எனும் அருமை கருதத் தகுவது. மற்று, கணவன் என்பதில், கண் ஏழனுருபு எனக்கொண்டு, புனித நோக்கிற்கு எவ்விடத்தும் புலனாகுமவன் என்பதும் ஒருவகை.

வைதிக தேவயானையார் கணவன்; அவைதிக குறமகள் பணியில் ஆர்வம் உடையவன் என்பது, நலமிக்க நயமான நடை. இது, தாழ்ந்தோர் சென்ற வழியிலே சென்று, அவர்களைத் தாங்கும் தனிக் கருணைத் தன்மை.

ஆணவ இருளில் அவதிபெறும் ஆன்மாக்கட்கு, ஞான ஒளி வழங்க, கதிர்வேல் படையைக் கரத்தில் கொண்டான்.

மலைகளிற் சிறந்தது கைலாயமலை ; அங்கிருக்கும் பரமர் அருள் மேனியர் ; அவரது ஞானக் கண்ணிற் சிறக்கப்

பூரிக்கிறது சித் கனல். விமலமான அதனிலிருந்து வெளி வந்தோனை, 'விழிப்புதல்வா' என்றார்.

நெருப்பில் தோன்றினன் ஆதலின், 'எண்ணார் குடிக்கு நெருப்பானன்' என்றார். எண்ணுவார் குடிக்கு ஆறுதல் அளிப்பவன் என்பது அதன் எதிர்மறை.

வேள்வி நெருப்பில் உதித்த ஆடு, இறைவனை எண்ணு வார்க்கு இடர்பல விளைத்தது . அதனில் ஊர்ந்து, பயன்தர எங்கும் பவனிவந்து, அதன்கொட்டம் அடக்கினன் எனும் அருமையே அருமை.

சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினரான புலவர் பலருளர். அங்ஙனின்றி, முற்று முணர்ந்த முழுமுதல் இறையை, 'முழுப்புலவா' என்றார்.

அருளிலாத நெஞ்சத்தார்க்கு அகப்படாதவனை, 'உணர் வறியாய்' என்றார். இத்துணைச் சிறந்தோன்.

குரு எனும் பெயரில், மண்ணகத்தே வந்து, பலரை வாழச் செய்தலின், 'மனித வடிவும் சமைவாய்' என்றார்.

செம்மறி செலுத்திய செல்வன், ஓங்கார மயிலை ஊர்ந்து வருபவன் ; அப்பெருமான், அகடிதகடன சாமர்த்திய மாலின் மருகன் ; பழனியில் ஞான சற்குருவான மெய்ப் பொருளோன் எனும் செய்திகள், எண்ணுவார் மனத்தை இளகச் செய்யும். (௬)

அகர முதலே யெனக்குலவும்
ஐம்பத் தொன்றும் அக்கரமும்
அவற்றால் தொனிக்கும் நான்மறையும்
ஆக மாதிப் பலநூலும்
பகலும் இரவும் கதிர்மதியும்
பகுத்(து)ஓ தரும்பற் பலநூலும்
பார்ஆ தியஐம் பூதமும், அப்
பரப்பால் நிகழ்பல் பவுதிகமும்

இகழ்வும் புகழ்வும் பொலிந்துளவாம்
எண்ணில் சமயப் பெருங்காடும்
ஏக`பரவா தமும், ஒன்றென்(று)
இரண்டென்(று) உரையாப் பொதுநிலையும்
சகள மொடுநிட் களமும், ஒரு
தானும் முருகா! தாலேலோ
தண்ட மொடுவேல் கொடுபழனி
தனில்வாழ் குமரா! தாலேலோ. 25

(பொ - ரை.) *அகரமே முதல் என விளங்கும் ஐம்பத்தோர் எழுத்தும் ;*

*அவைகளால் சந்தங் கொண்டு ஆரவாரிக்கும்* (வித்தக) *நான்கு வேதங்களும், பயனுள ஆகமம் முதலிய பல நூல்களும் ;*

*பகலும் இரவும்,* (அவைகளை விளைவிக்கும்) *பருதியும் மதியும் ;*

*பாகுபாடு செய்து படித்தற்கு அரிய* (நுட்பமான) *பல நூற்களும் ;*

*மண் முதலிய* (புனித) *ஐம்பெரும் பூதங்களும் ;*

*பரவிய அவைகளால் விளைந்த பலவான பௌதிக உலகும்;*

*இகழ்விற்கு உரிய* (சூழ்நிலையும்), *புகழ்விற்குரிய சூழ்நிலையும் நிறைந்து,* (கண்மயக்கும்) *கணக்கிலாத சமயங்களாகிய காடுகளும் ;*

*ஏகாத்ம வாதமும், ஒன்றே பொருள், இரண்டே பொருள் என்று விவாதிக்காத பொது நிலையான சித்தாந்தமும், உருவமொடு அருவமும் ஒப்பற்ற தானேயான*(தற்பர) *முருகா ! தாலேலோ ;*

*தண்டாயுதமொடு வேலேந்தி,* (குலவிய) *பழனியில் எழுந்தருளிய குமரா ! தாலேலோ !* (எ - று).

---

25. *ஏகபர வாதம் - ஆன்மாவே பரம் எனும் ஏகாத்ம வாதம். பொது நிலை - அன்மைப்பொருள் கூறும் சித்தாந்தம். சகளம் - உருவம். நிட்களம் - அருவம்.*

5 MAY 1975

விரிவுரை

அகர நாதத்தில் இருந்து ஐம்பத்தொரு அக்கரங்கள் தோன்றின; அந்த அக்கரங்களி லிருந்து, பெருமறைகள் நான்கும் பிறந்தன. அவ்வேத சாரமாய், ஆகமங்கள் முதலிய அருள் நூற்கள் எழுந்தன. அதன் அங்கங்களி லிருந்து வான நூல்கள் பல வளர்ந்தன. நலம் சிறந்த இவை களினால், உண்டாயது நாதம்.

அந்த நாதத்திலிருந்து ஐம்பூதங்கள் உளவாயின. அவை கள் அகில சராசரம் ஆயின. இவைகளைச் செய்தவன் எவன் என்று அறிவோம்; அவனை யடைவோம்; அடையும் வழி இவை யென்று, அறிவு போன வழி பல சமயங்கள் ஆரவாரித்தன.

இச்சமயக் கூட்டங்கள் துவைதம், அத்வைதம், சைவ சித்தாந்தம் என்பவைகளில் அடங்கும்.

மேலுரைத்தவைகள் யாவற்றினும்,உருவாய் அருவாய் உறையும் ஒருவா !

யோகாநுபவம், அரிய நுட்பம் பலவற்றை அறிவிக்கும் என்று, உயிர்கள் உணருமாறு யோகதண்டு தாங்கினை !

மோன ஞானமே முடிபு எனலை அறிவிக்க, ஞான வேல் ஏந்தினை ! பழனி மலைமேல் உள்ள பரமா ! எம்மை உணர்த்துமாறு, நீ அறிதுயில் கொள் என்று, விநயம் காட்டி வேண்டியபடி. (௫)

பண்டைநான் மறையினது முடிதொறும், அவிர்ந்துள
பருப்பதம் தொறும்நடித்தும்,
பரமனும் சிவையும்அவர் விழிகளில் அணிந்துமுகர்
பங்கேருகங்களாகித்
தொண்டையங் கனிவாய் மடந்தையர்கள் வாழ்மனை
தொறுந்தொறும் நடந்து, மெய்ம்மைத்
தொண்டர்கள் அனேகரைத் துய்த்(து)உமிழ்கலாததொர்
சுதந்தர சுபாவ மெய்திக்,

கண்டையும் சங்கமும் காகளமும் ஆதியன
கல்லென் றொலிப்ப,நாளும்
கமனசித் தேசரும் பூசனை செயும்படி
கவின்தந்து, கழல்சிலம்பு
தண்டைபுனை செஞ்சரண்என் முடிமிசை தரித்தவா!
தாலேல தாலேலவே
தண்டொன்று பழனிமலை தனில்ஊன்று குருபரா!
தாலேல தாலேலவே. 26

(பொ - ரை.) அநாதி நித்தியமான (சிறந்த) நால் வேதங்களின் சிரந்தோறும்,

விளக்கம் பெறவுள மலைகள் தோறும், (நியதியான) ஆடல் பல நிகழ்த்தியும்;

சிவபிரானும் சிவபரையுமான அவ்விருவர்களுடைய கண்களில் ஒற்றி மோந்து கொள்ளும் கமலங்களாகி;

கொவ்வைக் கனிபோலும் வாயுடைய கோதையர் வாழ்கிற (செம்மை யுடைய) ஒவ்வொரு இல்லந்தோறும் சென்று;

மெய்த்தொண்டர் பலரை விழுங்கி, உமிழாத மெய்ம்மை உரிமை இயல்பை மேவி;

கண்டையமும், சங்கமும், காகளமும் முதலான பறைகள் பல, கல், கல் என்று கன ஒலி விளைப்ப, நாள்தோறும் கமன குளிகைச் சித்தர் தலைவர்கள் வழிபாடு செய்யும்படி அழகிய உரிமையை அருளி;

வீரக்கழல், சிலம்பு, தண்டை முதலிய அணிபல அணிந்த செவ்விய திருவடிகள் இரண்டையும், என்தலை மேல் சூட்டிய தற்பரா! அறிதுயில் கொண்டருள்!;

---

26. பண்டை - பழைமை. அவிர்தல் - பிரகாசித்தல். முகர்தல் - மோந்து கொளல். பங்கேருகங்கள் - கமல மலரடிகள். தொண்டை - கொவ்வை. கமனம் - ஆகாய வழி; சங்கற்பித்த வழி.

ஒப்பற்ற யோக தண்டத்தைப் பழனிமலையில் ஊன்றிய பரம குருநாதா! அறிதுயில் கொண்டருள், (எ - று).

## விரிவுரை

நாத வேத முடியில் நடந்த திருவடிகள், நயமிலாது இறுகிய மலைகள் தோறும் நடித்தன எனும் முதலடி, ஓது வார் சிந்தனையில் ஊறி உவகை தரும்.

பரம குமரன் திருவடிகளைப் பங்கயம் என்பதற்கு ஏற்ப, கண்ணுதல் இறைவனும் இறைவியும், அவைகளைத் தம் கண் களில் ஒற்றிக் கொண்டனர் எனும் அருமையே அருமை.

பரிபாகம் எய்திய உயிர்கள் இருக்கும் இடந்தோறும் இனிது வரும் திருவடிகள் என்பார், 'மங்கையர் வாழ்மனை தொறுந் தொறும் நடந்து' என்றார்.

பாடும் அவர்களது பயனுள திருவாயை, 'தொண்டை யங் கனிவாய்' என்று குறித்த அருமை கோடி பெறும்.

'இரும்புண்ட நீரில் திரும்பாத வீடு' எனும் அடி நிழல் எய்திய அடியவர்களை, மீளப் பிறக்குமாறு விமலன் திருவடிகள் விடுவதில்லை. இதை, 'துய்த்து உமிழ்கலாச் சுதந்தர சுபாவம்' என்று குறிப்பிட்டார்.

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற எட் டாந் திருமுறையை ஒட்டி, 'சித்தேசர்கள் பூசனை செய்யும் படி கவின்தந்து' என்றார்.

அடைக்கல நிலையமாதலின், சால்புடைய திருவடிகளைச் 'சரண்' என்றார்.

சரண் முடிமிசை தரித்தல், திருவடி தீக்கை எனப் பெறும். வெயிலில், உடல்நிழல் விழும்; ஒரு மரநிழலில் சென்றால், மாபெரும் தேகநிழல் மறையும்; அதுபோல், திருவடி நிழலைச் சேர்ந்தால், ஓயாப் பிறவி நிழல் ஒழியும். ஆதலின், சரண் முடிமிசை தரிக்கின்றான் பழனியான் என்க. தாள்தலை நியாயமும் இங்கு எண்ணத் தகும். (சு)

கவளமென்(று) அமுதம்உண் டுண்டுதுயி லாதுலவு
கனகநகர் வேழம்ஒன் றும்,
கமலாத னத்தில்வளர் பிரமா விருப்பமுறு
கவினுர்ந்த அன்னம் ஒன் றும்,
குவலயம் அளித்துண்(டு) உமிழ்ந்தநெடு மால்உவகை
கூரவரும் உவணம் ஒன் றும்,
கொற்றமுத் தலைவேல் உடைச்சிவனை முதுகினிற்
கொண்டுலவும் இடபம் ஒன் றும்,
பவளமால் வரையனைய கணபதிதன் ஆகுப்
பதாகைஒன் றும்,கவுரிதன்
பங்கில்உள சிங்ககே தனம்ஒன் றும், மற்றும்உள
பலவும்நா ணிப்பராவும்
தவளவண் சேவற் கொடிக்கந்த நாயகா!
தாலேல தாலேலவே
தண்டொன்று பழனிமலை தனில்ஊன்று குருபரா
தாலேல தாலேலவே. 27

(பொ - ரை.) ஒருவாய் உணவு என்று கூறி, (ஒவ்வொரு வேளையும் அளவிலாத) அமுதம் உண்டு, உறக்கம் இன்றி (எங்கும்) உலவி வரும் பொன்னுலக ஐராவதம் எனும் ஒரு வெள்ளை யானையும்;

கமலமலர் அணையில் தங்கிய பிரமன் பெருவிருப்புறும் அழகு மிகுந்த ஒரு அன்னமும்;

உலகைக் காத்து (காத்த உலகை) விழுங்கி உமிழ்ந்த திருமால், உவகை மிக ஊர்ந்து வரும் ஒரு கருடனும்;

---

27. கவளம் - ஒரு வாய் உணவு. கனகநகர் - தேவலோகம். வேழம் - ஐராவதம். உவணம் - கருடன். ஆகுப் பதாகை - பெருச்சாளிக் கொடி. கேதனம் - கொடி.

வெற்றி மிக்க முத்தலைச் சூலம் ஏந்திய சிவபிரானை முதுகில் தாங்கி, (பார்முழுதும்) பவனிவரும் ஒரு விடையும்;

பருத்த பவள மலைபோல் தோற்றமுள பரம கணபதியினுடைய பெரிய கொடியான ஒரு பெருச்சாளியும்;

பார்வதியாருடைய பாகத்தில் (குறிப்பிட) இருக்கும் ஒரு சிங்கக் கொடியும்;

மற்றும் உள்ள கொடிகளான பல ஊர்திகளும் நாணி வழிபடும் வெண்மையும், (நாத) வண்மையும் கொண்ட (கம்பீரமான) சேவல் கொடியுடைய கந்த நாயகா! அறிதுயில் அமர்ந்தருள்! ஒப்பற்ற தண்டினைப் பழனி மலையில் ஊன்றிய பரகுருவே! அறிதுயில் அமர்ந்தருள், (எ - று).

## விரிவுரை

ஊர்தியையே கொடியாக, எத்தேவரும் கொள்வர். செவ்வேள் பரமற்கு மட்டும், ஊர்திவேறு கொடிவேறு. ஆணவ இருளை அடர்க்க, உயரிய ஞான சூரியன் உதயஞ் செய்வன். அவன் வருகையை, முன்கூட்டி நாத தத்துவம் அறிவிக்கும். அந்த நாதமே குமரனது வெற்றிக் கொடி.

இந்திரனது யானைக் கொடியும், பிரமனது அன்னக் கொடியும், திருமாலின் கருடக் கொடியும், விமல சிவனார் விடைக் கொடியும், கணபதியின் பெருச்சாளிக் கொடியும், உமையின் சிங்கக் கொடியும், பிற தேவர்களின் கொடிகளும், மயிலூரும் பெருமானது சிறந்த சேவல் கொடிமுன் கூடி வந்து கும்பிடுகின்றன.

குமரனது கொற்றக் கொடியே கொடி; கொடி என்ற பெயரை நாமும் கொண்டோமே என்று அவைகள் நாணுகின்றன எனும் நயத்தை, எண்ணுவார் உள்ளம் இன்பம் உறும்.

குமரன், தேவருள் தலையாயான்; அவன் கொடியே கொடிகளுள் தலைமையது எனும் சமய நுட்பம் இங்கு எண்ணத் தகும்.

அச்சேவல், கள்ளமற்ற வெள்ளை நிறம்; 'செந்நிறக் குடுமி வெண் சேவல் பதாகையாய்' எனும் திருச்செந்தில் பிள்ளைத் தமிழ், இங்கு நினைக்கத் தகும்.

அக்கினி, சூரன் போரில் சேவல் கொடியாய் அமைந்தனன் ஆதலின், அது செந்நிறச் சேவல் எனும் வழக்காறும் உண்டு. (எ)

தத்தன தத்தன தத்தன தத்தன
தானா தானானா

மெய்த்தவம் உற்றவர் கற்பரு மைக்குணம்
வீணே போகாமே
விட்டுணு முற்புக ழத்தகுன் இச்சைகொள்
மேலோர் தாழாமே
கைத்தசு வைக்கவி நச்சிவ சைப்படு
காதார் வாழாமே
கற்பம்வ ரைக்கும்இ றப்பறு சித்தர்,த
காநீர் தோயாமே
பைத்தலை யுற்றபு விக்கிட ரைப்புரி
பாழார் ஆளாமே
பக்குவம் எட்புரை யக்கொடு நிற்கிலர்
பாய்மா நேராமே
சத்தசு ரச்சுரு திப்பொருள் வித்தக
தாலோ தாலேலோ
தக்கதி ருப்பழ னிக்கிரி யிற்குக
தாலோ தாலேலோ. 28

---

28. கற்பு - குருமொழி தவறா நன்னிலை; 'கற்பெனப் படுவது சொல் திறம்பாமை'. கைத்த - வெறுக்கத் தக்க. நச்சி - விரும்பி. வசை - நிந்தை. பைத்தலை - படநிறை தலைகளை யுடைய பாம்பு. எட்புரை - எள்அளவு. சுரசுருதி - கடவுள்மறை.

(போ - ரை.) மெய்த்தவம் செய்யும்மேலோரிடம் கற்ற (பயனை) அருமைப் பண்பு, வீணே (கழிந்து) விரையம் ஆகாத படியும்;

திருமால் முதலினோர் (தினமும்) துதிக்கத் தக்க பரம! நின்மேல் பக்தி கொண்ட தக்கவர், (என்றும்) தாழ்வடையாதபடியும்;

வெறுக்கத் தக்க (கீழ்மைச்) சுவையுடைய கவிகளை விரும்பி, பழியடையும் செவியினர் என்றும் இவ்வுலகில் இராதபடியும்;

கற்ப இறுதிவரை இறவாத (கவின்மிகு) சித்தர்கள், தகுதியற்ற தன்மையைத் தழுவாதபடியும்;

படம் விரிக்கும் ஆதிசேடன் சிரமேல் உள்ள நில உலகிற்கு, (வீணை இடரை விளைவிக்கும்) பாழானவர்கள் (சீர்கெட்ட) ஆட்சி செய்யாதபடியும்;

எள்ளளவு பரிபாகமும் கொள்ளுதல் இல்லாதவர்கள், எடுப்பான பரிமேல் ஏறுதபடியும்;

நாத தெய்வ வேதப் பொருளான ஞான சொரூபா! (நீ) அறிதுயில் கொண்டருள்!;

மகத்தான திருப்பழனி மலையில் குலவி யிருக்கும் குகா! தாலோ தாலேலோ, (எ - று).

## விரிவுரை

போகாமே, தாழாமே, வாழாமே, தோயாமே, ஆளாமே, நேராமே தாலோ தாலேலோ என முடிக்க.

அருந்தவர் கிடைப்பது அருமை; அகப்பட்டால், அவர்களிடம் அருளுபதேசம் பெறுவது அதனினும் அருமை; பெற்றபின், அநுட்டானத்தைக் கடைசிவரை கைக்கொள்வது அருமையினும் அருமை!

உன்மேல் கொண்ட அன்பர் அன்பு அருமையுடையது; அவர்கள் என்றும் தாழ்வடையாமல் வாழவேண்டும்.

உள்ளம் அள்ளும் கவிகளை உதாசீனம் செய்து, அருவருக்கும் கவிகளில் ஆர்வம் கொள்பவர், இவ்வுலகில் ஆயுள் பெற்று இருந்தாரேல், பயனடையவுள பிறர் பாழாவர்; ஆதலின், அவர்கள் இருப்புடையர் ஆவது ஆகாது.

எண்வகைச் சித்தியும் எய்தியவர், தக்க நெறியைத் தழுவினரேல், தூய பலரை அவர்கள் தோற்றுவிக்கலாம்.

தகுதியற்ற நெறியைத் தழுவினரேல், இராவணுகாரராகி, அவர் எத்துணையோ இடர் தருவர். ஆதலின், அவர்கள் அலா நெறி தோய்வது ஆகாது.

கொடுங்கோலர் ஆளும் நாடு, கடும்புலி வாழும் காடாகும்; அவர் ஆட்சி இவ்வுலகிற்கு ஆகாது.

பரிபாகம் இல்லாதார் பரியேறினுல், இரக்கம் அற்ற அரக்கராவரே; அவர்கட்கு அது நேர்வது ஆகாது.

பழனியப்பா! நீ அறிதுயிலானல், தீமை தீரும்; நலம் நேரும் என்று வேண்டியபடி. (அ)

தானன தானன தானன தானன தாஞு—தாஞு

சேவலொ(டு) ஓர்கிளி மேவிய தோள்பெறு
சீர்மா ருவேடா !
சீகர நீர்முத லாவன சூடியோர்
சேஷூர் வார்பாலா !
காவள நாசம தேவிழை வார்கள்,வி
காதா ! மாபோதா !
காரண காரிய மாகிநி லாவும்அ
காரா ! ஓகாரா !

---

29. சீகரம் - கங்கை. சே - ரிஷபம். காவளம் - கற்பக வனநாடு. தா - களங்கம். கலாப சிகாவள - தோகைமயில் வாகனுே

மாஅடு சேவகம் ஓதிய பாவலர்
வாழ்வா வாய்!மாயா
வாசனை தீர்பர ஞானியர் சேகர !
மாவீ(டு) ஆர்பாதா!
தாஅற நீடுக லாபசி காவள!
தாலோ தாலேலோ
சாதனர் சூழ்பழ னுபுரி வேலவ!
தாலோ தாலேலோ. 29

(போ-ரை.) கொடியான சேவலுடன், ஓர் கிளி தங்கிய, திருத்தோள்களை யுடைய (வித்தகச்) சிறப்பு மாருத திரு வேடத்தனே !;

துளிக்கும் நீருடைய கங்கை முதலியவற்றைத் தாங்கி, ஒப்பற்ற இடபம் ஊர்கின்ற சிவனாரது இளம் பிள்ளையே !

(நலம் மிக்க) கற்பக வளநாடான தேவலோகம், நாசம் அடைவதையே விரும்பிய (வீணர்களான) அவுணர்களை விரோதித்தவனே !;

(அன்பர்கட்கு) அருள் போதம் செய்யும் ஆசாரியனே!

காரண காரியமாகிக் கவினுகின்ற (வளமார்ந்த) அகார வடிவினனே !

(உயர்தரும) ஓங்கார உதயனே !;

(மாபெரும்) சூரனாகிய மாமரத்தை மாய்த்த மறக் கருணையைப் பாடிய, (வளமுறு) பாவலர் வாழ்வே ஆன வனே !;

மாயா வாசனையை மாய வைத்த சிவ ஞானிகளின் சிரோ ரத்தினமே !

மாபெரும் முத்தி நிலமாக அமைந்த (ஒண்மைத்) திரு வடிகளை யுடையவனே !;

துதிப்பார் களங்கம் தொலைய, நீள் தோகை மயி லேறும் தூயோனே !; அறிதுயில் கொண்டருள் !

### விரிவுரை

சேவலின் வீறு குரலும், கிளியின் கொஞ்சு குரலும் நோக்கி, அவைகளை இருதோள்களிலும் ஏற்றவன் என்றார்.

சேவல் நாதத்தால் நானிலம் தோன்றி நலம் பெறுகின்றது. பயனான அந்த அருமையைக் கிளி பாடுகின்றது. இந்த இரண்டையும் சாட்சி மாத்திரமாக் கேட்டு இன்புறுவன் எம்பிரான் என்பது, முதலடியில் உள்ள நயம்.

'சீகர நீர் முதலாவண' என்பதில், ஆத்தி கொன்றை அறுகு மதி முதலியனவும் எண்ணப் பெறும்.

செம்மை நிலை செய்தலின், விடையைச் 'சே' என்றார்.

குறிப்பு :— காவளம் - வளம்தரும் ஐந்தரு நிலம். விகாதம் - எதிர்ப்பிற்குரிய மன நிலை. மாபோதம் என்பதில், மா - ஞானம் ; போதம் - தெளிவு. காரணம் - அகாரம் ; காரியம் - சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்சங்கள். சொற் பிரபஞ்சம் - வேதாகமம் ஆதிய நூற்கள் ; பொருட் பிரபஞ்சம் - மண் முதல் நாத மீறான தொண்ணூற்றாறு தத்துவங்கள்.

சூர சம்மாரம் பாடிய கவிஞர் முன், வாழ்வின் வைபவமாய் வருபவன் எனும் அருமை, ஊன்றி உணர்வார் உள்ளம் உருகும். ஞானியர் சேகரர் என்பது தாள்தலை நியாயம்.

மாயா வாசனை, நிலையற்றவற்றில் பற்று மிகுவிக்கும்.

மாவீடு ஆர் பாதன் - தெய்வ பர முத்திதரும் திருவடியான் எனும் பொருட்டு. (௧)

தனதன தனதன தனதன தனதன
தனனா தானானா

பனிமலர் முழுமையும் அணிதரு சரவண
பவனே தாலேலோ
பகலுடன் இரவறு வெளியிடை நிலவிய
பழையோய் தாலேலோ

தனியென உணர்பவர் விழைதரு பயனருள்
சரதா தாலேலோ
தமிழ்நயம் அறிபவர் பலர்பர வியஒரு
தலைவா தாலேலோ
குனிதரு சிலைவலி வயவர்கள் பலர்பணி
குழகா தாலேலோ
குமரியர் இருவரொ(டு) ஒருமயில் மிசையிவர்
குரவா தாலேலோ
முனிவர்தம் அரசுடன் ஒருபொருள் நுவலிய
முதல்வா தாலேலோ
முருடரும் வழிபடு பழனிமலையில்வளர்
முருகா தாலேலோ. 30

(பொ - ரை) குளிர்ந்த மலர்கள் யாவும், அழகாய் விளங்கும் (அருமைச்) சரவணத்தில் அவதரித்தவா! தாலேலோ;

பகல் இரவற்ற பரவெளியில் விளங்கும் பழையோனே! தாலேலோ;

தனித்த ஏகாந்த சொரூபம் என உணரும் மேலோர் விரும்பும் பயனை விளைவிக்கும் மெய்ப்பொருளே! தாலேலோ;

அருந் தமிழ் அருமையை அறிந்த பலர் ஆராதிக்கும் தனிப்பெரும் தலைவா! தாலேலோ;

வளைத்த வில்லின் வலி (காட்டுகின்ற) வீரர்கள் பல்லோர் வணங்கும் இளங் காளையே! தாலேலோ;

(தேவியரான) இரு குமரிகளுடன், ஒப்பற்ற மயில் மேல் வருகிற குருநாதா! தாலேலோ;

---

30. வெளி - ஞான ஆகாயம். வயவர்கள் - வீரர்கள். ஒருபொருள் - ஒருமொழி உபதேசம். நுவலிய - உபதேசித்த. முருடர் - மூடர்.

அருந்தவ முனிவர்கள் தலைவரான அகத்தியருடன், ஒரு பொருள் குறித்து உரை நிகழ்த்திய தலைவா! தாலேலோ ;

மறவரும் வழிபடும் பழனி மலையில் எழுந்தருளிய இளம் பரிபூரணா ! தாலேலோ, (எ - று).

விரிவுரை

அரிய மலர் பலவும் அணிந்தான் ; இரவு பகல் அற்ற இன்ப வெளியில் இருந்தான் ; ஏகாந்தமாக எண்ணினர்க்குப் பயனை யீந்தான் ; தமிழறிந்தார் தலைவன் ஆயினன் ; வில்வீரர் வழிபடும் இளையன் என நின்றான் ; வாழும் குமரிகளுடன் மயில்மேல் வருபவன் எனினும், அவனே எவர்க்கும் குருநாதன் ; அதற்கு ஏற்ப, குறுமுனிவருடன் ஒரு பொருள் குறித்து உரை நிகழ்த்துபவன் எனவரும் இப் பாடலைத் தொடர்ந்து ஓதும்போது, நம் தொல்லைவினை முழுதும் தொலைவதுபோல் தோன்றுகிறது அல்லவா !

பகல் - சகலநிலை ; இரவு - கேவல நிலை.

> " இரவு பகலற்ற இன்ப வெளியூடே
> விரவி விரவிநின் றுந்தீபற "

என்னும் சாத்திரக் கருத்து,

> " பகலுடன் இரவறு வெளியிடை நிலவிய
> பழையோய் "

என்பதில் வெளியாகும். (௧0)

தாலப் பருவம் நிறைவெய்தியது.

## 4. சப்பாணிப் பருவம்

*இது, குழந்தை கையுடன் கைசேர்த்துத் தட்டும் பருவம். சப் எனும் ஒலியெழப் பாணியைத் தட்டுவதால், இது சப்பாணிப் பருவம் எனப்பெறும். பாணி - கை. ஒன்பதாம் திங்களில் இது ஓதப் பெறும். 'ஒன்பதாம் திங்களில் உயர்சப் பாணியும்' என்பது பிங்கலந்தை.*

**மந்திர சடாக்கரம் பகருமெய் யடியவர்தம்**
**வல்வினை யனைத்தும் ஓட**
மரகதக லாபமயி லொடுவேலை நினையுமவர்
வந்துவந்(து) இனிது கூட
தந்திரக லைப்பிரியர் தாமும்அவ ருக்குரிய
தருமத்(து) அமைந்து வாழ
தகுவரும் சமணரும் சாக்கியரும் ஆதியர்
தருக்ககம் இழந்து தாழ
இந்திர னுடன்தேவர் தாமும்அறு சமயத்(து)
இயைந்தோரும் உவகை பொங்க
இஞ்சையும் கொலைபுலையும் மருவியர் யாவர்களும்
இரவிமுற் பனியின் மங்கச்
சந்திர சடாடவிக் கிழவர்தரு பாலகா
சப்பாணி கொட்டியருளே
தமிழ்வளம் பெரிதுவளர் பழனியங் கிரிமுருக
சப்பாணி கொட்டியருளே. 31

---

31. *சடாக்கரம் - ஆறெழுத்து. மரகத கலாபம் - பசுந் தோகை. தந்திரகலை - ஆகமகலை. தருமம் - சிவதருமம். தகுவர் - அவுணர். சாக்கியர் - புத்தர். இஞ்சை - வறண்ட மனம். இரவி - சூரியன். கிழவர் - சிவபெருமான்.*

(போ - ரை.) உயர்ந்த ஆறெழுத்து மந்திரத்தை உரு வேற்றுகின்ற மெய்யடியர் வலிய வினையனைத்தும், (உதறல் எடுத்து) ஓடவும் ;

பசுமைநிறத் தோகை (படர்ந்த) மயிலொடு, வேலா யுதத்தை மனனம் செய்பவர், மென்மேலும் குதூகலங் கொண்டு கூடவும் ;

ஆகம அருள் நூற்களில் ஆர்வம் உடையவர்களும், அவரவர்களுக்கு உரிய (வளம் சிறந்த) கடமையை மேற் கொண்டு வாழ்வு பெறவும் ;

அவுணரும், சமணரும், புத்தரும் ஆகிய அனைவரும், தருக்கிய மன ஆற்றல் இழந்து தாழ்வடையவும் ;

இந்திரனுடன் இமையவரும், (வாழ்விக்கும்) அறுசமய வாழ்க்கையரும் (அளவிலாத) மகிழ்ச்சியை அடையவும் ;

வறண்ட மனமும், கொலைத் தொழிலும் புலைப்புசிப்பும் கொண்ட (கொடியோர்) யாவரும், பரிதிமுன் பனியெனப் பாழாகவும் ;

சந்திரனைத் தரித்த சடைக்காட்டிற்கு உரிய மாதேவர் அருளிய மைந்தா ! சப்பாணி கொட்டியருள் ;

வளமான தமிழ் பெரிதும் வளர்கின்ற பழனிமலை முருகா ! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

### விரிவுரை

ஆறெழுத்தின் நாதம், வினையிருளை வீழ்த்தும் ; வேலும் மயிலும் உளத்தில் நினைந்தவர், என்றும் இன்புற்று இருப்பர் எனும் பகுதியை, உள்ளும் போதே மகிழ்வால் உள்ளம் துள்ளுகிறதே !

முருகா ! நீ சப்பாணி கொட்டினால், ஓதுவார் வினை யனைத்தும் ஓடுமே ! நினைவார் குதூகல நியதியில் கூடுவரே! சித்தாந்திகள் தம் கடன் உணர்ந்து சிறப்பரே ! தருக்கடங் கிப் புறச்சமயம் தாழுமே ! பூரித்து அறுசமயம் பொங் குமே ! கொலையின் கொடுமையும், புலையின் புன்மையும்

குன்றி அழியுமே! இவைகள் நீ அறியாததோ? சால்புடைய பேறனைத்தும் சார, ஒப்பாரும் இல்லாத அப்பா! நீ சப்பாணி கொட்டியருள் என்றபடி. (க)

**மயிலின் சிறப்பு**

அண்டபே ரண்டங்க ளிடமுற்ற பாம்பினம்
அனைத்தும்வச மாறஅகவுற்(று)
அரிதாய நாததத் துவம்வரை கலாபத்தின்
அணிகிளர்ந் திடவிரித்து
கொண்டல்சூழ் குலவரைகள் தவிடெனப் பொடிபடக்
குதுகல நடனமாடிக்
கோரமிகு தானவர்கள் பைசாசர் முதலினர்க்
கொத்திக் கிழித்தருந்தி
எண்தகு திசைப்பால னத்தர்முத லியதேவர்
யாவரையும் ஆதரித்திட்(டு)
இணையில்குடி லைச்சத்தி யென்றுணரும் அறிஞருக்(கு)
இனியஅநு பூதியுதவும்
சண்டவே கத்தனி மயிற்பரி உகைப்பவா!
சப்பாணி கொட்டியருளே
தமிழ்வளம் பெரிதுவளர் பழனியங் கிரிமுருக!
சப்பாணி கொட்டியருளே. 32

(பொ - ரை.) சிற்றண்டம் பேரண்டங்களில் தங்கியிருக்கும் (அழகிய) பாம்புகள் அனைத்தும், தம்வசம் அழியும்படி (பெருங்குரல் கொடுத்து) அகவி;

32. அகவுற்று - அகவி; கூவி. அணி - வரிசை; அழகுமாம். கொண்டல் - மேகங்கள்; நீர் கொண்டுவருவது எனும் பொருட்டு. குலவரைகள் - எண்திசை மலைகள். திசைப் பாலனத்தர் - எட்டுத் திக்குப் பாலகர்கள். குடிலை சத்தி - மூல குண்டலினி. சண்ட வேகம் - பெருவேகம். குதூகலம் என்பது, ஓசைநயம் கருதி, குதுகலம் என நின்றது.

அருமையான நாத தத்துவம்வரை, தோகையின் வித்தக அழகு விளங்க விரித்து ;

முகில்கள் மொய்த்த எண்திசை மலைகள் தவிடுபோல் பொடியாக இன்பத் திருக்கூத்து இயற்றி ;

அக்கிரமம் மிகுந்த அவுணர்கள், (பயங்கரப்)பைசாசர் முதலினோர் (தம் தீய உடலைக்) கொத்திக் கிழித்துத் தின்று;

மதிக்கத்தக்க அட்டதிக்குப் பாலகர் முதலிய அமரர் அனைவரையும், (ஆர்வம் காட்டி) ஆதரித்து ;

ஒப்பிலாத குண்டலினி சக்தி என்று உணர்கின்ற ஞானிகட்கு; (உயர்ந்த) இன்ப அநுபூதியை உதவுகின்ற, அளவிலாத விரைவுடைய, ஒப்பற்ற மயிலாம் பரியை ஊர் பவனே ! சப்பாணி கொட்டியருள் ;

(பழந்) தமிழ் வளம் மிகவளரும் பழனிமலை முருகா ! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

## விரிவுரை

பாம்பினம் என்பது குண்டலினிகளின் கூட்டம். அண்ட பகிரண்டங்களிலும் இயங்குகிறது ஆன்மவாழ்க்கை. நலம்சிறந்த அந்த ஆன்மாக்களைக், குண்டலினிகள் நடத்து கின்றன.

நலம்மிக்க மயிலின் நாதமெழும்போது, அக் குண்ட லினிகள், தம்வசம் அழிந்து தடுமாறுகின்றன. அதன் நாதத்தை, அகவுதல் எனுஞ் சொல்லால் அறிவித்தார்.

தொன்மைத் தத்துவங்கள் தொண்ணூற்றாறு ; அவை களில் இறுதியாயது நாதநிலம். அந்நாத தத்துவ எல்லை வரை வித்தகத் தோகையை மயில் விரிக்கிறது.

" பாராதி நாத வெளியீற தாகப் பகரு முற்றும்
சீரார் கலாப மயில்வடிவே ''

என்னும் மயில் அலங்காரம் இங்கு எண்ணத் தகும்.

குதூகல நடனத்தான் குமரன்; எண்திசைக் குலவரைகள் அதனால் நாசம் எய்துகின்றன; அவன் கோர தாண்டவம் ஆடினால் யாதாகும் என்பதை, 'குதூகல நடனமாடி' எனும் குறிப்பால் உணர வைத்தார்.

கொடிய அவுணரும், பைசாசரும் குலவிய அமைதியைக் குலைப்பவர்கள்; அதனால்தான், அவர்களை மயில் 'கொத்திக் கிழித்து அருந்தி' விடுகிறது.

இவ்வளவும் சர்வசம்மார கால அனுபவங்கள்.

படைப்புக் காலத்தில், திசை பரிபாலகர் முதலிய தேவர்கள் விஷயத்தில், மயில் பரிவு காட்டுகின்றது.

ஆம். இவ்வளவும் செய்யும் இன்ப மயிலை, ஈடும் எடுப்பும் இல்லாத தலையாய குண்டலினி என்று உணர்வார்க்கு, உயரிய அநுபூதி உதவும் நிமல அதன் வேகத்தை நினைவூட்டிய பா இது. (உ)

## ஆட்டுப்பரியின் ஆண்மை

மகமுயன் றிடுநார தாதிமுனி வோரெலாம்
மனம்நடு நடுங்கிஓட
வானத்து மேடமும் குசன்ஆடும் அக்கினிதன்
மைப்பரியும் வெட்கிஉட்க
மிகமுழங் கிக்கரிய கோடிரண் டொடுநிலவு
மேருவரை யெனவுதித்து
விண்ணிற்பு குந்(து)இந்தி ரன்றனக ரிற்றேவர்
வெருளுற வெகுண்டுமுட்டி

33. மகம் - வேள்வி. மேடம் - மேடராசி. குசன் - செவ்வாய். மைப்பரி - கருநிற ஆடு. வெட்கி உட்க - நாணி நடுங்க. கோடு - கொம்பு. வெருளுற - மிக அஞ்ச. தகர் - ஆடு. பரி - வாகனம்.

நிகரில்கம லாதனத்(து) உற்றபிர மன்றனகர்
நெளிநெளி தரக்கலக்கி
நெடுமாய னகரினும் புக்(கு)அளவில் இன்னல்கள்
நிறைத்துலா வித்திகழ்ந்த
தகரினை அடக்கிஒரு பரியெனக் கொண்டவா!
சப்பாணி கொட்டியருளே
தமிழ்வளம் பெரிதுவளர் பழனியங் கிரிமுருக!
சப்பாணி கொட்டியருளே, 35

(பொ - ரை.) முயன்று வேள்விசெய்த நாரதர் முதலிய முனிவர்கள் அனைவரும், மனமிக நடுங்கி, (உலறி அலறி) ஓட்டங் காட்ட;

விண்ணில் உள்ள (அருமை) மேடராசி என்னும் ஆடும், அங்காரகனுடைய ஊர்தியான ஆடும், அக்கினியினுடைய கருநிற ஊர்தியான ஆடும், நாணி மனம் நடுங்கப் பெருங்குரல் கொடுத்து;

கருத்த இரு கொம்புகளுடன் விளங்கும் மேரு மலை போல் வெளிப்பட்டு;

பொன்னுலகில் புகுந்து, (தலையாய) இந்திரன் தலை நகரில் (உள்ள) அமரர்கள் அச்சம் அடைய, மோதும் கோபத்தோடு முட்டி;

ஒப்பிலாத கமல பீடத்தில் இருக்கும் பிரமனது (நித்திய) சத்திய உலகம், மிக்க நெளிவுடைய வீணை கலக்கம் விளைவித்து;

புனிதத் திருமாலின் வைகுந்தத்திலும் புகுந்து, வரையறையில்லாத் துன்பங்களை வளரச்செய்து, (திமிதமிட்டு,) எங்கும் உலாவித் திரிந்த அதிபயங்கர ஆட்டை அடக்கி, (அதனை) ஓர் ஊர்தியெனக் கொண்ட அண்ணலே! சப்பாணி கொட்டியருள்;

தமிழ்வளம் தழைக்கின்ற பழனிமலை முருகா! (நீ)சப்பாணி கொட்டியருள், (எ - று).

### விரிவுரை

தேவர்களின் நலங் கருதி, நாரதர் சிறந்த ஒரு வேள்வியைச் செய்தார். அவருடன் இருந்த அருந்தவ முனிவர்களின் அசட்டையால், பெரும்பிழை மந்திரத்தில் பிறந்தது.

சிறியவர் செய்த சிறுபிழை, கண்ணிற்குத் தெரியாமல் இருந்து கவலையை மட்டும் விளைவிக்கும். பெரியவர்கள் செய்த பெரும்பிழை, பார உருவங் கொண்டு படரும்; விண்ணிற்கும் மண்ணிற்கும் வேதனையை விளைவிக்கும்; இது சுருதி சொல்லுஞ் செய்தி.

அதற்கேற்ப, பெருகிய மந்திரப்பிழை, ஆட்டின் உருவு கொண்டு அதிர்த்தது. ஆட்டுருவங் கொண்ட மேடராசி, அங்காரகர் ஊர்தி, அக்கினியின் வாகனம் முதலிய ஆடுகளும், அதன் உருவும் உக்கிரமும்கண்டு நாணின; அதன் அதிர்ச்சி கேட்டு நடுங்கின என்பார், 'வெட்கி உட்க' என்றார்.

இந்திர லோகம், பிரம லோகம், வைகுந்தம் முதலியனவும் படாதபாடு பட்டன என்பது கொண்டு, அதன் மாபெரும் தோற்றம் இங்கு மதிக்கப்படும்.

அடித்த செட்டியாரையும் கடித்த ஆட்டையும் கண்டதில்லை என்பது பழமொழி. அதற்கு நேர்மாறாக உதித்துக் குதித்த ஆடிது.

அகில உலகையும் அதிர்வித்த ஆட்டை அடக்கி ஆண்ட தெய்வமே என்று, பெருமான் பேராற்றலை விளக்கிய பா இது.

" காரார் திசைமலி பேரார் களிறு கலங்கிப் பிளிறிடவே "

என்ற திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழை இங்கு ஒப்பிடத்தகும். (௩)

**வள்ளி நாயகி திருமணம்**

கங்குலின் றியபொன் நகர்க்கடவுள் யானைதரு
கன்னிமனம் நொந்துவாடக்
ககனமுனி மொழிவழி கடுக்கென் றெழுந்தொரு
கருங்கான கம்புகுந்து
வெங்குறவர் ஏனலரு கிற்சிறுமி யைக்கண்டு
வேடம்வெவ் வேறுகொண்டு
வேங்கைமர மென்றுநின்(று) அவள்தரு தினைப்பிண்டி
மிகவுண்டு மேலுமேலும்
பொங்குமயல் வாரிச் சுழிப்பட் டலைந்தொரு
புகர்க்கரிசெய் உதவியதனல்
போதப்பு ணர்ந்தவள்சொல் குற்றேவல் முற்றும்
புரிந்(து)உவகை பொலியுந்தொறும்
குங்குமத் தோள்கொட்டி யாடும்அதி காமுகா
கொட்டியருள் சப்பாணியே
குளிர்பொழிற் பழனியினில் வளர்குமர குருபரா
கொட்டிருயள் சப்பாணியே. 34

(போ - ரை.) இருள் என்பது கண்டறியாத பொன்னுலக (ஐராவதம் எனும்) யானை வளர்த்த கன்னிப் பருவத் தேவயானையார் மனம் நொந்து வருந்த ;

(முதன்மைத்) தெய்வ முனிவரான நாரதர் சொற்படி மிக விரைந்து எழுந்து, ஒரு இருளடர்ந்த காட்டில் புகுந்து ;

கொடிய குறவர்களின் தினைப்புனத்தின் அருகில் (காவல் செய்து கொண்டிருந்த) சிறுமியான வள்ளியாரைக் கண்டு ;

---

34. கங்குல் - இருள். கடவுள் - இந்திரன். கன்னி - தேவயானை. ககனமுனி - நாரதர். கடுக்கென்று - விரைந்து. சிறுமி - வள்ளியார். பிண்டி - தினைமா. புகர்க்களிறு - விநாயகர்.

வேறுவேறு திருமேனி தாங்கி, வேங்கை மரம் என்று பிறர் எண்ணும்படி நின்று, அத்தேவி தந்த தினைமாவை அதிகமாக உண்டு ;

மென்மேலும் பொங்கிய மோகக் கடலில் சுழிப்பட்டு, அலைமோதி, ஒப்பற்ற புள்ளிகளை யுடைய கணபதியாகிய களிறு செய்த பேருதவியால், சிவபோதப் புணர்ச்சி சிறக்க நிகழ்த்தி ;

அத்தேவி உரைத்த நீடித்த குற்றேவல் முழுவதும் நிறைவேற்றி ;

(அதனாலாகும்) மகிழ்ச்சி அடையும் ஒவ்வொரு நேரத்தும், குங்குமக் குழம்பு தோய்ந்த திருத்தோள்கள் கொட்டி விளையாடும் பெரும் வேட்கை பெருகியவனே ! சப்பாணி கொட்டியருள் ;

குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த பழனியில் எழுந்தருளிய குமரகுருபரா ! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

### விரிவுரை

ஒளிமயமானது இந்திர உலகம். அங்குள்ள பட்டவர்த்தன யானையும், தெய்வீகமானது. அந்த யானை வளர்த்த மகளார், தெய்வயானை யெனும் பெயர் எய்தினர் ; அவர் கந்தனை மணந்த கம்பீரமானவர்.

இடையில் ஒருநாள் நாரதர் வந்தார். கானவர் மகளைக் கண்டேன்.

‘ ஐயனே அவள் ஆக நல்எழில்
செய்ய பங்கயத் திருவிற்கும் இல்லை
பொய்ய தன்றிது போந்து காண்டிநீ ’

என்று குமரனிடம் கூறினர். அதுகேட்டு, (கடுக்கென்று) எழுந்தான் கந்தப்பிரான்.

மாபெரும் தன் உயர்வை மறந்தான் ; தேவயானையார் திருவுளம் வருந்த, நித்திய ஒளி உலகை நீங்கினன் ; இருளடர்ந்த காட்டில் புகுந்தான் ; கானவர் மகளைக்

கண்டான்; காதலித்தான். அமரர் அமுதை அசட்டை செய்தான்; அற்பத் தினைமாவை அவாவினான். இடத்தில் இருந்தாளை எண்ணிலன்; மறுதலிக்கும் வள்ளியாரை வயப் படுத்த, மாவேடம் பல கொண்டான். வேங்கை மரமாயி னான். நிலைகுலைந்து அலைந்தான்.

கணபதி துணையால் காரியசித்தி பெற்றான். அதன் பின், "இரவுபகல் அற்ற இன்ப வெளியூடே விரவி விரவி நின்று" இணங்கினான். 'பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாம்அங்கு, முற்ற வரும் பரிசில்' முதன்மை காட்டினான்.

உயிரான வள்ளியும் இதனால் உவகை யடைய, தோள் கொட்டித் துள்ளினான் என்றது, அவனது சீலத்தை அறி விக்கிறது அல்லவா!

இது தேவலோகம்; அது பூலோகம்; அதிலும் விலங் குலவும் காடு; அதில் இருந்தவள் அவைதிகக் குறத்தி; அவ ளிடமும் ஆடலா? என்று, தேவயானையார் வருந்துகிறார் என்றது உபசார மென்க. (௬)

சீலத்த போதனர்கள் ஆனந்த மீறித்
திருக்கணீர் அருவிகொட்ட
தேவர்கின் னரர்கருடர் கந்தருவ ராதியோர்
செங்கைமலர் மாரிகொட்ட
பாலத்தில் நாட்டம் படைத்தவனொ(டு) உமையும்
பழிக்கரும் நல் உவகைகொட்ட
பருவதா காரப் பெரும்பூத கண நாதர்
பல்இயம் கொட்ட,முற்றும்

---

35. மாரி - மழை. பாலத்தில் நாட்டம் - நெற்றிக்கண். பருவ தாகாரம் - மலைபோன்ற தோற்றம். ஆலத்து - விஷம்போல். அசலந்தொறும் - மலைநிலந்தோறும். தொண்டகம் - குறிஞ்சிநிலப் பறை.

ஆலத்(து) எழுந்தகுவர் நெஞ்சகம் பறைகொட்ட
அரமகளிர் வீணைகொட்ட
அறநீதி மன்னர்மனை தோறுமுர சங்கொட்ட
அசலந் தொறும்களிப்பால்
கோலக் குறச்சிறுவர் தொண்டகம் கொட்டநீ
கொட்டியருள் சப்பாணியே
குளிர்பொழிற் பழனியினில் வளர்குமர குருபரா
கொட்டியருள் சப்பாணியே. 35

(பொ - ரை.) சிறந்த வைதிகரான தவச் செல்வர்கள், ஆநந்தாதிசயம் அதிகரித்து, அழகிய விழிவழி கண்ணீர் அருவியைக் கொட்டவும்;

தேவர்கள், கின்னரர், கருடர், கந்தருவர் முதலினோ ரின் செவ்விய கரங்கள் மலர்களைச் சிந்தவும்;

நெற்றியில் கண் பெற்ற சிவபெருமானும், உமாதேவி யும், பழிப்பிற்கு இடம் இல்லாத (தம்) கட்டுமீறிய மகிழ்ச் சியைக் காட்டவும்;

மலைபோல் தோற்றமுள்ள பூதகணத் தலைவர்கள், பல பறை முழக்கு எழுப்பவும்;

அழிவை விளைவிக்கும் ஆலகாலம் போல் எழுகிற அவுணர் மனம், (பயமிகுதியால்) படபடக்கவும்;

தேவமகளிர் தெய்வ யாழ் இசை எழுப்பவும்;

அறமும் நீதியுமுடைய அரசர்கள், தம் அரண்மனைகள் தோறும் (ஓயாது) முரசம் ஒலிப்பவும்;

மலைநிலந்தோறும், மகிழ்ச்சியால் சிங்காரக் குறச் சிறு வர்கள் (இடையறாது) தொண்டகப்பறை ஒலி எழுப்பவும், (நீ) சப்பாணி கொட்டியருள்;

குளிர்ந்த சோலைகள் குலவிய பழனியில் எழுந்தருளிய குமர குருபரா! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

விரிவுரை

சீலம் - வைதிக ஒழுக்கம். "சீலமிகுந்த பக்திநெறி தினமும் மாரு நடையினராய், கோலம் சிறந்தபடியே நல்ல குணமும் சிறந்தோ ராகியுனைக், கூடும் அடியார்" எனவரும் திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ், இங்கு நினைக்கத் தகும்.

கின்னரர் - கின்னரம் எனும் ஒருவகை யாழிசைக்கும் தேவ இனத்தவர். 'நாட்டம் படைத்தவனோடு உமை' என்ற இடத்தில் வந்த ஒடு—எண்ணுப் பொருட்டு.

பூத கணங்களின் பருவதாகாரத் தோற்றத்தை, தக்க யாகப் பரணியில் அறிக.

அகம்போல் கருத்த நிறத்த ராதலின், அவுணர்களை 'ஆலத்தெழும் தகுவர்' என்று அறிவித்தார். அசலம் - மலை; இயங்காத் திணை எனும் பொருட்டு.

தாயர்செய் கோலம் எப்பொழுதும் தழைப்பவராதலின், மறச் சிறுவர்களை கோலச் சிறுவர் எனக் குறித்தார்.

தபோதனர் கண்ணருவி கொட்ட, தேவராதியோர் மலர் மாரிகொட்ட, சிவனார் உமையொடு உவகைகொட்ட, கணநாதர் பல்இயம் கொட்ட, தகுவர் நெஞ்சகம் பயப் பறை கொட்ட, மகளிர் வீணை கொட்ட, மன்னர்மனை முரசுகொட்ட, சிறுவர் தொண்டகம் கொட்ட நீ சப்பாணி கொட்டியருள் எனும்போதே, நம் குதூகலக் கண்ணருவி கொட்டுகின்றதே. நீ சப்பாணி கொட்டினால், உலகெலாம் மகிழ்ச்சி கொள்ளும் என்பது குறிப்பு.

கொட்ட என்பது, பொழிய, முழக்க, அடிக்க, படபடக்க எனும் குறிப்புப் பொருள்பட நின்றது.

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே
அசைவித்தால் யாரொருவர் அசையாதாரே

பாட்டுவித்தால் யாரொருவர் பாடாதாரே
பணிவித்தால் யாரொருவர் பணியாதாரே"

*எனும் தமிழ்மறை, இங்கு நினைவில் எழுந்து நிற்கிற தல்லவா.* (ரு)

## வாவி வளம்

### வேறு

பலபல் மடவார் விளையாட்டும்,
பங்கே ருகமும், குவலயமும்,
பவளச் சிறுகால் ஓதிமமும்
பருவால் வளையும், கயற்றிரளும்,
அலகில் பரிமா எனப்பாயும்
அலையின் குழுவும், நவமணியும்,
அறிவிற் பெரியார் அநுட்டானம்
அனந்தம் விதமாச் செயும்அழகும்,
உலவும் கவரி சிலபுனல்புக்(கு)
உழப்பும் வனப்பும், இவையனைய
ஓரா யிரம்சீர் உள்ளனவும்
ஒழியா தென்றும் தடந்தோறும்
குலவும் பழனிப் பதிமுருகா!
கொட்டி யருளாய் சப்பாணி
கொல்லா விரதர்க்(கு) அருள்குமரா
கொட்டி யருளாய் சப்பாணி 36

36. *பங்கேருகமும் - தாமரைகளும். குவலயமும் - குவளை மலர்களும். ஓதிமமும் - அன்னங்களும். பருவால் வளையும் - பருத்து வெளுத்த சங்குகளும். கயல் திரளும் - சேல்மீன் கூட்டமும். அலகு இல் - அளவில்லாத. பரிமா - குதிரைகள். குழுவும் - கூட்டமும். கவரி - எருமை. உழப்பும் - கலக்கும். தடம் - பொய்கை.*

(போ - ரை.) பலவகையான பாவையர் (பயிலும்) விளையாட்டுகளும்; (மாபெரும்) கமல மலர்களும், குவளைப் பூக்களும்;

செந்நிறமான சிறிய கால்களை யுடைய (பளபளத்த) அன்னப் பறவைகளும்;

(சால்புடைய) பருத்த வெண்ணிறச் சங்குகளும், சேல் மீன் தொகுதிகளும்;

அளவிலாத குதிரைப் படைகள் எனும்படி பாய்ந்து வரும் அலைகளின் கூட்டமும், நவரத்தினங்களும்;

அறிவிற் சிறந்த ஆன்றோர் (தம்) சமயச் சார்பிற்குத் தக்கபடி, பலவிதமாக அநுட்டானம் செய்யும் அழகுகளும்;

(சுதந்தரமாகத்) திரியும் எருமைகள் சில, நீரில் இறங்கி (அந்நீர் நிலையைக்) குழப்பும் அழகும்;

இவைபோன்ற சிறந்த பல சிறப்புகள் சிதையாமல், என்றும் பொய்கைதோறும் விளங்குகின்ற முதன்மைப் பழனித்தல முருகா! சப்பாணி கொட்டியருள்;

உயிர்க்கொலை செய்யாமையை (மேதகு) விரதமாக் கொண்ட மேலோர்க்கு, (பரம) திருவருளைப் பாலிக்கும் குமரா! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

## விரிவுரை

எழுவகைப் பருவத்தர் ஏந்திழையர். அவரவர் தரத்திற்குத் தக்கபடி, கரையோரத்தில் சிற்றில் இழைத்தல், கூடல் சுழியிடல், நீராடல், ஒருவர்மேல் ஒருவர் வாரிநீரை இறைத்தல், மலர் பறித்தல், பறித்த மலரைத் தம்முக ஒப்புமை நோக்கிப் பார்த்தல் முதலிய ஆடல்கள், "பலபல் மடவார் விளையாட்டும்" என்பதில் பார்க்கத் தகும்.

குமரா! நீ சப்பாணி கொட்டினால், பாவையர் ஆடலும், மலர்களின் மலர்வும், அன்னங்கள் மலர்மேல் அமர்தலும், சங்குகளின் சால்பும், சேல்மீன் துள்ளலும், அலைகளின் மிகுதியும், ஆன்றோர் அநுட்டான அழகும், எருமைகளின்

உழப்பும் ஆன ஓராயிரம் சிறப்புக்கள் பொய்கை தோறும் என்றும் பொலியுமே! உயர்திணை அஃறிணைகள் யாவும் இப்படி ஆநந்தம் கொள்ள, நீ சப்பாணி கொட்டியருள் என்று விநயம் காட்டி வேண்டியபடி.

'தடந்தோறும் உள்ளன இவையனைய ஓராயிரம் சீரும் என்றும் ஒழியாது சூலவும்' எனக் கூட்டுக. (௬)

## பக்தர்கள் துதிப் பாடல்கள்

நாறு மலர்ப்புங் கவன்சொல்மறை
நான்கும், கயிலைக் கிரிக்கடவுள்
நவிலும் எழுநான்(கு) ஆகமமும்,
நளிர்தென் பொதிய மலைக்குவட்டில்
ஏறும் குறுமா முனிபகர்நூல்
எண்ணில் பலவும், தனிநாவாய்
இடத்திற் பிறந்தான் காவியங்கள்
ஈரொன் பதும், நற் கீரனுவல்
ஆறு பகுதிப் பனுவல்ஒன்றும்,
அருணைப் புலவோன் திருப்புகழும்,
அணிப்போ ரூரன் முதலினர்சொல்
அருமைக் கவிகள் அளவிலவாக்
கூறும் திருவா வினன்குடியாய் !
கொட்டி யருளாய் சப்பாணி
கொல்லா விரதர்க்(கு) அருள்குமரா !
கொட்டி யருளாய் சப்பாணி 37

(பொ - ரை.) (நன்) மணம் கமழும் கமல ஆசன நான் முகன் ஓதுகின்ற நான்கு வேதங்களும்;

37 புங்கவன்-பிரமன். குறுமா முனி-அகத்தியர். நாவாய்ப் பிறந்தான் - படகில் பிறந்த வியாசன். ஒன்றும் - ஒரு திருமுருகாற்றுப்படையும். போரூரன் - திருப்போரூர் சிதம்பர சுவாமிகள்.

(கயிலைமலைச் சதாசிவர்) அருளிய (காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருக்கும்) ஆகமங்கள் இருபத்தெட்டும்;

தென்திசையில் உள்ள (புனித) குளிர்ச்சியை யுடைய பொதிகைமலைச் சிகரத்தில் விளங்கும் (அருளார் முனிவர்) அகத்தியர் அருளிய (நுண்மைப்) பலவகை நூல்களும்;

தனித்த படகின் இடத்தில் (பராசர முனியால் பரிமள கந்தி மூலம்) பிறந்த வியாசர் வாய்மலர்ந்த (பயனுள) புராணங்கள் பதினெட்டும்;

நக்கீரர் பாடிய (தெளிவான) ஆறுபடை வீட்டுத் திருமுருகாற்றுப் படையும்;

அன்பிற் கனிந்த அருணகிரிநாதர் அருளிய (சுந்தமணம் சார்) திருப்புகழும்;

திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் முதலினோர் (சிறக்க) அருளிய அருமைப் பாக்களும், அளவிலாது பாராட்டிக் கூறும் திருவாவினன்குடித் தெய்வமே! சப்பாணி கொட்டியருள்!

கொல்லா நோன்பு கொண்டோர்க்கு அருளும் குமரா! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

விரிவுரை

புங்கவன் - மிடுக்குடைய பிரமன்.

மென்மை தோன்ற, கமழும் மணமுடையது கமலம்: அதன்மேல் இருத்தலாலும், பாரினைத்தையும் இடையறாது படைத்தலாலும், நாமகள் நாவில் இருத்தலாலும், இன்ப மிடுக்குப் பிரமனிடம் இருக்கிறது என்பது குறிப்பு. இவர் ஓயாது நான்கு மறைகளையும் ஓதுபவர்.

ஞானம், யோகம், கிரியை, சரியையாகிய நாற்பாதங்களை நவின்று, சிவாலய அமைப்பாதியவைகளைச் சிறக்க உரைக்கும் இருபத்தெட்டுச் சிவாகமங்களை, ஐம்முகச் சதாசிவர் அருளினர்.

தண்மை மலை அமைதியைத் தரும்! அதன் உச்சியில் இருந்தால் ஒரு தொல்லையும் இரா; ஏற்றத்திற்குத் தக்க ஒருமை எளிது கைவரும். இந்நினைவால், 'தென் பொதிகைக் குவட்டில் ஏறும் மாமுனி' என்றார். அந்த அகத்தியர் செய்த நூல்கள் அகத்தியம் முதல் பல.

பரத்தில் சரிப்பவர் பராசரர்; அகத்தும் புறத்தும் பயனுள மணங்கமழ் மங்கை பரிமளகந்தி. இவ் இருவர் இணையில், வியாசர் உலகின் விருந்தானார். புனித வியாசர் பாடிய புராணங்கள் பதினெட்டு.

உயரிய நக்கீரர் அருளிய நூல்கள் பல; அவைகளுள் ஒன்று திருமுருகாற்றுப்படை. இது, ஒரே பாடலான தனி நூல். திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை இவற்றின் பிரபாவங்கள், இந்நூலின் ஆறு பகுதியாக அமைந்த அருமையை ஊன்றி உணர்ந்தால் உள்ளம் உருகும். அருணைத் தலத்தில் அவதரித்தவர் ஆதலாலும், அப்பதியில் முருகன் அருளால் ஆட்கொண்டதாலும், அருணகிரிநாதரை, 'அருணைப் புலவோன்' என்று அனுபவித்தார்.

அணிப் போரூர் என்பது திருப்போரூர் என்னும் குறிப்பு. சிதம்பர சுவாமிகள் பாடிய நூல், திருப்போரூர் சந்நிதிமுறை.

" கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே "

என்றார் தாயுமானார். அதை ஒட்டி 'கொல்லா விரதர்க்கு, அருள் குமரா!' என்றார்.

மறை நான்கும், எழு நான்கு ஆகமமும், நூல் பலவும், காவியங்கள் ஈரொன்பதும், ஆறு பகுதிப் பனுவல் ஒன்றும், திருப்புகழும், போரூரன் கவிகளும் பலவாகக் கூறும் திருவாவினன் குடியாய்! குமரா! சப்பாணி கொட்டியருள் எனக் கூட்டுக. (எ)

வேறு

தனதன தனதன தனதன தனதன
தத்தன தத்தான

நிறைபெறு மகளிரும், வயமலி புருடரும்,
நெய்த்தம லர்ச்சோலை
நிலவிய அமரரும், முனிவரும், மனமிக
நெக்குரு கிப்பாடும்
மறையவர் களும்,அர சினர்களும் வணிகரும்
மற்பணை யிற்சாலும்
வகைபடு பயிரிடு தொழிலினர் களும்,நுவல்
மற்றைந லத்தோரும்,
முறைவழி வழுவற ஒழுகலின் அருள்நெறி
முற்றுத லுற்(று)ஆசு
முழுமையும் இரிதர மகபதி நகரமு
தற்சொல் வனப்பேர்வெல்
குறைவறு வளமுறு பழனியின் இறையவ !
கொட்டுக சப்பாணி
குறுமுனி பரவிய சரவண பவகுக !
கொட்டுக சப்பாணி. 38

(பொ - ரை) கற்பினை யுடைய காரிகையரும், வெற்றி நிறைந்த வீரர்களும் ;

---

38. நிறை - கற்புடைமை. வயமலி - வீரம் நிறை. நெய்த்த - பசுமை யுள்ள. மல் பணையில் சாலும் - வளவிய வயல்களில் வளரும். முறை - (நூல்கள் விதித்த) முறைப்படி. ஆசு - களங்கம். இரிதர - ஓட. மகபதி - இந்திரன்.

பசுமையான மலர்களை யுடைய ஐந்தரு நிழலில் அமர்ந்துள அமரரும், முனிவர்களும்,

உள்ளம் பெரிதும் உருகிப் பாடும் (உயர்தரும) அந்தணர்களும், மன்னர்களும், வணிகர்களும்,

பலவகையான (வித்தகப்) பயிர்களை விளைவிக்கும் வேளாளர்களும்,

பெரிதும் சிறப்பிக்கப் பெறும் பிற இனத்தவர்களும், (அவரவர் குல) முறைக்கு ஏற்ற வழிகளில் வழுவுதல் இலாது இருத்தலின் ;

திருவருள் ஒழுக்கம் முற்றுதல் உற்று, களங்கம் முழுதும் கழன்று போக, இந்திரனுடைய பொன்னகர் முதல் சொல்லப் பெறும் (எந்நகர) எழிலையும் வென்று ;

குறைவற்ற வளமுற்ற பழனிப் பரமா! சப்பாணி கொட்டியருள் ;

அகத்தியர் வழிபட்ட சரவணபவ குகனே ! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

### விரிவுரை

பழனிப் பதியிற் பயில்பவர் பலரும் தம்தம் நிலையில் தவறு செய்யாமையால், அப்பதி பூரண அருளால் பொலிவடைந்து உளது.

அதனால் பொன்னகரே பொலிவுடையது எனும் மாபெரும் சூழ்நிலைமாறி, பழனிப்பதியே அழகில் மிகுந்தது; புனிதவளம் பல பொலிந்தது எனும் நிலைமை எய்தியது என்றபடி.

ஆறெழுத்தாளனே இதய தகராகாசத்தில் இருப்பவன் என்பதை, "சரவணபவகுக" என்று குறிப்பிடும் அருமை கோடி பெறும்.

(அ)

தனனு தனனு தனனு தனனு
தத்தன தத்தான

படவா ளர(வு)ஆ யிரகோடியும்ஆ
பத்தடை யக்கூவும்
பசுமா மயில்வா கனம்ஏ றியவா
பற்பல்ம லைக்கோயில்
இடமே கதியா விழைவார் எதிர்போய்
இச்சைய ளித்(து)ஆளும்
இளையாய் ! குறமான் மகிழ்கா வலவா
எற்றும்உ ரற்கால்கொள்
கடமா மகவான் மகள்சேர் கணவா !
கட்கவ லித்தீரர்
கணம்நா டியதோர் துணைவா ! இணைதீர்
கட்டழ குக்கார !
குடவால் வளையூர் வயலூர் முருகா
கொட்டுக சப்பாணி
குமரா ! குழகா ! வயலூர் முருகா !
கொட்டுக சப்பாணி. 39

(பேர் - ரை) படமெடுத்து ஆடும் ஒளியை யுடைய பல் கோடிப் பாம்புகளும் ஆபத்து அடையும்படி, அகவுகிற பச்சை நிறங்கொண்ட பெரிய மயில்மேல் ஏறிவரும் பெருமானே !

---

39. வாள் - ஒளி ; (இடையிடை தோல் உரிந்து வளர்ந்து உடலில் புதுமை ஒளி உறுமென்க. எற்றும் உரல் கால் - மோதுகின்ற உரல்போன்ற கால்களையுடைய, கடமா - மதமுடைய ஐராவத யானை. மகவான் - இந்திரன். கட்க வலி - வாள்வலி யுடைய. தீரர்கணம் - தீரர்களாகிய வீரவாகு தேவர் ஆதியோர் கூட்டம். குட வால்வளை - சுழித்து வெளுத்த சங்கு. வயலூர் - பழனி.

எண்ணில்லாத குறிஞ்சிநிலக் கோயில்களின் இடமே வீடுபேருக விரும்பி யிருப்பவர் எதிர் சென்று, (அவர்தம்) விருப்பத்தை நிறைவேற்றி ஆட்கொள்ளும் இளம் பரிபூரணு!

கானவர் மகள் ஆன வள்ளியார் மகிழும் காவலா! (எவரையும் எதனையும்) இடறிவிடும் உரல் போன்ற கால்களையுடைய மதநீர் பெருகிய வெள்ளை யானைக்கு உரிய (மாபெரும்) இந்திரன் மகளான தேவயானை மணவாளா!

வாள் ஏந்திய வலியுடைய தீரர்களான நவ வீரர்கள் நாடி யடையும் (தூய) ஒப்பற்ற துணைவா!

கணிதம் பண்ண முடியாத கட்டழகு உடையவனே!

சுழித்து வளைந்த சங்குகள் ஊரும் (வயல்வளம் உடைய முதன்மைப்) பழனி முருகா! சப்பாணி கொட்டியருள்;

குமரா! குழந்தாய்! வயலூர்ச் சேயே! (நீ) சப்பாணி கொட்டியருள், (எ - று).

விரிவுரை

மாபெரும் தாரகமே மயில்; எம்பெருமான் அம்மயில் மேல் ஏறுவான்; அன்பர்க்கு அருள அமலன் புறப்பட்டான் எனும் ஆநந்தத்தால், அப்போதே மயில் அகவும்.

நலம் சிறந்த அந்த நாத அதிர்ச்சியால், குறுக்கீடு பண்ணியிருந்த குண்டலினிகளான பாம்புகள் குமைந்து படும் எனும் குறிப்பை, முற்பகுதியில் குறித்தார்.

அவைகள் ஆபத்தடையக் கூவும் அவ்வளவு பெரிய மயில்மேல், ஏற நீயே உரியவன் என்பார், 'மாமயில்... ஏறியவா' என்ருர்.

இம்மையோ, மறுமையோ, வீடுபேருே ஏதோ ஒன்றை விரும்பி, மலைகளாகிய கோயில்களில் மாதவம் செய்வார்

நினைவை நிறைவேற்ற, இளம் கோலத்தில் எதிர் வருவான்; எது கருதியேனும் எண்ணினரே; இதுபோதும் என்று அவர்களை ஆட்படுத்திக் கொள்வான் அமலன். அதனை 'இச்சை அளித்து ஆளும் சேயே' என அருமை தோன்ற அறிவித்தார்.

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான்புகில் அளவில்லை, கிளக்க வேண்டா" என்னும் திருஞானசம்பந்தரது சிறந்த தேவாரம், இங்குச் சிந்திக்கத் தகும்.

அவைதிக மகள் காவலன், வைதிக மகள் கணவன் என்பார், 'குறமான் மகிழ் காவலா!...மகவான் மகள் கணவா!' என்றார். ஒருவர் மண்மகள், ஒருவர் விண் மகள்; இனி ஒரு வகையில் ஒருவர் மேலிடத்தார் மகள், மற்றொருவர் கீழிடத்தார் மகள்; மற்றொரு வகையில் ஒருவர் பெரிய யானை மகள், மற்றொருவர் சிறிய மான் மகளார்; இப்படி எண்ணும் வேற்றுமை அவன் சந்நிதியில் இல்லை. கீழிடத்தாள் காவலனைப் மேலிடத்தாள் கணவனை அருமையை, உணர உணர உவகை ஊறுகிறதே!

குறவர் மகளாய்ப் புனங்காத்த மான் மகளை மகிழ்ந்து புரந்தவன், புலவர் மகளை மணம் புணர்ந்தான்;

இப்படி யெல்லாம் விரிக்க விரிக்க, விரிந்து பொருள் விளங்குகிறது அல்லவா!

தீரர் கணம் - வீரவாகு முதலிய நவ வீரர்கூட்டம். வீரவிளைவினர், வாகை முருகனை வழிபடுபவர்; அவர்கள் துணைவன் எனலுமாம். வெற்றி யடைந்தவனை முருகன் என்றும், வெற்றி கொண்ட படை எதுவாயினும் அதை வேல் என்றும் புறப்பொருள் இலக்கணம் புகல்வதை உணர்க. வயல், பழனம் எனப்பெறும்; வயலூர் எனவே, அது பழனிப்பதி எனும் பொருளைப் பயந்தது. (கூ)

தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தா னத்தான

நற்றவம் உற்றவ ரைப்பழி செப்புதல்
நட்டார் கெட்டேக,
நக்கனை அச்சுத னைக்கம லத்தனை
நத்தார் கட்(கு)ஊறு
முற்ற,இ ரக்கமி லர்க்கிடர் மிக்குற,
மொய்த்தா ரிற்பாடும்
முத்தமிழ் விற்பனர் முற்கலி அச்சுற,
முத்தே ஒப்பாய
பற்றகை பெற்றவர் இட்டம யக்கிடை
பட்டே னுக்(கு,) ஆசில்
பத்திய ளித்தது மெய்ப்பட, மிக்கசெ
பத்தார் கட்சூழ்பல்
குற்றம்அ றுக்குமு ழுக்கரு ணைக்குக !
கொட்டாய் சப்பாணி
கொற்றமு டைப்பழ னிக்கிரி வித்தக !
கொட்டாய் சப்பாணி. 40

(போ - ரை.) மேலான தவத்தை மேற்கொண்டவர்களைப்பற்றி (வீண்) பழி கூற விரும்பினவர், (அடியொடு) கெட்டு அழியவும் ;

சிவபிரானை, திருமாலை, பிரமனை விரும்பாதவர்கட்கு, (மோதும்) இடையூறுகள் முதிரவும் ;

---

40. நட்டார் - விரும்பினவர். நக்கன் - சிவபிரான். அச்சுதன் - திருமால். கமலத்தன் - பிரமன். நத்தார் - விரும்பாதவர். ஊறு - இடையூறு. பாடும் - பாடுகிற. கலி - கலிபுருடன். பல் தகை பெற்றவர் - பற்களையுடைய பாவையர். ஆசு இல் - களங்கம் இல்லாத. மெய்ப்பட - மெய்ம்மை யாம்படி.

இரக்கம் இலாதவர்கட்கு, (மெலிவிக்கும்) இடர்கள் மிகுதி யாகவும் ;

(சேவிக்க) நெருங்கிச் சேர்ந்தவருள், சிறந்த (இயல் இசை நாடகம் எனும்) முத்தமிழ் அறிவு முதிர்தரு புலவர் முன், (அநியாயக்) கலி அஞ்சி அகலவும் ;

(பளபளத்த) முத்துப் போன்ற பல் வரிசை யுடைய பாவையர் விளைவித்த மயக்கில் வீழ்ந்த அடியேற்கு, குற்ற மற்ற அன்பைக் கொடுத்த உண்மைபோல்,

செபத்தை மிகுதியாகச் செய்பவர்களை முற்றுகை யிட்ட மோசமான பல குற்றங்களை வேரறுக்கும் முழுக் கருணையுடைய குக ! (நீ) சப்பாணி கொட்டியருள் ;

வெற்றியுள பழனிமலை வித்தக ! சப்பாணி கொட்டியருள், (எ - று).

## விரிவுரை

அருந்தவ முனிவர்களைப் பழிப்பவர் அழிய வேண்டும். மும்மூர்த்திகளை விரும்பார்க்கு இடையூறு முதிர வேண்டும். இரக்கம் அற்ற மனத்தார்க்கு இடுக்கண் மிகவேண்டும். கவிஞர்களைக் கண்ட கலி கலங்கவேண்டும். ஆறெழுத்தை உருவேற்றுவார் துயர் அழியவேண்டும். இத்துணையும் விளைய, உள்ளக் குகையில் இருந்து, முழு அருளை உதவும் முதல்வா ! நீ சப்பாணி கொட்டியருள் என்னும் இதனால், தீயவர் திருந்துவர் ; வாய்மையர் வளம் பெறுவர் என்று விண்ணப்பித்தபடி.

வீறுடைய இச்செயலால் வெற்றி விளைவிக்கும் பழனிப் பரன், ஞானமேனியன் என்பார், 'பழனிக்கிரி வித்தக' என்றார். வித்தகம் - ஞான சொரூபம். (௧0)

சப்பாணிப் பருவம் நிறைவு பெற்றது

## 5. முத்தப் பருவம்

*பிள்ளைப் பெருமானை முத்தம் கொடுக்க வருக என்று பரிவொடு அழைக்கும் இப் பருவம், பதினோராம் திங்களிற் பாடப் பெறும். "பதினே ரொன்றின் முத்தம் கூறலும்" என்பது பிங்கலந்தை.*

சித்தர் பலர்க்கோர் அரசாகித்
திகழ்வெண் கயிலைக் கிரிமிசைவாழ்
சிவனூர் தாமும், அவர்இடபாற்
சிறிதும் பிரியா உமையாளும்,
சுத்த மலிபா கீரதியும்,
சுடர்நேர் உடுக்கள் ஓராரும்,
தும்பி முகத்(து)ஓர் துணைவோனும்,
சுரர்ஊர்ப் பிடியும், குறக்கொடியும்,
இத்தரை யின்கா ழியிற்கூடல்
இடத்தில் இருதம் பதிமாரும்,
இணையில் அருணைக் கிளிதானும்,
எய்தப் பெறலால் யான்விழைந்தேன்
முத்தர் வருசீர்ப் பழனிமலை
முதல்வா! முத்தம் தருகவே
மூவா அமரர் நகர்க்காவல்
முருகா! முத்தம் தருகவே. 41

---

41. பாகீரதி - கங்கை. உடுக்கள் - (கார்த்திகை) நட்சத்திரக் காரிகையர். துணைவோன் - கணபதி. பிடி - தேவயானை. குறக்கொடி - வள்ளியம்மை. காழி - சீகாழி. கூடல் - மதுரை நகர். இரு தம்பதிமார் - சிவபாத இருதயர், பகவதி ; மீனாட்சி, சுந்தேரசர். அருணைக் கிளி - அருணகிரி நாதர். முத்தர் - கட்டகன்ற முனிவர்கள். மூவா - முதுமை எய்தாத.

(பொ - ரை.) (அரிய) சித்தர் பலர்க்கு ஒப்பற்ற அதிபதியாகி, வெண்மை விளங்கும் (வளமார்) கயிலை மலையில் வாழும் சிவபெருமானும் ;

அவருடைய இடப்பாகத்தில் ஒரு சிறிதும் அகலாத உமா தேவியும் ;

(கம்பீரமான) தூய்மை நிறைந்த கங்கா தேவியும் ;

ஒத்த ஒளியினரான (அழகிய) கிருத்திகை மீன் மாதர் அறுவரும் ;

துதிக்கையை யுடைய யானைமுகக் கணபதியான ஒப்பற்ற துணைவரும் ;

தேவலோகத் தேவ யானையாரும், குறவர்குலப் பூங்கொடியான (நங்கை) வள்ளி நாச்சியாரும் ;

இந்நிலவுலகில் இருக்கும் (பரம) சீகாழிப் பதியிலும், (நான்மாடக்) கூடல் எனும் மதுரைமா நகரிலும் இருந்த (சிவபாத இதயர், பகவதி ; ஸ்ரீ மீனாட்சியார், சோமசுந்தரர் எனப்பெறும்) இரு தம்பதிகளும் ;

ஒப்பில்லாக் கிளியான (கேண்மை) அருண கிரியாரும் (பேறுதரும் முத்தம்) பெறுதலினால், (அவைகளைக் கேள்வி யுற்ற) அடியேனும் (அதை) ஆவலித்தேன் ;

சீவன் முத்தர்கள் (இடையறாது சேவிக்க) வந்தபடியே இருக்கும் (தனிப்) பெரும் பழனிமலைத் தலைவா ! முத்தம் தந்தருள் ;

(என்றும்) முதுமை எய்தாத இமையவர் உலக காவலனை இளம்பரி பூரணா ! (ஒரு) முத்தம் உதவியருள், (எ-று).

## விரிவுரை

கயிலையில், உமைக்கும் சிவனார்க்கும் ஆதியில் முத்தம் அளித்தனை. அருளார் முருகனாக அவதரித்த நாளில், கங்கைக்கும் கார்த்திகை மாதர்க்கும் உவகை முத்தம் உதவினை.

இளம்பிள்ளை யாடலில் கணபதிக்கும் ஈந்தனை. மணந்த பின், வள்ளியார்க்கும் தேவ யானையார்க்கும் வழங்கினை.

மற்ருெரு சமயம், மதுரை மீனுட்சியார்க்கும் சுந்தரேசர்க்கும் உக்கிர குமாரராக உதித்து, அவ்விருவர்க்கும் குதூகல முத்தம் கொடுத்தனை.

அதற்குப் பிறகு, சீகாழியில் சிவபாத இதயர்க்கும் பகவதியார்க்கும் திருஞான சம்பந்தப் பிள்ளையாகத் திருவவதரித்து, அவர்கட்குத் தாராளமாக முத்தம் தந்தனை.

பக்தியொடு திருப்புகழ் பாடிய பிறகு, அநுபூதி பாடிய அருணகிரி நாதராகிய கிளிக்கு, மாறி மாறி முத்தம் வழங்கினை.

உனது முத்தம் பெறவே முத்தர் பலர், வளமார் பழனிக்கு வருகின்ருர். உன் முத்தம் பெற்றவர்க்கு முத்தி சித்திக்கும். அப்பேறு நேர, முத்தம் தருகிற முதல்வன் நீ.

அந்த அருமை வரலாறுகள் பல அறிந்தேன். அம் முத்தம் பெற அடியேன் மனம் அவாவுகின்றதே! முதற் பெருந் தெய்வமே! பொன்னுடர் கோவே! உனது தனிப் பெரும் முத்தம் தா! தா எனும் இப் பாடலை ஓதும்போதே, வருவான்போல், வந்து முத்தம் தருவான்போல், உருவகம் ஒன்று நம் உளத்தில் உருவாகின்றதே! ஓம். (க)

அந்நாள் எனது கனவில் வலி(து)
அளித்த முத்தம் பலவுள; ஈண்(டு)
அவற்றின் மகிமை சிறிதேனும்
அவிர்கின் றிலதால், அயர்கின்றேன்;
இந்நாள் நனவில் தருதல்பெரி(து)
இலங்கிற் றெனினும், நலமாம்நின்
இதயத் தருட்பண்(பு)என ஙன்உளதோ?
எனை நீ மகவென் றதும்படிறோ?

---

42. அவிர்கின்றிலது - பிரகாசிக்கவில்லை. அயர்கின்றேன் - சோர்வடைகின்றேன். பண்பு - குணம். எஙன் - எப்படி. படிறு - பொய்யோ. புத்தேளிர் - வானோர். நார் - மாநுடர். முந்நால் நெறி - அகம் ஆறு, புறம் ஆறு ஆன பன்னிரு சமயங்களும்.

பொய்ந்நான் உரையேன் எனும்நிசமிப்
புவியோர் உணரப் போகாதோ ?
புகழ்சால் வீர வாகுமுதற்
புத்தே ளிரினும் நரர்மேலோம்
முந்நால் நெறியும் புகழ்வயலூர்
முதல்வா முத்தம் தருகவே
மூவா அமரர் நகர்க்காவல்
முருகா முத்தம் தருகவே. 42

(போ - ரை.) அந்நாளில் அடியேன் கனவில் வந்து, வலிந்தளித்த (பயனுன) முத்தம் பலவுள ;

இவ்வுலகில், அம்முத்தங்களின் (வித்தக) மகிமை சிறிதும் விளங்கவில்லையே; (அதை எண்ணி மனம்) தளர்கின்றேன்.

இந்நாளில், நனவு நிலையில் தருதல்தான், பெரிதும் பிரகாசமாகப் பேசப் பெறுகிறது ; எனினும், நலம் நிறைந்த நின் திருவுளத்தின் அருட்குணம் எப்படி இருக்கின்றதோ ?

அடியேனை, குழந்தாய் என்று நீ கூப்பிட்டதுவும் பொய்தானோ ?

நான் பொய் புகலேன் எனும் உண்மையை, இவ்வுலகர் உணர வேண்டாவோ ?

புகழ் மிகுந்த வீரவாகு முதலான தேவர்கள் யாவரினும், (மேதகு) மானுடர் யாங்கள் மேலவர்கள்.

(மாபெரும்) பன்னிரு சமய மக்களும் பாராட்டுகின்ற பழனிப் பரமா ! (ஒரு) முத்தம் தந்தருள்

பொலிவு குன்றாத விண்ணவர் பொன்னாட்டைக் காக்கும் இளம் பரிபூரணா! (எனக்கொரு) முத்தம் தந்தருள், (எ-று).

விரிவுரை

வாழ்க்கையை வெறுத்தேன். அருளை வேண்டி உனது திருமலையில் ஏறி உருண்டேன். என் இனிய நிட்டையில் எதிர்வந்தாய்.

தண்டபாணீ ! உன் பாடலால் உவகை பெறுகின்றேம் ! வாழ உலகிற்கு அவைகள் வழிகாட்டும். அதை அறியாமல், பிடிவாதமாக நீ உயிர்விட முயல்வது முறையலவே என்றாய்.

அருளார்ந்த நின் திருவுளம் ஓர்ந்தேன். ஆநந்தக் கண்ணீர் பெருக்கினேன். அப்போதே

"கைத்தலத்தால் எடுத்தணைத்துக் களிகூர்ந்து, கன்னத்துஓர் முத்தம் இட்டாய்."

அந்நிலையில், எனை மறந்த இன்பலயந் தன்னில் இருந்தேன். இது அந்நாள் அனுபவம்.

இப்படியே பலதரம் அடியேன் கனவில் வந்து வந்து, அருமை முத்தம் பல அளித்தனை.

இங்ஙனம், எனக்கும் உனக்கும் இருக்கும் உறவை எவரும் அறிந்திலர். மாபெரும் உனது முத்தம் மகிமையையளிக்கும். எனினும் அடியேன், அவைகளால் எந்தச் சித்தியும் வெளிப்பட எய்தியது இல்லை.

இந்நாள் உலகர், நனவில் கண்டால்தான் எதையும் நம்புவர். நின் திருவருட் குறிப்பு யாதோ அறியேன்.

வீரவாகு முதலினோர், இயல்பாகவே தூயவர்கள். மும்மல வசத்தால் முறைதுறை மறந்து, எண்ணும் விரதம் என்றும் கொண்டு, கண்டும், கேட்டும் அறியாத நின்னை நினைந்து, உலகை மறந்து, பிரிவு பொறுது பொருமிக் கதறி, மேலவர் தூய்மையை மேவுகின்ற நரர்களாகிய நாங்கள், வீரவாகு முதலியோரினும் ஒன்றும் தாழ்ந்தவர்கள் இல்லை தற்பரா !

அகச் சமயர் அறுவர், புறச்சமயர் அறுவர் புகழ்ந்து போற்றும் பழனி அப்பா ! அடியேங்கள் முதன்மைப் பேறுபெற, நனவில் வா நம்பா ! முத்தம் தா ஐயா என்று வேண்டியபடி.

குறிப்பு :—சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணுபத்தியம், கௌமாரம் எனும் அகச் சமயம் ஆறு ; சமணம், பௌத்தம், மாயாவாதம், தார்க்கிகம், லோகாயதம், பூர்வ மீமாம்சை எனும் புறச்சமயம் ஆறு; இவை முதலிய எச்சமயிகட்கும் இடம் பழனி யாதலின், 'முந்நால் நெறியும் புகழ்வயலூர்' என்றார். (உ)

## தனது அனுபவம்

கோங்கே அனைய முலைமடவார்
குளிர்சேல் விழிப்பார் வையின்அருமை
குறியா இளமைப் பருவத்(து)ஆட்
கொண்டு தமிழ்ச்சீர் கொடுத்ததுவும்,
தீங்கை அடுபே ராசையினுல்
திருமா மலைமேற் சென்றுருள்கால்
செத்துத் தொலையா(து) அளித்ததுவும்,
செப்பா தனமிக்(கு) உரைத்ததுவும்,
வேங்கை யணுகல், முதற்சொல்அவ
மிருத்(து) ஆயிரம்முன் விலக்கியதும்,
வீணே மறையத் தகும்கொல்லோ ?
வியன்கூ டலில்லூர் வணிகன்மனை
மூங்கை மகவும் ஆம்பழனி
முதல்வா! முத்தம் தருகவே
மூவா அமரர் நகர்க்காவல்
முருகா! முத்தம் தருகவே. 43

---

43. கோங்கே அனைய - கோங்கின் அரும்பு போன்ற. அடு - அழிக்கின்ற. அவ மிருத்து - அகால மரணம். முதல் - முதலான. கூடலில் - மதுரையில். மூங்கை மகவு - ஊமைப் பிள்ளையான உருத்திர சன்மர்.

(போ - ரை.) கோங்கின் அரும்பைப் போன்ற சூயங்களை யுடைய கோதையரின், குளிர்ந்த சேல்மீன் போல் (பிறழும்) கண்ணேக்கின் அருமையைக் கணிக்கத் தெரியாத அதியிளம் பருவத்திலேயே (அடியேனை) ஆட்கொண்டு, தமிழ் பாடும் சிறப்பைத் தந்ததும் ;

(பிறவித்) தீமையைப் பெயர்க்கும் பேராசை காரணமாக, அழகிய திருமலை மேல் ஏறி உருண்ட அந்தச் சமயத்தில், (அடியேன்) இறந்து போகாதபடி அருள் பாலித்ததும்;

(பிறர்க்கு வெளிப்படையாக) அறிவிக்க இயலாத அனுபவ இரகசியத்தை, (உணருமாறு) பெரிது உபதேசித்ததும்;

(அதிபயங்கர) வேங்கை அணுகிய அச்சமயத்தும் ;

அதுபோல் பலதரம் நேர்ந்த அகால மரணத்திற்கு உரிய ஆயிரம் சூழ்நிலைகளிலும் (கடிது வந்து) விலக்கிக் காத்த செய்திகள் யாவும், வீணாக மறைந்துவிடுவது தகுதியோ ? ;

மகத்தான கூடல் எனும் மதுரைப் பதியில், (உப்பூரி குடிகிழார் எனும்) ஒரு வணிகர் மனையில், (உருத்திர சன்மர் எனும்) ஊமைப் பிள்ளையாம் திருமேனி தாங்கிய (மூதன்மைப்) பழனி முதலாளியே ! (ஒரு) முத்தந் தந்தருள் !;

முதுமை பெருத சூரபுரிக் காவலனை முருகா ! (எற்கு ஒரு) முத்தம் தந்தருள் ! (என்றறு).

5 MAY 1975

விரிவுரை

" நெல்லையின் இடத்திலொரு குழவியாகி
வளவிலுள பாலரொடு பல்வாறு விளையாடி
வருகின்ற நாளில் என்னை,
வலியவந் தாட்கொண்டு வேலா யுதப்பூசை
வாஞ்சைக் கடற்குள் விட்டுக்,
குளம்பிரவு பாலன்ன மதுரத் தமிழ்க்கவி
கொழிக்கும் நலம் உதவி "

என்று, குருபர தத்துவத்தில் என் எட்டரை வயதில் நடந்த அருள் வரலாறு குறித்துளன். அந்தப் பருவத்தில் வழி

படும் அறிவும், பாடும் இயல்பும் நேருமாறு பயிற்றினை ! அது, பாவையர் பார்வை கண்டு மயங்காத பருவம்.

செங்கோட்டைக்கு அருகில் உளது, திருமலை என்னும் உன் திருப்பதி. அங்கு வந்தேன். வாழ்விக்கும் உன்னைக் கண்முன் காணுமல் மீள்வதில்லை எனும் விரதம் கொண் டேன். குமரா என்று பலதரம் குமுறிக் கூவினேன். எதிர் வந்திலை. என் என்றும் கேட்டிலை. பதைத்துத் துடித்தேன். அருள் பெருத அடியேன், பூமிக்குப் பாரமா யிருக்க மாட்டேன். திருமலை முருகா ! தேவதேவா ! உன் மலையில் இவ்வுடல் ஒழியட்டும் என்று,

" வடதிசையில் தெண்டனிட்டு, மறலிதிசை கால்நீட்டி
உடலைஅந்தக் குன்றத்தில் உச்சியில் நின்(று) உருட்டி விட்டேன்
விடலையிடும் தேங்காய்போல் வேறுபட்டுச் சிதருமல்
மடமடெனச் சென்றங்கோர் மண்தரையில் வீழ்ந்ததுவே "

(குருபாதத்துவம்)

ஆ ! அது பொறுக்கலாற்ருது எதிர் வந்தாய். நில் என்று பிடித்துநிறுத்தினை ! விழித்துநோக்கினேன். எவரும் எதிரில் இல்லை. வியந்தேன். குறிக்கத் தக்க இவ்வரலாற்றை, இப்பருவ இரண்டாம் பாடலிலும் சிறிது குறித்துளன்.

" ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள் " என்பர் அறவர். பிற ஆசை தீங்கு தரும். நின்மேல் கொள்ளும் பேராசை, தீராத் தீமைகள் யாவும் தீர்க்குமே ! அப் பேராசை கொண்ட என்மேல் யாது பிழை ? என் பயன் கருதி யாதும் விரும்பினே னில்லையே !

அண்ணமலையின் குகையில் சில நாள் தங்கியிருந்தேன். ஒரு நாள் இறங்கி இரவு மட்டும் அடிவார ஆலயத்தில் இருந்தேன். மறுநாள் வைகறையில் மலையேறினேன். என்ன அதிசயம்! மலையில் தனியாக அடியேன் தங்கும் இடத்தில், புலி ஒன்று படுத்திருந்த சுவடு தெரிந்தது. இப்படி நேருமென்று உணர்ந்தே, அன்றைய இரவுமட்டும்

அடிவாரக் கோயிலுக்கு அனுப்பினீரா ? ஐயனே ! உமது அருளை என்னென்பேன் ஏழை ?

வேங்கை வரிப்புலி ஒன்று ஒரு சமயம் அதிர்த்தது. அதனுடன், அகால மரணம் விளைவிக்கும் ஆயிரம் சம்பவங்கள், விறுவிறுத்துப் பல சமயம் விளைந்தன. அப்போதெல்லாம் காத்த அருளாளா !

மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மனார் எனும் ஊமைப் பிள்ளையாகி, இறையனார் அகப்பொருளில், நக்கீரர் உரையே நல்ல உரை என்று, ஆநந்தக் கண்ணீரும் மெய்சிலிர்ப்புமான பரம செய்கையால் காட்டிய பழனியப்பா !

அடியேற்கு நீ செய்த மாபெரும் உதவிகள் மறையலாமா ? அவைகளை உலகம் மதிக்க வேண்டாமா ? அம் மதிப்பு விளையவா ஐயா ! ஒரு முத்தம் தா ஐயா !

நீ தரும் புனித முத்தத்தை உலகம் புரிந்து கொண்டதேல், உனது அருளை உணர்ந்து உய்யுமே இந்த உலகம் என்று விநயம் காட்டி வேண்டியபடி. (ந)

## முருகன் அருள்திறம்

கருமம் பரம்என் பவர்உணராக்
கருணைக் கடற்கோர் அமுதாய
கந்தா ! உமையாள் மனத்தொடுகண்
களிக்க வருசீர்க் கான்முளையே !
பெருமந் தரம்நேர் முலைஆரற்
பெயர்மங் கையர்ஓர் அறுவர்களும்
பெரு(கு)ஆ தரத்தால் வளர்க்கவளர்
பிள்ளாய் ! வள்ளற் பெருந்தகையாய் !

---

44. கருமம் - கன்மம் ; வினை. பரம் - தெய்வம். கான்முளை - சேய். ஆரல் - கிருத்திகை. ஆதரம் - அன்பு.

குருஎன் றவிர்வார் அனைவருக்கும்
கொடுக்கும் கலைஆ யிரம்பொருந்தும்
குழகா! சேவற் கொடிக்குமரா !
குலவு மறைஆ யிரம்குறிக்கும்
தருமம் பொலிதென் பழனிமலைத்
தலைவா முத்தம் தருகவே
தமிழ்மா முனிஆ தியர்உணர்மெய்த்
தயையாய் முத்தம் தருகவே. 44

(போ - ரை.) *கன்மமே கர்த்தா என்பார் கருத இயலாத கருணைக் கடலில், ஒப்பற்ற அமுதாக ஒளிரும் கந்தப் பெருமானே !;*

*உமாதேவியின் கண்ணும் கருத்தும் களிப்ப உதித்த கனந்தங்கிய சேயே !*

*மாபெரும் மந்தர மலைபோல் (கனத்த) குயங்களை யுடைய கார்த்திகை மாதர் அறுவரும், பெருகும் அன்பால் வளர்க்க வளர்ந்த பிள்ளையே !;*

*(வாழ்விக்கும்) பெருந்தகுதி யுடைய வள்ளலே !;*

*குரு எனும் தன்மையில் விளங்குபவர் அனைவர்க்கும் உதவும், அளவிலாத அருட்கலைகளை யுடைய முழுமுதல் இளையோனே !;*

*(கூவும்) சேவற் கொடி படைத்த குமரா !*

*விளங்கும் பல வேதங்கள் குறிப்பாகக் கூறுகின்ற (புனித) தருமங்களின் பொலிவு தோன்றும் தென்பழனியில் இருக்கும் தெய்வ முதல்வா! (அடியேற்கு ஒரு) முத்தம் அளித்தருள் !*

*தமிழ் முனிவர் எனும் திருவார் அகத்தியர் முதலினோர் தியானிக்கும் தயாமூல தரும உருவனே! (எளியேற்கு ஒரு) முத்தம் தந்தருள், (எ - று).*

விரிவுரை

*வினையே பரம் என்று எண்ணியவர் சிலர் உளர். வீணரான அவர்கட்குத் தெய்வம் விளங்குவது இல்லை.*

*மற்று, வேதத்தின் கன்ம காண்டச் செய்தியே முடிவு என்பாரும் சிலர் உளர். அதற்கு, மாபெரும் ஞான காண்டம் மறுதலை. ஆதலின், வகையாகப் பரம்பொருளை யுணர அவர்கட்கும் வழியில்லை. இவைகள் முதல் அடியில் இருக்கும் செய்திகள்.*

*அருட்கடலில் எழுந்த அமுதிற்கு, கந்தன் என்பது திருப்பெயர். சிறக்கக் கருதற்கு உரிய செய்தி யிது.*

*கான்முளை - இளம் பருவச் சேய் எனும் பொருட்டு.*

*மலைநில இறைவர்க்குப் பாலூட்டும் குயங்களை, 'பெரு மந்தரம் நேர்' என்பது மதித்தற்குரிய நலம்.*

*ஆரல் மாதர் அன்பால் வளர்த்தனர். அந்த அறுவர்க்கும் ஆறு சேயாய் வளம் காட்டிய வண்மையோன், அவரவர் தரத்திற்குத் தக்கபடி அருள்பவனாதலின், 'வள்ளல் பெருந்தகையாய்' என்றார்.*

*குருத்துவத்திற்கு உரியவன் குமரன். சனகாதியர்க்கு அருளிய தட்சிணா மூர்த்திக்கும் அவனே குரு; அளவிலா நூற்கள் இவைகளை அறிவிக்கின்றன.*

*ஒவ்வொரு சமயத்திற்கும், அச்சமயத்தைத் தோற்றுவித்த ஒவ்வொரு குருவுளர். குமரனின் குருமூர்த்தக் கலை கோடி கோடி. அவைகளில் ஒவ்வொரு கலை, ஒவ்வொரு குருமாரிடம் அமைந்துளது. அஃது இன்றேல், அவர்கள் குருமார் ஆவதும், அவர்கள் கொள்கை நூல்களாய் அமைவதும், அவைகளை ஏற்க ஒரு சிலர் உருவாவதும் இல்லை.*

*உயிர்களின் ஊழிற்குத் தக்கபடி உருவான குருமார்கள், என்றும் அவர்களைத் தம் வயம் இழுப்பர்; நெறிப்படுத்துவர்; நியதி செய்வர்.*

*படிப்படியாகச் சமய அனுபவங்களிற் பயின்று பயின்று, முறையே முயன்று முயன்று உயிர்கள் முத்தி பெறுவன. இவ்வளவும் இப்பாட்டில் இருக்கின்றன அல்லவா !*

" தெய்வம் இன்றே என்றெண்ணிச் சிறுமையுறு தீயோரும்
வைவதற்குத் துணியாத மகத்தான பெருந்தெய்வம்
உய்வதற்கும் பாழ்நரகில் உறுவதற்கும் துணையாகி
மெய்வழியும் பொய்வழியும் விதித்தருளும் குருஒன்றே "

*என்ற குருபர தத்துவம், இங்குக் குறிக்கத் தகும்*

" தெய்வக் குருவும், செயகுருவும், செய்குருவும்,
சைவக் குருவும் தவகுருவும்—உய்வ(து)
அறியாக் குருவும் அநந்தம் குருவும்
குறியாகக் கொண்ட குரு "

*என்றும் அடிகள் பிறிதோர் இடத்திற் குறித்துளர்.*

*கந்தா ! கான்முளையே ! பிள்ளாய் ! பெருந்தகையாய்! குழகா ! குமரா ! தலைவா ! மெய்த் தயையாய் ! முத்தம் தருகவே என்று கூட்டுக.* (ச)

குலிசா யுதத்தோன் நகர்ப்பிடியும்,
குறிச்சிக் குறவர் இளங்குயிலும்
கொஞ்சி யணையும் பொதுக்கணவா!
கோலா கலப்போ கனும்,கொலைவெம்
புலிவா கனன்ஆ தியபலரும்
புரிபூ சனையேற் றருள்செய்தாய்!
பொல்லா அசுரர் குலகாலா!
புலைவேர் அறுப்பார்க் கெளியானே!

---

45. *குலிசாயுதத்தோன் - இந்திரன். குறிச்சி - குறிஞ்சி நிலச் சிற்றூர். கோலாகலம் - சம்பிரமம். புலிவாகனன் - புலிப்பாணி முனிவர். சமைந்து - அமையக் கொண்டு. வலயம் - வட்டம்.*

பலியேற் பவர்போல் உருச்சமைந்து,
பலமங் கையர்கற் பழித்தார்தம்
பாலா! வேலா! வலயநெடும்
பாம்பிற் றுயில்மா யவன்மருகா!
சலியாக் கொடையோர் வளர்பழனித்
தலைவா! முத்தம் தருகவே
தமிழ்மா முனிஆ தியர்உணர்மெய்த்
தயையாய் முத்தம் தருகவே. 45

(பொ - ரை.) வச்சிராயுதப் படை ஏந்திய இந்திர னுடைய பொன்னுலகத் தேவயானையும்;

குறிஞ்சி நிலச் சிற்றூர்க் குறவர் இளங்குயிலான வள்ளியம்மையும் கொஞ்சித் தழுவும் (நலம் சிறந்த) பொதுவான நாயகா!

முதன்மைச் சித்தரான போக முனிவரும், கொலைத் தொழிலையுடைய பயங்கரப் புலியூர்தியரான புலிப்பாணி முதலிய பலரும் புரியும் வழிபாட்டை, (அருமை யென) ஏற்று அருள் பாலித்தவனே!;

கயமையரான அசுரர் குல காலனாகி, (அக்கூட்டத்தை) அழித்தவனே!;

புலால் உணவை அடியோடு போக்கினோர்க்கு, அதி சுலபமாக அகப்படுபவனே!;

பிச்சை எடுப்பவர்போல் (தனிப்பெரும்) திருவுருவம் தாங்கி, (தாருகவனத் தையலர்) பலர் கற்பின் செருக்கைக் களைந்த சிவனார் மகனே!; வேல் இறைவா!;

வட்டமிட்ட நெடிய பாம்பான ஆதிசேடன் மேல் அறிதுயில் அமரும் திருமால் மருகா!;

தளர்வறியாத (பெருங்) கொடையாளர் தழைத்த (முதன்மைப்) பழனி முதலாளியே! (அடியேற்கு) ஒரு முத்தம் அளித்தருள்;

தமிழ் முனிவரான அகத்தியர் முதலிய அருந்தவர் எண்ணும் (அரிய) மெய்ம்மை அருளாளா! (அடியேற்கு) ஒரு முத்தம் அளித்தருள், (எ - று).

### விரிவுரை

சிற்றூர்க் குயிலும் பேரூர் யானையும் 'கொஞ்சி அணையும்' என்பதில், வலிந்தார்க்கும் மெலிந்தார்க்கும் அருள் வள்ளல் என்பது பெறப்படுகின்றது. இச்சைக்கும் கிரியைக்கும் இடையிருந்த நாயகன் என்பது, 'பொதுக் கணவா' என்பதன் பொருள்.

வைதிகம் அவைதிகம் எண்ணாது, கொஞ்சும் அன்பொன்றே கொள்கின்றான் என்பதும், இங்குக் குறிக் கொளத் தகும்.

பிடி - யானை; தேவலோகப் பிடி வளர்த்த தெய்வ மகளைப் பிடி என்றே கூறினார். நடையில் பிடி எனினுமாம். குரலும் நிறமும் கருதி, வள்ளியாரைக் குயில் என்றார்.

"திருந்திய யாணர் இளங்குயில்" என்பது கந்தபுராணம்.

போகர், இன்றும் பழனியில் சமாதி கொண்டு இருக்கின்றார்.

அவர் சீடர் புலிப்பாணி முனிவர். அவர், அநுதினமும் வரத்தாற்றில் நீராடி அனுட்டிப்பார். அதன் பின் புலி ஒன்று அங்கு வரும். அபிடேகத் தீர்த்தக் குடத்தை அதன் மேலே வைப்பார். மலையேறுவார். கோயிலை அடைவார். குடத்துடன் இறங்குவார். மாபெரும் புலி அதன் பின் மறையும். வரதனை பழனியப்பனை வழிபடுவார்.

இத்தகையர்க்கு அறக்கருணை அருளும் பெருமான் நீ; மாகொடிய அசுரரிடம் மறக்கருணை காட்டினை! அகங்கார கண்டனர் உனது அத்தர். ஆன்ம நலம் கருதி அறிதுயில் கொள்பவர் உம் அம்மான். நீர் வள்ளல்கள் வாழ் பழனி மன்னர். கெஞ்சிக் கொஞ்சிக் கேட்கின்றேனே! ஒரு முத்தம் தந்தருள் என்று விண்ணப்பித்தபடி.

"போக முனிக்கும் புலிப்பாணிச் சித்தருக்கும்
நீகருணை செய்தகதை நிச்சயமேல்—தாகமுற்று
வந்தளனைத் தள்ளேல்! வயலூர்த் திருமலையில்
சந்ததம்வாழ் சண்முகநா தா!"

எனவரும் பழனித் திருவாயிரத் திருவெண்பா மாலை, இங்கு நம் நினைவிலெழுந்து நிற்கிறது அல்லவா! (௫)

வேறு

இருக்கின்முடி வைச்சிவனும், மலையமலை யாதிபனும்
எளிதுணர்ந் திடஇசைத்தாய்!
இபமுகனொ(டு) அமர்செய்து, மாயவன் ஒருக்கால்
இழந்தசக் கரம்அளித்தாய்!
மருக்கிளர் சரோருகப் பிரமன(து) அகங்காரம்
மாய்வுறச் சிறையில் இட்டாய்!
மலையினம் சலியா(து) அடக்கும்வச் சிரபாணி
வன்துயர் அறக்களைந்தாய்
செருக்கியல் பெரும்புலமை உற்றுநக் கீரன்,முன்
செய்தகவி மாலைகொண்டாய்!
சிறியனேன் மனமறியும் ஆடல்பல, கனவினிற்
செய்துநன வினில்மறைந்தாய்!
முருக்கிதழ் கடுக்கும்செவ் வாய்கொண்(டு,) இவ்வேளைஒரு
முத்தம் கொடுத்தருள்வையே
முகில்பொதிந் திடுபழனி மலையில்நின் றருள்குமர!
முத்தம் கொடுத்தருள்வையே. 46

46. இருக்கின் முடிவை - வேத முடிவான ஓம் பொருளை. மலையமலை ஆதிபன்-பொதியமலை அகத்திய முனிவர். இபமுகனொடு-யானைமுகத் தாருகனொடு. மரு - மணம். சரோருகம் - தெய்வக் கமலம். வச்சிரபாணி - இந்திரன். முருக்கு - முருக்கம் பூப்போன்ற. கடுக்கும் - ஒக்கும் : இது, போல எனும் உவம உருவு.

(போ - ரை.) இருக்கு வேத முடிவான ஓம் பொருளைச் சிவபிரானும், பொதிகை மலை அதிபரான அகத்தியரும், உணர்ந்து கொள்ளும்படி எளிதாக உபதேசித்தாய் ;

(பொல்லாத) கரிமுகத் தாரகனோடு போரிட்டு, திருமால் ஒரு சமயம் இழந்த ஆழியை, (அத்தாருகனை அழித்து, அத்திருமாலிடமே திருப்பி) அளித்தாய் ;

மணம் பெருகிய கமல ஆசனன் ஆகிய அயனது செருக்கு அழிய, (அவனைச்) சிறையில் அடைத்தாய் ;

(எங்கும்) மலைகள் இயங்காதபடி, (அவைகளை) அடக்கிய வச்சிராயுதனான இந்திரன், (அவுணரால் அடைந்த) கடுந் துன்பங்களை (வேருடன்) களைந்தனை ;

பெரும் செருக்கு விளையக் காரணமான பெரும்புலமை பெற்ற புலவர் நக்கீரர், முன்பொரு சமயம் பாடிய (புனிதத்) திருமுருகாற்றுப் படைப் பாமாலையைப் புனைந்தனை ;

(எல்லா வகையாலும்) இளையவனான அடியேனுடைய உள்ளம் உணரும் படியான அருளாடல் பலவற்றைக், கனவினிற் காட்டி நனவிற் கரந்தனை ;

முருக்கிதழ் போன்ற சிவந்த திருவாயால், இவ்வமயம் ஒரு முத்தம் தந்தருள் ;

மேகங்கள் தவழும் பழனி மலையில் (என்றும்) இருந்து அருள் குமரா ! (எளியேற்கு) ஒரு முத்தம் ஈந்தருள், (எ - று).

## விரிவுரை

சிவமும், அறிவால் சிவமான அகத்தியரும், அறுமுகச் சிவமான உம்மிடம் ஓம் பொருளை உணர்ந்தனர். இது, குருவாக இருந்து செய்த குறிப்பு.

திருமால் ஆழியை, தன் மார்பின் மதாணியாகத் தரித்தான் தாருகன். அவனை அழித்து, ஆழியைக் கவர்ந்து, அதைத் திருமாலுக்கே அளித்த அருளாளன் நீ ; இது, உன் பேராற்றல் காட்டிய பெருமித நிலை.

மலர்களில் உயர்ந்தது தாமரை. அது ஒரே படித்தான நன்மணம் கமழும் தன்மையது. அந்த மணமலர் மேல் அமர்ந்திருந்தும், நன்மனம் கொள்ளாது, அதிபதி நானே என்று அகங்கரித்தான் அயன். ஞானமண நாதன் நீ, குட்டிச் சிறையிட்டு அவன் கொட்டம் அடக்கினை. இது, அகங்கார அறிஞர்களை அடக்கும் உன் அருள்நிலை.

அளவிலா மலைகளின் இறகுகளை அரிந்து அகில உலகிற்கும் அமைதி அளித்த இந்திரனுக்கு, வீணாக எவ்வளவோ துன்பங்களை அவுணர் விளைத்தனர். ஆக்ரமித்த அவர்களை அடக்கி, தூய இந்திரனது கண்ணீரைத் துடைத்தாய். இது, நீ தொண்டர்களுக்குச் செய்யும் காப்பு நிலை.

கற்ற செருக்கால் நக்கீரர், கடைசி வரை கர்வித்தார். புனித சிவனார் பாடலினும் பொருட் குற்றம் புகன்றார். அப்பாவத்தால், அபாயத்தில் அகப்பட்டார். பரம குமரா! நின்னை நினைந்தார். திருமுருகாற்றுப் படை பாடினார். இனிய அவர் விண்ணப்பத்தை ஏற்றாய். பரம அருளை அவர்க்குப் பாலித்தாய். இது, வேண்டுவார் வேண்டுவதை அருளும் உன் விமல நிலை.

கனவில் வருகின்ற நீ, நனவில் மறைவது நலமாமோ ? உன் செவ்வாய் முத்தம், நன்மை பல நல்குமே !; வளமார் பழனியப்பா ! வாய் முத்தம் தந்து என்னை மகிழ்வித்தால் ஆகாதோ என்றபடி. (௬)

## தனது அனுபவநிலை

பொழில்வளம் பெறும்நெல்லை நகரினும், அடுத்தொழுகு
பொருனைமா நதிநடுவினும்,
புணரிஒலி குன்றுத செந்திலம் பதியினும்,
புதுவையொடு சென்னையினிலும்,

கழிநலம் பொலிகோ ளத்தினும், வியன்குலவு
கனல்வரைச் சாரலதினும்,
கழறுமிவை அனையபல் இடங்களினும் நீவந்து
கனவினிற் சொன்ன சொற்கள்
பழிபடினும் ஏகுக,இவ் அடிவாரம் எய்திநின்
படிவம் குறித்திருந்த
பலவேளை யிற்றமியன் நெஞ்சகமும் உம்பரும்
பரமயோ கியரும்அறிய
மொழிபஆ யினுமெய்ப் படும்படிநின் வாய்கொண்டு
முத்தம் கொடுத்தருள்வையே
முகில்பொதிந் திடுபழனி மலையில்நின் றருள்குமர!
முத்தம்கொ டுத்தருள்வையே. 47

(பொ - ரை.) சோலை வளம் சூழ்ந்த (பயன் தரும்) நெல்லைப் பதியினும்; அப்பதி சார்ந்து ஒழுகும் (நலம் தரும்) தாம்பிரபரணி நடுவினும்; கடல் ஒலி அடங்காத (தகவுடைய) திருச்செந்தூர்த் தலத்தினும்; புதுச்சேரியுடன் சென்னைமா நகரினும்;

நெய்தல் வளம் நிறைந்த கோளை நாட்டிலும்; சால்பு மிகுந்த திருவண்ணமலைச் சாரலிலும்;

இயம்பிய இவை போன்ற பல இடங்களிலும், அடியேன் கனவில் வந்து (வந்து) நீ அருளிய மொழிகள், பழிபட்டுப் (பொய்த்துப்) போயினும் போகட்டும்;

இந்த(ப் பழனி மலை) அடிவாரத்தில் வந்து, (திகழும்) நின் திருவுருவைத் தியானித்திருந்த பல சமயங்களில், எளியேன் உளமும், இமையவரும், (யூகம் நிறைந்த) மேலான யோகியரும் (சாட்சி மாத்திரமாக) அறியும்படி

47. பொழில் - சோலைகள். பொருனை - தாமிர பாணி. புணரி - கடல். புதுவை - புதுச்சேரி. வியன் - மகிமை. கனல் வரை - அருணகிரி. முகில் - மேகங்கள்.

அருளிய நுட்பங்களே யாயினும், மெய்யாம்படி நின் திருவாயால் (ஒரு) முத்தம் கொடுத்தருள்;

மேகங்கள் அடர்ந்த பழனி மலையில் நின்று அருள் புரியும் குமரா! (குதூகலமாக ஒரு) முத்தம் கொடுத் தருள், (எ - று).

விரிவுரை

திருமலையில் உருண்ட நாள் இரவில், உன்னைக் காத்தது யாம் என்றாய். திருநெல்வேலியில் இருந்த போது, அன்னை வள்ளியாரைக் கனவில் அனுப்பி, புனித நீறு பூசி உடலின் புண்ணைப் போக்கினை.

தொல்லை தரும் யானை ஒன்று கனவில் துரத்த, அஞ்சாதே! அந்த யானை இங்கு வந்தால் அழியும்; இது நம் சந்நிதி என்று தைரியப் படுத்தினை.

உன் பாடல் கேட்டு, எமது ஒருமுகந்தான் மலர்ந்தது. இன்னும் மற்ற முகங்களும் மலர, ஐந்து பனுவல்கள் பாடு! என்று அருளொடு புதுவையில் அருளினை.

தாமிரபரணி நடுவில் தவமிருந்த போது, உனது முன் பிறப்பு இது என்று உணர்த்தினை.

திருவருணை ஈசான்ய மடத்தில் இருந்தபோது, வல்லாளன் கோபுரத்தின் வடபுறமுள்ள நமது சந்நிதிக்கு வா என்றாய்; வந்தேன்; அங்கிருந்து வழிபட்டேன். அங்கு விவகாரம் பல விளைந்தது.

'கோதுபடாத் தென்னருணைக் கோபுரத்து வேளுறவு
போதும்போ தும்போதும் போதுமே—வாதுசெயும்
பொல்லார் பகையும் பொடிப்புநோ யுங்கொடுத்தான்
நல்லான்ஆ ஞல்பார்க்க லாம்'

என்று பாதிக் கனவில் பாடினேன். அன்ப! அப்படி உன் வாக்கால் பாடாதே என்று அருளினை. யார் நீ என்றேன். உன் முருகன் என்றுரைத்து உருக்கரந்தாய்.

கேரளத்தில் வந்தாய். உன் திருநீற்றுக் கோயிலில் தோய்ந்துளம் யாம் என்றாய்.

திருச்செந்திற் பதியில், பதினாறு பிரபந்தம் பாடு என்று அருளினை.

பழனியில், கோலம் என்போல் கொள் என்றாய். இப்படி யெல்லாம், பல இடங்களில் கனவில் வந்து வந்து கட்டளை யிட்டனை.

போனதெல்லாம் போகட்டும். பழனியில் அருளியதை யேனும் மெய்ப்படுத்த, வா! வந்து ஒரு முத்தம் தா! என்று கொஞ்சி வேண்டும் இப்பாடல் கோடி பெறும். (எ)

வேறு

தனதன தானன தனதன தானன தத்தன தத்தனனா

அருகனை யேவழி படுமவர் ஆணவம்
அற்றொழி யச்செயும்வீ(று)
அறைபவர் யாவரும் நலமுறு மாறுசெய்
அற்புத சற்குருவே!
ஒருகவி ஆசைகொ(டு) அழல்படு பாலையில்
உற்றும்அ தற்குயர்பா
உரைசெயும் நாவல! மயிலுடன் ஆடும்உ
கைப்பத னுக்கிசைவாய்!
மிருகசு பாவமெய் தியகொடி யோர்கள்வெ
றுக்கும்வ னப்புடையாய்!
விலைமக ளார்மனை தொறும்அலை வானையும்
மெய்க்கிளி யிற்புனைவாய்!
முருகவிழ் தாதகி அணிசடை யார்சுத!
முத்தம்அ ளித்தருளே
முதிரருள் சேர்குக! பழனியில் யான்உய
முத்தம்அ ளித்தருளே. 48

48. வழிபடும் அவர் - சமணர்கள். வீறு - வேறு ஒருவர்க்கும் இல்லாத சிறப்பு. பாலை - பாலை நிலத்தில். உகைப்பதனுக்கு - செலுத்துதற்கு. அலைவான் - அலைந்த அருணகிரிநாதர். தாதகி - ஆத்தி. சுத - மைந்தா.

(பொ - ரை.) அருகனையே வழிபடும் அமணர் செருக்கு அடியொடு கெட, (ஆளுடைய பிள்ளையாராக வந்து) அருளிய பெருமதிச் செய்தியைப் பேசுபவர் எவரும், (சிறந்த) அருள் அடையும்படிச் செய்யும் அற்புத பரம ஆசாரியனே !;

(பொய்யா மொழிப் புலவரிடம்) ஒரு கவிபெறக் காதலித்து, (பயங்கர) அனல் மயமான பாலைவனத்தை அடைந்தும், அப்பாலைக் குரிய (நலமான ஒரு) பாடல் பாடிய நாவலனே !;

(அழகிய) மயிலுடன், ஆட்டையும் ஊர்தி யாக்கிச் செலுத்தற்கு உடன்பட்டவனே !;

விலங்கின் குணம் கொண்ட கொடிய வீணர்களை, வெறுக்கும் அளவு பேரழகை யுடைய பெருமானே !;

விலைமகளிர் வீடுதோறும் திரிந்த அருணகிரி நாதரை யும், கிளி யுருவில் மேவக் கொண்டவனே !;

மணம் கமழ் ஆத்தி மாலையை, சிறந்த சடையில் அணிந்த சிவனார் மகனே ! (ஒரு) முத்தம் கொடுத்தருள் ;

அருள்மிக்கு அமைந்த குகா ! அடியேன் பழனியில் உய்தி பெற, (உயரிய ஒரு) முத்தம் உதவியருள், (எ - று).

## விரிவுரை

அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பர். இது, பழைய ஒரு பழமொழி. இதை மெய்ப்பிக்க, அம்மே அப்பா என்று அழுது, காழியில், அம்மை தந்த அருட்பால் பருகினை.

சுரவாதம், அனல்வாதம், புனல்வாதம் புரிந்து, அமணர் ஆணவம் அழித்து, பாடுவார் அடையும் பரிசு இது என்று பாரோர் அறியப் பல ஆடல் நிகழ்த்திய 'அற்புத சற் குரு' ஆயினை.

பரசுப்பிரமண்யரே திருஞான சம்பந்தர் ; அப்படி யில்லை. அவர் அபர சுப்ரமண்யர் ; அவர் ஆடல் முழுதும்

அறுமுகன் ஆடலாக அறியப் பெறுகிறது என்ற கருத்து வேற்றுமைகள், எங்கும் விரவி யிருக்கின்றன.

எப்படிச் சொன்னாலும், இது உன் ஆடல் என்ப தில் இரு திறத்திலும் கருத்து வேற்றுமை இல்லை யல்லவா.

புனித சிவபக்தர் பொய்யாமொழிப் புலவர். பரத்தைப் பாடும் வாயால், வேறு எவர் தரத்தையும் பாடாதவர் அவர். சங்கரனே சண்முகன் எனும் சாத்திர சம்மதமும் அவர் அறிந்ததுதான். எனினும், சிவ மூர்த்தமே அவர் சிந்தை யில் இருந்தது.

இரு மூர்த்தமும் ஒன்றே; வேறல்ல எனலை அவர்க்கு விளக்க, பலதரம் அவர் கனவில் வந்தாய். பொய்யா மொழீ! என்மேல் ஒரு கவி பாடு என்றாய். கோழி யைப் பாடிய வாயால், அதன் குஞ்சைப் பாடேன் என்று மறுத்தார் அவர்.

ஒருநாள் அவர் பாலை நிலவழியே வரும் அமயம், ஒரு வேடன் எதிர்வந்தான். யார் நீர் என்று அதட்டினான். அஞ்சிய கவிஞர், நான் ஒரு புலவன் என்றார்.

அங்ஙனமேல், என்மேல் ஒரு கவி பாடு! இன்றேல் விடுவேன் அல்லேன் என்று, விறுவிறுத்தான் அவ் வீர வேடுவன்.

அஞ்சிய புலவர், உன் பெயர் யாது என்றார். என் பெயர் முட்டை. உடன்போக்குத் துறையில் பாடும்! என்று அதட்டினான். உடனே புலவர்,

"பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முட்டைக்கும் காடு"

என்று பாடினர் கவிஞர்.

புலவரே! கள்ளிச்செடி பொறிபறக்கும் கானலில், வேல முள் சாம்பராக வேகாதோ? பொய்யாமொழி பொய்த்த

மொழி ஆயதே! என்று கூறி நகைத்து, புலவர் பெயரை யமைத்து, அத் துறையிலேயே அமையும்படி நயம்பட,

"விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும், வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்துப் பெய்வளையும் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்"

என்று திருத்தமுறப் பாடினர் வந்த தெய்வ வேடர்; இவ் வரலாற்றில், 'உயர்பா உரைசெயும் நாவல' வேடனாக வந்தது நீதானே நிமலா! என்று உணர்ந்து உருகி என்பதில் உணர்த்தியபடி. (அ)

தானன தானன தானன தானன தத்தன தத்தான

பாவம்அ னேகம்ள நாளும்வி டாதுசெய்
பற்பல ரைப்புகழ்வார்
பால்புரை நீறணி வார்உணு மாறும்ஓர்
பற்றும்இ டத்துணியார்
சேவல்நி லாவிய கேதன மாண்நுவல்
சிட்டர்க ளைப்பணியார்
சீதைம ணாளன்அ னுன்அர சாள்வகை
சித்தம திற்கருதார்
பூவல மாகுதல் நேர்தவம் நாடுநர்
புத்தியை மிக்கிகழ்வார்
போல்பவ ரோடுச தாஅக லாதுபு
ணர்ப்புறும் அக்கினிபோல்
மூவகை ஏடணை தீர்தர நீயொரு
முத்தம்அ ளித்தருளே
மூதறி வார்பழ னுபுரி வாழ்குக
முத்தம்அ ளித்தருளே. 49

49. பற்றும் - பருக்கையும். கேதனம் - கொடி. மாண் - மாண்பு. சிட்டர்கள் - மேலோர். மணாளன் - கணவனான இராமன். ஏடணை - மண் பெண் பொன் என்பவற்றில் ஆசை.

(போ - ரை.) எண்ணிறந்த பாவத்தை எந்நாளும் தொடர்ந்து செய்யும் (பொல்லாத) பலரைப் (பாடிப்) புகழ்பவர் ;

(அழகிய) பால்போலும் வெண்மைத் திருநீறு அணி கின்ற (உயர்ந்த) அடியவர் உண்ணும்படி, ஒரு பருக்கையும் இட உள்ளம் கொள்ளாதவர் ;

விளங்குகின்ற சேவல் கொடியின் வீறு பாடுகின்ற வித்தகர்களை விழுந்து வணங்காதவர் ;

(புனித) சீதா பதியான இராமனைப் போன்றவர்கள் நாடாளும் (சிறந்த) வகையைச் சிந்திக்காதவர்கள் ;

(சிறக்கத்) தலயாத்திரை செய்பவர்கள், வித்தகத் தவத்தை விரும்புபவர்கள் ஆன ஆன்றோர் அறிவை அதிகம் பழிப்பவர்கள் போன்ற அதி பாவிகளுடன், தீராத தொடர்பு கொண்டு;

தகிக்கும் தீயைப்போல் பந்திக்கும் (மண், பெண், பொன் எனும்) மூன்றின் (தீரா) வேட்கை தீர, (அடியேற் கொரு) முத்தம் அளித்தருள் ;

பரம ஞானிகள் பயிலும் பழனிப் பதிவாழ் குகா ! (தகவுடைய ஒரு) முத்தம் தந்தருள், (எ - று).

## விரிவுரை

பாவமான வாழ்க்கையரை, அப் பாவம் என்றும் கனலாய் எரிக்கும் ; அதுபோல், என்றும் உளத்தை அரித்து எரிக்கும் மூவாசை தொலைந்தாலன்றி, உய்யும்வழி இந்த உலகில் இல்லை.

உயரிய முத்தம் ஒன்றை நீ உதவினுல், எளியேனிடம் அவ்வேட்கை எய்தாதே ! முத்தி தரும் உன் முத்தத்தால், விடுதலை உடனே விளையுமே என்று விண்ணப்பித்தபடி.

சீதை மணாளன் ஆட்சியை, இராம ராஜ்யம் என்று எவரும் இனிது புகழ்வர். தாய் சொல் போற்றல், தந்தை சொல் மதித்தல், இல்லறம் போற்றல், குடி புரக்கும் குணம்,

அருந்தவர்ப் பேணல், அக்கிரமத்தை அழித்தல் முதலியன, அரிய இவ்வாட்சியிற் கண்ட அனுபவங்கள்.

ஏடணை - ஈஷணை எனப்பெறும் வடசொல்; மும்பொருள் வேட்கை யென்பது பொருள். இவைகளை, தனேஷணை, புத்திரேஷணை, தாரேஷணை என்றும் கூறுவர் வடமொழிவாணர். (௬)

## பழனியூர்ச் சிறப்பு

தத்தன தத்தன தத்தன தத்தன தத்தன தத்தனா

கற்றுணர் வித்தகர் உற்றதமிழ்ச்சுவை
கற்பின்உ யர்ச்சிய(து)ஆர்
கட்டழ குக்கொடி ஒப்பஅ ருப்பொடு
கட்டுணர் மிக்கலர்கா,
மற்றுவ மைப்பொருள் அற்றத வத்தில்ம
னத்தைநி றுத்தவலார்
மற்சரம் அற்றுவ சிக்கும டத்தொகை,
மட்டில்கொ டைத்தொழிலோர்
உற்றுயர் மச்சும னைத்திரள், சத்திரம்,
உக்கிர மற்பயில்வார்
உட்டினம் அற்றம ணிக்கழ கத்(து)அணி,
ஒத்தன பற்பலசீர்
முற்றுதி ருப்பழ னிப்பதி யிற்குக!
முத்தம ளித்தருளே
முப்புரம் அட்டந கைப்பரர் கட்சுத!
முத்தம ளித்தருளே. 50

50. வித்தகர் - புலவர்கள். கொடி - பூங்கொடி போன்ற மாதர். அருப்பு - அரும்பு. கள் துணர் - தேனும் தளிரும். கா - சோலை. மற்சரம் - அறுவகைக் குற்றம். மச்சுமனை - மேல்மாட வீடுகள். மணிக் கழகம் - அழகிய சிலம்பக் கூடங்கள். அணி - சிறப்பு. பரர் - சிவபிரான். கண் சுத - நெற்றிக்கண் (தந்த) மைந்தா.

(பொ - ரை.) முற்றக் கற்ற முழுப்புலவர்கள் நிறைந்த (சால்புடைய) தமிழ்ச் சங்கங்கள் ;

கற்பின் உயர்விற்குரிய முல்லை மாலை புனைந்த பேரழகுடைய பெண் கொடிகள்போல், அரும்புடன் தேனும் இளம் தளிரும் மிகுந்து மலர்ந்த மேம்படு சோலைகள் ;

எந்த உவமையையும் மீறிய தவத்தில் மனத்தை நிறுத்த வல்ல மாபெரும் முனிவர்கள், மாசற்று வாழும் அளவிறந்த மடங்கள் ;

வரையறை யிலாது வழங்கும் அறச் செயலாளர் வாழும் வானோங்கிய மாளிகைகள்;

(சால்புடைய) தர்ம சத்திரங்கள் ;

விறுவிறுத்த மற்போர் பயிலும் வீரர்கள், வெம்மையற்ற (சாந்தம் காட்டும்) சிலம்பக் கூடங்களின் சிறப்புக்கள்;

(தமக்குத் தாமே) சமமான பற்பல சிறப்புக்கள் முதிரும் அருளார் பழனிப் பதியில் அமர்ந்த குகா! (ஒரு) முத்தம் கொடுத்தருள் ;

முப்புரம் எரித்த புன்னகை முதல்வர் நெற்றி விழியில் இருந்து உதயமான அமுத மகனே! முத்தம் தந்தருள் (எ - று).

## விரிவுரை

கல்வி கற்பது எளிது ; கற்றதை உணர்வது மிகக் கடினம். அங்ஙனம் உணர்ந்த வித்தையை உளத்திற் பதிப்பவர் கோடியில் ஒருவர். இது, விரிந்த உலகில் வெள்ளிடைமலைபோல் விளங்கும் அனுபவம். அங்ஙனம் இன்றி, பழனியில் 'கற்றுணர் வித்தகர்' கழகம் அமைந்த அருமையை, முதலடி குறிக்கின்றது.

உத்தமக் கற்பால் உயர்ந்தார்; அதன் அடையாளமான முல்லை மாலைக்கு உரியார், அழகின் கொழுந்தான அரிவையர்கள். முல்லை யரும்பான பற்கள், அருமைச் சுவை நிறை தேன் மிகும் அதரம், தளிரன்ன மேனி, மலர் வதனம்,

குவளைக் கண்கள், வள்ளைச் செவிகள், காந்தள் கரம் அமைந்தவர் அக் காரிகையர்.

அழகாலும், பசுமையாலும், உயர்வாலும், தளிராலும், அரும்பாலும், மலர்களாலும், அங்கிருக்கும் சோலைகள் நேரிழை மாதர்களை நினைவுறுத்துகின்றன.

தனிப்பெரும் உயர்வினர் தவ சாதனையர். சாதனைக் காலத்தில், அவர்கட்குள் ஒருவர்நிலை உயரும். அது கண்டு, பொறாமையும் பொச்சரிப்பும் பிறருள் பொங்கி எழும். வசிட்டரொடு கோசிகர் வளர்த்த வம்புகள், பெரும் சரித்திரப் பிரசித்தம். இது என்றும் உள்ள செய்தி.

அங்ஙனமின்றி, 'மற்சரம் அற்று வசிக்கும் மடங்கள்' பழனியில் பலவுள.

ஈகையாளர் பலர் இருக்கின்றார். அவர்கள்தம் மனம் போல் உயர்ந்த மாளிகைகள், தலத்தின் நெடுஞ்செல்வத்தை நினைவூட்டுகின்றன.

யாத்திரிகர்கள் தங்கும் சால்பு மிகுந்த சத்திரங்கள், எங்கும் விரவி யிருக்கின்றன.

மற்போர் பயில்பவர், தம் தோள் தினவைக் கருணையின்றிப் பிறரிடம் காட்டுவர். பழனியில் உள்ள சிலம்பக் கூடங்கள், பெரிதும் தேர்வைப் பெருக்கும்; அதனுடன் அங்குக் குலவும் சாந்தம் குடிகொண்டு இருக்கும் என்பார், 'உக்கிரமற்ற மணிக்கழகம்' என்று உரைத்தார்.

இத்தகைய அனுபவங்களால்,'ஒத்தன பற்பல சீர் முற்று திருப்பழனி' என்பது, என்றும் மறக்க இயல்வதில்லை.

நகை நெருப்பில் முப்புரம் அழிந்தது; கண்ணெருப்பில் கந்தன் உதயம் எனும் அருமையை, 'முப்புரம் அட்ட நகைப் பார் கண்சுத' எனும் மாபெரும் அழகு மறக்க முடிவதில்லை. (௧0)

முத்தப் பருவம் நிறைவெய்தியது.

# 6. வருகைப் பருவம்

*தளர் நடையிடும் சேயை, வா ! வா என்று பரிவொடு அழைக்கும் பருவம் இது, பன்னிரண்டாந் திங்களில் நிகழ்வது ; " ஆண்டு வரையின் ஈண்டுவரு கென்றலும் " என்பது பிங்கலந்தை. இது, வாரானைப் பருவம் என்றும் வழங்கப்பெறும்.*

திருவுருவச் சிறப்பு

அயில்வேற் படையும் திருத்தண்டும்
அகலத் தொடுதிண் கையிற்றுங்கி,
அங்கை மலரொன்(று) இடப்பாகத்(து)
அவிரும் கடிமீ(து) அமைதரவைத்(து),
எயில்வே வுறநக் கவர்மகவென்று
யாரும் அறியும் படிமுழுநீற்(று)
இயக்கம் காட்டிக் கண்டிகையும்
ஏற்ற வயின்தோ றினிதணிந்து
கயிலைக் கிரியின் இரசிதம்போல்
கவின்கோ வணம்கீ ளொடுதரித்துக்
கழற்றுட் கருட்பா துகைசாத்திக்
கனிவாய் முறுவ லொடுநின்றாய்
மயில்வா கனத்தில் ஒருக்கால்முன்
வருக வருக வருகவே
வளம்தோய் பழனி மலைக்குரவா
வருக வருக வருகவே. 51

---

51. *அயில் - (ஞானக்) கூர்மை. அகலம் - மார்பு. கடி - இடுப்பு ; தொடையின் ஆரம்பம். எயில் - (முப்புர) மதில். நக்கவர் - சிரித்த சிவபிரான். கண்டிகை - உருத்திராக்கம். வயின் - இடம். இரசிதம் - வெள்ளி. கழல் - வீரர்கள் அணியும் காலணி. முறுவல் - புன்னகை.*

(போ - ரை.) விளங்கும் கூர்மை வேலாயுதமும், சிறந்த தண்டாயுதமும் (ஆன இரண்டையும்,) திருமார்பினும் திண்மைத் திருக்கரத்திலும் கொண்டு;

கமலம் போன்ற அழகிய ஒரு திருக்கரத்தை, இடப் பாகத்தில் விளங்கும் (வாய்ப்பான) தொடை மேல் வைத்து;

(பொல்லாத முப்புர) மதில் வெந்து போகப் புன்னகை செய்த (புனித) சிவபிரான் சேய் என்று, எவரும் இனிது அறிந்து கொளும்படி, (கம்பீரமான) திருநீற்றுக் கோலம் காட்டி;

உருத்திராக்க மாலைகளையும், ஏற்ற இடந்தோறும் இனிது தரித்து;

கயிலை மலையின் வெள்ளி விளக்கம்போல், அழகிய கோவணம் கீளொடு அணிந்து;

வீரக்கழல் தரித்த திருவடிகட்கு (ப் பரம) அருளாகிய பாதுகை சாத்தி;

கொவ்வைக் கனிபோல் சிவந்த திருவாயின் (நித்திய) புன்னகைக் கோலத்தில் நின்றவனே!;

மயிலாகிய ஊர்தியின் மேல், ஒரு தரம் அடியேன் முன் வருக வருக வருக!;

அருள் வளம் தோய்ந்த பழனிமலைக் குருநாதா! வருக (பெரும!) வருக (துரையே)! வருக, (எ - று).

## விரிவுரை

தண்டு, யோக மூர்த்தி எனும் அறிகுறி. வேல், ஞானமூர்த்தி எனும் அடையாளம். இடது தொடைமேல் இடக்கை ஊன்றியது, சூரியகலா சொரூபன் என்னும் குறிப்பு. நீற்றுக் கோலம், ஞான நீறு பூத்த நெருப்பு என்னும் தெய்விக நிலை.

கண்டிகை அணிந்தது, ஞானக் கண்ணுளன் எனும் கருத்து. கோவணமும் கீளும் பாதுகமும், ஞான ஆசாரியன் எனும் அறிவிப்பு. இவைகளை உணரும் போதே உள்ளம் பாகாய் உருகுகிறது அல்லவா !

இப்பெருமான் புன்னகை ஒளி, ஆணவ இருளை யடக்கும்; மாயா மலத்தை மடக்கும் ; கன்மப் பெருக்கைக் கால் சாய்க்கும் ; பிறவி நோயைப் பெயர்த்துவிடும் எனும் சுருதி நுட்பம், இங்குக் குறிக்கொளத் தகும்.

ஆறுதல்தரும் அழகிய கோல அத்தனை, ஆவரண மயில் மேல் அமர் கோலத்தில் வருக ஐயா வருக! என்று, ஆறு தரம் அழைக்கும் அருமையே அருமை.

குறிப்பு :— கீள் - தகட்டு வடிவாக நூலினால் நெய்து, அரை ஞாணைக் கட்டுவதற்கு அமைந்தது. " கீளலாது உடையும் இல்லை " என்பது அப்பரது திருவையாற்றுத் தேவாரம்.

நாத ரூபமாய் மேலுயர்ந்து நின்று, பிற அனைத்தும் தன்னிலிருந்து பிறக்க நிற்கும் வேதமே 'கோவணம்' என் பது, ஆகமங்கள் கூறும் அருஞ்செய்தி.

" சடையும் பிறையும் சாம்பற் பூச்சும் கீள், உடையும் கொண்ட உருவம் என்கொலோ ?" என்று ஆளுடைய பிள்ளையாரும்,

" கீளார் கோவணமும் திருநீறும் மெய்பூசி " என்று சுந்தரரும்,

" மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான் சரடாத், தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ " என்று மணிவாசகரும் இதுகுறித்து அருளியது ஓர்க.

கீள் கோவணத்துடன் சேர்த்து அமைப்பதனால், ஒடு விகுதி சேர்த்து உரைத்தார். (க)

சந்தா சலத்துப் பனவரெனத்,
தவவே டத்துப் பெரியர்எனத்,
தமிழ்தேர் புலமைப் பழையர்எனத்,
தனிவேல் புனைதோள் வயவர்எனக்,
கொந்தார் மருமத்(து) அரசர்எனக்,
கொடும்செட்(டு) ஒழியா வணிகர்எனக்,
குவளைத் தொடைநீர்க் குலத்தர்எனக்,
குறிச்சி யிடைவாழ் குறவர்எனப்,
பந்தா டியகைச் சிறுவர்எனப்
பலநாட் கனவில் வந்ததன்றிப்,
பசும்பொற் கலப மயில்மீதும்
பரணிற் கலந்தா ளொடும்சிலகால்
வந்தாய்! நனவி னிலும்ஒருக்கால்
வருக வருக வருகவே!
வளம்தோய் பழனி மலைக்குரவா!
வருக வருக வருகவே! 52

(போ - ரை.) சந்தன மலையெனும் செந்திலம் பதியின் (திரிசுதந்திர) அந்தணர் போலவும்;

(முதன்மைத்) தவக் கோல முனிவர் போலவும்;

புனிதத் தமிழ் ஆய்ந்து தேர்ந்த பழம் புலவர்கள் போலவும்;

ஒப்பற்ற வாளேந்திய வீரர்கள் போலவும்;

கொத்தான மாலையணி மார்பின் மன்னர் போலவும்;

பொல்லாத சிக்கனம் போகாத வணிகர் போலவும்;

---

52. சந்தாசலம் - சந்த + அசலம்; இது செந்தில் பதியின் சிறந்த பெயர்களுள் ஒன்று. பனவர் - திரிசுதந்தர அந்தணர். வயவர் - வீரர். கொந்தார் - கொத்தான மலர்மாலை. மருமம் - மார்பு. செட்டு - சிக்கனம். தொடை - மாலை. நீர்க் குலத்தர் - கங்கைகுல திலகரான வேளாளர்கள். குறிஞ்சி - குறிஞ்சி நிலச் சிற்றூர். கலபம் - தோகை. கலந்தாள் - கலந்த வள்ளியம்மை.

குவளை மலர் மாலைக்குரிய கங்கைக் குலத்தவரான வேளாளர்கள் போலவும் ;

குறிஞ்சி நிலச் சிற்றூரில் குடியிருக்கிற குறவர்கள் போலவும் ;

பந்தாடிய கைப் பாலர் போலவும் பலநாள் அடியேன் கனவில் வந்தது அல்லாமல்,

பசுமையான அழகிய தோகையுடைய மயில் மேலும், (தினைப்புனப்) பரண்மேல் இருந்த வள்ளியாருடனும் சில சமயம் வந்து சேவை தந்தனை ;

(அப்படியே) நனவு நிலையிலும் ஒருதரம் வருக ஐயா!; வருக வருக !;

வளம் மிக்க பழனிமலைக் குருநாதா ! வருக பரம ! வருக வருக, (எ - று).

## விரிவுரை

கனவில் பலவுருவில் காட்சி தந்த நீ, ஒரு தரமேனும் அச் சேவையை நனவு நிலையில் அருள் என்றபடி.

சந்த + அசலம் = சந்தாசலம் என்றாயது ; சந்தம் - சந்தனம்; அசலம் - சலியாதது எனும் பொருளில், மலையை உணர்த்தியது. திருச்செந்திலின் பல பெயர்களுள், சந்தனாசலம் என்பதும் ஒன்று. திருச்செந்தூர், ஆசிரியரது அபிமானத் தலம். அன்றியும், இது படைவீடாக முருகன் தங்கிய முதல் இடம் என்பது இவர் கருத்து. அத் தலத்துத் திரிசுதந்தரரென்பார், தில்லை மூவாயிரவர் போல முருகனோடு ஒப்பாவர். இவர் இயற்றிய கௌமாரத் தொகையில், (தில்லைவாழந்தணரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் கூறியது போல,) "செந்தில்நகர்த் திரிலோக சுதந்தரரைப் போற்றி" எனக் கூறியிருப்பது இங்குக் குறிக்கொளத் தகும். பனவர் - பார்ப்பனர் ; பன்னிப் பன்னி வேதாகமங்களைப் படித்தவர் ; திரிசுதந்தரர் எனும் பெயருடன் செந்திலில் இருக்கும் இவர்களை, ஈராயிரவர் என்பர்.

கொடும் செட்டு - அளவு கடந்த சிக்கனம். வணிக் - வர்த்தகம்; அதை யுடையவர் வணிகர் : வடசொல். நனவு - விழிப்பு நிலை. (உ)

அந்தண் பொதியைக் குறுமுனியை,
அமரர் உலகில் நாரதனை,
அறும்கை பெறும்பொன் அனையாளை,
அலகைத் துயர்தீர்ந்(து) அவிர்ந்தானை,
வெந்த சுரத்தை வியந்தானை,
விண்ணூர் வரைபோய் மீண்டானை,
மிளிர்பொற் பணிபெற்(று) அளித்தானை,
வேலா வலயம் கடந்தானைப்,
பந்தம் அறும்நூல் உரைத்திறமைப்
பாவ லனை,மற் றிவர்போலும்
பலரைக் கருதித் தினந்தோறும்
பரவச் சலியாப் பத்திசெயும்
மைந்தர் எனையும் சொலும்படிமுன்
வருக வருக வருகவே!
வளம்தோய் பழனி மலைக்குரவா!
வருக வருக வருகவே. 53

(போ - ரை.) அழகிய குளிர்ந்த பொதியைமலை அகத்தியரை; (நலமுள) விண்ணுலக நாரதரை; வெட்டுண்டு வீழ்ந்த கையை (மீட்டும்) பெற்ற முதன்மைத் திருமகள் போன்ற முருகம்மையாரை;

(கற்கிமுகி) பூதம் (செய்த) கடுந்துயர் ஒழிந்து, நலம் மிளிர்ந்த நக்கீரரை;

வெந்த பாலைத் திணையை வியந்து பாடிய பொய்யா மொழிப் புலவரை;

---

53. அலகை - கற்கிமுகி பூதம். சுரத்தை - பாலை நிலத்தை. விண்ணூர் - சுவர்க்கம். வேலா வலயம் - கடல். பரவ - வழிபட.

(பாரிசாத மலர் கொணர) அமரர் உலகம்வரை சென்று மீண்ட அருணகிரி நாதரை ;

மின்னுகின்ற பொற்பதக்கத்தை (இரவில் கொணர்ந்து இறைவன் அளிக்க) வாங்கி, (காலையில் அதைச் செந்தில் குமரனுக்கே) திருப்பி யளித்த பகழிக் கூத்தரை ;

அலைகளை யுடைய கடலி லிருந்து தோன்றிய (பொம்மையபுரம்) சிவஞான பாலைய சுவாமிகளை ;

பந்தம் அறும்(படிப் பயிற்றும் வைராக்கிய சதகம் முதலிய) நூல்கட்குத் தெளிவான உரை வரைந்த (திருப்போரூர்ச்) சிதம்பர சுவாமிகளை ;

மேலும் இவர்களைப் போன்ற சிறந்த பலரைச் சிந்தையிற்கொண்டு, நாள்தோறும் வழிபடலிற் சலிப்படையாது அன்பு செலுத்தும் மக்கள், எளியேனையும் பெயர் குறித்துப் பேசும்படி என்முன் எழுந்தருள்க! வருக ஐயா வந்தருள்க !

பல்வளம் பயிலும் பழனிமலைக் குருபரா ! வருக ஐய ! (திருவருள் வழங்குமாறு) வருக வருக, (எ - று).

### விரிவுரை

புனித மக்களை உலகம் போற்றும். எம்பெருமானே ! நீ அடியேன் முன் எழுந்தருளினால், எளியேனையும் பொருளாக எண்ணுவர் பல்லோர் என்றபடி.

### (1) அகத்தியர்

அறுமுகச் சிவத்திடம் அகத்தியர், செழுந்தமிழும் சிவஞானமும் எய்தினர்.

### (2) நாரதர்

தேவரிஷி எனப்பெறும் நாரதர், என்றும் முருகனை எண்ணுபவர். அசுரர் சாதனையையும், அமரர் வேதனையையும் இறைவரிடம் அறிவித்தவர். வேள்வியில் எழுப்பிய ஆடு ஒன்றை,ஊர்தியாம்படி குமரற்கு உதவியவர். வள்ளி நாயகியார் திருமணத்திற்கு வழிவகை செய்தவர்.

(3) முருகம்மையார்

பிறந்த நாள்முதல் முருக நாமம் பேசினள். ஓயாது முருகா என்று ஓதாதே என்று உரைத்தும், கேளா அவர் கரத்தை வெட்டினன் கணவன். உபாதை பொறுது, மும் முறை முருகா என்று முறையிட்ட முருகம்மை கையை வளரச் செய்தான் வள்ளல் பிரான்.

(4) நக்கீரர்

கற்கிமுகியால் மலைக்குகையில் அடைபட்ட நக்கீரர், பயனை திருமுருகாற்றுப்படை பாட, விரைந்த வேல், அவர்க்கும் பிறர்க்கும் விடுதலை அளித்தது.

(3) பொய்யாமொழிப் புலவர்

இவர் வரலாறு, முத்தப்பருவ எட்டாம் பாட்டு உரையுள் இருக்கிறது.

(6) அருணகிரிநாதர்

சத்தி உபாசகனை சம்பந்தாண்டன் தூண்ட, அரசர் வேண்ட, கிளி உருவாகி, விண்ணுலகெய்தி, கற்பகமலர் கொணர்ந்து தந்த அருளாளர் அருணையர்.

(7) பகழிக் கூத்தர்

அருமைப் பிள்ளைத் தமிழை அரங்கேற்ற வந்த பகழிக் கூத்தரை, அந்நாள் செந்தில் மக்கள் ஏற்றிலர். வருந்தி அவர் கடற்கரையில் வந்திருப்ப, அறுமுகப் பரமன், அன்றிரவே தன் மார்பில் இருந்த மதாணியை, பாடற் பரிசாக வழங்கினன். விவரம் உணர்ந்த அன்பர்கள் வியப்ப, மறு நாளே பாவலர் அவ்வணியை வரத முருகன் திருமுன் வழங்கினர்.

(8) சிவஞானபாலையர்

மாபெரும் சித்தராய், கடலில் இருந்து கரையேறி, பொம்மைய பாளையப் பதியிலும், மயிலமலையிலும் தங்கி, புனித அருளாடல் பல புரிந்தவர், சிவஞான பாலைய சுவாமிகள்.

(9) சிதம்பர சுவாமிகள்

*சாந்தலிங்க சுவாமிகள் அருளிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல் முதலிய நூல்கட்கு அருமை உரையருளி, முருகன் சந்நிதி முறைசெய்து, திருப்போரூர்க் கோயிலைச் சிறக்க அமைத்தவர் சிதம்பர சுவாமிகள்.** (ந.)

களையாம் எனப்பங் கயம்பொலிதண்
கழனித் தொகையில், அலையெறியும்
கவின்ஆர் தருபற் பலதடத்தில்,
கணக்கில் மனைமுன் றிலில்,சாலில்,
இளையார் உருகச் செயும்பார்வை
எழில்மங் கையர்யாழ் புரைகரத்தில்,
இடுப்பின் குடத்தில், பலபணிகள்
இடும்பொற் கழுத்தில், நெடும்பொழிலில்,
அளைபால் கவர்ந்(து)உண் டவன்றனே
அனையார் பலர்தம் அணிவாயில்,
அரம்பை கமு(கு)ஆ தியின்குருத்தில்,
அலங்க மதில்கோ புரம்அருகில்
வளைஓ லிடும்தென் பழனிநகர்
வாழ்வாம் முருகா வருகவே
மழமால் விடைப்பண் ணவன்நுதற்கண்
மணியாம் மதலாய் வருகவே. 54

---

*இவ் வரலாறுகள், ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் அருளிய கௌமாரத் தொகையும், அவர் குமாரர் ஸ்ரீ செந்தில்நாயகர் அருளிய கௌமாரர் வகையும் விரியுமாகி, ஆயிரக்கணக்கான பாடலுருவம் பெற்றன. அவைகள் என்று அச்சு வாகனம் ஏறுமோ அறியோம். உயரிய திருவருள் அதற்கு உதவுவதாக.

54. *பங்கயம் - தாமரை. கவின் - அழகு. தடம் - பொய்கை. முன்றில்-மாளிகைகளின் முன்னிடம். சாலில் - உழுபடைச் சாலில்.*

(போ - ரை.) களைகள் எனும்படி கமலங்கள் விளங்கும் கூட்டமான குளிர்ந்த கழனிகளில் ;

அலைகொழிக்கும் அழகமைந்த புனித பல பொய்கைகளில் ;

(உயர்ந்து காணும்) அளவிலாத மாளிகை முற்றங்களில்; (சால்புடைய) உழுபடைச் சால்களில் ;

இளம்பருவக் குமரர்களின் மனம் இளகும்படிச் செய்கின்ற காரிகையரின் யாழ்போல் நீண்ட கரங்களில் ;

(அவர்களின்) இடுப்பில் உள்ள குடங்களில் ; கனக அணிகள் தரித்த கழுத்தில் ;

பெருஞ்சோலைகளில் ; தயிர் பால் திருடியுண்ட கண்ணன் போன்ற செல்வர்கள் பலருடைய அழகிய மாளிகை வாயில்களில் ;

வாழை கமுகு முதலியவைகளின் குருத்துகளில் ; ஒளி நிழலிடும் மதில்கள் கோபுரங்களின் அருகில், சங்குகள் ஒலிக்கும் தென்பழனிப்பதி வாழ்வான தெய்வமே ! வருக ;

இளமையும் மதர்ப்புமுடைய விடைமேல் வரும் மாதேவர் நெற்றிக்கண் மணியான மதலையே! வருக,(எ-று).

விரிவுரை

பன்னிரண்டு இடங்களில் சங்குகள் ஒலிக்கின்ற பழனிப் பதி என்பதன் மூலம், அத்தலத்தின் வளத்தை அறிவித்தபடி.

'தொகையில், தடத்தில், முன்றிலில், சாலில், கரத்தில், குடத்தில், கழுத்தில், பொழிலில், வாயிலில், அரம்பை கமுகுகளின் குருத்தில், கோபுர அருகில் வளை ஒலிடும் பழனி' எனக் கூட்டுக.

---

இளையார் - வாலிபர்கள். புரை - போல எனும் உவம உருபு. பொழிலில் - சோலைகளில். அளை - தயிர் ; வெண்ணெயுமாம். அனையார் - போன்றவர். அரம்பை - வாழை. குருத்தில் - கொழுந்துகளில். அலங்க - ஒளி நிழலிடுகின்ற. வளை - சங்குகள். மழமால் விடை - என்றும் இளமையான இடபம். பண்ணவன் - சிவபிரான்.

அணிவாயில் அரம்பை என்பதில் - முற்றத்தில் வளர்ந்துள வாழை கமுகாதியவைகளின் குருத்தில் எனினுமாம்.

காத்திலும் கழுத்திலும் சங்கணி இருத்தலின், யாழ் புரை கரத்தில், பொற்கழுத்தில் சங்கொலிக்கின்றது என்றார்.

கரத்திற்கும் கழுத்திற்கும் சங்கு உவமையாதல் உண்டு; அது கருதி உரைத்தார் எனலும் ஒருவகை.

"கடற்படு பணிலமும் கன்னிப் பூகமும்
மிடற்றினுக் குவமையென் றுரைக்கும் மெல்லியோர்"

என்பர் கம்பர்.

பழனி ஆண்டவரை, நுதல் கண்மணி எனும் அருமை மறக்கமுடியாத பெருமை. விடை - காளை. இளமையும் அழகும் காளைப் பருவமும் முருகனுக்குண்டு. முருகற்கும் இடபத்திற்கும் ஏற்ற ஒப்புமை இது எனினுமாம். (ச)

எடுக்க வருக ! மலர்க்கரத்தில்
ஏந்த வருக ! தளிர்மடிமீ(து)
இருத்த வருக ! உச்சிமுகந்(து)
இணையில் உவகை யுறவருக !
வடுக்கண் களிக்கும் படிவருக !
வனச முகைமென் முலைத்தீம்பால்
வழிய வருக! பலபணியும்
மலரும் புனைய வருக!என,
நடுக்கம் தவிர்த்தாண்(டு) அருள்கருணை
நணுகும் உமையாள் சொலுந்தொறும்போய்,
நந்தா மகிழ்ச்சி யுறும்குமரா !
ஞானப் புலவா ! நவில்துதிச்சொல்
மடுக்கும் செவியாய்! பழனிநகர்
வாழ்வாம் முருகா வருகவே
மழமால் விடைப்பண் ணவன்நுதற்கண்
மணியாம் மதலாய் வருகவே. 55

55. வடு - மாம்பிஞ்சு போன்ற. வனச முகை - தாமரை அரும்பு போன்ற. நந்தா - குறையாத. மடுக்கும் - பருகும்.

(போ - ரை.) (வாரி) எடுக்க (என்முன்) வருக; (இனியனம்) மலர்க் கரத்தில் ஏந்த வருக;

இனிய தளிர்போன்ற உன் மேனியை,(என்) மடிமேல் இருத்த வருக ;

உச்சி மோந்து, (நான்) ஒப்பிலாத உவகை பெற வருக; மாம்பிஞ்சு ஒத்த (என்) கண்கள் மகிழ வருக ;

தாமரை அரும்பு போன்ற (என்) மென்முலைப்பால், வழிந்து ஒழுகுமாறு வருக ;

பல அணிகளும் மலரும் அணிய வருக என்று, (அடியேனுடைய) நடுக்கம் தீர்த்து ஆண்டருளும் கருணை பொருந்திய உமையம்மை, சிறக்க அழைக்குந்தோறும் (அவரிடம்) சென்று, அடங்கா மகிழ்ச்சியை அடையும் குமரா !

(புனித) ஞானப் புலவா ! (அன்பர்கள்) பாடும் துதிமொழிகளைப் பருகும் செவிகளை யுடையவனே ! பழனிப் பதியின் வாழ்வான முருகா ! வந்தருள்.

இளமையும் பெருமையும் உள்ள விடையேறும் இறைவரின் நெற்றிக்கண் மணியாம் மைந்தா! வருகவே, (எ - று).

### விரிவுரை

ஏழு பயன் எய்த, முருகா ! என்முன் வருக என்கிறாள் எம்பெருமாட்டி. அவள் நலமருள் கருணை ஒன்றே நடுக்கம் தவிர்ப்பது. உ+ம்+அ=உமா ; இப்பிரணவ வடிவப் பெருந்தேவி, பேரன்பால் அழைக்குந்தோறும் ஆநந்தோதய அம்மான் வெளிவருவன் எனும் குறிப்பை இங்கு எண்ணத் தகும்.

வடுக்கண் - மாவடு போன்ற கண் ;

" மாவடு வகிரன்ன கண்ணி பங்கா "

என்பது திருவாசகம்.

வெறும் புலமையர் பிறர் ; ஞானப் புலவன் நம்பன். துதிச்சொல் மடுக்கும் என்பது, பழனிக்கும் அடை ; பழனி வாழ்வாம் முருகற்கும் ஆம். (௫)

கரவுபடு நெஞ்சர்உறு பலமத விகாதமும்
கதிரெதிர்ப் பனியதாகக்,
காலியொடு கன்றினம் வதைத்துண்(டு) உவக்குமவர்
கனலில்எழு பூளையாகப்,
பிரமன்மிசை பழிசொல்லி அங்கிமுன் அசக்கொலைசெய்
பேயரும் தூயராக,
பெத்தமதை யேமுத்தம் என்றுமகிழ் வுற்றிலகு
பித்தரும் சுத்தராக,
தரம்அதரம் அறியார் தமைப்பரவு பாவலவர்
தாமும்அதி நேமராக,
சந்ததம் கருதியுனை வந்தனைசெய் கின்றேன்
தவித்துச் சலித்திடா(து,)ஓர்
வரமுதவு தற்குறித்(து) இக்கணம் மயிற்பரியில்
வருகநனி வருக அருகே
வயலூர்மலைத்தலையில் வாழும்வடி வேலவா!
வருகநனி வருக அருகே. 56

(பொ - ரை.) வஞ்சம் கொண்ட நெஞ்சினர் எழுப்பும் (சால்பற்ற) பல சமய சச்சரவுகளும், பரிதிமுன் பனிபோல் மறைவுறவும் ;

பசுவுடன் கன்றுகளை வதைத்துப் புசித்து மகிழ்பவர், அக்னியில் விழும் பஞ்சுபோல் அழியவும் ;

பிரமன் மேல் பழிசுமத்தி,(வேள்வியின் பெயரால்)அழல் முன் ஆட்டை வதைக்கும் பேயர்களும் தூயவர் ஆகவும் ;

பந்தம் கொண்ட சூழ்நிலையை, (இதுவே) முத்தி நிலை என்று மகிழ்ந்து வாழும் அறிவிலிகளும், தூய அறிவினராகவும் ;

---

56. கரவு - திருட்டுத் தனம். விகாதம் - சச்சரவு. கதிர் - பரிதி. காலி - பசு. பூளை - பஞ்சு ; பூளைப் பூவுமாம். அங்கி - அக்கினி. அசம் - ஆடு. பெத்தம் - பந்தநிலை. முத்தம் - விடுதலை. தரம் அதரம் - தராதரம். நேமர் - நியம நிலையினர்.

தக்கன தகாதன அறியாத பாமரரைப் பாராட்டும் பாவலர்களும், (மனம் மாறி) உத்தம நியமம் உள்ளவர் களாகவும் (கருதி);

என்றும் உம்மை எண்ணி வழிபடுகின்ற அடியேன், (உலகியலில்) அலமந்து சோர்வை யடையாதபடியும்;

வரம் வழங்கற் பொருட்டு, இப்போதே (வாவும்) மயிலாகிய ஊர்தியில் வருக ஐய! விரைந்து வருக.

பழனிமலை உச்சியில் வாழும் வடிவேலவா! வருக ஐயா! விரைந்து வருக, (எ - று).

விரிவுரை

சமயப் போர்வையில் சார்தல்; சுயநலத்தில் சுழித்தல்; தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடுதல் செய்தலை, 'பலமத விகாதம்' என்றார். விகாதம் - ஒன்றையொன்று முரணும் நிலை.

'அறம் பாவம்; ஆயிழையார் கூடல்
சிறந்த நலமார் சுவர்க்கம்; பிரிதல் நரகம்'

என்று உணரும் உலகாயதரை, 'பெத்தமதை முத்தமென்று உணர் பித்தர்' என்றார்.

பகுத்தறிவு இலாதவர், 'தரம் அதரம் தெரியாதவர்' எனப் பெற்றனர்.

மதவாதிகள் பனிப்படலம்; அவர்கள் ஆதித்தன் முன் பனிபோல் ஆதல்வேண்டும்.

பசுவதை செய்வார், நெருப்பிற் பட்ட பஞ்சு போல் அழிதல் வேண்டும்.

வேதன் சொன்ன வேள்வி முறை என்று அவன் மேல் பழியை யிட்டு வேள்வி செய்பவர், 'அஜமேதம்' என்று பெயரிட்டு ஆட்டைக் கொல்பவர். அவர்கள் உயிர்க் கருணையுள்ள தூயவர்கள் ஆகவேண்டும்.

*பெண்களே கண் கண்ட தெய்வங்கள் என்று மயங்கி இருப்பவர்கள் பித்தர்கள்; அவர்கள் அந்த மயக்கம் அகன்று தூயவர்கள் ஆகவேண்டும்.*

*தாராதரம் அறியாத கீழ்மையர் பலருளர். வருவாய் கருதி அவர்களை வாழ்த்தும் புலவர்கள், மிகத் தாழ்ந்தவர்கள் ஆவர். அவர்களை நல்வழிப்படுத்தும் நியமத்தன் ஆக வேண்டும் அடியேன் என்று, சந்ததம் உம்மை வந்திக்கின்றேனே! இது உமது திருவுளம் அறியாததோ?*

*வாய்ப்பான அதற்குரிய வரமொன்று வழங்க, இப்போதே மயில் மேல் வா ஐயா! என, வீழ்ந்து பணிந்து விண்ணப்பித்தபடி.* (௬)

சங்கையறு மெய்ஞ்ஞான சாரம்அறி வார்களும்
சகலதே வரும்நெருங்க,
தபனன்இக லவன்உயிர்கொள் பவன்முதலி னோர்
தக்கபல் இயம்முழங்க, [தொழத்
கங்கைபுதல் வன்கரிய மாயன்மரு கன்குகன்
கார்த்திகே யன்கடம்பன்
கருணா கரக்குமரன் என்றுதமிழ் வாணர்பலர்
கவிகளால் துதிசெய்திடக்,
கொங்கைகள் குலுங்கஅர மாதர் நட னம்செயக்,
குக்குகூ என்றுசேவற்
கொடிஒலி டக்,ககன வனிதையும் குறவர்தரு
கோதையும் எனக்குலாவும்
மங்கையர்கள் இருவருடன் இக்கண மயிற்பரியில்
வருக! நனி வருக அருகே!
வயலூர் மலைத்தலையில் வாழும்வடி வேலவா!
வருகநனி வருக அருகே. 57

57. *சங்கை - ஐயம். தபனன் இகலன் - பானு கோபன். உயிர் கொள்பவன் - வீரவாகு தேவர். பல் இயம் - பல வாத்தியம். அர மாதர் - தேவ மாதர்கள். ககண வனிதை - தேவ யானை.*

(போ - ரை.) சந்தேகம் அற்ற சாரமான சிவஞானப் பொருளை அறிந்து மகிழும் அனுபவிகளும், அமரர் அனைவரும் அணுகி இருக்க ;

பானுகோபன் உயிரைக் கவர்ந்த வீரவாகுதேவர் முதலினோர் தொழுது தொடர ; தகுதியுடைய (முதன்மை) வாத்தியங்கள் பல முழங்க ;

காங்கேயா ! (மாபெரும்) சூரிய மால் மருகா ! குகா ! கார்த்திகேயா ! கடம்பா ! கருணாகரக் குமரா ! என்று தமிழறிஞர் பலர் தூய கவிகளால் துதி பாட ;

நகில்கள் குலுங்க, விண் மகளிர் நடனம் ஆட, குக்குகூ என்று, சேவல் கொடி நாதக் குரல் கொடுக்க ;

தேவயானை, குறவர் தந்த கோதையான வள்ளியம்மை என விளங்கும் இருவருடன், இப்போதே மயில் ஊர்தியில் வருக பெருமா ! அதி விரைவில் வருக ஐயா !

பழனிமலை உச்சியில் எழுந்தருளிய ஞான வேலாயுதா! வருக ஐயனே! அதிக விரைவில் வருக, (எ - று).

## விரிவுரை

பொய்ஞ்ஞானம் போய்த் தொலைய, மெய்ஞ்ஞான நூற்களில் உறவு மேவினர். அவைகளை இடையறாது ஓதினர். உரிய பயனை உணர்ந்தனர். அதை அனுபவிக்கும் அவர்களே அருந்தவ சீலர்கள். முருகனைச் சூழ்ந்த முதல் வட்டத்தர் இந்த முனிவர்கள்.

அடுத்துச் சூழ்ந்திருப்பவர் அமரர்கள் ; அவர்களை அடுத்து மொய்த்தவர் வீரவாகு முதலினோர் ; அவர்களை அடுத்து அணுகியவர், கவிமாலை புகழ்பாடும் கவிஞர்கள் ; அவர்களை அடுத்துச் சூழ்ந்தவர், பரம திருவருள் வன்மையை ராக தாளத்தால் ஆடிக்காட்டும் பரத மகளிர்.

அடுத்து, சிறந்த நாதச் சேவலான வெற்றிக் கொடி; அதை யடுத்து, வள்ளி தெய்வயானையர். இது வைப்பு முறை.

இத் திருவோலக்கத்தை அடியேன் கண்டு களிக்க, வா ஐயா! வா என்று, பரமன் வருகையை விழைந்து பாடியபடி.

தபனன் - (நன்றாகத்) தபிப்பவன் எனும் பொருளில் பகலோனை உணர்த்தியது; வடசொல். அறிவை மறைக்கும் அஞ்ஞானம்; அதுபோல், சூரபன்மன் மகன் பானு கோபன், கதிரவனைத் தொட்டிலில் கட்டி வைத்தான். அதனால் அவனை, 'தபனன் இகலன்' என்றார்.

அப் பானுகோபனை அழித்து, 'அண்டர் பொய் வாழ்வையும் அயன் பொய் வாழ்வையும், விண்டுவின் வாழ்வையும் வெஃகி லேனியான்; தண்டைகள் அணிந்த நின் சரணத் தன்மையே, கொண்டிட வேண்டுவன்' என்று வேண்டி, அப்பேறு பெற்ற வீரவாகுவை அடுத்துக் கூறினார்.

அவருடன் உதித்த எண்மரையும், இலட்சம் வீரர்களையும், இரண்டாயிரம் பூத வெள்ளங்களையும், 'முதலினோர்' என்பதில் பெற வைத்தார்.

கங்கை புதல்வன் முதலிய விளிப்பெயர்கள், இயல்பு பெற்றன. கார்த்திகேயன் - கார்த்திகை மாதர்களின் பாலையும் அன்பையும் பருகியவன் எனும் பொருட்டு.

அவர்கள் பாலூட்ட, கங்கை அலைமேல் தாலாட்ட வளர்ந்து, மாயன் மருகனாய், இதயப் பள்ளியறையில் இருந்து, போக கடப்ப மாலை புனைந்து, உச்சிக்கு மேல் உள்ள பன்னிரண்டு அங்குல அனுபவ ஆன்ம அரங்கின் ஆகம் தழுவும் அருளற்புதனை, 'குமரன்' என்றார். இப் பாட்டில் உள்ள ஆறு திருப்பெயர்ப் பொருளை ஊன்றி உணர்ந்தால் உவகை உதிக்கும். (எ)

வேறு

*தனதன தனதன தனதன தனதன*
*தனனு தனன தனதனு*

அறிவினை அறிபவர் அநுபவ முழுமையும்
அதுவா மிளிர அருள்செய்வாய் !
அருணையில் ஒருமுது சிகரியின் வடபுறம்
அமைவான் நுவல்பல் கவிகொள்வாய் !
மதியொடு மழுவணி தருகரர் விழியுமிழ்
மணியாம் எனமுன் வருகுகா !
மகிதலம் அளவிய நெடியவன் அமரர்முன்
வழுவா(து) உரைசெய் புகழ்உளாய் !
வெறிகமழ் குரவமென் மலர்அலர் புயமிசை
விதிர்வேல் புனையும் வயவனே !
விடஅர வினம்அழ அகவிய மயில்மிசை
விரைவா யுலகை வளைகுவாய்
பறிதலை அமணர்கள் குடிகெட வெகுள்சிறு
பனவா ! வருக வருகவே
பழனிமலையிலநு தினம்வளர் சரவண
பவனே ! வருக வருகவே. 58

(பொ - ரை.) *அறிவினை அறியும் ஞானிகளின் முழு அநுபவமும், அதுவாம்படி விளங்க அருள்பவனே !;*

---

58. *மிளிர - பிரகாசிக்க. முது சிகரி* - பெரிய **கோபுரம். அமைவான் - அமைந்த அருணை முனிவன். கரர் - கரத்தை யுடையவர். மகிதலம் - நிலவுலகம். அளவிய - அளந்த. நெடியவன் - திருமால். வெறி - மணம். புயம் - தோள். குரவம் - குரா மலர். வயவனே - பெரிய வீரனே. அகவிய - ஒலித்த. பறிதலை - (மயிர்) பறித்த தலை. பனவா - அந்தணனே.**

அண்ணாமலையில் உயர்ந்த ஒரு பெரும் கோபுரத்தின் வடபுறத்தில் இருந்த அருணகிரியார் அருளிய பல பாமாலை சூடிய பரமா !;

மாறொடு மழு ஏந்திய திருக்கரச் சிவனார் (வித்தக நெற்றிச்) கண்களி லிருந்து வெளியான (சுப்பிர)மணியாம் என, முன்னொரு சமயம் வெளியான (இதய) குகா !;

உலகளந்த திருமால்,உம்பர்முன் குறையின்றி உரைத்த (புனித) புகழை யுடையோனே !;

மணம் கமழும் மென்மைக் குராமலர் மாலை புனைந்த திருத்தோள்மேல், (மாபெரும்)ஒளிவேல் தாங்கிய மாவீரா!;

(பயங்கர) நஞ்சுடைய பாம்பினங்கள் பதறியழும்படி ஒலித்த மயில்மேல், (மாங்கனிக்காக,) வாவி உலகை (ஒரு நொடியில்) வலம் வந்தவனே !;

தலைமயிர் பிடுங்கிகளான சமணர்கள் குடி (அடியொடு கெட்டழிய,) வெகுண்ட இளம் அந்தண (ஞானசம்பந்த)ராக வந்தவனே !; வருக (ஐயா ! நீ) வந்தருள்க.

பழனி மலையில் நாள்தோறும் விளங்கும் சரவணபவனே! வா ஐயா ! (என்முன்) வருக பெரும, (எ - று).

## விரிவுரை

எதையும் அறியாமை கேவல நிலை. உலகை யறிதல் சகல நிலை.

இந்த இருநிலையும் இன்றி,முதல்வனை அறியும் முறையை வினவி அறிதல் ; அறிந்ததனைச் சிந்திக்கும் முறையில் சிந்தித்தல் ; சிந்தித்த பொருளில், வைக்கும் முறையில் அன்பை வைத்தலே மேலோர் வழக்கம்.

இவ் வகைமுறையால் இரக்கம் காட்டிய திருவருள், இரண்டற ஆன்மாவில் இணையும். அந்நிலையில், ஆன்மாவின் இயல்பான அறிவும் அறியாமையும் அகலும். மெய்ஞ் ஞானம் அதன் பிறகு மேவும். அந்த அருளறிவால், பரத்தில் ஆன்மா படர அவாவும்.

அவ்வமயம், அவ்வான்மாவில்,என்றும் பிரியாத சிவம் பிரிந்து தோன்றும். காட்சியாகும் பரத்தை ஆன்மா கண்டு களிக்கும். அருள் முதலாளியை அறிகின்றேன் என்பது அகங்காரம். ஆதலின், அதற்கு அயலாகி, சாட்சி மாத்திர மாகி, சும்மா கண்டு ஞானிகள் சுகம் பெறுவர்.

அது கண்ட சிவம், அகிலமும் தானாகி, அந்த நிலையை யும் அறியுமாறு அருளும். அதன்பின் எதனோடும் ஒன்ருது ஒன்றி, தான் அதுவாகி, நிராதாரனாகி நிற்கு நிலை அனுபூதி எனப்பெறும். (அநு - உடன் ; பூதி - ஆதல்.) இந்நிலையை,

' அறிவினை அறிபவர் அநுபவம் முழுமையும்
அதுவா மிளிர அருள்செய்வாய் '

என்பதில் அறிவித்தார்.

" ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
அடங்க வெளியாக வெளிசெய்து
அறியாமை அறிவாதி பிரிவாக அறிவார்கள்
அறிவாக நின்ற நிலையில்
சிந்தையற நில்லென்று சும்மா வுணர்த்திமேல்
சின்மயா நந்த வெள்ளம்
தேக்கித் திளைத்துநான் அதுவா யிருக்கநீ
செய்சித்திரம் மிகநன்று காண் "

எனும் தாயுமானரையும்,

' அறியாமை அறிவகற்றி, அறிவின் உள்ளே
அறிவுதனை அருளினல் அறியாதே அறிந்து,
குறியாதே குறித்து. அந்தக் கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகிற்,
பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்,
பிரபஞ்ச பேதமெல்லாம் தானய்த் தோன்றி,
நெறியாலே இவையெல்லாம் அல்லவாகி,
நின்றென்றும் தோன்றிடுவன் நிராதாரன் ஆயே '

எனும் சிவஞான சித்தியாரையும்,

'அறிவொன்(று) அறநின் றறிவார் அறிவில்
பிறிவொன்(று) அறநின்ற பிரான் அலையோ'

எனும் கந்தர் அநுபூதியையும் இங்குக் கருதத் தகும். (அ)

தனன தனன தனன தனன
தனன தனன தனதன

கசமும், அரியும், அளவில் கிளைகொள்
கடலின் மரமும் அடவலாய்!
கமலம் விரவு குவளை யனைய
கருணை விழிகள் பலகொள்வாய்!
நிசமில் அமணர் கழுவில் மடிய
நிகரில் கவிகள் பகர்பவா!
நிதமும் உயிர்கொல் வினைசெய் புலைஞர்
நிரையம் முழுக முடுகுவாய்!
வசவன் எனமெய் அடியர் பணிசெய்
மகர்தம் மனதை அகல்கிலாய்!
மதுர வசன சரசு வதியுள்
மகிழ்வொ டுணர்பல் வகைசொல்வாய்!
அசல முழுதும் மயிலின் முதுகில்
அலையும் வயவ! வருகவே
அரிய பழனி மலையில் மருவும்
அதுல முருக வருகவே. 59

(பொ - ரை.) (தாருகன் ஆகிய) யானையையும், (அரிமுகன் எனும்) சிங்கத்தையும், கடலின் (நடுவிடத் தெழுந்த)

---

59. கசம் - யானை (முக) தாருகன். அரி - சிங்கமுகன். மரம் - மாமரம். அட - அழிக்க. நிசம் - மெய்ம்மை பகர்பவர் - ஆளுடைய பிள்ளையார். நிரையம் - நரகம். வசவன் - வசவண்ணர். மதுரம் - இனிமை. அசலம் - மலை. வயவ - வீர. அதுல - ஒப்பிலா தவனே.

கிளை (பல) கொண்ட (சூரபதுமனாகிய) மாமரத்தையும் அழிக்கும் ஆண்மை யுடையோனே !

கமலமும், (அதனொடு) கலந்த குவளை மலரும் போன்ற கருணைக் கண்கள் பல கொண்டவனே !;

மெய்ம்மையிலாத சமணர்கள் கழுவில் அழிய, ஒப்பிலாத பதிகங்களை (ஆளுடைய பிள்ளையாராகி) அருளியவனே !;

நாள்தோறும் உயிர்வதைத் தொழில் செய் அற்பர்கள் (மோசமான) நரகத்தில் முழுகும்படி, (பின்னிருந்து) முடுக்குபவனே !;

வசவண்ணர் போன்று மெய்யடியர்க்குத் தொண்டு செயும் மக்களுடைய அகத்தை என்றும் அகலாதவனே !;

இனிய கமலத்தில் இருக்கும் கலைமகள் உள்ளம் மகிழ் வொடு உணரும்படி, பலகலை (நுட்பம்) பகர்பவனே !;

மலைநிலம் முழுதும் மயில்மேல் உலாவரும் வீரா! வருக;

அருமையான பழனிமலையில் அமர்ந்த இணையிலாத இளம் பரிபூரணா ! (நீ) வந்தருள், (எ - று).

### விரிவுரை

தந்தி முகத்தன் தாருகன். ஆயிரம் தலைகளும் ஈராயிரம் கைகளும் உடையவன் சிங்கமுகன். அவ்விரு தம்பியருடன் தானும் மாயையில் வல்லவன் எனலைத் தரணியறிய, மாபெரும் கடலுள் மாமரமாகி, விண்ணுமாய் வேராழ்ந்து சூரபதுமன் விளங்கினன்.

அளவிறந்த அசுரர் அவன் கிளைஞர். அதுபோல், அள விலாத கிளைகளை யுடையது அம்மாமரம். அம் மூவரையும் அழிக்கும் ஆற்றலாளன்.

பகலில் மலரும் கமலம்போல், இரவில் அலரும் குவளை கள் போல், எப்போதும் அருள்பாலிக்கும் கண்கள் பதி னெட்டுக் கொண்டவன்.

உண்மை யிலாளரை ஒழிப்பவன். கொலைத்தொழிலும் புலைப்புசிப்பும் கொண்டோரை, ஆழ்நரகில் ஆழ்த்துமவன்.

அடியார்க்கு அடியர் அகம் அகலாதான்.

கலைமகளுக்கு இலக்கணம் கற்பிப்பவன் நீ அல்லவா!; மயிலேறி விளையாடும் பழனி முருகா! வருக முருகா! வருக என்றபடி.

கண்கள் பதினெட்டில், கமலக்கண்கள் பன்னிரண்டு; நெற்றியில் உள்ள குவளை மலர்க் கண்கள் ஆறு என்று அறிவது நலம்.

> 'முளரி முந்நான்கும் மூவிரு குமுதம்
> புரைவிழி ஆறும்'

எனவரும் செந்தில் அகவல் இங்கு சிந்திக்கத் தகும். (க)

குமரகுரு பரமுருக சரவணசண் முகவரத
குறைவில்அநு பவசரத! வருகவே
குலகிரிக ளுடன்உலக முழுமையுமெய் அடியர்உணர்
குடைநிழலி னிடைகொள்குக வருகவே
சமரபிர பலவயவர் அனைவர்களும் நினையுமொரு
சகள!சரு வுணுமதலை! வருகவே
சரபமுடன் இகலிஅடும் ஒருபறவை யினதுசிறை
தகரஅடர் தடிகொள்கர! வருகவே
பமரமுரல் குரவமலர் விழையுமட மகளிர்பல
பலர்கலவி நுகர்இளைஞன் வருகவே
பகடனைய வடிவுகொடு வருதமயன் உதவிகொடு(ஓர்)
பரணருகில் மகிழ்கடவுள்! வருகவே!
அமரர்படு சிறைதவிர அசுரர்களை அடுதலின் எய்(து)
அரிவைமண மகன்வருக! வருகவே
அருள்வளமை பொலிபழனி மலையில்நில வியஒருவன்
அநுதினமென் எதிர்வருக! வருகவே. 60

---

60. சரத - மெய்ம்மையனே. சமரம் - போர். சகள - உருவத் திருமேனியனே. சரு - அமுதம். சரபம் - சார்த்தூலப் பறவை. இகலி - பகைத்து. பறவை - கண்டபேரண்டப் பட்சி. தகர - தவிடு பட. தடி - வில்; தண்டுமாம். பமரம் - வண்டு. நுகர் - அனுபவிக்கும். பகடு - (முழு) யானை. அரிவை - தெய்வயானை.

(பொ - ரை.) குமரா ! குருபரா ! முருகா ! சரவணா ! சண்முகா ! வரதா ! (எக்) குறையும் இல்லாத அனுபவ மெய்ப்பொருளே ! வருக ;

எண்திசை மலைகளுடன், உலகம் முழுமையையும், மெய்யன்பர் உணர்கிற (அருள் நெடுங்) குடை நிழலில் வைத்த குகா ! வந்தருள் ;

போரில் பிரபல மெய்திய வீரர் அனைவரும் எண்ணும் ஒப்பற்ற உருவத் திருமேனியை யுடையவனே !

(பயனான தேவ) அமுதம் பருகிய மதலையே ! (எளிய என்முன்) எழுந்தருள் ;

சரபத்துடன் பகைத்து, (அதை) வருத்தும் (சூரபதுமனை)ஒரு கண்டபேரண்டப் பறவையின் இறகுகள் முறிந்து விழத் தடிந்த வில் பற்றிய திருக்கரத்தனே ! வருக ;

வண்டுகள் ஒலிக்கும் (புதுக்) குராமலர் மாலையை விழைந்து புனையும் இளமாதர் பலரிடம் பலவகையான கலவி யனுபவிக்கும் இளம்பரிபூரணா ! (இங்கு) எழுந்தருள் ;

முழுயானை போல் உருக்கொண்டு வந்த (கணபதியான) தமயன் உதவியுடன், (வள்ளியார் இருந்த)ஒரு பரண் அருகில் இன்புற்ற கடவுளே ! (இங்கு) வந்தருள்.

வானவர்கள் (வேதனைப்) பட்ட சிறையி லிருந்து விடுதலை யடைய அவுணர்களை அழித்தலால், (கைம்மாறு என) வந்த (மாபெரும்) தேவயானையின் மணவாளா! வருக, வருக ;

(புனித) அருள் வளம் பொதிந்த பழநி மலையில் விளங்கும் ஒப்பற்ற பரமா ! ஒவ்வொரு நாளும் எளியேன் முன் (சேவைதர) எழுந்தருள், (எ - று).

### விரிவுரை

(1) குமரன் -(என்றும்) பதினாறு வயதுத் திருமேனிப் பரன் ; மரணம் தவிர்ப்பவன் என்றும் இதற்குப் பொருளுண்டு.

(2) குருபரன் - தட்சிணா மூர்த்தி முதலிய குருமூர்த்தி கட்கும் மேலானவன்.

(3) முருகன் - ஞானமணம் கமழ்பவன்; இன்பத் தேனா யிருப்பவன்; ஓம் பொருளாகி உறைபவன்; அழகின் கொழுந்தானவன் என்றெல்லாம் பொருள்படும் திருப் பெயர் இது.

(4) சரவணன்-மங்களம் ஈகை அறம் மறம் ஆனவன்.

(5) சண்முகன் - ஆறுதிசை நோக்கிய ஆறு திரு முகன்; தேவிமுகம் ஒன்றும், சிவமுகம் ஐந்தும் ஆனவன் எனலுமாம்.

(6) வரதன் - (கேட்ட வரம் தரும்) கேடிலாத் தாதா.

(7) அநுபவ சரதன் - தியான அனுபூதியில் விளையும் தெய்வ மெய்ம்மையன்.

(8) குகன் - (எவரையும் காக்கும்) மாபெரும் உள்ளக் குகை மன்னன்.

(9) சகளன் - (போர் மறவர் எண்ணும்) வீர மேனியன்.

(10) சருவஞ்ஞ மதலை - தூய அமுது துய்ப்பவன்.

(11) மதலை - தெய்வச் சேய்.

(12) தடிகொள் கரன் - தண்டாயுத பாணி.

(13) இளைஞன் - (உயிருள் மருவும்) கட்டிளங் காளை.

(14) கடவுள் - (வாக்கு மன ஆக்கைக்கு) அப்பா லோன்.

(15) மணமகன் - தேவயானை மணாளன்.

(16) ஒருவன் - ஏகன்; ஒப்பற்ற முதல்வன்.

இங்ஙனம் பயனுள திருநாமம் பலவுடைய பெரும! எளியேன் சேவிக்குமாறு வந்தருள் என்றபடி. (௬0)

வருகைப் பருவம் நிறைவெய்தியது.

# 7. அம்புலிப் பருவம்

**ம**கவுடன் விளையாட வரும்படி, மதியை அழைக்கும் பருவம் இது. அம்புலி - சந்திரன் ; அழகு புல்லப் பெற்றது எனக் காரணம் பற்றிய பெயர் ; புல்லுதல் - பொருந்துதல். பதினெட்டாந் திங்களில், இப்பருவம் பாடப்பெறும்.

பிறபருவம் பாடுவது எளிது ; அம்புலிப் பருவம் பாடுவது, அவ்வளவு எளிதன்று. "பிள்ளைக் கவிக்கு அம்புலி புலியாம்" என்பர் அறிஞர். அம்புலியை யழைக்கும் பொழுது, சாம பேத தான தண்டவகையால் முறைப்படி அம்புலிக்கும், பாட்டுடைத் தலைவனுக்கும் ஒப்புக் கூறலும், வேற்றுமை கூறலும், விளையாட வந்தால் அம்புலிக்கு வரும் நன்மையை விவரித்து உரைப்பதும், வாராவிடில் விளையும் துன்பம் இவையென்று விளக்கலும் மாபெருங் கவிஞர் மரபு.

### சாமம் (சமம்)

கயிலைப் பெருங்கடவுள் விழியிற் பிறந்(து)அலைக்
 கயநீர் முழுக்காடினாய் !
கற்பகநி ழற்புலவர் அவுணரால் மடியாது
 கனவுதவி செய்தளித்தாய் !
வெயிலைத் தரும்பரிதி உடலுட் புகுந்துற்று
 மீண்டும் குளிர்ச்சி குன்றாய் !
மேடத் திவர்ந்(து)இணையில் இடபத்தும் ஏறியே
 மிதுனத்தில் ஆசை கொண்டாய் !

---

61. கயநீர் - சரவணப் பொய்கை நீரில் ; கடல் நீரில். புலவர்-தேவர்கள். கனவுதவி - பேருதவி. மேடம் - ஆடு இடபம் - விடை. மிதுனம் - மிதுனராசி. சயிலத்தலை - மலையுச்சி. தொந்தம் - தொடர்பு. தாரகை - நட்சத்திரம். அக சம்பந்தம் - உள்ளத்

சயிலத் தலைத்தொறும் ஒருநாளும் ஒழிகிலாய்
தாரகைக் கூட்டம் விழைவாய்
தாமோத ரன்றன் அக சம்பந்தம் எய்தலால்
தானவர்க் கூறு செய்தாய்
அயிலைப் பொருந்துமுரு கையன்உனை அனையனுல்
அம்புலீ ஆட வாவே
அன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுடன்
அம்புலீ ஆட வாவே. 61

(பொ - ரை.) கயிலைப் பெருந்தெய்வமான சிவபிரானுடைய (நெற்றிக்) கண்ணிற் பிறந்து, அலைகளை யுடைய கய நீரில் முழுக்காடினை ;

கற்பக நிழலில் இருக்கும் வானோர், அவுணர்களால் அழியாதபடி (சிறந்த) பேருதவி செய்தனை ;

வெயிலைத் தரும் பரிதியின் (புனித) மேனியுள் புகுந்து, மீட்டும் குளிர்ச்சி குன்றாது இருக்கின்றாய் ;

மேட ராசியில் இவர்ந்து, இணையில்லாத இடபராசியிலும் ஏறி, (இனிய) மிதுன ராசியிலும் இச்சை வைத்தாய்;

(எந்த) மலையின் உச்சியிலும், ஒரு நாளும் நீங்காத உறவு பூண்டனை ;

விண் மீன்கள் தொடர்பை விரும்பினை ;

திருமாலின் இதய சம்பந்தம் எய்தியதால்,(அவர்போல்) அவுணர்கட்கு இடையூறு அதிகம் விளைவித்தனை ;

வேல் ஏந்திய முருகையன், உனை ஒப்பானவன் ; (ஆதலின், அவனொடு) மதியே ! நீ விளையாட வா ;

அன்பர்கள் நிறைந்த தென்பழனியில் எழுந்தருளிய கந்தனுடன் சந்திரா ! நீ விளையாட வா, (எ - று).

---

தொடர்பு. தானவர்க்கு - அசுரர்க்கு. ஊறு - இடையூறு. அயிலை - வேலை. அனையன் - போன்றவன்.

## விரிவுரை

சிவனார் விழியில் உதித்தவன் செவ்வேள் பிரான்; நீயோ அந்த இறைவர் இடது விழியானாய்.

உதயம் ஆனதும் அறுமுகன், சரவணப் பொய்கையில் ஆடினான்; உதய காலத்தில் நீயும், மேற்குக் கடலில் முழுக்காடினை.

அவுணரால் அமரர் அழியாதபடி, முருகன் சிறந்த உதவிகள் பல செய்தான்; உம்பர் இறவாதபடி, நீயும் அமுதம் உதவினை.

> " உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு "

என்று உவமைகாட்டிப் பாடி மகிழ்பவர் பாவலர். 'அருக்கன் ஆவான் அரன் உரு அல்லனோ' என்பது தமிழ் மறை. அங்ஙனமே பரிதி நடுவிருக்கும் குமாரபரன், எரிபெரி யென்று இல்லாமல் தண்மை அருள் என்றும் தழைத்தவன்.

> " பத்தி ரட்டியில் ஈரிரண் டொழிந்த பல்கலையோன்
> மித்தி ரர்க்குஅவை கொடுத்துமுன் மீளவும் கவர்வோன்,"

என்று பாரதம் பகர்வதுபோல், பரிதியுட் புகுந்து வெளிப் பட்டும், குளிர்ச்சி குன்றாதவன் நீ.

ஆட்டில் ஊர்ந்து, விடைமேல் ஏறி, இரு தேவியர்பால் முருகன் இச்சை யுடையவன்; அவன்போல் மேடராசி யில் ஏறி, இடப ராசிக்கும் உரியவனாய், (இரட்டை வடி வான) மிதுன ராசியில் இச்சை வைத்தவன் நீ.

எந்த மலையும் தன் சொந்தம் என்று இருப்பவன் கந்தன்; அப்படியே எம்மலைத் தொடர்பும் உடையவன் நீ.

அறுவரான கிருத்திகா நட்சத்திரங்களை, அன்னையரென ஆவலித்தவன் முருகன்; நீயும் நட்சத்திர மாதர்களில் நெடுங்காதல் கொண்டவன்.

திருமாலின் திருவுளத்தில் திருமுருகன் உளன்; "எங்கள் மாதவன் இதயமா மலர்வரும் உதயத் திங்கள்" என்று ஆன்றோர் பாரதத்தில் அருளியபடி, அத்திருமாலின் திருவுளத்தில் இருந்து பிறந்தவன் நீ.

திருமாலின் தொடர்பால், அவர் வேண்டியபடி அவுணர்களை முருகன் அழித்தான். அப்படியே நீயும் அவுணர்கட்கு அழிவு செய்பவன்.

இந்நியாயங்களால், உனக்குச் சரி நிகர் சமமானவன் பழனியான். ஆதலின், வேலுடைய அவனொடு,' சந்திரா! நீ விளையாட வா! உன்னொடு முருகனுக்கு ஏற்றத் தாழ்வு இல்லை. தெரிகிறதா என்று சமம் கூறும் இப்பாடல், சாமோபாயம் எனப்பெறும்.

"கண்ணுதல் நண்ணிய கண்ணில் உலாவும்" என்ற கந்த புராணப்படி, நெற்றிக் கண்ணில் உதித்த நிமல முருகன், சந்திரனாகிய இடக்கண்ணிலும் புகுந்து விளையாடல் அறிக. (க)

மா நிலத்(து) உற்றபல மக்கட்கும் விளையாடும்
வாஞ்சைவரு வித்தலாலும்,
வானுல(கு) உடைக்காம தேனுவின் பாலனைய
வால்ஒளி பரப்பலாலும்,
கானிடத் திற்குடிகொள் வார்களும் கண்டுளம்
களிகூர வருதலாலும்,
கயிரவம் விழைந்திடுத லாலும்,சில் மாதரைக்
கவலாது மகிழ்வைத்து

---

62. வாஞ்சை - விருப்பம். பாலனைய - பால்போன்ற. வால் - தூய்மை. கான் - காடு. குடிகொள்வார் - குடியிருப்பவர். கயிரவம் - குவளை மலர். கவலாது - வருந்தாமல். வேனில் மதன் - வேனில் பருவ மன்மதன். மால் - பெரிய; மதமயக்கம் கொண்ட. வேழத்

வேனில்மத ஞற்சில மடந்தையர் துயர்ப்பட
விடுத்திடுத லாலும், ஒருமால்
வேழத்தில் ஏறிமிளிர் வதனுலும், ஈசன்றன்
வேணிமணம் வீசலாலும்,
ஆனியில ஞனகும ரேசனை நிகர்த்தியால்
அம்புலீ ஆடவாவே
அன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. 62

(பொ - ரை.) மாபெரும் நிலவுலகத்தில் வாழும் மக்கட்கும், உவகையை விளையாட்டில் உண்டாக்குதலாலும் ;

தேவ லோகத்தில் இருக்கும் காம தேனுவின் பால் போன்ற தூய ஒளியைப் பரப்புதலாலும்,

காட்டில் குடியிருப்பவரும் கண்டு, உள்ளம் களிதுள்ள உதயம் ஆதலாலும் ;

விரியும் குவளை மலரை விரும்புதலாலும் ;

(கார்த்திகை, உரோகிணி யாதிய) வனிதையர் சிலரை வருந்தாது மகிழவைத்து, (காமம் விளைவிக்கும்) வேனில் காலத்திற்குரிய காமனுல், காரிகையர் சிலரை வருந்தக் கைவிடுதலாலும் ;

ஒப்பற்ற மதமயக்கமுடைய உயர்ந்த யானைமேல் ஏறி, ஒளியொடு உலா வருதலாலும் ;

(விமல) சிவனுருடைய சடைமணம் (மேனியில்) வீசப் பெறுதலாலும், பழுது இலாத உத்தமக் குமரனை ஒத்திருக்கின்ருய் ; (ஆதலால்,) மதியே ! விளையாட வா ;

அன்பர் நிறை தென்பழனியில் எழுந்தருளிய கந்தனுடன் சந்திரா ! விளையாட வந்தருள், (எ - று).

---

தில் - யானைமேல். வேணி - சடை. ஆனி யிலன் - பழுதில்லாதவன். நிகர்த்தி - சமமாயினை.

**விரிவுரை**

குழந்தைகள் உலகம், உனது நிலவில் குதூகலிக்கின்றது; அதே குழந்தை உருவில், விளையாடுகின்றான் குமரேசன்.

நிலவு ஒளியால், வெண்ணிற மேனியன் நீ; நீற்றின் ஒளியால், முருகனும் வெண்ணிறம் உடையவன்.

கானவரும் உன் வருகை கண்டு களிகூர்வர்; அம் மறவரும் வழிபட வருபவன் முருகன்.

உன் வருகை கண்டு குவளைகள் மலரும்; அக் குவளை மாலை சூடுபவன் குமரன்.

கார்த்திகை உரோகணி முதலிய நட்சத்திர மாதருடன், ஊடலும் கூடலும் உனக்குளது; அங்ஙனமே தியான மோனர்களுடன் ஊடல் கூடல் முருகற்குளது; (மடந்தையர் என்பது, சாதனையில் வளர்ந்த சதுரர்களைக் குறித்தது.)

யானைமேல் பவனி வருபவன் நீ; கந்தன், திரு ஞான வேழத்தில் உலா வருபவன்.

சிவனார் திருமுடிச் சடையில் இருந்து, அங்குள கொன்றைச் சார்பால் திருமணம் கமழும் திருமேனியன் நீ. அதே திருமுடியில் விளையாடி, மணம் கமழ் மேனியன் மயிலிறைவன்.

இத்தகைய செய்திகளால், சந்திரா! நீ உத்தமக் குமரனை ஒத்திருக்கின்றாய்; அதனால்தான் அழைக்கின்றேன் என்பது கருத்து.

குறிப்பு :—தேனு - (நினைத்ததை நிறைவேற்றும்) தேவலோகப் பசு; இது, பாற்கடலில் அமுதெழுந்தபோது உடனெழுந்தவைகளுள் ஒன்று. வால் - வான்மை; தூய்மையெனும் பொருட்டு. "வாலறிவன்" எனும் திருக்குறளிலும் இது இப்பொருட்டாதல் அறிக. கயிரவம் - குவளை.

சித்திரை வைகாசி இளவேனில்; ஆனி ஆடி முதுவேனில்; இவை, காமத்தீயைக் காமன் பெருக்குகின்ற

காலங்க ளாதலின், காமன் 'வேனில் மதன்' எனப் பெற்றான். (உ)

கொங்கைமயி லேயனைய மங்கையர் அனேகர்மயல்
கொண்டுவலி(து) அணையும் அழகும்,
கூறும்ஒரு பதினாறு கோலத்தன் எனமறைக்
குலம்இசைக் கும்சிறப்பும்,
பங்கய மலர்த்திரள் எலாம்ஒல்கு பேரெழில்
படைத்தஆ னனமும், உள்ள
பன்னிரு நெறிக்கொண்டும் ஏகுதிற மும்,பிறர்
பழிக்கரிய மானமும்,பாழ்ங்
கங்கம்நரி நாயைஅனை யார்புரி புலைப்பூசை
கருதாமை யும்கழைக்கைக்
காமனைக் கீழ்ப்படுத் தும்கனமும் எய்தலால்,
ககனம்விழை தரும்எம்பிரான்
அங்கைமல ரால்உனை அழைப்பதறி வாயென்னில்
அம்புலீ ஆடவாவே
அன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. 63

(பொ - ரை.) குயங்களை யுடைய மயில்போன்ற மங்கையர் பலர், மயங்கி வலிந்து அணைந்து கொள்ளும் அழகும்;

(சிறப்பித்துக் கூறும்) பதினாறு கோலம் உடையவன் என்று, (செம்மை) வேதங்கள் கூறும் சிறப்பும்;

கமலமலர்த் தொகுதிகள் யாவும் நாணும் படியான (தெய்வப்) பேரழகு திகழும் திருமுகமும்;

---

63. ஒல்கும் - நாணுறும். ஆனனம் - முகம். நெறி - வழி. கங்கம் - கழுகு. கழைக் கை - கரும்புவில் ஏந்திய கை. கனம் - மதிப்பு. ககனம் - விண்ணுலகம்.

இருக்கும் பன்னிரண்டு வழியில் ஏகுகின்ற திறமையும்;

அயலார் பழிக்க இயலாத மானமும், பாழான கழுகு நரி நாய்கள் போன்றவர் புரியும் புலால் (நிவேதன) வழிபாட்டைப் பொருளாக் கொள்ளாமையும் ;

கரும்பு வில் ஏந்திய கைக் காமனைக் கீழ்ப்படுத்தும் (எடுப்பான) மதிப்பும் எய்தி யிருத்தலால் ;

(விண்ணுலக) இமையவர் விரும்பும் எம்பெருமான், அழகிய கைத் தாமரையால் உன்னை அழைப்பதை அறிவாயேல், மதியே ! நீ விளையாடவா ;

அன்பர் நிறை தென்பழனில் எழுந்தருளிய கந்தப் பெருமானுடன், மதியே ! (நீ) விளையாடவா, (எ - று).

## விரிவுரை

மயில்போன்ற சாயலுடைய நட்சத்திர மாதர் இருபான் எழுவர்; அவர்களை, மிகவிரைந்து தழுவும் அழகன் நீ. நாயகி நாயக பாவனையில், எண்ணிறந்தோர் தழுவ இருப்பவன் முருகன்.

பதினறு கலைகளை யுடையவன் நீ ; வேதம் கூறும் பதினறு திருவுருக் கொண்டவன் குமார பரன்.

கமலம் நாணும் முகத்திற்கு, உவமை கூற உரியவன் நீ ; அக்கமலம் வெட்கும் அழகிய அறுமுகம் உடையவன் இறைவன்.

பன்னிரு திங்களும், நீ வீதியாகச் செல்லும் இராசிகள் ; அகச்சமயம் ஆறு, அகப்புறச் சமயம் ஆறு எனும் பன்னிரு சமயத்தவரும் ஏத்தும் இறை, எங்கள் பரன்.

பிறர் பழிக்க இயலாத பெருமையன் நீ; அதைப்போல், எவரும் பழிக்க இயலாதவன் எங்கள் இறை.

பாழான கழுகுகளும், நரிகளும், நாய்களும் போன்ற கொடியோர் செய்யும் புலால் நிவேதனத்தை, உனை வழி

படுவார் இடத்தில் இல்லை. அதுபோல் அன்பர் முருகனை ஆராதிப்பது இல்லை.

குடையாக மேலிருந்து, காமனைக் கீழ்ப்படுத்துபவன் நீ; அழகில் அநங்கனைக் கீழ்ப்படுத்துவன் எங்கள் அத்தன்.

விண்ணவர் விரும்பும் எம்பிரான், நிலா நிலா வா வா! என்று அருமைத் தன் கைகாட்டி அழைப்பதை அறியாயா? அறிவாயேல், எவ்வகையாலும் உன்னோடு சமமான எங்கள் பழனிப் பரனுடன், மதியே! விளையாட வா என்று விளித்தபடி.

குறிப்பு :—கொங்கை மயில் - இல் பொருள் உவமை. மங்கையர் - பெதும்பை கடந்த இளம்பருவ ஏந்திழையர். புலைப்பூசை புரிவாரை, 'பாழ்ங் கங்கம் நரி நாய்கள்' என்று இழிப்பதும், அவர் வழிபாட்டை அமலன் மறுப்பதை 'கருதாமையும்' என்பதில் பெறவைத்தார். இம் மூன்று பாடலும், சதுர்வித உபாயத்துள் ஒன்றான சாமோபாயத்தைச் சார்ந்தவை. (௩)

### பேதம் (வேறுபாடு)

வையகத் துள்ளவர்க ளுங்காண நாள்தோறும்
 வரும்எளியை நீ,இவன்றன்
மலநிகளம் முறிவுபடு சிவயோக சாதனர்தம்
 மனவெளியில் உலவ வல்லான்
சையம்ஓர் இரண்டன்றி வேறுபயி லாய்!இவன்
 சகலமலை யினும்வாழ் பிரான்
தகைகுன்றி நீடிவெகு வாருதி நீ,இவன்
 தணவரும் ஒரேதன்மையான்

64. மல நிகளம் - ஆணவச் சங்கிலி. மனவெளி - இதய ஆகாயம். சையம் - மலை. தகை - தக்க தன்மை. தணவு அரும் - நீங்குதல் இல்லாத. பை அரவு - படமெடுத்த (ராகு கேதுக்களான)

பையரவின் அச்சம் படைத்துளாய் நீ,இவன்
பரியும்அதை உண்(டு)உவக்கும்
பட்சிஒன்று ஒவ்வொர்கால் உனையணையும் இவனைமுப்
பறவைதொட் டுற்றகண்டாய்
ஐயகோ, இவனுன்னை விழைவதுன் தவமாகும்
அம்புலீ ஆடவாவே
அன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. 64

(பொ - ரை.) உலகில் உள்ள எவரும் காணும்படி, ஒவ்வொரு நாளும் (பூதாகாயத்தில்) உதயமாகும் எளிமை உடையவன் நீ ; இவனோ, ஆணவச் சங்கிலியை நொறுங்கச் செய்யும் சிவயோக சாதனையர்தம் இதய விண்ணில், (வகையாகப்) பவனி வரும் வல்லாளன் ;

(உதயகிரி அஸ்தமனகிரி யெனும்) ஓரிரு மலைகளை யன்றி, வேறு (எம்மலைகளின்) தொடர்பும் இல்லாதவன் நீ; இவன், (பிரியாமல்) எம்மலைகளினும் வாழும் பிரான்.

(முழுமையாம்) தகுதி தேய்ந்து, வளர்ந்து, பலவாறான தன்மையை அடைபவன் நீ ; இவன், மாறுத ஒரே இயல்பை யுடையவன்.

(இராகு கேது எனும்) படமுடைய பாம்புகளின் (பகைமையால்,) பயங்கொண் டிருப்பவன் நீ ; இவன் (மாபெரும்) ஊர்தியான மயிலும், அப் பாம்புகளை (இலேசாக) உண்டு மகிழும் உரம் உடையது ;

(சகோரம் எனும்) ஒரு பறவை, (பருவம் பார்த்து, எதோ) ஓரொரு சமயத்தில் உன்னை அணுகும் ; இவனை, (மயில் சேவல் கிளி எனும்) மூன்று பறவைகள் தொடர்ந் திருக்கின்றன தெரியுமா ?

---

பாம்புகள். பரி - மயில். பட்சி - சகோரப் பறவை. முப்பறவை (மயில், சேவல், கிளி எனும்) மூன்று பறவைகள்.

ஐயோ! இப்பெருமான் உன்னை விரும்பி யழைப்பது, உனது முன்னைய தவப்பயன்; மதியமே! விளையாட வா; அன்பர் நிறை தென்பழனியில் வீற்றிருக்கும் கந்தனுடன், சந்திரா! (நீ) விளையாட வந்திடு, (எ - று).

விரிவுரை

நீ எளியை, இவன் வலியன். இருமலைகள் உனக்குரியன; இவர்கு எம்மலையும் சொந்தம். நீ தேய்வை வளர்வை; இவன் ஒரே தகுதியன். பாம்பின் மேல் உனக்குப் பயம்; இவன் வேகமயில், அப்பாம்புகளை விழுங்கிவிடும். கிரண வழி சிந்தும் அமுதம் பருக, ஒரு சகோரப் பறவை ஏதோ ஒரு காலத்தில் உன்னை அணுகும். தூய மூன்று பறவைகள், என்றும் இவனைத் தொடர்ந்துள்ளன. சிறந்த தவத்தை முற்பிறப்பில் நீ செய்திருக்கின்றாய்; அதன் பயனாக இன்று உன்னை அழைக்கின்றான். ஐயோ அதனை நீ அறிந்திலையே! வா சந்திரா! வா என்றபடி.

முன் உரைத்தது, சமநிலை கூடிய சாம உபாயம். சண்முகற்கும் சந்திரற்கும் உள்ள வேற்றுமை கூறி, எவ்வளவோ பேதம் இருந்தும், தற்பரன் உன்னை அழைப்பது தவப்பயன் என நினை என்னும் இது, பேதோபாயம் எனப் பெறுப. (௪)

இந்திரன் தன(து)ஏவ லாளனீ, இவன்அவற்(கு)
இனியஅர சுரிமையீந்தோன்
இகலவுண ரைக்காணில் அஞ்சுவாய் நீ,இவன்
எடுத்தவேல் கூறுசெய்யும்
மந்திர சடாக்கர செபஞ்செய்த வார்திரு
மனத்தினிடை யன்றி நுழையான்
வானில்வரு மேகங்கள் தோறும்நுழை வுற்றனை
மழுங்கிமிளிர் தரநாணிடாய்

தந்திர கலைப்புலவ ருக்கிவன் அடங்கிடான்
தக்கன்மக வருகில் நொந்தாய்
சலனமிவ னுக்கில்லை, உன்றனக்(கு) ஓடலே
தருமமா கியதுகண்டாய் !
அந்திபகல் மாறிடவும் வல்லசிறு பெருமாளொ(டு)
அம்புலீ ஆடவாவே
அன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுடன்
அம்புலீ ஆடவாவே. 65

(பொ - ரை.) நீ இந்திரனுடைய பணியைச் செய்பவன்; இப்பெருமான், அந்த இந்திரனுக்கு இன்ப அரசுரிமை அளித்தவன்.

பகைவர்களான அவுணர்களைக் கண்டால், நீ பயப் படுவை ; இவன் ஏந்திய வேல், (உடலொரு பகுதி உயிரொரு பகுதியாக அந்த அவுணர்களைக்) கூறுபடுத்திக் குமைக்கும்.

ஆறு எழுத்து மனுவை உருவேற்றுவார் திருவுள நடுவி லன்றி, (பிறிதிடத்தில்) இவன் புகுந்தறியான் ; விண்ணில் இயங்கும் முகில்கள்தொறும் நுழைந்து, ஒளி குன்றி விளங்குவதை எண்ணி நீ நாணங் கொள்ள மாட்டாய்.

இவன், ஆகமகலை அறிந்த அறிஞர் (அறிவால்) அறிதற்கு அரியவன் ; (நீ) தக்கனுடைய (சாபத்தால், அவன்) மகளான உரோகணி அருகில், (கலை குறைந்து) வருந்தினை.

இவனுக்குச் சலனம் (என்பது, என்றும்) இல்லை ; உனக்கு என்றும் (வான வீதியில்) ஓடுவதே கடமையா யுளது ; தெரிகிறதா ?

இரவையும் பகலையும் இல்லாதபடி செய்யும் இப் பெருமிதச் சேயுடன், மதியே ! விளையாட வா ;

---

65. இகல் - பகை. மிளிர்தல் - ஒளியொடு விளங்குதல். மகவு - உரோகணி.

அன்பர் நிறை தென் பழனியில் அமர்ந்த கந்தனுடன் சந்திரா ! (நீ) விளையாட வந்திடு, (எ - று).

### விரிவுரை

ஆறெழுத்தை உருவேற்றுவார் அகத்தன் என்பது அருமையான ஒரு உண்மை.

தக்கன் மகளிர், இருபான் எழுவர். அவர்களுள் ஒருத்தி உரோகணி. அவளைக் காமித்து, மற்றவர்களைச் சந்திரன் மறந்தான். மறுதலிக்கப் பெற்ற அம் மாதர்கள், அச்செய்தியைத் தந்தையிடம் சொல்லி அழுதனர்.

மதியே ! யாதாயது உன் மதி? பாவையர் யாவரையும் சமமாகப் பார் என்று, பலமுகமாகத் தக்கன் படித்தான்.

மதியவன் அது கேட்டு மாறவில்லை. தக்கன் அறிந்தான். தணலாய்க் கொதித்தான். உன் கலைகள், ஒவ்வொன்றாய் ஒழிக என்று உறுமினன்.

காதலி உரோகணி காண, மதியவன் கலைகள் ஒவ்வொன்றாய் மறைந்து வந்தன. அதையறிந்த சந்திரன், நொந்து வருந்தி நுடங்கினன். இவ் வரலாற்றை,

" தக்கன் மகவு அருகில் நொந்தாய் "

என்பதில் பெறவைத்தார்.

" இரவு பகலற்ற இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற "

எனும் சித்தாந்த உந்தியாரையும்,

" அந்திபக லற்ற நினைவு அருள்வாயே "

எனும் திருப்புகழையும்,

" அந்திபகல் மாறிடவும் வல்லசிறு பெருமாள் "

என்பதில் அறிய வைத்தார். இதுவும் **பேதோபாயம்.** (ஒ)

5 MAY 1975

## தானம் (உதவி)

இழைத்த மணிப்பொற் பணிக்கரத்தால்
இவன்உன் றனையீண்(டு) அழைப்பதனுக்(கு)
என்ன தவமுற் செய்தனையோ ?
எய்தாது இருக்கை முறைதானோ ?
குழைத்த அமுதே நிகர்மொழியார்
கூறும் வசைத்தீக் கொளும் செவிக்(கு)என்
கோலா கலச்செந் தமிழ்ச்சந்தக்
கொழும்பாட் டொலிகைத் துளதேயோ
தழைத்த கலைதேய்ந் திடும்பாவம்
தவிரப் பெறலாம், அர(வு)உன்பேர்
சாற்றி டினும்அச் சுறுபேறும்
தலைமேற் கொளலாம், தாமதியா(து)
அழைத்த வுடனே வரல்நலம்காண்
ஆட வாராய் அம்புலியே
அழகார் பழனிக் குமரனுடன்
ஆட வாராய் அம்புலியே. 66

(பொ - ரை.) (நவ)மணி பதித்த பொன்னணி தரித்த திருக்கரத்தால், இப்பெருமான் உன்னை அழைப்பதற்கு (நீ) முற்பிறப்பில் என்ன தவம் செய்தனையோ ? (இன்னும் நீ) வாராதிருப்பது முறையாகுமா ?

குழைத்த அமுதுபோல் இனிக்கும் மொழியினரான கோதையர், கொதிக்கும் தீப்போல் கூறும் நிந்தனைச் சொற்களை ஏற்கும் (உன் செவிகட்கு,) எனது கப்பீரமான செம்மைத் தமிழின் பயனான சந்தப் பாட்டொலி கசந்துளதோ?

தழைத்திருக்கும் (உன் பதினாறு) கலைகள், தேயும் பாவம் தீரும் பேறு (நீ) பெறலாம் ;

---

66. பொன் அணி - பொன்னாபரணம் வசை - நிந்தை

(இராகு கேதுக்கள் எனும்) பாம்புகள், உன் பேர் கூறினும் அஞ்சும் பெரும்பேறு சிரமேல் பெறலாம்; தாமதம் செய்யாமல், அழைத்தவுடன் வருதல் நலம். விளையாட வா சந்திரா!

கோலமும் நிறைவுமான பழனிக் குமாரனுடன், அழகிய மதியே! ஆடவா, (எ - று).

விரிவுரை

'பொற்பணிக்கரம்' அவன் பிரபு என்பதை அறிவிக்கின்றது. இச்செல்வனின் குறிப்பறிந்து ஏவல் செய்ய எண்ணிறந்தோர் இருக்க, அவர்களையெல்லாம் விட்டிட்டு, அருமையாக நின்னை அழைக்க, நீ எத்தகைய தவத்தைச் செய்தனையோ? அருமை யிதனை நீ அறிந்திலையே!

உனைப் பெற்ற கடலாகிய தாய், பெற்ற தன் வயிறு பற்றி யெரிய, வாயறைந்து வயிறறைந்து, அலைகளாகிய கைகளால் தலையடித்துக் கொண்டு, கரையில் வந்து கதறுமாறு, சந்திரா! நீ அவளைக் காய்பவன் அல்லவா!

உன் உடன் பிறந்தவள் திருமகள். அவள் குடியிருக்கும் கமலமலர் மாளிகையை, வானில் வந்து மூடிவிடுகிற மோசக்காரன் நீ. தீரா அப்பாவத்தால் தேய்பிறையே ஆவானே! பெற்றவளையும், உடன் பிறந்தவளையும் இக்கதி செய்யும் நீ, உன்னொடு ஒரு தொடர்பும் இல்லாத எங்களை என்னதான் செய்ய மாட்டாய்? என்று, அமுதமொழி அணங்கனார் பலர் தம் பழிமொழி யேற்றுப் பழகியிருக்கும் உனக்கு, அழகும் இளமையும் மணமுமான அருமைத் தமிழால், வா சந்திரா! வா வா எனும் எம் கனிவுமொழி 'கைத்துளதோ' எனும் அருமையே அருமை.

தேயும் பாவம் தீர்ந்துவிடும். அரிய உன் பகையான அரவுகள், இனி உன் பெயர் கேட்டதும் அஞ்சும். அம்மான் முருகன் அழைக்கின்றான். தாமதியாதே! விரைந்து வா என்னும் இது, தானோபாயம் எனப்பெறும். (கூ)

வடியாப் பிறவிப் பெருங்கடலும்
வடியப் பெறலாம், பலகோடி
மறைக்கு முதலாம் பிரணவத்தின்
வண்மைப் பொருளும் தெரிதரலாம்
கொடியார் பலர்க்கோர் நமனுகும்
கொற்றந் தானும் கொளலாகும்
குன்று தொறும்போய்த் தமிழ்ப்பாடல்
கொழிக்கும் புகழும் கைகூடும்
விடியா மாயை இருள்விடியும்
விளங்கும் ஒளிச்சீர் மறையாது
வீணே தருக்கி மெலிவடையேல்,
வெளிமன் றகத்தில் மிகநடிக்கும்
அடியார்க் கெளியான் தருமகவோ(டு,)
ஆட வாராய் அம்புலியே
அழகார் பழனிக் குமரனுடன்
ஆட வாராய் அம்புலியே. 67

(போ - ரை.) *வற்றாத பிறவிப் பெருங்கடலும்,* (இன்றே) *வற்றும் பயனை அடையலாம் ;*

*வேதங்கட்கு வித்தான பிரணவத்தின்,* (தெய்வ) *வள மான பொருளையும் தெரிந்து கொள்ளலாம் ;*

*கொடிய குணத்தர் பலரை அடக்குதற்கு, ஒரு யம னுகும் வெற்றியையும் எய்தல் இயலும்.*

*குறிஞ்சி நிலந்தோறும் சென்று,* (சந்தத்) *தமிழ்ப் பாடல் பாடும் புகழும் கைவரும்.*

*தீரா மாயா இருளும் தீர்ந்து தொலையும் ;*

---

67. *கொடியார் - தர்ம விரோதிகள். நமன் - இயமன். கொற்றம் - வெற்றி. கொழிக்கும் - பெரிது பாடும். வெளி மன்று அகத்தில் - (ஞான) வெளியான அம்பலத்தில்.*

(எங்கும்) விளங்கும் (உன்) மாபெரும் புகழொளி மங்காது ;

(இவைகளை உணராமல்,) வீணே (உன் மேன்மையைத்) தருக்கி மெலியாதே !

பேரம்பலத்தும் சிற்றம்பலத்தும் பெரிது ஆடும் அடியார்க்கு எளிய அமலன் அருளிய சேயுடன், சந்திரா ! ஆடவா.

அழகும் நிறைவுமான பழனிக் குமரனுடன் சந்திரா! விரைவாக விளையாட வா, (எ - று).

## விரிவுரை

ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் என, முந்நீர் உடையது கடல் என்பர். அதுபோல் பிறவிப் பெருங் கடலும், ஆணவ மாயா கன்மத்தால் ஆனது. இதனில் நான் நான் எனும் மோசமான முதலைகள் எத்தனை ? இருவினையென்னும் அலைகள் எத்தனை ? மையல் என்னும் சண்டமாருதம் எத்தனை ? இக்கடல் வற்றும் நாள் வாராதோ என்று வருந்தியது எத்தனை ?

கேள் மதியே கேள் ! வாவி இப்போதே நீ வந்தால், அப் பெருங்கடலும் வடிதலுறும். பிறவியைத் தீர்க்கும் பிரணவப் பொருளும் தெரிதலுறும். கொடியரை யடர்க்கும் கொற்றம் பெரிதும் கொள்ளலுறும். குமர ! குகா என்று, அவன் குறிஞ்சிதோறும் பாடும் பயனும் பழகலுறும். கருமல இருளும் கழிதலுறும். புகழ் பெருகலுறும்.

வீண் இறுமாப்பை விட்டுவிடு! விமலனுடன் விளையாட வருதியேல், எவ்வளவு பேறு நேரும் தெரியுமா ? வா சந்திரா வா என்றபடி. (எ)

## தண்டம் (ஒறுப்பு)

### வேறு

*தனதன தனனா தனதன தனனா தானா தந்ததனா*

அளவறு முனிவோர் வெருளுற வருபேர்
ஆடூர் கின்றிலனோ ?
அமரர்கள் பலர்ஓர் நொடியிடை பிணமே
ஆம்நீர் கண்டிலையோ ?
குளஅனல் விழியால் அரனரு ளியசீர்
கூர்கோ ரந்தெரிவாய் ?
குருதிபெய்(து) ஒருமா மரம்அற அடும்வேல்
கோல்வீ ரங்குறியாய் !
இளமையன் எனவே எணிஅவ மதியேல்,
ஏனோ வந்திலை ?போ
யிடல்!பல சுரவோர் வழிபடு பதிகாண் !
யான்வீண் விண்டிலனே,
வளமலி கிரிதோ றுலவிய குகனோர்
வாவா அம்புலியே
மயில்இவர் வயலூர் இறைமகிழ் வுறவே
வாவா அம்புலியே. 68

(பொ - ரை.) *அளவிலாத முனிவர்கள் அஞ்சும்படி உதித்த பெரிய ஆட்டை, (சிறந்த) ஊர்தியாக்கிச் செலுத்திலனோ ?*

*இமையவர் எண்ணிறந்தோர், (இவன் முன்) ஓர் நொடியளவில், பிணமேயான தன்மையை (நீ) பார்த்திலையோ ?*

*நெற்றியில் உள்ள கனல் ஞானக் கண்ணால், சிவனார் அருளிய சிறப்பு மிக்க (இவனது) அவதார உக்கிரம் தெரிவாயோ ?;*

---

68. வெருளுற - *நடுங்க.* குளம் - *நெற்றி.* கூர் - *மிக்க.* இவர் - *ஏறும்.*

குருதி பொழிந்து, (கடல் நடுவில் நின்ற சூரபதுமனாகிய) ஒரு மாமரம் (வேரொடு) கெட, (அதை) அழித்த வேலாகிய கோலின் வீரத்தைக் குறித்தனையோ ?;

(இவன்) இளம்பிரான் என்று எண்ணி, அவமதித்தல் செய்யாதே ! ஏன் இன்னும் வந்திலை ? போகாதேடா !

பல குருமூர்த்திகள் வழிபடும் குருநாதன் இவன், தெரிகிறதா ?

யான் வீணை மொழிகளை விளம்பினேன் அல்லேன் ; வளம் நிறை மலைதொறும் நடமிடும் தகராகாசப் பெருமான் திருமுன், சந்திரா ! வந்திடு ;

மயிலூரும் (பழனி யெனும்) வயலூர் மன்னன் மகிழ்வடைய, சந்திரா ! ஓடி வா, (எ - று).

## விரிவுரை

அனல் ஆட்டை ஊர்ந்த ஆற்றல் ; அமரர் மரர் என வீழ்ந்த வீழ்ச்சி; உக்கிர அவதார பயங்கரம் ; ஒரு வேலால் மாமரமான சூரன் மடங்கிய செய்தி முதலியன நினைவிலிருந்தால், இப்படி அசட்டையாக இருப்பாயா? எண்ணும் போதே அச்சமாக யிருக்கிறதே !

இவ்வளவையும் மறந்து, எம்பிரானை இளம் சேய்தானே என்று எண்ணினை? இந்த எண்ணமே அவமதித்ததுஆகுமே!

எவ்வளவு நேரமாகப் பெருமான் அழைக்கின்றான் ! இதுவரை வந்திலையே ! என்ன வேதனை ? இதனால் என்னென்ன விபரீதம் விளையுமோ ? மரியாதையாக வந்திடு என்று அச்சுறுத்தும் இது, தண்டோபாயம் எனப் பெறும்.

மதியோன் யான் என்பாயா ? மதியுடைய குருமார் பலர்க்கும் மதியளிக்கும் மதியாளன் காண் இவன் ! நினைவிருக்கட்டும் ! மலைதோறும் உலாவரும் இப் பரன், இதய தகராகாசத்தும் இருப்பவன் ; குண்டலினி எனும் மயிலூர் வயலூரான் மகிழ்வது, உன் வாழ்வு உயரற்கு வழி என்பது, இறுதியடியில் உள்ள செய்தி.

*தெரிவாய்? குறியாய் என்பவைகளின் விளியுருபுகள் தொக்கன.* (அ)

தானன தானன தானன தானன தான தந்தன

ஆணவம் ஆர்முது சூர்என மாய்வுறல்!
ஆகா யந்தனில் வாழ்(வு)
ஆம்இரு பான்எழு தாரகை மாதர்அ
ழாவா(று,) இன்றுணர்வாய்!
காணம தேபொருள் ஆமென நாடுநர்
காதோ நின்செவி?மா
காதலொ(டு) யானுவல் பாடலின் ஓசை,பு
காவா(று)என்? புகல்வாய்!
வேணவி காதம்இ தால்விளை வாகும்மெய்;
வீணே வம்புசெயேல்!
வேழம்இ தோரில்இ வேளைஉ ணுமல்வீ
டாதே, வென்றிகுலாம்
வாணவ வீரர்ச காயவி சாகன்முன்
வாவா அம்புலியே
வாழ்வய லூர்முரு கேசனொ(டு) ஆடிட
வாவா அம்புலியே. 69

(பொ - ரை.) *ஆணவம் நிறைந்த சூரபதுமன் போல அழியாதே; வானுலகில் வாழ்பவர்களான (அசுவினி முதலிய) இருபத்தேழு விண்மீன் மங்கையர் (ஆன உன் மனைவியர், உன்னை யிழந்து) அழாதபடி, (உய்தி பெற) இன்று உணர்ந்திடு;*

*பொன்னே பொருள் ஆகும் (என்னும்) சிந்தனையர்தம் செவிட்டுச் செவிபோல்வதோ நின் செவி?*

---

69. *சூர் - சூரபதுமன். காணம் - பொன். விகாதம் - வீண் சச்சரவு. வேழம் - (ஊர்தியான) யானை. வாள் நவ வீரர் - வாட்படை யேந்திய வீரவாகு தேவர் முதலினோர்.*

பெரும் ஆர்வத்துடன் யான் பாடும் பாடலின் இனிய ஒலி, (பொல்லா உன் செவியிற்) புகாதவாறு என்னே? (நீயே) சொல்!

விகாதம் இதனால் மிகுதியும் விளையும். (நான் கூறும் இது) உண்மை. வீணாக வம்பை விளைவிக்காதே!

(எம்பெருமான் ஊர்தியான) ஆண் யானை, (நீ மதியா திருக்கும்) இச் செய்தியை உணருமேல், இப்போதே (உன்னை எடுத்து) விழுங்காமல் விட்டிடாது;

வெற்றி மிகுந்த வாள் ஏந்திய ஒன்பது வீரர் சகாயனான விசாகன் திருமுன், மதியே! வந்திடு;

விரிவான சிறப்புற்ற பழனி முருகனோடு விளையாட, திங்களே! விரைந்து வந்திடு, (எ - று).

### விரிவுரை

ஆரம்பம் முதல் அமைதியொடு வாழ அறியாமல், சூரபதுமன் ஆயிரத்தெட்டு அண்ட அரசுரிமையை இழந்தான். அலட்சியத்தால் அவன் பெற்ற அல்லல் பல. அவனைப்போல் வானுலக ஆட்சியை இழந்து, மாய்வுறாதே என்கிறேன்.

உன் மரணம் இருபத்தேழு மகளிரை அமங்கலர் ஆக்கும். அவர்களது அழுகுரல், உம்பரெலாம் ஒலிக்கும். வேண்டா இந்த வேதனை! உரைக்கும் இவைகளை உணர்ந்து கொள் என்பார், 'உணர்வாய்' என்றார்.

பணமே பிரதானம் என்று இருப்பவர், வேறு எதற்கும் செவி கொடார். அவர்களைப்போல் செவிடாயதோ நின் செவி? ஆர்வத்தொடு நின்னை அழைக்கும் என் பா ஒலி, நின் செவியிற் சிறிதும் பாய்ந்திலதே! என்ன வியப்பு!

செல்வச் செருக்கிருந்தால், 'வாயுளார் மூகராவார்'; 'செவியுளார் செவிடராவர்'; 'குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவர்' என்னும் படிறு மொழிக்கு ஆளா காதே!

உன் அசட்டையால் விளைவுகள் யாதாகுமோ? வாள் வீரர், வீரவாகு முதலிய நவவீரர்கள்; அவர்கள் அறியினும் ஆபத்து. வேழம் உணரினும் விபரீதம்! எண்ணிப் பார்! ஓடிவா என்றபடி.

வேழம் - ஆண்மையுள மத யானை; 'வேழக்குரித்தே விதந்து களிறெனல்' என்பது, தொல்காப்பியம். (௯)

தனன தந்தன தனன தந்தன தனன தந்தனனு

அரன்அ ருந்தவ முதிர்இ லம்பக
அழலில் வந்தவிர்வான்,
அசலம் எங்கணும் மயில்வி டுங்குகன்,
அகள நெஞ்சினர்கோ,
வரம்அ னந்தமும் உதவு புங்கவன்,
மகிமை கண்டறியா
மலினர் தங்களை அடுத லுஞ்செயும்
வயவன், எண்டிசையோர்
புரம்நி றைந்துள திருவி னும்பழி
புகலும் வன்புடையார்
புகழ்பெ ருந்தகை, முருகன் வண்தமிழ்
புரைக டம்பணிசேய்,
மரக தம்புரை உமைம கன்தன்முன்
வருக அம்புலியே
வளம லிந்துயர் பழனி நண்பன்முன்
வருக அம்புலியே. 70

(பொ - ரை.) சிவனுடைய கடுந்தவம் முற்றிய நெற்றிக்கண் நெருப்பில் உதித்துக் கனல்பவன்;

குறிஞ்சி நிலம் முழுதும் மயில் செலுத்தும் குகன்; அழுக்கற்ற மனத்தினர்தம் அத்தன்.

---

70. இலம்பகம் - நெற்றிக்கண். அசலம் - மலை. அகளம் - குற்றமின்மை. மலினர் - அழுக்கினர். வயவன் - வீரன். வன்பு - கொடுமை. புரை - ஒத்த.

(கருதிய) வரம் யாவும் உதவும் கம்பீரன்; (தன்) மகிமை அதிசயங்களை அனுபவம் கொண்டு அறியாமல் அகங்கரித்து இருப்பவர்களை, அழித்தலும் செய்யும் ஆண்மையன்;

எண்திசைப் பரிபாலர்க்கு உரிய பதிகளில் நிறைந்துள செல்வத்தினும், (மிகப் பெருகிய) பழி கூறும் அளவு, மாபெரும் கொடுமை மலிந்தோரும் பெரிது துதிக்கும் பெருந்தகுதியன்;

(என்றும்) இளம்பரிபூரணன்; வண்மைத் தமிழ் போன்று, சிறக்க இருக்கும் கடப்பமாலை யணியும் சேய்;

மரகதம் போன்ற (பசுமை) நிற மாதேவியின் மைந்தன் திருமுன், மதியே! ஓடிவா;

வளம் நிறைந்து உயர்ந்த (நம்) பழனி நண்பன் திருமுன், சந்திரா! (விளையாட) வந்தருள், (எ - று).

## விரிவுரை

அசலம் புறம்; குகை அகப். அங்கும் இங்கும் உலா வருவானை, 'அசலம் எங்கணும் மயில்விடும் குகன்' என்பதல் அறிவித்தார்.

'மயிலேறி விளையாடு குகனே' என்ற குமரேச சதகம், இங்கு நினைவிலுறுகிறது அல்லவா!

களம் - களங்கம்; அகளம் - அஃது இன்மை. புங்கவன் - மிடுக்குடையவன்; வடசொல்.

'அடுதலும் செயும்' எனவே, அஃது அவனது இயற்கையன்று; மறக்கருணை யளவே என்பது குறிப்பு.

திக்குப் பாலகர், அளவுபடாத செல்வத்தர்; அச்செல்வத்தினும் அளவிலாத பழிக்குரியர் பலர்; தெளிவு பெற்று அவர்களும் துதிக்கும் தகுதியன். ஆரம்பத்தில் வன்பரான அவர், அந்தத்தில் பேரன்பர் ஆகின்றார் என்பது குறிப்பு.

'தமிழ்புரை கடம்பணி சேய்' என்பதில் உள்ள தனிநயம், ஊன்றி உணர உவகை மிகும். (௬0)

அம்புலிப் பருவம் நிறைவெய்தியது

# 8. சிற்றிற் பருவம்

சிறு வீடு கட்டி விளையாடும் சிறு பெண்கள், தாம் முயன்று கட்டிய சிற்றிலைச் சிதைக்குமாறு வரும் சிறு பருவச் சேயை, அங்ஙனம் செய்ய வேண்டா என்று வேண்டிக் கொள்ளும் பருவம் இது.

சிறுமை + இல் = சிற்றில்; சிறுமை யெனும் பண்புப் பெயர், ஈறுபோய்த் தன்னொற்று இரட்டிற்று; இத்தொடர், சிற்றில் சிதைத்தல் எனும் பொருள் பயந்தது; சிறு பறை முதலியவற்றினும் இங்ஙனமே கொள்க.

'சிறுபறை முழக்கலையும், சிற்றில் சிதைத்தலையும், சிறு தேர் உருட்டலையும், சிறுபறை சிற்றில் சிறுதேர் என்றார், பெயரொடு தொழிற்கு ஒற்றுமையான்' எனவரும் இலக்கண விளக்கவுரை, இங்கு எண்ணத் தகுவது.

'அம்புலியே ஆய்ந்த சிறுபறையே சிற்றிலே' எனும் வெண்பாப் பாட்டியலில், சிறுபறை கொட்டுதல் முன்னும், சிற்றில் சிதைத்தலைப் பின்னுமாகக் குறிப்பிடப் பெற்றுளது. இம்முறைக்குத் தக்கபடி இரண்டாம் ஆண்டில் சிறுபறை முழக்கலும், மூன்றாவது ஆண்டில் சிற்றில் சிதைத்தலும் உரைக்கப் பெறும் என உணர்க.

(இதற்கு மாறாக சிற்றிற் சிதைத்தலை முன்னும், சிறு பறை கொட்டுதலைப் பின்னுமாக வந்த வழக்காறும் உளது. "காப்பொடு செங்கீரை தால்சப் பாணி, யாப்புறு முத்தம் வருக என்றல் முதல், அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர், நம்பிய மற்றைச் சுற்றத் தளவென, விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்" எனப் பன்னிரு பாட்டியலில் செய்தியுளது.)

இங்ஙனம் கொள்ளும் இடத்து, சிற்றில் இரண்டாம் ஆண்டிலும், சிறுபறை மூன்றாவது ஆண்டிலும் நிகழும் என்க.

### பிணங்காதிருக்க வேண்டல்

ஆரார் சடிலப் பெருங்கடவுள்
அனற்கட் பொறிகள் எனத்தோன்(றி)
அங்கா ரகனும் பவனனும் கொண்(டு)
அறலூ(டு) உய்ப்பத் திருவுருவாய்
தாரா கணமங் கையர்அறுவர்
தடமா முலைப்பால் நனியருந்தி
தருமம் வளர்ப்பாள் தரும்அமுதும்
சாலப் பருகி விளையாடி
கூரார் வடிவேல் ஆதியன
கொண்டு தகுவர் குடிகெடுத்துக்
குன்று தொறும்போய்த் தினம்உலவிக்
கோலா கலக்கோ மளத்தமிழ்ச்செஞ்
சீரார் பழனி நகரில்வளர்
சேந்தா! சிற்றில் சிதையேலே
சிலம்பு புலம்பும் துணைச்சிறுதாட்
செல்வா! சிற்றில் சிதையேலே. 71

(பொ - ரை.) (மகத்தான) ஆத்திமாலை சூடிய சடைமாதேவரின் அனல் (ஞானக்) கண்களிலிருந்து (உயரிய ஆறு) பொறிகள் என உதித்து ;

கனல் கடவுளும் காற்றுத் தேவனும் எடுத்துச் சென்று கங்கையில் இட, (சரவணம் சார்ந்து, தயாமூலத்) திருமேனி தாங்கி ;

கார்த்திகை மாதர் அறுவரது பருத்துச் சிறந்த முலைப் பாலை அதிகம் பருகி, (முப்பத்திரண்டு) அறம் வளர்த்த

---

71. அங்காரகன் - அக்கினி. பவனன் - வாயுதேவன். அறல் - கங்கை நீர். தாரா கணம் - நட்சத்திரக் கூட்டம். தகுவர் - அவுணர்.

முதல்வி அருளிய பேரமுதம் பெருகக் குடித்து, (நிமல) ஆடல் (பல) நிகழ்த்தி ;

கூர்மை மிக்க ஞானவேல் முதலிய பல படைகளை ஏந்தி, அவுணர் குடியை (அடியோடு) அழித்து ;

(ஒவ்வொரு) நாளும் மலைகள் தொறும் போய் நடமாடி, கம்பீர நிறைவாம் பைந்தமிழ்ச் சிறப்புடைய பழனிப்பதி யில் எழுந்தருளிய சேந்தா !

(சிறுமியேம் இழைத்த மணல்) சிறு வீட்டைச் சிதைத்திடாதே ; (நாதச்) சிலம்பொலிக்கும் (உயிர்த்) துணை யான இளந்திருவடிச் செல்வா ! (சிறியேம்) சிற்றிலைச் சிதைத்திடாதே, (எ - று).

## விரிவுரை

தெய்வப் பொறிகள் ஆறையும், நெருப்பும் காற்றும் நீரிலிட்ட செய்தியை, விரிவாகக் காந்தம் விளக்கி யுளது.

அனல் மேனிய னாதலின், அக்கினியை 'அங்காரகன்' என்றார். பவனம் - காற்று.

'வாதம் கால் வளிமருந்து வாடையே பவனம் வாயு' என்பது நிகண்டு.

அறல் - நீர் ; "கார் அறல்" என்னும் நிகண்டும் இங்கு நினைக்கத் தகும்.

தாராகண மாதர் தருமுலைப் பாலை நனியருந்தியது, தருமம் வளர்ப்பாள் தரும் அமுதைச் சாலப் பருகும் வேட்கையால் என்ற நுட்பம் சிந்திக்கத் தகும். நனி — மிகுதிக் குறிப்பு.

அறம் வளர்த்த நாயகி யாதலின், 'தருமம் வளர்ப் பாள்' என்றார்.

தோமரம், ஈட்டி, வில், அம்பு, வச்சிராயுதம், தாமரை, விருதுக் கொடி, பெருமணி, வாள், அங்குசம், பரசு எனும் உருத்திராம்சப்படைகள் பதினொன்றையும், வேல் படையை யும் உடன்படுத்தி, 'கூரார் வடிவேல் ஆதியன கொண்டு'

என்று குறிப்பிட்டார். 'தகுவர் குடிகெடுத்தது' மறக் கருணை.

'தோன்றி, உருவாய், அருந்தி, பருகி, விளையாடி, குடிகெடுத்து, உலவி, பழனி வளர் சேந்தா! செல்வா! சிற்றில் சிதையேலே' என முடிக்க. (க)

### செந்நிறம் உள்ள இடம்

பங்கே ருகப்பூந் தடப்பரப்பில்,
பலபல் மடவார் விழிக்கடையில்,
பாசம் அறுமா தவர்உடையில்,
பழமை யுணர்பா வலர்மனத்தில்,
கொங்கேய் தருமென் துணர்ப்பொழிலில்,
கோழிக் கொடியின் கொழுஞ்சூட்டில்,
குலையா வீரர் இலைவேலில்,
கோரம் மலியும் தகர்ப்பரியில்,
பொங்கோர் பெறும்ஓ திமத்தாளில்,
பொலிநெற் கதிரில், புனைகடம்பில்,
போதக் கொடுப்பார் பொதுக்கரத்தில்,
பொன்னூர் மதிள்கோ புரப்பெருக்கில்
செங்கேழ் பிறங்கும் பழனிநகர்ச்
சேந்தா! சிற்றில் சிதையேலே
சிலம்பு புலம்பும் துணைச்சிறுதாட்
செல்வா! சிற்றில் சிதையேலே. 72

(போ - ரை.) தாமரை மலர்கள் நிறைந்த தடாகங்களின் (இனிய) விசாலமான இடங்களிலும்;

72. பங்கேருகம் - தாமரை. கொங்கு - மகரந்தம்; மணமுமாம். துணர் - தளிர். சூட்டு - கொண்டை. தகர்ப் பரி - ஆட்டு வாகனம். ஓதிமத் தாளில் - அன்னத்தின் கால்களில். போத - மிகுதியாக. செங்கேழ் - செந்நிற ஒளி.

காரிகையர் பலர் கடைக்கண்களிலும்; பந்த தொந்தம் இல்லாத உயர்தவ முனிவர் உடையிலும்; பழமையை உணர்ந்த பாவலர் உளத்திலும்;

மகரந்தங்கள் பொருந்திய மென்மை இளந்தளிர்ச் சோலையிலும்;

கொடியாய் அமையும் சேவல்களின் கொழுமையான கொண்டையிலும்;

(போரில்) பின்வாங்காத வீரர்களின் இலை வடிவான வேல்களிலும்;

உக்கிரம் நிறைந்த ஆட்டு ஊர்தியிலும்; அழகு மிகுதியான அன்னப் பறவையின் கால்களிலும்; கவின் மிகுந்த நெல்லின் கதிர்களிலும்;

கவினுடைய (மாபெருங்) கடப்ப மலர்களிலும்; (வேற்றுமை யின்றிப்) பொதுவாக வாரி வழங்கும் வள்ளல்கள் கைகளிலும்;

பொன்னாகிப் பொலியும் மதில்களை யுடைய கோபுரங்களிலும் செந்நிற ஒளி விளங்கும் பழனிப் பதிச் சேந்தா! (சிறியேம்) சிற்றிலைச் சிதைத்திடாதே;

சிலம்பொலிக்கும் இணையான இளம் திருவடிச் செல்வா! (எம்) சிற்றிலைச் சிதைத்திடாதே, (எ - று).

## விரிவுரை

கமல நிறைவால் பொய்கைகளும், போகம் மிகுதியால் காரிகையர்தம் கடைக்கண்களும் சிவந்த நிறம் காட்டுகின்றன. அகம்போல் புறமுள தவசிகள், ஞானக் கனலினர்; அதன் அறிகுறி காவி உடை. பழமையை உணரும் பாவலர் உள்ளம், சோலையின் இளந்தளிர், சேவலின் கொண்டை, பகைவரை வீழ்த்திய குருதி தோய் வேல், செம்மறியாடு, அன்னங்களின் கால், முற்றிய கதிர்கள், கொடையாளர் கைகள், கோபுரச் சிகரங்கள், சேந்தன் திருவுரு முதலிய சிவந்த இடங்களை ஊன்றி உணர்ந்து உரைத்த பா இது.

மேற் குறித்த பன்னிரு இடமும் செந்நிறத்தன ; அங்குள பரனும் செவ்வொளி யுருவன் என்றபடி.

சேந்தன் - செந்நிற மேனியன் ; செந்தழல் வண்ணன் எனப் பொருள் பெறும் திருப்பெயர் இது. பேரொளிப் பிழம்பான பெருமான் என்பது குறிப்பு. "செக்கரும் செம்மையும் சேந்து பாடலமும்" என்பது பிங்கலந்தை.

"ஈந்து சிவந்தது இருகரமே" எனும் பாடலை அடி ஒற்றி, 'போதக் கொடுப்பார் பொதுக்கரம்' என்றார்.

'பரப்பில், கடையில், உடையில், மனத்தில், பொழிலில், சூட்டில், வேலில், பரியில், தாளில், கதிரில், கடம்பில், கரத்தில், பெருக்கில் செங்கேழ் பிறங்கும் பழனி நகர்ச் சேந்தா' எனக்கூட்டுக. (உ)

உன்னைப் பொருளா மெனக்கருதா(து)
ஒருங்(கு)யாம் கூடிக் களிக்குதுமா ?
ஒருவன் உன்னில் வலியான் ஈண்(டு)
உள்ளான் எனும்பொய் உரைத்தேமா ?
அன்னைக் குயர்பே ரருள்கொளும்நீ
ஆட வருமா(று) எண்ணிலமா ?
அடுத்த வுடன்நிற்(கு) அடங்கார்போன்(று)
அதட்டிச் சிலசொல் அறைந்தேமா ?
மின்னைப் பொருபே தையரிடை நீ
வேண்டும் அவரை மணந்துகொள
வேண்டாம் என்னத் தடுத்தேமா ?
வெறுப்புன் உளத்தேன் உதித்ததுவோ ?
தென்னைப் பொழில்சூழ் பழனிநகர்ச்
சேந்தா சிற்றில் சிதையேலே
சிலம்பு புலம்பும் துணைச்சிறுதாட்
செல்வா ! சிற்றில் சிதையேலே. 73

---

73. பேதையர் - பெண்கள். தென்னைப் பொழில் - தென்னை மரச் சோலைகள்.

(பொ - ரை.) உன்னை (மெய்ப்) பொருளாகும் என்று உணராமல், யாங்கள் ஒன்ருகச் சேர்ந்து, (மாபெரும் பொய்ம்மையில் மயங்கி, என்றும்) இறுமாந்து களித்து இருந்தேமா ?

உன்னிலும் ஆற்றல் உடையான் ஒருவன், இந்த உலகில் இருக்கின்ருன் எனும் பொய்ம்மொழி ஒன்று புகன்றேமா?

அன்னையினும் பெருங்கருணை கொண்டுள நீ, (எம் மொடு) விளையாட இனிது வரும்படி நினைந்திலமா ?

எம்மிடம் அணுகிய அப்போதே, உனக்கு அடங்காத வர்போல் அதட்டி, கொடிய சில சொல் கூறினேமா ?

மின்போல் ஒளிரும் பேதையரான எங்களில் நீ விரும்பும் தகுதியரை மணந்து கொள்ளவேண்டாம் என்று, (தாவி வந்து) தடுத்தேமா ?

உன் திருவுளத்தில், (எங்கள் விளையாட்டில்) எதற்கு வெறுப்பு உதித்ததோ ?

தென்னஞ் சோலை சூழ்ந்த பழனிப் பதிச் சேந்தா ! (எம்) சிற்றிலைச் சிதைத்திடாதே ;

(நாதச்) சிலம்பு ஒலிக்கும் (உயிர்த்) துணையான சிறந்த இளந் திருவடிச் செல்வா! (எம்) சிற்றிலைச் சிதைத்திடாதே; (எ - று).

விரிவுரை

உன்னை மறந்தோம் இல்லை. உலக மயக்கில் களித்தோம் இல்லை. பொய்ம்மொழி புகன்ருேம் இல்லை. உனக்கு அயலாகி விளையாட எண்ணினோம் இல்லை. அணுகிய நின்னை அதட்டினோம் இல்லை. உன் திருவுள விருப்பைத் தடுத்தோம் இல்லை.

வெறுப்பு உனக்கு விளைய, நாங்கள் செய்த பிழை யாது? வானளாவிய தென்னைப் பொழிலுடையது உன் வளப் பழனி. ஆன்மக் காப்பாளன் நீ. நியதி யிதனை நினைவூட்டு கிருேம். அழிக்காதே சிற்றிலை அத்தா! என்று, விநயம் காட்டி விண்ணப்பித்தபடி. (ங)

## திருவடிப் பெருமை

பவளம் புரையும் திருமேனிப்
பாங்கும், பலபொற் பணித்திரளும்,
பட்டா டையும்,பங் கயத்தாளும்
பாரிற் புழுதி படலாமோ ?
சிவனும் உமையும் மலர்விழியிற்
சேர்ப்ப துனது பதமன்றோ ?
தெருள்நான் மறையின் சிரத்தவிரும்
சீர்த்திக்(கு) இஃதோர் சிறுமைகண்டாய் !
கவளக் கரிமா முகற்(கு) இளையாய் !
கவினுர் குறிஞ்சிக் காவலவா !
கந்தா ! முருகா ! எனப்போற்றிக்
கரம்கூப் பிடும்நீர் கடவேமால் ;
அவலம் தணந்தாண்(டு) அருள்செயும்நீ
அணியார் சிற்றில் அழியேலே
அருமைத் திருவா வினன்குடியாய் !
அடியேம் சிற்றில் அழியேலே. 74

(பொ - ரை.) பவளம் போன்ற (உன் அருமைத்) திருமேனி யழகும், பல வகையான (அழகிய) பொன் ஆபரணங்களும், (உடுத்திய) பட்டு உடையும், (தெய்வக்) கமலத் திருவடிகளும், பூமியில் எழும் புழுதி மண்ணில் படலாமோ ?;

சிவபிரானும் உமாதேவியும், (தம்) கமலக் கண்களில் ஒத்திக் கொள்வது உமது திருவடிகளே யல்லவா !

வித்தக நான்கு வேதங்களின் சிரத்தில் ஒளிரும் சிறப்பிற்கு இது ஒரு சிறுமை காண் !

---

74. பணித்திரள் - பலவகை அணிகள். அவிரும் - விளங்கும். கவளம் - ஒருவாய் உணவு. நீர் கடவேம் - கடமையைப் புறக்கணிக்க மாட்டேம். அவலம் - வருத்தம். தணந்து - தவிர்ந்து.

கவள அளவில் பேருணவு கொள்ளும் யானைமுக கணபதிக்கு இளையவனே !

அழகார்ந்த குறிஞ்சி நில அதிபதியே !;

கந்தா ! முருகா என்று துதித்து, குவித்த கைகளால் கும்பிடும் மரபை, (யாங்கள் என்றுமே) மறக்க மாட்டோம் !;

அருந்துயர் தவிர்த்து ஆளாக்கி, (பயனுள) அருளைப் பாலிக்கும் நீ, அழகு நிறைந்த (எமது மணல்) சிறு வீட்டை அழித்திடாதே ;

அருமைத் திரு ஆவினன்குடி ஐயா ! அடியோங்கள் சிறியதாய் அமைத்த (மணல்) வீட்டைச் சிதைத்திடாதே, (எ - று).

விரிவுரை

அணி ஆர் சிற்றில் என்பதற்கு, உங்கட்கு அணுக்கர் ஆன எங்கள் சிற்றில் எனினும் அமையும்.

உன் கரசரணாதிகளில், அணிகளில், ஆடைகளில் புழுதி படுவது ஆகாதே !

" கச்சித் தாய் உச்சியை மோந்து கண்ணோடு அணைக்கும் திருத்தாளன் " நீ என்பர். சிவபிரானும் அதே செயலைச் செய்கின்றாரே !

வேதங்களின் முடிவில் விளங்கும் தூய உன்திருவடிகளில், தூசு படுவது ஆகுமா ?

நீ, நம்பியான தும்பிமுகர் தம்பி ஆயிற்றே ! வீணை தொல்லையை நீ எவ்வளவு விளைவித்தாலும், இளையாய் ! காவலவா ! கந்தா ! முருகா என்று கரம் குவிக்கத் தவற மாட்டோம். வகுத்த எங்கள் வாழ்க்கைச் சிறு வீட்டை வாட விடாதே ! அழிய விடாதே ஐயா என்று அலறியபடி. (௫)

## குறை யிரத்தல்

சந்தோ டத்தால் மணற்கொழித்துச்
சமைத்த வருத்தம் அறியாயோ ?
தமிழ்மா முனிவன் தாழ்ந்துயும்நின்
தாள்தா மரைக்(கு)இத் தகைதகுமோ ?
பைந்தோ கையபுள் பரிநீத்துப்
பாரில் மிதிக்கை முறைதானோ ?
பல்வீழ்ந் தறியாச் சிறுவர்களைப்
பகைத்திட்(டு) ஒறுக்கப் படும்கொல்லோ ?
திந்தோம் எனநா டகம்புரியும்
சிவனும், அவன்றன் இடம்பிரியாச்
சிவையும் உனைத்தான் தேடாரோ ?
செயுமுற் றவத்தால் திகழ்தரும்நீ,
அந்தோ உடனுற்(று) ஆடாமல்
அணியார் சிற்றில் அழியேலே
அருமைத் திருவா வினன்குடியாய்
அடியேம் சிற்றில் அழியேலே. 75

(போ - ரை.) மகிழ்ச்சியொடு மணலைக் கொழித்து (சிறு வீடு) கட்டிய (அடியேம்) வருத்தம் (நீ) அறியாயோ?;

அருந்தமிழ் முனிவர் அகத்தியர் பணிந்து உய்யும் (தனிச் சிறப்புடைய) உன் திருவடித் தாமரைக்கு, (அழிவு செயும் தகாத) இச்செயல் தக்கதேயோ ?;

பசுமைத் தோகையை யுடைய மயிலை விட்டு இறங்கி, (முதலில் நீ) மண்ணை மிதிப்பது முறையேயோ ?

75. புட்பரி நீத்து-மயிலூர்தியை விட்டு. ஒறுக்க-தண்டிக்க. பாரிற் புழுதி - பூமியில் உள்ள புழுதி மண்.

பல் விழுவதை இன்னம் பார்த்தறியாத இளம் பாலர்களான எம்மை, (அதிகம்) பகைத்துத் தண்டிப்பது ஆகுமா ?;

தீம் தோம் என்று திருக்கூத்தியற்றும் திருவளர் சிவமும், அப்பிரானது இடப்பாகம் அகலாத அம்பிகையும், உன்னை (எங்கே என்றே) தேடாரோ ?

முற்பிறப்பில் (பேதையேம்) செய்த பெருந்தவப் பயனாக நேர் வந்து நிற்கும் நீ, ஐயோ ! கலந்து எம்முடன் களியாமல், அணுக்கரான (எம்) சிறு வீட்டைச் சிதைக்கலாமா ?;

அருமைத் திருவாவினன்குடி அப்பனே ! அடியேங்களது சிறு இல்லைச் சிதைத்திடாதே, (எ - று).

விரிவுரை

யாங்கள் இளஞ் சிறுமிகள். வாழ்க்கைச் சிறுவீட்டை, எவ்வளவோ பாடுபட்டு வகுத்தோம். அது உனது திருவுளம் அறியாதது அல்லவே !

பொதிகை மலையில் இருந்து அருந்தமிழ் வளர்த்த எங்கள் அகத்தியரை, உய்யுமாறு உயர்த்திய உமது திருவடிகளின் உயர்விற்கு, இந்த அழிவுச் செயல் தக்கது அல்லவே !

எழிலான மயிலை விட்டு நீ இறங்கலாமா ? பயனிலாத புழுதி உன் திருவடியிற் படலாமா ? பல்விழாத நாங்களா உனக்குப் பகைவர்கள் ? எங்களையா நீ தண்டிப்பது ?

எங்கே எம் சேய் என்று, தேவாதி தேவரும் தேவியும் உன்னைத் தேடுவரே ! ஐயோ ! எவ்வளவு தூரம் வந்திருக்கிறாய் !

எல்லையிலாத எம் புண்ணியம், உன்னை எம் எதிர் வரச் செய்துளது.

அருளார் ஆவியிற் குடிகொண்ட அத்தா ! சேர்ந்து விளையாடல் செய்யாமல், எம் சிற்றிலைச் சிதையாதே என்றபடி. (௫)

வேறு

தன் இயல்பு கூறல்

அண்டமிசை உற்றவர்கள் வாழ்வையு மதித்திடா(து)
ஆறெழுத்து ஓதிஓதி,
அஞ்சுகத்(து)உடலினுள் புக்குமீண் டவன்அனையர்
அரியதமி ழாற்றுதித்து,
*கண்டதத் துவவாதி கட்கும்,அதன் ஏனைய
கணத்தோர்க்கும் நடுவில்நின்று,
காசினிக்கு இடர்செயும் கயவர்குல வேரறக்
கடிவதே கருதிநொந்து,
தொண்டரது பாதபங் கயமலர் உகுக்கும்மென்
துகள்முடி யினுக்கணிந்து,
சுத்தவுண வல்லா(து) அசுத்தவுண(வு) உண்ணூர்
தொடர்ச்சியே கொண்டுவந்து,
தெண்டனிட்(டு) உனையே விரும்பும்அடி யேம்செய்த
சிற்றிற் சிதைத்திடேலே
திருவாவி னன்குடியில் மருவுமுரு கா!எமது
சிற்றிற் சிதைத்திடேலே. 76

(பொ - ரை.) (வளமார்ந்த) மேலுலகங்களில் வசிப்பவர்களது, தம் வாழ்வையும் (ஒரு பொருளாக) மதியாமல், (ஓயாது) ஆறெழுத்தை உருவேற்றி;

அழகிய கிளியுடலில் புகுந்து வெளிப்பட்ட அருணகிரி நாதர் போன்ற மேலோர்கள், தூய தமிழால் துதிபாடி;

---

76. அம் சுகம்-அழகிய கிளி. மீண்டவன் - அருணகிரி நாதர். கண்டதத்துவ வாதி - லோகாயதன். காசினி - உலகம். கயவர் - கீழோர். உகுக்கும் - சிந்தும்.

*உருவ வாதிகள், அருவ வாதிகள் என்ற இரு பிரிவினர்க்கும் இடையில் அமைந்து என்பது, இந்த அடியில் உள்ள பொருள்; இதுதான் அடிகள் கருத்து என்பது, திரு. தி. செ. முருகதாச பிள்ளை அவர்களது குறிப்பு.

(கண்ணால்) கண்ட தத்துவங்களே (மெய்; பிற பொய் என்று)கொண்டு வாதமிடும் லோகாயத கொள்கையர்க்கும்;

அம்மதத்தின் (சார்புடைய) பிற கூட்டத்தவர்க்கும் இடை நடுவில் இருந்து ;

(வீணான) இடரை உலகிற்கு விளைவிக்கும் அநியாயர் கூட்டம் அடியோடு அழிய,(சமய விவாதங்களை) ஒழிக்கும் வழியையே (சதா) உணர்ந்து வருந்தி ;

அடியார்களுடைய திருவடி மலர்களிலிருந்து (மகரந்தம் போல்) சிந்தும் மென் புழுதியைத் தலைமேல் தரித்து ;

தூய உணவன்றி, அசுத்த உணவு உண்ணாதவர் மாபெரும் நட்பையே மகிழ்ந்து மதித்து ;

உன்னையே வணங்கி மகிழும் அடியேங்கள் அமைத்த சிறு வீட்டைச் சிதைத்திடாதே !;

திருவாவினன் குடியில் மருவிய முருகா ! எம் சிற்றில் சிதைத்திடாதே, (எ - று).

விரிவுரை

உருண்டை வடிவில் அமைந்துள அண்ட கோளங்கள், ஒரு காலத்தில் அழிந்துபடும். அந்நாளில் அவைகளில் வசிப்பார்தம் உயர்ந்த வாழ்வும் ஒழிந்துவிடும். ஆதலின், பொங்கிய அவர்கள்போகங்களை ஒரு பொருளாக மதித்திலம்.

உள்ள காலமெலாம், ஓயாது ஆறெழுத்தையே ஓதினேம். சாந்த சீலர்கள் அருளிய சந்தத் தமிழால், பாடி உன்னைப் பரவினம். இவ்வுலகில் காட்சி வாத லோகாயதக் கயமை யெத்தனை ?

உடம்பின் வேறாய் உயிரில்லை ; தேகமே ஆன்மா ; ஐம்பொறிகளே ஆன்மா ; நுண்ணுடலே ஆன்மா ; பிராண வாயுவே ஆன்மா? பருமை நுண்மை உடல்கள், பொறிகள் பிராணன் முதலிய அனைத்துமே யானது ஆன்மா ; அந்தக் கரணமே ஆன்மா என்று எழுகிற ஆரவாரங்கள் எத்தனை?

அனைத்தும் சூன்யம். பொல்லா மயக்கால், அவைகள் பொருள்கள்போலப் புலனாகின்றன என்கிறார் ஒருபௌத்தர்.

புத்தியே அன்றிப் பிறிதுபடு பொருளில்லை என்கிறார் ஒரு பௌத்தர்.

உருவக் கந்தம், ஞானக் கந்தம், வேதனைக் கந்தம், குறிக்கந்தம், வாசனைக் கந்தம் ஐந்தும், ஒவ்வொன்றாய்த் தொடர்பில் அழிவது பந்தம்; அடியொடு ஏக காலத்தில் அழிவது முத்தி என்று ஆரவாரிக்கிறார் ஒரு பௌத்தர்.

சமுதாய வாத சாலம் காட்டுகிறார் ஒரு பௌத்தர்.

மோகம் ஆதியன பந்தம். முதன்மை ஆகாயம் நோக்கிப் போதலே முத்தி என்று, அதிகம் பேசுகிறார் ஆருகதர்.

தர்க்கம், மீமாம்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரங்களின் பறையறைவு எத்தனை ?

பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம், ஐக்கிய வாதங்களின் அக்கப்போர் எத்தனை ?

பாடாணவாத சைவம், சங்கிராந்தவாத சைவம், அவிகாரவாத சைவம், பேதவாத சைவம், நிமித்த காரண பரிணாமவாத சைவம், சுத்த சைவம் என்ற சுழல்புயல் எத்தனை?

இந்த வாத மதமெலாம் ஒழிவகை எவ்வகை யென்று, உள்ளம் நொந்தது கொஞ்சமோ ? தொண்டரடிப் பொடி சூடி, தூய உணவினர் உறவில் தோய்ந்து, தியானத்தில் கிடைக்கும் திருவாளன் ஆன உன்னைக் கனிந்த மனத்தால் காதலிக்கும் எம் சிறு வீட்டு வாழ்க்கையைச் சிதைத்திடாதே என்று விண்ணப்பித்தபடி. (சு)

மாகநக ரிற்புலவர் இன்புறச் சூரன்முதல்
வல்லவுண ரைத்தடிந்தாய்
மரகத கலாபச் சிகிப்பரியின் மிசையேறி
மாநிலம் சுற்றிவந்தாய்
சோகமலி வெய்தும்ஓ ராயிரம் தவர்உயச்
சூழ்வரைக் குகைஇடித்தாய்
தொடுவளை முதற்சொல்சில பணிகளுடன் அங்கைஒரு
தோகைநல் லாட்களித்தாய்

சாகத் துணிந்துசிக ரியில்ஏறி வீழ்ந்தான்
தனைக்கிளி யெனப்புனைந்தாய்
சாற்றும்இவை அனையபல விளையாடல் இன்னமும்
தரையினும் செயவல்ல நீ
தேகமுதல் மூன்றும் கொடுக்கும் அடி யேம்செய்த
சிற்றில் சிதைத்திடேலே
திருவாவி னன்குடியில் மருவுமுரு கா!எமது
சிற்றில் சிதைத்திடேலே. 77

(பொ - ரை.) பொன்னுலகத் தேவர்களின் (புந்தி) மகிழ, சூரபதுமன் முதலிய கொடிய அவுணரின் கொட்டம் அடக்கினை ;

மாகதநிறத் தோகை மயிலாகிய ஊர்தியின் மேல் அமர்ந்து, (ஒரு நொடியில்) மா பெரும் உலகை வலம் வந்தாய் ;

துன்பம் தோய்ந்த ஓராயிரம் தவசிகள் உய்ய, வட்டமாக (ப் பரங்குன்றில்) இருந்த குகையை இடித்தாய் ;

தொடுத்த வளையல் முதலாகச் சொல்லப்பெறும் சில அணிகளுடன், (அறுபட்ட) அழகிய ஒரு கரத்தை, (சாயலில்) மயில் போன்ற உத்தம முருகம்மைக்கு உதவினை ;

இறக்கத் துணிந்து, (கோபுர) சிகரத்தின் மேல் ஏறி வீழ்ந்த அருணகிரி நாதரை, (பொலிவுடைய) கிளியாகப் புனைவு செய்தாய் ;

விளம்பத் தக்க இவை போன்ற அளவிலாத அருள்விளையாடல்களை, நிலவுலகில் இன்னும் செயவல்ல நீ, ஆக்கை முதலிய மூன்றையும் அளித்து ஆட்பட்ட அடியேங்கள் செய்த சிறு வீட்டைச் சிதைத்திடாதே ;

---

77. மாகநகர் - தேவலோகம். சிகிப்பரி - மயில். தொடுவளை- பூண்ட வளையல். தேக முதல் மூன்றும் - உடல் மனம் வாக்கு மூன்றும்.

*அருளார் ஆவினன் குடியில் அமரும் முருகா! எம் சிற்றில் சிதைத்திடாதே, (எ - று).*

விரிவுரை

*தடிந்தாய், வந்தாய், இடித்தாய், அளித்தாய், புனைந்தாய் என்பவைகளை விளியாக்கினுமாம்.*

*எவ்வழியாலும் உதவும் நீ, வாக்கு மனம் காயத்தை உனக்கே வழங்கிய எம் சிற்றில் வாழ்க்கையைச் சிதைக்கலாமா என்பது குறிப்பு.* (எ)

தத்தத் தனதன தத்தத் தனதன தத்தத் தனதானா

அத்தர்க் கொருபொரு ளோச்சொற் றருள்சுத!
அத்திக்(கு) இளையானே,
அற்பிற் பணிபுரி பத்தர்க் கெளியவ!
அக்கத் திரள்தோய்வாய்!
சத்தக் கடலினி டத்துத் தகுவர்கள்
தத்துப் படநேர்வாய்!
சட்டச் சதுமறை விற்பத் தியன்எதிர்
தக்கித் துயர்சீலா!
புத்தர்க்(கு) அமணர்த மக்குப் புலைமலி
பொக்கர்க்(கு) எமனுவாய்!
புற்றுட் பணிகளும் மட்குற் றிடமுரல்
பொற்புச் சிகிஊர்வாய்!
சித்தர்க்(கு) உயிர்நிலை ஒத்துத் திகழ்குக!
சிற்றிற் சிதையேலே
செப்பொப் பறுபழ னிச்சற் குருபர!
சிற்றிற் சிதையேலே. 78

78. *சுத - புதல்வனே. அத்திக்கு - தேவயானைக்கு. அக்கத் திரள் - 18 கண்கள்; உருத்திராக்க மாலைகளுமாம். தத்துப்பட - மரணத்துயர் விளைய. விற்பத்தியன் - பிரமன். தக்கித்து - வாதித்து. பொக்கர்க்கு - பொய்யர்க்கு. மட்குற்றிட - மக்கிப்போக. முரல் - ஒலிக்கும். செப்பு ஒப்பு அறு - ஒப்பற்ற உரை பெற்ற.*

(போ - ரை.) தந்தையான சிவபிரானுக்கு, ஒரு மொழியின் பொருளை உபதேசித்தருளிய சேயே !

தும்பிமுகக் கணபதியின் தம்பியே !

அன்பால் தொண்டாற்றும் அடியவர்க்கு எளியோனே!;

பதினென் கண் கொண்ட பரமா ! ஆரவாரிக்கும் கடலின் இடத்து, அவுணர்கள் அழிவு பெறும்படி அதிர்த்தோனே ;

விதி நூலான நான்மறை அறிவுள நான்முகன் முன், வாதிட்டு உயர்ந்த வைதிகனே !;

பௌத்தர்க்கும், அமணர்க்கும், புலால் உணவு கொள் புல்லர்க்கும் (அருந்தண்டம் செய்) இயமன் ஆனவனே !;

புற்றுள் இருக்கும் பாம்புகளும் பொன்றும்படி, அகவி (அதிர்க்கும்) பொலிவுள மயிலை ஊர்பவனே !;

(வித்தகச்) சித்தர்கட்கு உயிர்நிலை போல் விளங்கும் குகா ! (எம்) சிறு வீட்டைச் சிதைத்திடாதே !;

ஒப்பற்றதென்று சொல்லப் பெறும் பழனி ஞான குரு நாதா ! எம் சிறு வீட்டைச் சிதைத்திடாதே, (எ - று).

## விரிவுரை

இளையோனே ! தோய்வாய் ! நேர்வாய் ! சீலா ! எமனவாய் ! ஊர்வாய் ! குகா ! குருபரா ! சிற்றில் சிதையேலே என இயைக்க. செப்பொப்பறு பழனி என்பதை, ஒப்பு அறு செப்பு பழனி என இயைத்துப் பொருள் கொளப் பெற்றது. செப்பு - சிறப்பித்துரைக்கும் உரை. ஒரு பொருள் - பிரணவப் பொருள். சிவசாம்ராச்சிய சட்ட புத்தகம் வேதம் ஆதலின், அதனைச் ‘ சட்டச் சதுர்மறை ’ என்றார். சட்டம் - நேர்மை யெனினுமாம். சிறப்பில் உயர்ந்த நீ, சிதைக்கும் செயல் செய்வது ஆகாது என்பது இறுதி யடியில் இருக்கும் குறிப்பு. (அ)

தானன தானன தானன தானன தத்தத் தனதானு

மாதவர் சேகரம், நான்மறை யோர்குழு,
மச்சக் கொடியோன்நேர்
வாழ்வுறு காவலர் பேரவை, வாணிப
மல்பெற் றுயர்சீரார்,
பூதல மேதுணை யாமென ஏர்உழு
பொற்புத் தொழில் ஓவார்
போல்பவர் யாவரும் வாழ்மறு கூடு,பு
ழைக்கைக் கரி,தேர்,மா
ஏதமில் ஓதையும், மாதர்கள் ஊடியி
டத்தக் கனபூணல்
ஏர்தரு பேரொளி, மாலையின் வாசமும்,
எய்ப்பற் றுறுமாணூர்
சீதள நீர்வய லூர்முரு கா!எமர்
சிற்றில் சிதையேலே
தேவர்தம் ஊரழி யாதருள் வேலவ !
சிற்றிற் சிதையேலே. 79

(பொ - ரை.) *சிறந்த தவமுனிவர்கள் சேர்ந்திருக்கும் இடம் ; (பெரிய) நான்மறை அந்தணர் பேரவை ;*

*மச்சக் கொடி படைத்த மன்தன்போல்; வாழும் மன்னர்கள் பெருஞ்சபை ;*

*வாணிப வளம்பெற்று உயர்ந்த, சால்புடைய வணிகர்கள் சங்கம் ;*

---

79: *சேகரம் - சேரிடம். குழு - கூட்டம். மச்சக் கொடியோன் - மன்மதன். காவலர் - மன்னர்கள். மல் - வளம். மறுகு - வீதி. புழைக்கை - துளைக்கை. ஓதை - ஓசை. ஊடி - பிணங்கி. எய்ப்பு - இளைப்பு. மாணூர் - மாட்சி நிறைவு.*

(தூய) நிலமே துணையாம் என்று, ஏர் உழுகின்ற வித்தகத் தொழில் அகலா வேளாளர் போல்பவர் யாவரும், (வியன்பெற) வாழும் வீதிகளில்,

ஆலைக்கை யானைகள், தேர்கள், குதிரைகள் (முதலியவைகளின் நடமாட்டத்தால் உண்டாகும்) துன்பமிலாத (இனிய) பேரோசையும் ;

(பேதை) மாதர்கள் ஊடலால் பிணங்கி, எறிந்திடத் தக்கன ஆகிய அணிகலன்களால், பெருகி யெழுகின்ற பேரொளியும் ;

(மேலும் அவர்கள் வீசிய) மாலைகளின் மணமும் ;

சோர்வற்று இருக்கும் கம்பீரமும் நிறைந்து, குளிர்ந்த நீர்வளம் நிறைந்த பழனி முருகா ! எம்மவர் சிறுவீட்டைச் சிதைத்திடாதே !;

அமரர்கள் உலகம் அழியாதபடி அருள் பாலிக்கும் வேலிறைவா ! (எம்) சிற்றில் சிதைத்திடாதே, (எ - று).

## விரிவுரை

சேகரம், குழு, பேரவை, சீரார் வாழ் மறுகூடு ஓசையும், பேரொளி வாசமும், மாணூர் வயலூர் முருகா எனக் கூட்டுக.

சேகரம் - முடியணி போன்ற இடம்.

அருந்தவர் வீதி, மறையவர் தெரு, அரச வீதி, வணிகர் மறுகு, வேளாளர் வீதி முதலிய பலதெருக்கள் பழனியில் இருக்கின்றன ; அவைகளில் கரியும் பரியும் தேரும் செல்கின்றன. காலத்தில் அவைகள் இயங்கலால், எவர்க்கும் துன்பம் எய்தியது இல்லை.

மாலைப் பொழுதில் ஆடவர்கள், தம் மனைவியர்க்கு மணம் கமழ் மாலை சூட்டினர். அரிய இரத்தின மாலைகளை அணிந்தனர்; பிணங்கிய பெண்கள், எடுத்து எடுத்து அவைகளை எறிந்தனர். வீசியிட்ட அவைகள், வீதிகளில் வீழ்ந்து விளங்குகின்றன. ஊடல் சிறிது நேரத்தில் ஓடிவிடும் ;

பிறகு, கூடும் குதூகலப்பில் உணர்வு குதிக்கும். ஆம். பழனியின் செல்வம் சிறந்த இந்த அருமைச் செய்திகளை,

' மாதர்கள் ஊடியி டத்தக்கன பூணர்
ஏர்தரு பேரொளி மாலையின் வாசமும்
எய்ப்பற் றுறும் '

என்பதில் பெறவைத்தார்.

"ஆடுவார் புரவிகள் குரத்தை ஆர்ப்பன
சூடுவார் இகழ்ந்தஅத் தொங்கல் மாலைகள்
ஊடுவார் ஊடுவ இழுக்கல் ஊடுவ
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே"

எனவரும் கம்ப ராமாயணம், இங்குக் கருதத் தகும். (கூ)

தத்ததன தத்ததன தத்ததன தானா

முக்கண்அவிர் பொற்(பு)அறுமு கத்தினும்உ ளானே!
முப்புரம்எ ரித்தபரன் முத்தமிடு பாலா!
சக்கரம்எ டுத்தஅரி தத்தறவெல் வானே!
சட்டிவிர தத்தினர்த மக்கெளிய வேலா
மக்களுரு வத்தொடும்வ ரத்தகுசெ வேளே!
மத்திநிலை பெற்றதவர் மட்(டு)அரிய பாதா!
செக்கர்நிறம் உற்றகுக! சிற்றில்அழி யேலே
தெட்டுபழ னிக்குமர! சிற்றில்அழி யேலே. 80

(பொ - ரை.) (புனித) முக்கண் விளங்கும் பொலிவு, (உத்தம) ஆறு திருமுகங்களினும் உள்ளவனே!;

முப்புரம் எரித்த முதல்வர் முத்தம் இடும் பாலனே!; ஆழி ஏந்திய திருமாலின் (அபாய) கண்டம் அகல,(விரோதிகளான அவுணர்களை) வென்றவனே!;

80. அவிர் - விளங்கும். பொற்பு - அழகு. தத்து - அபாயம். மத்தி நிலை - சமரச ஞான விளக்கம். மட்டு - அளவிட்டு அறிவதற்கு. செக்கர் - சிவப்பு. தெட்டு - தெளிவு.

ஆறுநாள் நோன்பினர்க்கு எளிய வேல் இறைவா !; மக்கள் உருவிற் குரு வடிவாயும் வரும், தகுதியுடைய செவ் வேளே !;

(உருவம் அருவம் இரண்டின்) நடுநிலை கை வந்த சமய பேதமற்ற சமரச ஞானிகட்கும், அரிய இயலாத திருவடி களை யுடையவனே !;

செந்நிறம் பொருந்திய திருமேனியை உடைய குகனே !; (எம் அரிய) சிறுவீட்டை அழித்திடாதே !;

தெளிவு தரும் பழனிக் குமார தெய்வமே ! (எம்) சிற்றிலைச் சிதைத்திடாதே, (எ - று).

### விரிவுரை

"பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்" என்பது பொது இயல்பு. பதினெட்டுக் கண்ணுடையவன் குமார பரன் என்பது சிறப்பியல்பு. அதைத் தழுவி, 'முக் கண் அவிர் பொற்பு, அறுமுகத்தினும் உளானே' என்றார். "திரிசண் ணேத்திராய நம :" என்பது நாம நலம்.

கடனிற வண்ணன் ஆழியை, தாருகன் கவர்ந்தான். அவுணர் தொடர்பு, என்றும் அமரர்க்கு இடையூறா யிருந்தது. அந்த அபாயம் அழிய, வேலால் அவர்களை வென்ற பிரானை, 'தத்து அற வெல்வானே' என்றார்.

தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் அரியான், சஷ்டி விரதம் கொண்டார்க்கு எளியனாகி எதிர்வரலின், 'எளிய வேலா' என்றார்.

தெய்வ மேனியன், மானுட மேனியில் குருவாக வந்த வரலாறுகள் பலவுள வாதலின், 'மக்கள் உருவத்தொடு வரத்தகு செவ்வேளே !' என்றார்.

தெய்வம் உருவம் எனவும், அருவம் எனவும்; ஒன்று எனவும், பல எனவும்; உயர்ந்தது தாழ்ந்தது எனவும் வாதிடுவது மதவாதம் ; எல்லாமா யிருக்கும் எனச் சாரும் அநுபூதியால் அறிவது சமரச நிலை.

அருளார்ந்த திருவுளத்தனாகலின், பெருமான், அந்தந்த நிலையினர்க்குத் தக்கவாறு நின்று அருள்கின்றான் ஆயினும், 'மத்தி நிலை பெற்றதவர் மட்டு அரிய பாதா' என்றார். இது, அரிவரிய திருவடியான் என, இறை பாத்துவ நிலையை இயம்பிய செய்தி.

தெட்டு - தேட்டு, தெள்வு, தெளிவு என விரியும். (௮0)

சிற்றிற் பருவம் நிறைவு பெற்றது.

---

## 9. சிறுபறைப் பருவம்

இது சிறுபறை கொட்டி விளையாடுதலைக் குறிக்கும் பருவம். இது பற்றிய குறிப்பு, சிற்றிற் பருவத் தலைப்பில் உளது. ஆங்கு அதை அறிக. சிறுபறை - சிறியதொரு ஒலிக் கருவி.

திகழ்சித்தி முத்தியெனும் இருபேறு மாதவச்
செல்வமே யாகுமென்றும்
செந்தமிழ்ச் சந்தக் கவிச்சுவை நுகர்ந்திடார்
செவிடரே போல்வ ரென்றும்
மகவென உயிர்த்திரள் அனைத்தையும் விழைந்திடா
மன்னர்புலி அனையர் என்றும்
வட்டிக்கும் வட்டிகள் வகுக்கின்ற தீவணிகர்
மறவேடர் புரைவர் என்றும்
நிகரில்உழ வுத்தொழில்ந டத்தியும்இ ரப்பவர்தம்
நெஞ்சம்எரி தரும் லோபமே
நித்தமும் செய்யுமவர் நீசரிற் கடையரே
நிச்சயம்இ தென்றும், என்றும்
செகமெங் கணும்சென்று சென்றுசலி யாமல்நின்
சிறுபறை முழக்கி யருளே
திருவாவி னன்குடியில் ஒருவா! விரைந்துனது
சிறுபறை முழக்கி யருளே. 81

---

81. மறம் - கொடுமை. புரைவர் - ஒப்பாவர்.

(போ - ரை.) (சிறந்து) விளங்கும் சித்தி முத்தி யெனப் பெறும் இரு பயனும், சிறந்த தவவழி வந்த (அரிய) திருவருட் செல்வமே ஆகும் என்றும் ;

செம்மைத் தமிழ்ச் சந்தப் பாக்களின் சுவையைக் கேட்டு மகிழாதவர், (செவியிருந்தும்) செவிடர்க்கே சமமாவர் என்றும் ;

உயிர்த் தொகுதிகள் அனைத்தையும் (தாம் பெற்ற) மக்கள் போல் மதித்து மகிழாத மன்னர்கள், (காட்டில் வாழும்) கடும்புலிக்குச் சமமாவர் என்றும் ;

வட்டிக்கும் வட்டிகள் (வாங்கிப் பொருளை) வளர்க்கின்ற கொடிய வணிகர்கள், இரக்கம் அற்ற வேடர்களை ஒப்பர் என்றும் ;

ஒப்பிலாத உழவுத் தொழில் செய்தும், கையேந்தும் எளியவர்களுடைய உள்ளம் பற்றி யெரியும்படி, உலோபத்தையே என்றும் மேற்கொள்ளும் வேளாளர்கள், கீழ் மக்களிலும் (மிகக்) கீழானவரே; இது என்றும் மெய்யான செய்தி என்றும் ;

எந்நாளும் நிலவுலகம் எங்கும் போய்ப் போய், (அருமைத் திருவுளம்) சலிப்பு அடையாமல், நின் (திருக்கரத்தில் உள்ள முதன்மைச்) சிறுபறையை முழக்கியருள் !;

திருவாவினன் குடியில் எழுந்தருளி யிருக்கும் ஒப்பற்ற முதல்வா ! மிக விரைந்து உன் சிறுபறையை முழக்கியருள் (எ - று).

## விரிவுரை

சித்தி - அணுவாதல், பெரிதாதல், பாரமாதல், இலேசாதல், நினைத்த இடம் செல்லல், விழைந்தது பெறல், படைப்புச் செய்தல், எதையும் வயப்படுத்தல் முதலிய எண்வகை நிலை ; இது அட்டமா சித்தி எனப் பெறும்.

முத்தி - விரும்பிய எதையும் விட்டிட்டு, விடுதலைப் பேரின்பம் விளையப் பெறுநிலை.

சித்தி முத்தியிரண்டும் சிறந்த தவத்தால் வருபவை. ஒரு முயல்வும் செய்யாமல், அவ்விரண்டும் கைவல்யம் ஆகவில்லையே என்று முன்னி நிற்பது முட்டாள்தனம். இதைச் சொல்லி, அடி முருகா ! பறையடி !

செந்தமிழ்ச் சந்தக் கவி நயம் உணராதார், செவியிருந்தும் செவிடரே என்று கூறி, அடி முருகா ! பறையடி !

மக்கள் எனக் குடிகளை மதியாத மன்னர்கள், அவர்களைக் கொல்ல முயலும் கொடும் புலி போல்பவர் என்று, அடிமுருகா ! பறையடி !

கோலச் சமயப் போர்வையிற் குறைவில்லை ; தொழில் முகத்தில் வாங்குவது அநியாய வட்டி ; வட்டிக்கு வட்டி ; இத்தகைய வணிகர்கள் வழிப்பறி செய்யும் கொடிய வேடர்களே என்று கூறி, அடிமுருகா ! பறையடி!

வேளாளர் என்பார் விருந்திருக்க உண்ணுதார் ; தாளாளர் தாம் எனலை மறந்த அவ்வேளாளர், பொல்லாத நீசரே என்னும் பொருள்பட, அடிமுருகா ! பறையடி !

பாரெங்கும் பவனிவா ! ஏகமூர்த்தியே !

இப்படிச் சொல்லிச் சொல்லிப் பறையடி என்று சொல்லும் இப்பாடலை, உணரும் உள்ளம் உருகும்மே ! (க)

உயிர்ஒன்றி னுக்கும்இடர் சிறிதும்செ யாமையே
உயர்வாய தருமம் என்றும்
ஒருதீவி னைத்தொடர்பும் இன்றிமுயல் கின்றதே
ஓங்குபொரு ளாகுமென்றும்
மயில்போலும் மங்கையரும் ஆடவரும் ஒருமைபடல்
மாசற்ற இன்பமென்றும்
மறைமுடிப் பொருளன்றி, மற்றெென்றும் வெஃகாமை
மன்னுபர முத்தி யென்றும்

82. வெஃகாமை - விரும்பாமை. செயிர் - பழுது.

குயில்போலும் வடிவமுடன் இசையுங்கொள் கானக்
குறத்திக்கு மூத்தநங்கை
குவலயம் உயும்படிஓர் வெண்பாவி னுல்அன்று
கூறிவைத் துள்ளபடியே
செயிர்யாவும் நீக்கவல பன்னிருக ரங்களால்
சிறுபறை முழக்கி யருளே
திருவாவி னன்குடியில் ஒருவா! விரைந்துனது
சிறுபறை முழக்கி யருளே. 82

(பொ - ரை.) ஒரு உயிர்க்குக் கூட சிறிதளவு துன்பமும் செய்யாமையே உயர்வாய அறம் என்றும்;

தீவினைத் தொடர்பு ஒரு சிறிதும் இல்லாமல், முயன்று பெறுவதே வளர்ச்சிக்கு உரிய பொருள் வாய்ப்பு என்றும்;

மயில்போலும் சாயல் பெண்களும், ஆண்களும், ஒன்றுபட்ட மனநிலை பெற்று இருத்தலே களங்கமற்ற இன்பம் என்றும்;

மறைகளின் உச்சியில் உள்ள மெய்ப்பொருளை யன்றி, வேறு ஒன்றையும் விரும்பாமையே நிலைபெற்ற வீடு பேற்று நெறி யென்றும்;

குயில் போன்ற நிறமும், குரலும் கொண்ட வனக்குற மகளான வள்ளியம்மைக்கு மூத்த ஔவை மூதாட்டியார், உலகம் உய்ய ஓர் வெண்பாவால் அன்று அருளிச் செய்தபடியே, பழுது முழுதும் போக்க வல்ல (சிறந்த) பன்னிரு திருக்கரங்களால், சிறுபறை முழக்கியருள்;

திருவாவினன்குடியில் எழுந்தருளிய ஏகனே! விரைந்து உனது சிறுபறை முழக்கியருள், (எ - று).

விரிவுரை

திருவள்ளுவர், கபிலர், இடைக்காடர், ஔவையார், வள்ளியார் முதலினோர், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்

எனும் வரலாறு ஒன்று இருத்தலின், அதைத் தழுவி, 'குறத்திக்கு மூத்த நங்கை' என்று குறிப்பிட்டார்.

"ஈதல்அறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்(து)—ஆதரவு
பட்டதே இன்பம்; பரனைநினைந்(து) இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்பது, பாருய்ய ஔவை அருளிய பாடல்.

இவை நான்கும் தர்மார்த்த காம மோட்சம் என்றும், இவைகளே புருடார்த்தம் என்றும் விரிவாகப் பல நூற்கள் விளக்கியுள.

செயிர் யாவும் நீக்கவல பன்னிருகரச் செயல்களை,

"விண்செலன் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கம் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய தொருகை
அங்குசம் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடின் படுமணி இரட்ட; ஒருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட"

எனத் திருவளர் செயல்புரியும் திருக்கரங்களால், இதுதான் அறம்! இதுதான் பொருள்! இதுதான் இன்பம்! இது தான் வீட்டு நெறி என்று, பெரும! பாரனைத்தும் உணரப் பறையடியும்! இதனால் உலகம் உண்மை உணரும் என்பது கருத்து. ஒருவன் - ஒப்பற்றவனே எனினுமாம். (உ)

மார்க்கண்ட முனியனைய மனவலியு ளார்களே
மாண்பிரம சரியர்என்றும்
மறையினைத் தமிழ்செய்திரு வள்ளுவனை அனையரே
மருவுகிர கத்தர்என்றும்
பேர்க்கரிய சீர்பெறும் வசிட்டனிகர் வானப்
பிரத்தரே பெரியரென்றும்
பிறர்தொழில் வசப்படா அல்லமனை யனையரே
பிரமபத முத்தரென்றும்
நீர்க்கட லுடுத்(து)அளவி லாதமலை யாதிய
நெடுஞ்சுமை பொறுத்து மாயன்
நிறைமகிழ் வுறப்புணர்ந் துள்ளபார் முதலா
நிலாவுலகம் எங்கணும்போய்ச்
சீர்க்கமல மலரனைய செங்கையின் குணில்கொண்டு
சிறுபறை முழக்கியருளே
திருவாவி னன்குடியில் ஒருவா ! விரைந்துனது
சிறுபறை முழக்கியருளே 83

(பொ - ரை.) மார்க்கண்டேய முனிவரைப் போன்ற மனத்திண்மை வாய்ந்தவர்களே மாபெரும் பிரமசாரிகள் என்றும் ;

மறை நுட்பங்களை(த் திருக்குறள் பெயரால்) தமிழுரு வாக்கிய திருவள்ளுவரைப் போன்றவர்களே (இனிது) அமைந்த இல்லறத்தர் என்றும் ;

பெயர்க்க இயலாத சிறப்பைப் பெற்ற வசிட்டர்க்கு ஒப்பான வானப் பிரத்தர்களே (மக்களுள்) பெரியர் என்றும்;

அயலவர் செயல் முயற்சியில் அகப்படாத அல்லமனைப் போன்றவரே சொரூப சித்த முத்தர் என்றும் ;

நீர் நிறைந்த கடலையே உயரிய ஆடையாக உடுத்து, அளவிலாத மலை முதலிய பெருஞ்சுமை தாங்கி, மாயவன்

83. கிரகத்தர் - இல்லறத்தினர். குணில் - சிறு கொம்பு.

நிறைந்த மகிழ்ச்சியடைய, (என்றும் அவரொடு) இணங்கி யிருக்கும் நிலமகள் முதலாக விளங்குகிற உலகங்கள் எங்கும் சென்று,

சிறந்த தாமரை மலர்போன்ற செவ்விய திருக்கரத்தில், குறுந்தடி கொண்டு, சிறுபறை முழக்கியருள் ;

திருவாவினன் குடியில் எழுந்தருளிய ஒப்பற்ற மூழு முதலே! நீ சிறுபறை முழக்கியருள், (எ - று).

விரிவுரை

மார்க்கண்டன் - மிருகண்டுவின் மகன் ; வடமொழித் தத்திதாந்த நாமம். மனவலி - நெஞ்சுறுதி. பிரமசரியர் - பிரமத்திற் சரிப்பவர்; மாண்பிரம சாரியை மாணியென்பது வழக்காறு. மறை - உத்தரவேதம்.

வசிட்டர் - வளரும் சிஷ்டாசாரம் வாய்த்தவர் ; இவர் நான்முகனைக் காமித்த ஊர்வசியிடம் உதித்தவர் ; அருந்ததி கணவர் ; வானப் பிரத்தர் : அஃதாவது, மனைவியுடன் மேதகு தவநிலை மேற்கொண்டவர்.

அல்லமர், வள்ளிகாவை யெனும் வளமார் பதியில், கிராங்காரன் சுஞ்ஞானி யெனும் இருவரது உயர்தவ நெருப்பில் உதித்தவர்; சிவாம்சம் ஆனவர்; எவர் உளத்தை யும் உணர்ந்தவர்; இலிங்க தாரணர். தோற்றத்து அளவில் உருவாயும், அருவாயும் இருந்து, அருளாடல் பல புரிந்த சாரூப இலக்கணம் சார்ந்தவர் ; தன்னை மயக்க வந்த மாயையை மயக்கிய இவரது அற்புதங்களை, விரிவாகப் பிரபுலிங்க லீலை விளக்குகின்றது.

மார்க்கண்டேயர் போன்ற மனோபலம் உடையவர் களே மாணிகள்! வள்ளுவர் போன்றவரே இல்லற நல்லறர்! திரிகால ஞானமுள வசிட்டர் போன்றவரே மேதகு வானப்பிரத்த மேலோர். அல்லமர் ஒத்தவரே பிரமபத மூத்தர் என்று, பாரனைத்தினும் நீயே பறையடித்து வைத் தால், தேரும் உலகம் தெளிவு பெறும் என்றபடி.

இந்த நாற்பால் அறங்களை மேற்கொண்ட மேதகையரை, அருளொடு இறைவன் எவர்க்கும் அறிவித்தல் செய்வன் எனும் நூல் நுட்பம் ஓர்ந்து நுவன்றபடி.

பிரமபத முத்தர் - விடுதலையான வீடுபேறு பெறற்குரியவர். (ரு)

தேவதுந் துமியொலியில் அமரா வதிப்புலவர்
சிந்தைமகிழ் வெய்திவாழ,
செங்கட் பெரும்புலியை நிகர்தான வக்கொடியர்
தீநெஞ்சு பறையடிப்ப,
பூவகத் துற்றசதுர் முகன்மறைகள் நான்கும்நுவல்
பொதுநெறிகள் ஆறும்ஓங்க,
புலைகொலைக் கஞ்சாத புன்சமய மெல்லாம்
புகைந்துநீ றாகிஒழிய,
சேவல்இட பம்கருடன் ஆதிய வரைந்துள்ள
சீர்க்கொடிகள் யாவும்வெல்ல,
தீயன வரைந்தகொடி முழுதழிய, அறமெலாம்
சிதறுமல் எங்கும்வளர,
பாவமென் பனமுற்றும் நசிவுற நினைந்துசிறு
பறைமிக முழக்கியருளே
பழனியங் கிரியின்மிசை வளரும்நம் குமர!சிறு
பறைமிக முழக்கியருளே. 84

(பொ - ரை.) துந்துமி (எனும்) தெய்வப் பறை ஒலிக்கும் பொன்னுலகப் புலவர்களான தேவர்கள், மனம் (மிக) மகிழ்ந்து வாழ்வு பெறவும்;

சிவந்த கண்களை யுடைய பெரும் புலிகளைப் போன்ற கொடிய இரக்கம் அற்ற அரக்கர்களின் பாவமனம் (பயப்) பறை கொட்டவும்;

---

84. அமராவதி - தேவலோகம். நசிவுற - நசித்துப்போக; அழிய.

தாமரை நடுவில் தங்கிய நான்முகன் (ஓதும்) நான்கு மறைகள் நவிலும் பொதுவான (உயர்ந்த) சமயங்கள் ஆறும் ஓங்கவும் ;

புலைக்கும் கொலைக்கும் அஞ்சாத அற்ப சமயங்கள் அனைத்தும், புகைந்து நீறாய் அழியவும் ;

சேவல், விடை, கருடன் முதலாக எழுதியுள (வித்தகத்) தெய்வக் கொடிகள் அனைத்தும் வென்றி யுறவும் ;

தீமை யுடையனவாக எழுதப் பெற்ற கொடிகள் யாவும் அடியொடு கெடவும் ;

(பொது, சிறப்பு எனப்பெறும்) அறம் முழுதும், சிதறி விடாமல் (வாய்ப்பாகி) எங்கும் வளரவும் ;

பாவம் எனப் படுபவை முழுதும் அடியொடு அழியத் திருவுளம் கொண்டு, (நீ) சிறுபறை முழக்கியருள் ;

பழனியெனும் அழகிய மலைமேல், (சிவபோகம்) சிறக்க இருக்கும் எங்கள் குமரா ! (நீ) சிறுபறை முழக்கியருள். (எ - று.)

## விரிவுரை

துந்துமி - துந்தூ என ஒலித்தலிற் போந்த பெயர் ; இது, தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, மிடற்றுக் கருவி, கஞ்சக் கருவி என ஐவகை.

அமிர்தம் வைத்த பதி, அமரர் வாழும் தலம் ஆதலின், சுவர்க்கம் அமராவதி யெனப் பெற்றது. புலவர் - அதிநுட்ப அறிவினர் எனும் பொருளில், தேவர்களைக் குறித்த பெயர்.

தானவர் - (காசிபர் மனைவியான) தநு என்பவளின் மக்கள். இவர்கள் எப்போதும் அழற்கண்ண ராதலின், 'செங்கண் பெரும் புலியை நிகர்தான வக்கொடியர்' என்றார். கண்ணிலும் தீ; அவர்கள் கருத்தினும் தீ யாதலின், 'தீ நெஞ்சு' எனப் பெற்றது. பயந்த அவர்கள் மனப் படபடப்பை, 'பறை யடிப்ப' என்ற அழகே ஒரு தனி-

பொது நெறி - வேத உடன்பாடாக விளங்கும் ஆறு சமயங்கள். மற்றவை, 'புலை கொலைக் கஞ்சாத புன்சமயம்' என்று அவைகளை வேறு பிரித்தார்.

சேவல் - தெய்வக் குமரன் திருக்கொடி. இடபம் - சிவனார்க்குரிய விடைக்கொடி. கருடன் - திருமாலின் தெய்வக் கொடி. இவைகளால் விளையும் நலமெண்ணி, 'திருக் கொடிகள்' என்று உடன் பட்டும், பிற கொடிகள் 'தீயன வரைந்த கொடி' என்று மறுத்தும் உரைத்த அருமை, மறக்கத் தகுவதன்று. அறம் வளர, பாவம் நசிவுற என்ற பகுதி, அருமையினும் அருமை.

வாழ, அடிப்ப, ஓங்க, ஒழிய, வெல்ல, வளர, நசிவுற நினைந்து முழக்கியருள் என்று கூட்டுக. (௪)

சருவசித் தும்செய்ய வலனும் உனக்கும்,உன்
றனைநம் பெனக்கும், என்னைச்
சார்ந்தொழுகும் ஒருதொண்ட னுக்கும்எய் தியமூன்று
தரமாய மூன்று கிணறும்
பொருவில்பெரு நீர்ஊற் றுதித்துலகம் எங்கணும்
புகழ்நலம் பெறவும்,ஈனப்
பூசனைகொ ளும்புலைத் தேவதைக ளும்பெரும்
புனிதம்உற் றிடவும்,பொலாக்
கெருவமுற் றியசமய வாதரும் கவிஞரும்
கேடுபட் டிடவும்,நல்லோர்
கேளிரொடு வாழவும், கவுமார நெறியோர்
கிளர்ச்சியுற வும்குறித்துப்
பருவதகு லந்தோறும் உலவுமுரு கைய!சிறு
பறைமிக முழக்கி யருளே
பழனியங் கிரியின்மிசை வளரும்நம் குமர!சிறு
பறைமிக முழக்கி யருளே. 85

---

85. ஈனப் பூசனை - கொலை புலை யுடைய இழிவழிபாடு. பொலா - பொல்லாத. பருவத குலம் - மலைக்கூட்டம்.

(போ - ரை.) எல்லா வகையான சித்தும் செய்ய வல்லனை உனக்கும், உன்னை நம்பும் எனக்கும், அடியேனை அடைக்கலம் புகுந்து வாழும் (தூய) ஒரு தொண்டனுக்கும் உரிய முத்திறமான கிணறு மூன்றும், ஒப்பிலாத பெருநீர் சுரந்து, உலகம் எங்கும் புகழும் (பெரு) நலத்தை அடியேன் பெறவும்;

இழிவான வழிபாட்டை யேற்கும் இருள்நெறித் தேவதைகளும் (அரிய) பெருந் தூய்மை யடையவும்;

பொல்லாத ஆணவம் முதிர்ந்த (வாதம் செய்யும்) சமய வாதிகளும், (அந்நெறி பற்றிய) பாவலரும் அடியொடு கெடவும்;

நல்லவர்கள் (தம்)உறவினருடன் நலமுறவும் திருவுளம் கொண்டு,

மலை நிலந்தோறும் உலாவரும் முருகையா! (நீ) சிறு பறை முழக்கியருள்;

அழகிய பழனி மலைமேல் எழுந்தருளிய எங்கள் குமரா! சிறுபறை சிறக்க அடித்தருள், (எ - று).

### விரிவுரை

புலைத்தேவதைகள் - காட்டேறி, மாடன், சுடலை, கருப்பன் முதலிய கொடிய தேவதைகள்.

### மூன்று கிணற்று வரலாறு

அடிகள், சிறந்த வேல் வழிபாட்டைச் செய்பவர். மலர் வேண்டுமே என்று, அதற்கென வாய்ப்பான ஒரு நந்தவனம் வைத்தார். கிணறு தோண்ட ஆரம்பித்தார்.

பெரும்பொருட் செலவாயது. ஏராளமான பிரயாசை. ஆழமும் அதிகம் ஆயது. வளமான ஊற்று தாராளமாக வரவில்லை. முதலி லிருந்தே சோதனை. விரிவா யெழுந்தது வேதனை.

நீரூற்றுப் பெருகி, அந்நீர் எடுத்து வேலுக்கு அபிடேகிக்கவேண்டும். அந்நாள் நேருங்வரை, உண்ணேன் உணவு

என்றார். நாள் சில இடையில் நடந்தன. நீடித்த பயங்கர நியதி.

ஒருநாள் கனவில், கந்தப் பரமன் காட்சியாயினன். அன்பொடு கைகுவித்தார் அடிகள்.

பெரும! யாம் ஒரு கிணறெடுத்தேம். வாய்ப்பான நீர் அதில் வரவில்லை. இது கருதியே பட்டினி யிருக்கின்றேம் என்றார் அடிகளார்.

நீயுமா கிணறு எடுத்தனை? யாமல்லவா தோண்டினம்! நீயா பட்டினி? நாமன்றோ பட்டினி யிருக்கின்றோம்? என்று, அபேத நிலையில் அத்தன் அறிவித்தான்; அந்த அருமையை, உணர்ந்த மனம் உருகியது.

இஃதன்றி, பழனியை அடுத்த வேலாயுதம் பாளயத்தில் கறுப்பவேலு கவுண்டர் என்ற ஒரு அன்பர் இருந்தார். அவர் அடிகளை முருகனாகவே அறிபவர். அவரும் ஒரு கிணறு எடுத்தார். அதுவும் நீரின்றி இருந்ததாம். அடிகள் உளத்திற்கு அதுவும் ஒரு குறை.

தன் கிணறு ஒன்று, முருகன் கிணறு ஒன்று, கவுண்டர் கிணறு ஒன்று. ஆக,

'மூன்று கிணறும் - பொருவில் பெரு நீர் ஊற்று உதித்துலகம் எங்கணும் புகழ்நலம் பெறவும் - சிறுபறை முழக்கியருளே' என்றார்.

இவ் வரலாற்றை, குருபர தத்துவ குமார தரிசன சருக்கத்தும் கூறியுளர். மேலும்,

"கற்கிணற்றின் நீர்ப்பெருக்கம் காதலித்துன் பாலடைந்தேன்
நிற்குமதொன் றுள்ள துணை நேடியுரு(கு)—எற்கடியான்
தற்குமதொன் றுள்ளதிந்தத் தாழ்ச்சிமுற்றும் தீர்த்தருள்வாய்
நிற்கும் பழனியண்ண லே"

எனவரும் பழனி வெண்பா மாலையிலும், இவ்வரலாற்றை யறிக.

(ரு)

வேறு

காவாள் பவர்க்கோர் உயிர்த்துணையாம்
கந்தா ! கதிர்வேற் படையேந்திக்
கலப மயிலூர்ந்(து) உலகையொரு
கணத்தில் வளையும் கதிநடையாய் !
சேவார் கொடிப்புங் கவன்நெடுநாள்
செயுமா தவத்தின் பயனாய் !
சிலம்புக்(கு) இறைமுன் தருகவுரி
செங்கைக்(கு) அணியாம் சிறுகுருந்தே!
நாவா ணியும்போற் றிடப்பலநூல்
நவிலும் புகழும், முழுப்புலமை
ஞானக் கடலும் புணர்குரவா !
நறிய மலர்த்தார் பலபுனைவாய் !
மூவாப் பழனிப் பதிமுருகா !
முழக்கி யருளாய் சிறுபறையே
முந்நீர்ப் புவியுண் டவன்மருகா !
முழக்கி யருளாய் சிறுபறையே. 86

(பொ - ரை.) கற்பக நாட்டை ஆள்கின்ற இந்திரற்கு ஒப்பற்ற உயிர்த்துணையான கந்தா !;

ஒளியுடைய வேல் ஏந்தி, தோகை மயில் ஊர்ந்து, உலகை ஒரு கணத்தில் வலம்வரும் வேக நடையாளா !;

விடைக்கொடி யுடைய விமல சிவம், நெடுநாள் இயற்றிய பெருந்தவப் பயனாய் மிளிர்பவனே !;

இமயமலை மன்னன் முதற்கண் பெற்ற கவுரியார் திருக்கரங்கட்கு, அழகாய் அமைந்த இளஞ் சேயே !;

---

86. கா - கற்பக (நாடு). கதி - விரைவு. சே - விடை. புங்கவன் - சிவபிரான். சிலம்பு - (இமய) மலை குருந்தே - சேயே. காவாணி - நாமகள். நறிய - நறுமணம் கமழ்கிற. மூவா - இளமை வளமுள. முந்நீர்ப் புவி - கடல்சூழ் உலகம்.

நாமகளும் போற்ற, பல நூற்கள் புகலும் புகழும், முழுப் புலமை ஞானக் கடலும் கலந்த குருநாதா !;

மணம் கமழ்கின்ற (அரிய) மலர்மாலை பல அணிந் தவனே !;

என்றும் இளம் பேருன (முதன்மைப்) பழனிப் பதி முருகா ! சிறுபறை முழக்கியருள் ;

கடல்புடை சூழ்ந்த உலகை உண்ட திருமால் மருகா ! சிறுபறை முழக்கியருள், (எ - று).

## விரிவுரை

கந்தா ! கதி நடையாய் ! பயனுய் ! சிறுகுருந்தே ! குரவா ! தார் பல புனைவாய் ! முருகா ! மருகா ! சிறுபறை முழக்கியருள் எனக் கூட்டுக.

கந்தன் - ஆறு உரு ஒருங்கியைந்த மேனியன் ; அப் பெருமானே இருமைகெட ஒருமை உதவுபவன் ஆதலின், 'உயிர்த்துணையாம்' என்ருர்.

ஒருகணத்தில் உலகை வளையும் கதிநடை - என்றும் எந்நேரத்தும் எண்ணுவார் முன் எளிது விரைந்து வருபவன் எனும் குறிப்பு.

தவத்தின் பயனுய் என்றது, பெருந்தவர் முன் எளிது வந்து பேரருள் புரிபவன் எனும் செய்தி.

எத்துணையோ சிறந்திருந்தும், தாய்முன் சேய் என்பது, வித்தக சௌலப்ய விளக்கம்.

'புகழும் ஞானக் கடலும் புணர்குரவன்' என்றது, அருமையான ஒரு தனிநடை.

மூவாப் பழனி முருகன், புவியுண்டவன் மருகன் எனும் பிராசம், எண்ணுநர் உளத்தை இன்புறுத்தும்.

மூத்தபின் உதிர்தல் முறை. அங்ஙனமின்றி நீர்வளம், நிலவளம், கல்விவளம், செல்வவளம், ஞானத் தெய்வவளம் என்றும் நிறைந்த எழிற்பதி எனும் செய்தி, 'மூவாப்பழனி' என்பதன் முன்னிற்கின்றது அல்லவா ! (கூ)

### ஓவா ஒலிஇயல்

கழங்(கு)ஒன் றியகைச் சிறுமடவார்
கனிவாய்க் குரவைத் தொனியும்,இளம்
காளை யனையார் பலர்பயிலும்
கழகத் தொனியும், கனிமலர்த்தேன்
வழங்கும் பொழிலிற் ககத்தொனியும்,
மாறுற்(று) இகல்வா னரத்தொனியும்,
வானோர் தொனியும், பசுத்தொனியும்,
வாவிக் கரையின் வளைத்தொனியும்,
பழங்கன் றினுக்கும் சொரிதருவெண்
பாலார் கவரிப் படைத்தொனியும்
பரியும் கரியும் தேருமுதல்
பலவற் றுதித்துப் படர்தொனியும்
முழங்கும் பழனிப் பதிமுருகா
முழக்கி யருளாய் சிறுபறையே
முந்நீர்ப் புவியுண் டவன்மருகா !
முழக்கி யருளாய் சிறுபறையே. 87

(போ - ரை·) கழங்கு பற்றிய கைகளை யுடைய இளம் பெண்கள், பழுத்த (கோவைப்) பழம்போலும் வாயால் பாடும் குரவைப் பாட்டொலியும் ;

காளைபோன்ற (மிடுக்குடைய)பல ஆடவர்கள் பழகும் (அரிய சிலம்பக்) கூடங்களின் ஆரவாரமும் ;

கனிகளையும், மலர்களையும், தேனையும் தருகின்ற சோலைகளின் (கவினும்) பறவைகளின் கலகலப்பும் ;

(ஒன்றுடன் ஒன்று) மாறுபட்டுப் பகைக்கும் குரங்குகளின் கூக்குரலும் ;

தேவர்களின் (துதி) ஒலியும் ; ஆன் இனங்களின் (அம்மா எனும்) அழைப்பொலியும் ;

---

87. குரவை - குரவைப் பாட்டு. கழகம் - சிலம்பக் கூடம். ககம் - பறவை. இகல் - பகை. வளை - சங்கு. கவரி - எருமை. பரி - குதிரை. கரி - யானை.

பொய்கைக் கரையில் (நடமாடும் பெருகிய) சங்குகளின் பேரொலியும் ;

முதிர்ந்த கன்றை நினைந்து சொரிகின்ற வெண்மைப் பால் நிறை மடியுள்ள எருமைக் கூட்டங்களின் முழக்கமும்;

குதிரைகளும், யானைகளும், தேர்களும் முதலியவைகள் (செல்லுதலால்,) (பெரிது) தோன்றிப் பரவுகின்ற பேரோசையும் (ஒருசேர) ஒலித்துக்கொண்டே யிருக்கும் பழனித்தல இளம்பரிபூரணா! கடல்சூழ் உலகுண்ட திருமால் மருகா! (நீ) சிறுபறை முழக்கியருள், (எ-று).

விரிவுரை

குரவைத் தொனியும், கழகத் தொனியும், ககத்தொனியும், வானரத் தொனியும் முழங்கும் பழனி முருகா! அவைகளொடு நீயும் சிறுபறை முழக்கியருள் எனக் கூட்டுக.

இவ்வொலிகளை உய்த்து உணர்ந்தால், அவைகளின் வெவ்வேறான ஓசைநயம் தோன்றும்.

குரவை - எழுவரேனும், ஒன்பதின்மரேனும் மங்கையர் கைக்கோத்து ஆடுவதொரு மகிழ்ச்சிக் கூத்து. அவ்வமயம், நாவால் மங்கல இசைஒலி எழுப்புவது உண்டு.

வளை - சங்கு ; உள் சுழிந்து வளைந்திருப்பதால் போந்த பெயர். (எ)

வேறு

தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதனா

இரட்டு கவரிகள் முதற்சொல் வனகொளும்
எழிற்பெண் மிகையுடையாய் !
இலக்கர் நவர்பல கணத்தர், தலைவர்கள்
இனர்க்கொர் அனையனையாய் !
திரட்டும் அமுதையும் இகழ்ச்சி செயும்அதி
திறத்தர் உணர்குரவா !
திருக்கும் இருகரு மருப்பொ(டு) உலவொரு
சிவத்த தகர்இவர்வாய் !

கரட்டன் ஒருதொகை விகற்பம் நுவலிய
 கனத்த புலமைவலாய் !
கவிச்சொல் நயம்அறி கிலர்க்கொர் இடியுறழ்
 கனைப்ப ரொடுதிரிவாய் !
முரட்டு மதகரி முகற்கொர் இளையவ !
 முழக்கு சிறுபறையே
முனைத்த பழனியில் வசிக்கும் இறையவ !
 முழக்கு சிறுபறையே 88

(பொ - ரை.) வெண்சாமரை வீசுவார் முதல், சொல் லனவற்றை (உடனடியாகச்) செய்யும் அழகிய பணிப் பெண்களை, அளவிலராக ஏன்ற ஐயா !;

இலட்சம் வீரர்கள், நவவீரர்கள், பல பூதகண வீரர் கள், கணத் தலைவர்களின் கூட்டங்கட்கு அன்னைபோல் இருந்து அருள்பவனே !;

(பாற்கடலில்) திரட்டிய அமுதை உண்ணும் (பொன் னுலக) வாழ்வையும் இகழ்ந்து மறுக்கும் (பெருந்தவ) ஆற் றல் யோகிகள் தியானிக்கும் பேராசிரியா !;

முறுக்கேறி யிருக்கும் இரு கருத்த கொம்புடன், (எங் கும்) உலவிய (உறுத்த) ஒரு செம்மறியாட்டை ஊர்பவனே!;

முரடனை (பொய்யா மொழிப்) புலவனது ஒரு பாட லில், குற்றம் கூறிய வளர்ந்த புலமை வல்லாளா !;

---

88. இரட்டுதல் - மாறி மாறி வீசல் கவரி - வெண்சாமரை. மிகை - மிகுதி. இனர் - கூட்டத்தவர். அனை - தாய். திருச்கும் - வஞ்சிக்கும் ; முறுக்கேறி யிருக்கும். மருப்பு - கொம்புகள். சிவந்த தகர் - செம்மறி யாடு. இவர்வாய் - ஊர்பவனே. கரட்டன் - முரட் டுப் புலவன். கனைப்பர் - கர்ச்சிப்பவர். கரிமுகற்கு - யானைமுகக் கணபதிக்கு. முனைத்த - (வளத்தால்) முன்னேறிய.

(அருமைக்) கவியில் உள்ள சொல் நயங்களை அறியாத வர்க்கு, (அவர் முன்,) ஒரு இடிபோல் கனைக்கும் கவிஞ ரொடு திரிபவனே !;

(கயவர்முன்) முரட்டுத்தனம் காட்டும் யானைமுகக் கண பதிக்கு ஒப்பற்ற தம்பியே ! (நீ) சிறுபறை முழக்கியருள் ;

முன்னேறிய பழனியில் எழுந்தருளிய முதல்வா ! (நீ) சிறுபறை முழக்கியருள், (எ - று).

விரிவுரை

நீ மகாப் பிரபு ; வீராதி வீரன் ; யோக குருமுதல் ; அஞ்சா வஞ்சரை அடக்குவோன்; பேரறிவின் பெருமன் ; புலவர் திலகம் ; வினை தவிர்க்கும் தும்பிமுகர் தம்பி ; எவர்க் கும் பழனியில் இறை ; உனது அருளற்புதம் வெளியாக, இன்பநாத முழக்கம் எழுப்பியருள் என்பது கருத்து.

உடையாய் ! அனையனையாய் ! குரவா ! இவர்வாய் ! புலமை வலாய் ! திரிவாய் ! இளையவ ! இறையவ ! சிறு பறை முழக்கியருள் எனக் கூட்டுக. (அ)

தத்ததன தத்ததன தத்ததன தனனு

சத்திரம்எ டுத்தவர்த மக்குள்ஒரு பெரியாய் !
சத்திஒரு பக்கம்உறு சற்குரவன் மதலாய் !
நத்தியவை முற்றும்அருள் நற்கருணை முருகா !
நச்சரவின் உச்சியில்ந டிக்குமயில் இவர்வாய் !
பத்தியைவெ றுத்திகழ்ப டிற்றறிஞர் பகைவா !
பற்பலம லைத்தலைப தக்கமலம் அணிவாய் !
முத்திருவு டைக்குக !முழக்குசிறு பறையே
முற்பழனி வித்தகமு ழக்குசிறு பறையே 89

---

89. சத்திரம் - வாள். நத்தியவை - விரும்பியவைகளை. இவர் வாய் - ஊர்பவனே. படிற்று அறிஞர் - கீழ்த்தர அறிவுடையோர். முத்திரு - மும்மைச் செல்வங்கள்; அவை, பத்தி சித்தி முத்தி எனப் பெறும்.

(போ - ரை.) வாள் ஏந்திய வயவர்க்குள், ஒருபெருந் தலைமை உடையோனே !;

தேவியை ஒருபால் உடைய தட்சிணா மூர்த்தியின் தநயா !;

விரும்பியவைகளை முழுதும் விளைவிக்கும், நலமுள முதன்மைக் கருணை முருகா !;

நச்சுப் பாம்பான குண்டலினியின் உச்சியில் நடிக்கும் (ஓங்கார) மயிலை ஊர்பவனே !;

அன்பின் பண்பை அருவறுத்து இகழும் பாழும் அறிவாளிகளின் பகைவனே !;

(உயர்ந்த) பல மலைகளின் உச்சியில் பாத தாமரைகளைப் பதிப்பவனே !;

(உயிர்க்கு உறுதி தருவதாய) முச்செல்வங்களையும் உடைமையாகக் கொண்டு, (உள்ளக்) குகையில் உறைபவனே ! (முதன்மைச்) சிறுபறை முழக்கியருள் ;

முதன்மைப் பழனியில் எழுந்தருளி யிருக்கும் ஞானசாரிய ! (நீ முதன்மைச்) சிறுபறை முழக்கியருள், (எ-று).

விரிவுரை

வெற்றி கொண்டாரை வேலன் என்று உபசரிப்பது புறப்பொருள் இலக்கணப் பொதுமை யாதலின், 'சத்திரம் எடுத்தவர் தமக்குள் ஒரு பெரியாய்' என்றார்.

"தேவியோ டிருந்தே யோகுசெய் வானை" என்பது தமிழ்மறை. அம்மரபு பற்றி, சிவபிரானை, 'சத்தியொரு பக்கமுறு சற்குரவன்' என்றார்.

"சதாசிவ கோத்திரன் அருள் பாலா" என்பது திருப்புகழ். அம்மரபைத் தழுவி, 'குரவன் மதலாய்' என்றார். நற்கருணை என்றது, அறக்கருணையை.

தருக்கும் குண்டலினியை அடக்குவது தாரக மயில் என்பதை, அதன் தலைமேல் காலூன்றி நடிக்கும் மயிலன் என்பதில் பெற வைத்தார்.

தாம் உயர்ந்தார்போல் நடித்து, பத்திகாண்டம் தாழ்ந்தது என்பாரைப் 'படிற்று அறிஞர்' என்று பட்டம் சூட்டிய பகுதி, பாராட்டற்கு உரியது.

வித்தகம் - சாமர்த்தியம் எனினுமாம்; "வித்தகம் பேசவேண்டாம் பணிசெய்ய வேண்டும் என்றார்" என்பது பெரிய புராணம். (க)

தனனதன தத்ததன தனனதன தத்ததன
தனனதன தத்ததனா

தவமல(து)எ மக்கொர்துணை இலையெனஉ னைப்பரவு
தகவினர்த யக்கம்அற,ஓர்
தகர்விடுதி றத்தைஅனு தினநுவல்க விப்புலவர்
தமையெதிர்து டுக்கர்கெட,வேல்
குகுகுகுள னத்தொனிசெய் பறவையைஅ மைத்தெழுது
கொடிபுவன முற்றும்வெல,நீ
அவன்அவள்அ தற்குளும்வை கியநிசமி கத்தெரியும்
அவர்பிறவி அற்றொழிய,நான்
அலைகடல்மு தற்சொல்பல புனலொடுக னற்குள்இடும்
அரியதமிழ் கைக்குவரவே
சிவசுதர்க ளிற்சிறுவன் எனில்மகிழ்த கைக்குமர !
சிறுபறைமு ழக்கிஅருளே
செயமலிதி ருப்பழனி மலைமுடியில் உற்றகுக
சிறுபறைமு ழக்கிஅருளே. 90

(பொ - ரை.) தவம் அல்லது எமக்கு (வேறு) துணை இல்லை என்று கருதி, உன்னை வழிபடும் தக்க மேலோர் தயக்கம் தவிரவும்;

---

90. தகவினர்-தகுதியுள மேலோர். தகர் - ஆடு. துடுக்கர் - முரட்டு மொழியாளர். குவடு - மலைச்சிகரம்.

ஒப்பற்ற ஆட்டை (ஏறிச்) செலுத்தும் (உன்) ஆற்றலை, (பயன் விளைய) நாள்தோறும் பாடும் பாவலர்களைப் பகைக்கும் (அறிவிலாத்) துடுக்கர்கள் அழியவும் ;

(மலைச்) சிகரம் போன்ற (மாபெரும்) தோள்மேல், வேல் சார்த்திய சிறந்த நின் கோலத்தைச் சிந்திக்கும் இடையறுத் தியானத்தில் இருந்த முனிவர்கள், குகுகுகு என்று குரல் கொடுக்கும் சேவல் உருவை எழுதி யமைத்த கொடி, (விரிந்த) உலகு முழுதும் வெற்றி பெறவும் ;

அவன் அவள் அது (எனும் இருதிணை ஐம்பால்)களுக்குள்ளும் (நீ) எழுந்தருளி யிருக்கின்ற (மேலான) மெய்ம்மையைத் தெரிந்துகொண் டிருக்கும் அறிஞர்களின் பிறவி அடியோடு அழியவும் ;

அலைகளை யுடைய கடல் முதலாகச் சொல்லப் பெறுகிற நீர்நிலைகளிலும், நெருப்பிலும் இட்ட என் அருமைத் தமிழ்ப் பாடல் ஏடுகள், (எளியேன்) கைக்கு எளிதின் வரவும் ;

சிவகுமாரர் இருவர்களில்(உன்னை இளைய)சேய் எனில், குதூகலிக்கும் தகுதியுடைய குமரா ! (நீ முதன்மைச்) சிறுபறை முழக்கியருள் ;

வெற்றி நிறைந்த உயர்ந்த பழனிமலை உச்சியில் விளங்கும் குகா ! (நீ) சிறுபறை முழக்கியருள், (எ - று).

## விரிவுரை

இறுதி நாளன்று, எதுவும் உடன் வருவது அல்ல. தொன்மைப் பாவ புண்ணியங்கள்தான் தொடரும். இதையறிந்தபின், 'தவமலது எமக்கொர் துணையில்லை'; பிற அனைத்தும் அவம் என்று உணர்ந்தவர்கள், 'உனைப்பரவு தகவினர்'.

அவர்கள் தவவாழ்வில், வரையறை யிலாத சோதனைகள் வரும் ; அதனால் தயங்கித் தவநெறி தடைபடாதபடி, இனிய அருள் நாதம் எழுப்பியருள் !

அகில வுலகையும் அதிர்த்து வந்தது ஆடு; அதன் கொட்டம் அடக்கிய உன் புனித ஆற்றலைப் போற்றுவர் புலவர்; அஃதன்றிப் பிற அறியார். துடுக்கர் பலர் அவர்கட்குத் தொல்லை விளைப்பர். அவர்கள் மனம் அதிர்ந்து அடங்குமாறு, அரிய நாதப் பறையறை!

சிறந்த வேல் வழிபாட்டினர் பிடித்த சேவல்கொடி, விரிவாக உலகெலாம் வென்று விளங்குமாறு, உன் முதன்மைப் பறையை முழக்கியருள்!

அவன் - உயர்திணை ஆண்பால்; அவள் - உயர்திணைப் பெண்பால்; அது - அஃறிணை ஒன்றன்பால்; இம் முப்பாலும் கூறவே, பலர்பாலும் பலவின்பாலும் கொள்ளப்பெறும். இவைகள் அனைத்தினும் உளது உனது அருளாட்சி. அதனை உணர்பவர்தம் தீராப் பிறவிப் பிணிதீர, உன் எடுப்பான பறையை எழுப்பியருள்!

நின் அருள் வேட்டுப் பாடிய நூற் சுவடிகள் பலவற்றைச் செந்திற் கடலிலும், திருநெல்வேலித் தாமிரபரணியாற்றிலும், இருந்த மனைக்கு அருகிலுள வாய்க்காலிலும், கழுகுமலைக் குளத்திலும், நெருப்பிலும் இட்டு அழித்தேன். இப்படி அழிந்த நூற்கள் பலவன்றே!

அவைகள் மீட்டும் என் கைக்கு வருமாறு, நீ சிறு பறை முழக்கியருள்! என்றபடி. இதனை

"கடலினும், பொருநை நதியினும், நெல்லைக்
காலினும், கழுகுமா மலைப்பால்
தடமுடன் எழுநாத் தழலினும் கிடக்கும்
தமிழெலாம் தரப்பெற விழைந்தேன்
குடவளை முழங்கி அலைதரக் கயல்பாய்
குவளைநீர்த் திரைபடும் தாழை
மடலவிழ்ந் தவிர்சீர்ச் செந்தில்வாழ் முருகா!
மயிலில்வந் தருள்புரி வாயே"

என வேறொரு சமயமும் விண்ணப்பித்துளர்.

வளமான பொய்கையும் வற்றி, செம்மாந்த முதலையும் செத்தபின், ஆரூரர் வேண்டலுக்கு இரங்கி, பொய்கையில் நீர் பொங்க, இறந்த முதலை உயிர்த்தெழுந்து, வாய்திறந்து, கரையணுகி, முன் தான் உண்ட பாலனைக் கக்க, ஏற்ற வய தொடு அப்பாலன் எதிர்வரச் செய்த அருள் திறம் நினைந்து, அடியேன் இழந்த ஏட்டுச் சுவடிகளை அந்த அருளாளன் அருளுவதும் ஆகாதோ என்பது குறிப்பு.

தற்பர முருகன் அருளாது தாமதிக்க, உளத்தால் அவனிடம் ஊடிய அடிகள், பக்தி பரவசத்தால் பாடிய பல பாடல்களைத், தீயினும் நீரினும் இட்டனர் என்ற செய்தி, இங்கு எண்ணத் தகும்.

குறிப்பு :—தாம் பாடிய பாடல்களைத் தாமே பனை ஓலை ஏட்டில் எழுதுவது மரபு. அவர் கைப்பட எழுதிய ஏராள மான சுவடிகள், திருஆமாத்தூரில் இவரது தவச் சமாதி யுள்ள கௌமார மடாலயத்தில் இன்றும் ஏராளமாக இருக்கின்றன. காணும் தவமுடையார் சென்று காண்பது தகுவது: அவைகளைப் பதிக்க முயல்பவர் பரமன் அருட்குப் பாத்திரர் ஆவர். (௧0)

சிறுபறைப் பருவம் நிறைவெய்தியது.

## 10. சிறுதேர்ப் பருவம்

*சிறுதேர் உருட்டிச் சேயை விளையாடும்படித் தாய்மார் வேண்டும் பருவம் இது, குதூகலமாக நான்காம் ஆண்டிற் கூறப்பெறும்.*

*"நான்காம் ஆண்டிற் சிறுதேர் உருட்டலும்" என்பது பிங்கலந்தை.*

காரினம் அழுக்கா(று) அடைந்திடஓ ராயிரம்
கண்ணுன் இவர்ந்த தேரும்,
கமலாத னப்பிரமன் இவர்தேரும், மாயன்
கவின்தே ருடன்க டுக்கைத்
தாரிறைவன் ஏறிய பெருந்தேரும், ஓராழி
தரும்இரவி யின்தே ரும்,ஓர்
சற்றுமெலி வடையாமல் அதனதன் செலவினில்
சஞ்சரித் திடவும், வெங்கோல்
சூரினது தேரும்,அவன் இனமான தானவர்
தொடுத்தேறு கோடி தேரும்
சூடேஓர் வடிவாய்த் துலங்குபேய்த் தேரும்
தொலைந்திட நினைந்து, சுத்தச்
சீரியவர் வாழ்பழனி மாநகர்த் தெருவில்ஒரு
சிறுதேர் உருட்டி யருளே
சேவல்ஒலி நீடும் திருக்கைவடி வேலவா!
சிறுதேர் உருட்டி யருளே. 91

(பொ - ரை.) (விண்ணில்) இயங்கும்) கருமுகில்கள் (அளவிலாத) பொறாமை யடைய, ஆயிரங் கண்களை யுடைய இந்திரன் விரைந்தூரும் தேரும்;

---

**91.** கார் இனம் - மேகக் கூட்டங்கள். அழுக்காறு - பொறாமை. கண்ணுன் - கண்களை யுடைய இந்திரன். இவர்ந்த - ஊர்ந்த. கடுக்கை - கொன்றை. இரவி - சூரியன். சூர் - சூரபதுமன். பேய்த்தேர் - கானல் நீர்.

(இனிய) கமலமலர் மேல் இருக்கும் நான்முகன் ஏறுகின்ற தேரும்; திருமாலின் அழகிய தேருடன், கொன்றைமாலை யணிந்த சிவபிரான் ஏறிய (பூமியாகிய) பெரிய தேரும்;

ஒற்றைச் சக்கரமுடைய சூரியனது (ஏழ்பரிபூட்டிய) தேரும், ஒரு சிறிதும் சோர்வு அடையாமல் (இனிதே) அதன் அதன் போக்கில் இயங்கவும்;

கொடுங்கோலன் ஆகிய சூரபதுமனது தேரும்; அவனது இனத்தவரான அவுணர்கள் சமைத்து ஏறிய அளவிலாத தேர்களும்;

வெம்மையே ஒரு உருவாய் விளங்குகின்ற (கானல் நீர் எனப்பெறும்) பேய்த்தேரும் அடியோடு அழியத் திருவுளம் கொண்டு, (அகத்தாலும் புறத்தாலும்) ஒழுக்கம் அமைந்த ஆன்றோர் வாழும் அழகிய பழனி நகர் வீதிகளில், சிறந்த (நின்) சிறுதேர் செலுத்தியருள்;

(வெற்றிக் கொடியான) சேவல் ஒலி பெருகி விளங்கும் திருக்கை வடிவேல் இறைவா! (உயர்ந்த நின்) சிறுதேர் உருட்டியருள், (எ - று).

## விரிவுரை

உடம்பெலாம் கண்ணன் ஆதலின், இந்திரனை 'ஆயிரம் கண்ணன்' என்றார். அவன் மேக வாகனன் எனப் பெறுவன். அவைகளை விட்டிட்டு வேறு தேர் ஏறில், ஏழு முகில்களும் பொறாமை கொளல் இயல்பு. அதை, 'காரினம் அழுக்காறு அடைந்திட' என்பதில் பெற வைத்தார்.

முன்னுரைத்த ஐந்து தேரும் முறையே இயங்க, பின்னுரைத்த மூன்று தேர் வாழ்வும் முடிவடைய, வேலின் வெற்றியைச் சேவல் விளம்ப, சீரியர் வாழ் பழனியில் நீ சிறுதேர் உருட்டியருள் எனும் இப்பாட்டை உணர்வார் உள்ளம் உருகுமே. (க)

மருவார் குடிக்கொரு நெருப்பாய கவுமாரர்
மனதினிடை வீரம் வளர
வண்தமிழ்ச் சந்தக் கவிப்புலவர் சங்கத்தின்
மாருத உவகை வளர
பொருவாத சத்துவ குணத்தேவர் ஆலயப்
பொலிவுதொறும் விழவு வளர
புலையாடு தற்குரிய பேய்ப்பீடம் எங்கணும்
புற்றினொ(டு) எருக்கும் வளர
குருவார்த்தை யேமறை எனக்கொள்ளு மாதவர்
குழாத்தில்அரு ளாடல் வளர
குகரத் தொனிப்பறவை எழுதிய பதாகையில்
குன்றுத வென்றி வளர
திருவா வினன்குடியில் வளர்குமர குருபரா!
சிறுதேர் உருட்டி யருளே
சேவல்ஒலி நீடும் திருக்கைவடி வேலவா!
சிறுதேர் உருட்டி யருளே. 92

(போ - ரை.) (கொள்கையில்) பகையாளர் குடியை அழிக்கும் தீயினை ஒத்த கவுமார சமயத்தர் (வாய்மை) உளத்தில் வீரம் வளரவும்;

வளமான தமிழ்ச் சந்தக் கவிவாணர் வாழ் சபையில், மாறுபடாத மகிழ்ச்சி மென்மேல் மலரவும்;

ஒப்பிலாத சத்துவகுணத் தெய்வங்களின் அழகான ஆலயந்தோறும், நலம் மிக்க திருவிழா (கம்பீரமாக) நடைபெறவும்; புலை கொலை பூசை செய்தற்குரிய பேய்த் தெய்வப் பீடங்கள் இருக்கும் எந்த இடத்திலும், (மோசமான பாம்புப்) புற்றுடன், எருக்கஞ் செடிகள் முளைக்கவும்;

92. மருவார் - பகைவர். பொருவாத - ஒப்பிலாத. விழவு திருவிழா. புலை - அற்பம்; புலைப் புசிப்புமாம். குழாத்தில் - கூட்டத்தில். குகரத் தொனிப் பறவை - சேவல். பதாகை - கொடி.

குரு மொழியே (மந்திர) மறை எனக் கொள்ளும் சிறந்த தவசிகள் கூட்டத்தில், (வாய்ப்பான) அருளாடல் வளரவும் ;

(குகுகுகு எனும்) குகர ஒலிப் பறவையாகிய சேவல் எழுதிய கொடியில், மெலியாத வெற்றி மென்மேலும் மேவவும் ;

திருவாவினன் குடியில் குதூகலமாக விளங்கும் குமர குருபரா ! (சிறந்த நின்) சிறுதேரைச் செலுத்தியருள் ;

சேவல் நாதம் சிறந்து விளங்கும் அழகிய கரத்தில் வேலுடைய ஐயா ! (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள், (எ - று).

விரிவுரை

குமரனை வழிபடுபவர் கௌமாரர் எனப் பெறுவர். இவர்களது முதன்மைக் கொள்கையில் முரணி, சமயவாதிகள், கொலை புலை விழைவோர் சிலர், வீணான பல இடையூறு விளைவிப்பர். அருள்வழி ஒழுக அறியா இவர்களை, 'மருவார்' என்று குறிப்பிட்டார்.

'தூர்த்தர் நேர் பணியாது உறுக்கவல கவுமாரர்' எனக் காப்புப் பருவத்திலும்,

'துணிவே வடிவாகிய சத்தியம துற்ற கவுமாரர்' எனப் பிறிதோர் இடத்திலும் அடிகள் அறிவித்துளர்.

"துதிக்கும்அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கினவர்
குலத்தைமுத லறக்களையும் எனக்கொர்துணை யாகும்"

"சொலற்கரிய திருப்புகழை உரைப்பவரை யடுத்தபகை
அறுத்தெறிய உறுக்கியெழும் அறத்தை நிலைகாணும்"

எனும் அருணகிரியார் *வேல் வகுப்பு, இங்கு எண்ணத் தகும்.

---

*குகஸ்ரீ ரஸபதி எழுதிய திருவகுப்பு விரிவுரை, அமிர்தவசனி தெய்விக மாத இதழ்க் காரிலாலயம், 54, பந்தர் தெரு, சென்னை விலாசத்தில் கிடைக்கும். அதனில் விளக்கம் டெரிது வந்துளது.

சிவாலயங்கள் நிறைந்த நாட்டில், பேய்க் கோயில்களும் பெருகியுள. சத்துவகுண சிவாலயங்களில், வாழ்விக்கும் திருவிழாக்கள் வளரவேண்டும்; இராசச தாமச பேய்ப்பீடங்கள், உருக்குலைந்து ஒழிய வேண்டும்.

குருமொழி வேதமொழி; பிறர்மொழி வெறுமொழி. ஊன்றி இவைகளை உணர்ந்தோர் இடத்தில், வித்தக அருளாடல் என்றும் வெளிப்பட வேண்டும்; அந்த அருமையை உலகர் அறியவும், அறிந்து திருந்தி அருள் வேட்கை கொள்ளவும் வேண்டும்.

உயர்ந்த நின் சிறுதேர் உருண்டு ஓடுமேல், வீரம் வளரும்; உவகை வளரும்; விழவு வளரும்; பேய்மை அழியும்; வென்றி வளரும் என்று விண்ணப்பித்தபடி. (உ)

வருமம் தவிர்ந்தமன மாதவர் வலக்கைதொறும்
மன்னுசெப மாலை உருள
வாதவூர் முனியனைய புனிதர்விழி களில்அன்பு
மலிகணீர் மணியில் உருள
தெருமந்து நல்லோர் வருந்தமுயல் பாதகர்
சிரம்படு களத்தில் உருள
தெய்வமங் கையர்அவுண மகளிர்பணி நீத்(து)ஆடல்
செயும்எழிற் பந்தும் உருள
கருமம் பரம்பொருள் எனும்சிறுவர் அருளாடல்
கண்டுதுயர் மிஞ்சி உருள
கல்மலைத் தலையுருண்(டு) உய்ந்தசில கவுமாரர்
கலிபுறங் காட்டில் உருள

93. வருமம் - வன்மம்; கடுமை. மலி - நிறைந்த. தெருமந்து - மனங்கலங்கி. பணி நீத்து - குற்றேவல் தீர்ந்து. கருமம் பரம்பொருள் - வினையே பயன்தரும் முதல்எனும் மீமாஞ்சகர். கல்

தெருளெங்கும் வால்வளைகள் உருள்பழனி வேலவா !
சிறுதேர் உருட்டி யருளே
சிவஞான தேசிகத் தலைமைபெறு பாலகா !
சிறுதேர் உருட்டி யருளே. 93

(பொ - ரை.) வன்மம் அகன்ற மனத்தை யுடைய மாபெரும் தவச் சாதகர் வலக்கரந்தொறும், உயர்வாகப் பொருந்திய (மந்திரச்) செபமாலை உருளவும் ;

திருவாதவூர் அடிகளைப் போன்ற தெளிவினர் கண்களில், அன்புநிறை (இன்பக்) கண்ணீர், (உயர்ந்த) முத்துக்களைப்போல உருளவும் ;

உத்தமர்கள் கலங்கி உள்ளம் வருந்துமாறு தீச்செயலாற்றும் பாதக சாதகர் தலைகள், (உறுத்த) போர்க்களத்தில் உருளவும் ;

(கற்பு நிறை) மாபெரும் தெய்வ மாதர்கள், (ஒழுக்கம் அற்ற) அவுணப் பெண்களின் (அடிமைப்) பணிகளி லிருந்து அகன்று,(உவந்து ஆடும்) அழகிய கைப் பந்துகள் உருளவும்;

கருமமே கடவுள் எனும் அவமதியாளர், (உனது) அருளற்புத விளையாடலை அறிந்து, (தம் அறியாமையை எண்ணிப் பொருமித்) துயர்மிகுந்து புரளவும் ;

கற்களையுடைய (உயர்ந்த) மலையின் உச்சியி லிருந்து உருண்டு, (உனது அருளால்) உய்ந்த சில கவுமாரரிடம், கலியாட்சி உருண்டு மயானத்தில் ஒழியவும் ;

வீதிதொறும் வெண்ணிறச் சங்குகள் உருண்டு வரும் (வளமார்) பழனி வேல் பரமா ! (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள் ; சிவஞானம் உதவும் குருநாதனை முதன்மைபெறு சேயே!; (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள், (எ - று).

---

மலைத்தலை - கற்களை யுடைய மலையுச்சியில். கலி - கலிபுருடன் ஆட்சி. புறங்காடு - மயானம்- வால் வளை - வெளுத்த சங்குகள்.

விரிவுரை

இரக்கமற்ற அரக்க மனத்தார்க்கு, தவநிலை கைவருவது இல்லை. உயிர்க் கருணையே முதற்படி; பயனுன அதை யுடையார்க்கே தவம் பலிக்கும் என்பது, முதலடியிற் குறித்த பொருள்.

பயனுன நல்லோரை வருந்த வைப்பவர் பாதகர்; அவர்கள் தலை உருள வேண்டும் என்றது, மனம் நொந்துரைத்த நிலை.

ஒழுக்கமுள்ள பெண்கட்கு, கற்பு மாதர் குற்றேவல் செய்வது கொடுமையினும் கொடுமை. அந்நிலை யகன்று, மங்கல மாதர்கள் ஆநந்தம் கொண்டு பந்து ஆடுவாராக என்பதில், உத்தமர் உவகை உலகை யளிக்கும்; அவர்கள் துன்பக் கண்ணீர், அகில உலகையும் அழித்துவிடும் என்ற தொனியுளது.

நன்மையும் தீமையும் தருவது வினையே ஆதலின், அதுவே பரம் என்பவர் சிறுமதியாளர்; ஆதலின், அவர் 'கருமம் பரம்பொருள் எனும் சிறுவர்' என்றார்.

சிறுதேர் உருட்டி வரும் உனது அருளாடலை அவர் உணர்வரேல், கயமை மதியின் இருள் தன்மையைக் கருதி, அன்னார் வருந்தித் திருந்துவர் எனும் குறிப்பு கோடி பெறும்,

'கல்மலைத் தலை உருண்டுய்ந்த சில கவுமாரர்' என்றது; தன் வினையைப் பிறவினையாக் கூறிய தனிநிலை.

" பல்லில் ஒன்றும் நரம்பி லொன்றும்
பழுதுபட்டுச் சிதருமல் பாதுகாத்த
நல்லியல்சண் முகப்பெருமான் "

என இவ் வரலாற்றைப் பிறிதோர் இடத்தும் குறித்துளர். மற்று, இது போன்ற வரலாறுகளும் பல இருக்கின்றன.

செபமாலை உருள, நீர் மணியில் உருள, சிரம் களத்தில் உருள, பந்தும் உருள, சிறுவர் துயர் மிஞ்சியுருள, கலியுருள, வேலவா! பாலகா! சிறுதேர் உருட்டியருள் எனமுடிக்க. (௩)

அட்டமா சித்தியொடு முத்தியும் பெறுவதற்கு
ஆகிய தவம் செய்யவும்,
அருமறையும் ஆகமபு ராணஇதி காசமும்
அறைந்த பொருள் ஆராயவும்
பட்டவர்த் தனர்மகுட வர்த்தனர்கள் ஆதியவர்
படுகள செயம்தோயவும்
பருமணிக் குவையும்அம் பொற்பணக் குவியலும்
படமுதலி யவும்எய்தவும்
குட்டகுன் மங்கள்முத லானபல நோய்களும்
குடியோடு நலமேவவும்
கூறுமற் றையபயன தொவ்வொன்றும் நெஞ்சிற்
குறித்தபடி பெற்றுய்யவும்
சிட்டர்பற் பலர்நாளும் வருபழனி நாயகா !
சிறுதேர் உருட்டி யருளே
சிவஞான தேசிகத் தலைமைபெறு பாலகா!
சிறுதேர் உருட்டி யருளே. 94

(பொ - ரை.) எண்வகைச் சித்தியுடன், (அரிய) வீடு பேறும் அடைதற்கு ஆன (சிறந்த) தவத்தைச் செய்யவும்;

அருமையான மறைகளும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங்களும் அறிவித்த பொருள் (நுட்பங்களை) ஆராயவும்;

(மகுடம் இன்றிப்) பட்டம் மட்டும் அணிந்தவர்கள், மகுடம் அணிந்தவர்கள் முதலிய மன்னர்கள், (வீறுபெற்ற) போர்க் களத்தில் வெற்றி பெறவும்;

---

94. அட்டமா சித்திகள் - எண்வகைச் சித்திகள்; 81-ஆம் பாடல் விரிவுரையில் இது குறித்த குறிப்புளது; ஆங்கு அதை யறிக. படுகளம் - போர்க் களம். குவை - குவியல். படம் முதலிய- சிற்பம் சித்திரம் முதலியன. சிட்டர் - ஞானிகள்.

பருத்த (நவ) மணிகளின் பெருக்கமும், அழகிய பொன்னுலான பணப்பெருக்கமும், (பெரிய) ஓவியம் முதலியன பெறவும் ;

குட்டநோய்கள், குன்மங்கள் முதலிய பிணிகள் யாவும், (தம்) குடியொடு (நலிந்து) ஒழியும் நலம் நண்ணவும்;

உரைக்கப் பெறும் மற்றுள ஒவ்வொரு பேறும், உளத்தில் உணர்ந்தபடி பெற்று உய்தி பெறவும் ;

ஞானிகள் பலர் எந்நாளும் நண்ணும் பழனி நாயகா ! (உயர்ந்த நின்) சிறுதேர் உருட்டியருள் ;

சிவஞான பரம ஆசாரியருள் சிறந்த தலைமை பெறு சேயே ! சிறுதேர் உருட்டியருள், (எ - று).

## விரிவுரை

தன்னிழப்பைச் செய்விக்கும் தவம் என்பர் ; அத் தனிப்பெரும் தவம்,

> " சித்திதரும் முத்திதரும் செந்திருவைச் சேர்விக்கும்
> பத்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்கும் "

என்பர் மேலோர். நீ சிறுதேர் உருட்டிச் சேவை தந்தால், கனிவிக்கும் தவப்பேறு கைவருமே.

ஓதுவது வேறு ; ஓதியதன் பொருள் நுட்பம் உணரும் நிலைவேறு. தூய நூற்கள், ஒன்றுடன் ஒன்று முரணுவபோல் தோன்றும். மதி அது கண்டு மயங்கும். அந்நிலையில் எல்லாம் கற்பனையோ என்று எண்ணவரும். அங்ஙனம் ஆகாதபடி, பரமா ! நின் தேர்ப் பவனி வரின், அக்காட்சியால் நூல் நுட்பம் உணர் நுண்மாண் நுழைபுலம் கைவரும்.

உன் சிறுதேர் உருண்டால், வித்தக வேந்தர்கட்கு வெற்றி விளையும் ! செல்வபலம் சித்திக்கும். நொடிவிக்கும் நோய் பலவும் பொடியாமே ! நினைத்தது யாவும் நிறைவேறுமே ! ஞானிகள் போற்றும் பழனி நாயகமே ! பரம குருநாதா ! நீ சிறுதேர் உருட்டியருள் எனும் இப்பாடலை, ஓதும் போதே உள்ளம் உருகுகின்றதே !

'பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் ஆதியவர்' என்பதில், ஆதியவர், மண்டலிகர்களை உணர்த்தியது.

மண்டலிகர் - நாற்பது கிராமங்களை ஆள்பவர். ஒரு கோடி கிராமம் ஆள்பவர் மகுடவர்த்தன ரென்றும், மகுடவர்த்தனர் நாலாயிரவரை வணக்கி யாள்பவர் மண்டலீகர் என்று கூறும் மரபும் உண்டு. பட்டவர்த்தனர் - பட்டம் உண்டு; எனினும், மகுடம் அணியும் உரிமை இராதவர்கள். (௪)

மாதர்மொய்க் கும்படியொர் பைங்கிளிப் பரியில்வரு
மதனவேள் வெட்கும் அழகும்,
மரகத மணிக்கிரியெ னக்கடல் நடுத்துயிலும்
மாயவன் புகழ் வீரமும்
போதகத் திற்குடிகொள் பிரமாவும் வாணியும்
போற்றிடத் தகுகல்வியும்
புற்றின்அர வப்பணி புனைந்தவன் பரவுபரி
பூரண னந்தநிலையும்
ஆதவனும் அம்புலியும் அங்கியும் கருதற்(கு)
அமைவரு பெருஞ் சோதியும்
அனையநலம் உள்ளனஎ லாமணைந் தென்றென்றும்
ஆறெழுத்து ஓதும் அன்பர்
தீதறுக் குந்தொழில் செயும்பழனி நாயகா!
சிறுதேர் உருட்டி யருளே!
சிவஞான தேசிகத் தலைமைபெறு பாலகா!
சிறுதேர் உருட்டி யருளே! 95

---

95. பரி - ஊர்தி. மதனவேள் - காமன். போதகம் - தாமரை. வாணி - கலைமகள். ஆதவன் - சூரியன். அம்புலி - சந்திரன். அங்கி - தீக் கடவுள். அமைவரு - அடங்காத.

(பொ - ரை.) (மோகித்த) மாதர்கள் மொய்க்கும்படி ஒரு பசுங்கிளி ஊர்தியில் (பவனி) வரும் காமன் நாணும் கட்டழகும் ;

மரகத ரத்தின மலையெனும்படி, (பாற்)கடல் நடுவில் பள்ளி கொள்கின்ற (வெற்றித்) திருமால் புகழும் வீரமும்;

தாமரை நடுவில் தங்கி யிருக்கும் பெரியோனான நான் முகனும், நாமகளும் கணிக்கத் தக்க கலையறிவும் ;

புற்றில் (குடியிருக்கும்) பாம்புகளை அணிகலனாக அணிந்த (வரத) சிவனார் வழிபடும் அளவு, வளர்ந்து நிறைந்த இன்ப வளமும் ;

பரிதியும் மதியும், அழல் பண்ணவனும் எண்ணற்கு அரிய பேரொளியும் ;

அத்தகைய மங்களமாக உள்ளவைகள் அனைத்தையும் உடையவனாய், எந்நாளும் ஆறெழுத்தை ஓதும் அன்பர் கட்கு (விளையும்) பொல்லாப்பைப் போக்கும் (பயனான) செயல் புரிகின்ற பழனியப்பா ! (உயர்ந்த நின்) சிறுதேர் உருட்டியருள் ;

சிவஞான பரமாசாரியருள் முதன்மை பெற்ற சேயே! சிறுதேர் உருட்டியருள், (எ - று).

## விரிவுரை

'அனையநலம் உள்ளன எலாம் அணைந்து' என்பதில், கணுவற அவைகள் தன்னில் கலந்திருக்கப் பெற்றவன் பழனிப் பரன் என அறிக. அந்த அணைவு அவன் இயல். ஓதும் அன்பர் தீதறுப்பது அவன் தொழில்.

குறிப்பு :—"மாதர் காதல்" எனும் தொல்காப்பியச் சூத் திரத்தின்படி, விருப்பத்தை உணர்த்தும் மாதர் எனும் உரிச் சொல், விரும்பப் படுகிற அழகுள்ள பெண்களுக்கு ஆகு பெயர்.

கிளி - கிள் கிள் என்று கூவுவதால் போந்த பெயர்.

மாயவன் - மாயா காரியங்களை யுடையவன்; மாயை யாவது, கூடாததையும் கூட்டுவிக்கும் திறம்; இது அகடித கடநா சாமர்த்தியம் எனப் பெறும்; மாயை - உலக காரணமான பிரகிருதியுமாம்; அதிசயிக்கத் தக்க குணங் களும் செயல்களுமாகலாம்; மாபெரும் இவைகளை யுடைய வன் மாயன்; மற்று, மாயைபோல் கருநிறம் உடையவன் என்றுரு முளர்.

போதகம் என்பதை, போது அகம் எனப் பிரிக்க; போது என்பது, பொழுது கண்டு மலரும் பூவை உணர்த் தியது; 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' எனப் பெறுதலின், அது உயரிய தாமரையை உணர்த்தியது. அகம் - நடுவிடம்.

அரா எனும் குறியதன் கீழ் ஆ குறுகி, அம் சாரியை பெற்று அரவமென நின்றது. பணி - பண்ணப் படுவது 'பணி' எனும் பொருளில் அணிகலன்களை அறிவிக்கும்; இங்குப் பணியரவம் புனைந்தவன் - படமுடைய பாம்புகளை (அணிகலன்களாப்) புனைந்தவன் எனும் பொருட்டு. இப் பொருளில், பணத்தை யுடையது பணி என்க; பணம் - படம். ஆதவன் - நன்றாகக் காய்பவன்; அம்புலி - அழகு புல்லப் பெற்ற மதி. (ஐ)

நாதக் கழற்றாட் குகவேளே!
நளினப் பிரமா அழப்புடைத்தாய்!
நயனம் அறுமூன்(று) உடையானே!
நறும்பூங் கடம்பு புனைமார்பா!
சீதக் களபக் குரும்பைமுலைத்
தெய்வா னையும்கா னகத்தில்இளம்
தினைகாப் பவளும் புணர்கணவா!
செங்கேழ்ப் பவளக் கிரிபோல்வாய்!

---

96. நளினம் - தாமரை. நயனம் - கண். செங்கேழ் - செந் நிறம். மிளிர் - பிரகாசிக்கும்.

வேதக் கலைமேற் பொருளானாய்!
விண்ணோர் குடிக்கோர் காவலவா!
வீரர் பலரும் தொழும் ஒருவா!
வெற்பா யிரத்தும் மிளிர்தேவே!
ஓதக் கடல்உண் டவன்குரவா!
உருட்டி யருளாய் சிறுதேரே
உலகோர் புகழ்சீர் வயலூரரா!
உருட்டி யருளாய் சிறுதேரே. 96

(பொ - ரை.) (விமல) நாத(ம் எழுப்பும் வீர)க் கழல் அணிந்த (உயர்ந்த) திருவடிகளை யுடையவனாய், (முத்தி) விருப்பம் விளைவிக்க, இதய குகையில் இருப்பவனே!

தாமரை மேல் தங்கிய பிரமன் வருந்தத் தண்டித்த வனே!;

பதினெட்டுக் கண்களுடைய பரனே!; மணம் கமழ் கடப்ப மாலையணி மார்பனே!;

குளிர்ந்த களபம் தடவிய குரும்பை போன்ற குயங் களை யுடைய தெய்வ யானையும், காட்டில் தினைப்புனம் காக்கும் இளம் பருவ வள்ளியாரும் (ஆன இருவருடன்; கம்பீர) அத்துவிதம் செய்யும் கணவனே!

(பளபளக்கும்) செந்நிறப் பவளமலை போல்பவனே!;

வேதமாகிய அருள் நூலும் விளக்கிக் கூற இயலாத மேதகு பொருளாய் மிளிர்பவனே!; ககனர் குடி காக்கும் காவலனே!; வீரர் பலரும் வணங்கும் மாபெரும் வீரனே!

எண்ணிறந்த மலைகளிலும், ஒளிமயமா யிருக்கும் தெய் வமே!;

ஊற்று நீர்க் கடலை உண்ட குறு முனிவரின் குருவே! (நீ) உயர்ந்த சிறுதேர் உருட்டியருள்;

உயர்ந்தோர் துதிக்கும் சிறப்புடைய (பழனி யெனும்) வயலூர் வளவா !; (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தி யருள், (எ - று).

## விரிவுரை

உரிய கருவி கரணம் ஓய்ந்த போது, தூய மென்மை ஒலி தோன்றும்; அவ்வொலி கேட்டு ஆறுதலடையும் ஆன்மா. அவ்வமயம்,

" அல்லில் கதிதான் அருள்சிறந்த வேலிறை
புல்லி நம் உள்ளம் புகும்."

அப்போது, " கல் என்னும் நல்நாதம் கேளாமோ கேளோய் " என்பர் பாம்பன் அடிகள். அந்த நாதத்தை உபாசிப்பதே நாதோபாசனை. அந்த உபாசகர்க்கு அருள் பாலித்து, கல் கல் என்று கற்க வேண்டுமவற்றைக் கற்பித்து, வீட்டில் வேட்கை விளைவிக்கும் உன்னை, 'நாதக் கழல் தாள் குக வேளே ' என்று கூப்பிடுகின்றோமே !

பெரியோன் பிரமன் பிழை செய்தான். அழுமளவு தண்டித்து, தவிரா அவன் வினை தவிர்த்தவன் நீ.

'ஷட்ப்ரஹ்ம விலாச வக்த்ரம், அஷ்டாதச விலோசனம், துவாதச ஹஸ்தம், உபய சரணார விந்தம், சர்வாவயவ ஏக மங்கள விக்ரஹ தேஜோ மயமானது அறுமுகத் தெய்வம்' என்று, வடமொழிக் காந்தம் வாய் மலர்கின்றது.

பங்கயம் போன்ற கண்கள் பன்னிரண்டு; நீலோற்பம் ஒத்த நெற்றிக் கண்கள் ஆறு எனும் பொருளில்,

" முளரி முந்நான்கு —மூவிரு குமுதம் புரைவிழி"

எனத் திருச்சிற்றம்பல நாடிகள் அருளிய திருச்செந்தில் அகவலும் தெரிவிக்கின்றது. இவைகளை எண்ணி, 'மூவாறு கண்ணுடைய முருக வேளே '! என்று பிறிதோர் இடத்திலும்,

‘அக்கினிக் கண்ணால் அரனீன்ற மைந்தனுக்(கு)அச்
சக்(கு)இலையென் பாரும் தவத்தரோ—கொக்கிரண்டு
கூறாக வென்றாய்! குளிர்பழனிக் கோயிலிற்கூ(டு)
ஆறும் காலத்தில் அறை’

என்று பழனித் திருவெண்பாவிலும், ‘முக்கண் அவிர் பொற்பு, அறுமுகத்தினும் உளானே’ என முன்னைய பருவத்திலும் குறித்துளன்; அதையே, ‘நயனம் அறுமூன் றுடையானே’ என இங்கேயும் சொல்லி அழைக்கின்றேன்; இது கூறியது கூறலல்ல; ஒருகாற் கூறியதையே மீண்டும் காரணமின்றி எடுத்துரைப்பது அது. கூறியதையே ஒரு காரணம் பற்றி எடுத்துக் கூறும் இது, அநுவாதம் என்பதை உலகம் அறியுமே!

வான்மகள் மான்மகள் இருவரையும் சமமாக்கி இணங் கும் நினையன்றி, உய்யவழி உளதோதான். வேதம் உடல்; கலை உள்ளம்; நீ பொருள்; இவைகளை உணர்ந்து, ‘வேதக்கலை மேல் பொருளானாய்’ என்று விளிக்கின்றேன். காவலவா! தேவே! குரவா! வயலூரா! சிறுதேர் உருட்டியருள் என்றபடி. (சு)

## பரமன் ஊர்ந்த பெருந்தேரின் அமைப்பு

நீச்சுக் கடங்காக் ககனவெளி
நிறைய வெயிலும் நிலவும்உமிழ்
நீர்மைச் சுடர்கள் உருளாக,
நிகமத் தொகைவாம் பரியாக,
வீச்சுக் கசைதா ரகம்ஆக,
வெற்புச் சிலையும் பணிநாணும்
விழியாக் கணையும் கொளும்பித்தன்
வென்றி விழையும் இறையாக,

97. நீச்சுக்கு - நீந்துதலுக்கு. ககன வெளி - ஆகாயம். சுடர் கள் - சூரிய சந்திரர்கள். உருள் - சக்கரங்கள். நிகமம் - வேதாகமம்.

பேச்சுத் தொழில்ஓ வரும்மனையும்
பிரச மலர்ப்பீ டமும்தவத்தோர்
பெருங்கூட் டமும்தோய் கிழப்பனவன்
பிழைதீர் தருசா ரதியாக,
ஓச்சும் புவியாம் பெருந்தேர்மீ(து)
உருட்டி யருளாய் சிறுதேரே
உலகோர் புகழ்சீர் வயலூரா!
உருட்டி யருளாய் சிறுதேரே. 97

(பொ - ரை.) நீந்துதலுக்கு அடங்காது நீளுகிற வெட்ட வெளியான விண்ணில், வெயிலும் நிலவும் நிறைய உமிழும் மதியும் பரிதியும் உருளைகளாகவும்;

வேத தேவதைகள் நான்கும், பாய்ந்துவரும் பரிகளாக வும்; வீசி யடிக்கும் சவுக்கு, (விளங்கும்) ஓங்காரமாகவும்;

(மேரு) மலையாகிய வில்லும், வாசுகியாகிய நாணியும், கண் திறவாத (அறிதுயில் கொள்ளும் திருமாலாகிய) கணை யும் கொண்ட பித்தன் ஆன சிவபிரான், (தனி) வெற்றி விரும்பும் தலைவன் ஆகவும்;

ஓயாது கலைகளை உரைப்பதே தொழிலான (வாணி யாகிய) மனைவியும், தேன் நிறைந்த (பிறங்கும் கமல) மலர்ப் பீடமும், (உயர்) தவ முனிவராம் பெருங் கூட்ட உறவின ரும் சூழ்ந்த முதியோனான அந்தணப் பிரமனை, குற்றம் தீர்ந்த தேர்ப்பாகன் எனக் கொண்டு, (சிவனார்) செலுத்தும் பூமியாகிய பெருந்தேர் மேல், (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள்;

வாழ்ந்தோர் ஏத்தும் சிறப்புடைய வயலூரா! (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள், (எ - று).

---

வாம்பரி - தாவும் குதிரைகள். கசை - சாட்டை; இது பரியோட்டும் சவுக்கு. தாரகம் - பிரணவம். பணி நாண் - (வாசுகிப்) பாம்பாகிய நாணி. இறை - சிவம். ஓவு அறும் - ஓயாத. மனை - நாமகள். பிரசம் - தேன். கிழப் பனவன் - பிரமன். ஓச்சும் - செலுத்தும்.

### விரிவுரை

சந்திர ஆதித்தர்களே சக்கரங்கள். ஒலியிடும் வேதாகம தேவதைகளே குதிரைகள். சார்பான பிரணவமே சவுக்கு. மாபெரும் வில்லோ மேரு மலை. நடுக்குறுத்தும் பாம்பே நாணி. கண் நிறவாத் திருமாலே கணை. மேலும், ஓயாது பேசுவாளான வாணியால் பற்றப்பட்டு, மென் கமலத்தில் இருந்து பழகி, துறந்த அருந்தவர் நடுவில் அகப் பட்டிருக்கும் அயனாகிய வயோதிக அந்தணன் சாரதி. இவர் செலுத்துவதோ நிலமாகிய தேர்; பெரும் தேர்மேல் இருக்கும் தலைவரோ பித்தப் பிரான். வெட்கக் கேடு. வெற்றி கிட்டுமா அந்த விமலர்க்கு?

உலகம் புகழும் பழனியாய்! சிவனார் தேர்மேல் நின் சிறுதேர்ச் செலுத்தியருள்! அதன்பின் உய்யுமே இந்த உலகம் என்று விண்ணப்பித்தபடி. இப்பாட்டின் உள் ளுறை எழுத இயல்வதில்லை; அனுபவிகளிடம் கேட்டறிக.

குறிப்பு:—சுடர் - ஒளி; அதனை யுடைய சூரிய சந்திரர்க்கு ஆகு பெயர். (எ)

### வேறு

தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதான

கலப்பில் பிழைமுயல் திருட்டு நினைவினர்
கருத்தில் நுழையாதாய்
கதிக்கொர் விதையென உரைத்த கிளியமர்
கனத்த திரள்தோளா!
அலப்பு மலியஎன் உளத்தில் வெகுவித
அவிர்ச்சி தருகோலா!
அகத்தி யனைநிகர் சிலர்க்கொர் பிரணவ
அருத்தம் நுவல்வாயா!

---

98. கிளி - அருணகிரி நாதர். அலப்பு - விரிவு. அவிர்ச்சி - மிளிரும் ஒளி. பனிருநெறி - பன்னிரு சமயங்கள். பெரியன் - நந்தி தேவர். உலப்பு இல் - முடிவிலாத.

நலப்ப னிருநெறி யினர்க்கும் ஒருபொது
நடக்கை அருள்பாதா!
நரைத்த மழவிடை முகத்தொர் பெரியனும்
நடுக்கம் உறுகோபா!
உலப்பில் பழனியில் வசிக்கும் இறையவ!
உருட்டு சிறுதேரே
உமைப்பெண் முலைநுகர் சிவத்த நிறமக!
உருட்டு சிறுதேரே. 98

(பொ - ரை.) (என்றும்) சேர்ந்து வாழ்வது இல்லாமல்; குற்றம் செய்ய முயலும் கள்ள நெஞ்சினர் கருத்தில் கலவாதவனே!;

முத்திக்கு ஒரு வித்து எனப் (பயனுள திருப்புகழ்) பாடிய (அருணகிரிக்) கிளி அமர்ந்த திரண்டு உருண்ட திருத்தோளினனே!;

விரிவாக நிறைந்து விளங்க, அடியேன் உளத்தில் பலவித விளக்கம் காட்டுகின்ற அழகனே!;

அகத்தியர் போன்ற சில அருந்தவர்க்கு, ஒப்பற்ற ஓம் பொருள் உரைத்த திரு வாயினனே!;

நலம் சிறந்த (அகம் புறம் எனும்) பன்னிரு சமயத்தினர்க்கும், ஒப்பற்ற பொது நடை அருளும் திருவடிகளை உடையவனே!;

வெளுத்த இளமை விடைமுகம் கொண்ட ஒப்பற்ற பெரியவரான திருநந்தி தேவரும், நடுக்குறும்படிச் செய்த கோபப் பிரசாதனே!;

வற்றாத வளமுடைய பழனியில் வாழும் இறையவனே! (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள்;

உமை யம்மையின் தனப்பால் பருகிய சிவந்த நிறச் சேயே! சிறுதேரைச் செலுத்தியருள்; (எ - று).

விரிவுரை

வேற்றுமை யின்றி, எவரும் கலந்து வாழ்வதில் இன்பம் உண்டு. கலப்பு வாழ்விலும் கள்ளத்தன மெனில், கடவுளர்

தெய்வம் அன்னார் கருத்தில் நுழைவது இல்லை என்ற முதலடி, எவரும் மறவா இயல்பினை யுடையது.

“ முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ”

என்று, அருணகிரியார் பயனுன திருப்புகழை ஆரம்பத்திற் பாடினர். அதை உளங்கொண்டு, ‘கதிக்கொர் விதையென உரைத்த கிளி’ என்றார். அருணகிரிநாதர், இறுதியிற் கிளியாகி எம்பிரான் திருத்தோள்மேல் இருக்கின்றார் என்பது வரலாறு.

‘ என் உளத்தில்.........அவிர்கோலா ’ என்பது, அடிகளின் சொந்த அனுவபம்.

“ துவாதசாந்தத் தலம் கடந்த மூலத் தலத்து முளைத்த முழு முதலே” என்று குமரகுருபரர் அருளியபடி, நலஞ் சிறந்த அருளாட்சி அங்கிருந்தே நடைபெறுகின்றது. எவ்வழியாயினும் அவ்வழி நல்லதேல், அம்மான் திருவடி அங்கு அருளாடல் காட்டும். அதை, ‘நலப்ப ணிருநெறியினர்க்கும் ஒருபொது நடக்கை யருள் பாதா’ என்பதில் பெற வைத்தார்.

### கீழிருந்து மேல் ஏறும் ஆதாரங்கள்

(1) மூலாதாரம் - (இது குதத்திற்கும் குய்யத்திற்கும் நடு இடம்; குய்யம் - ஆண் குறி.) ஆக்ஞை முதல் சுவாதிட்டானம் வரையில் உள்ள ஆதாரங்கட்கு, அடிப்படையாயுள்ளது என்பது இதன் பொருள்.

(2) சுவாதிட்டானம் - நாபி. (உயிர்ச் சத்தின் இருப்பிடம் என்பது பொருள்.)

(3) மணிபூரகம் - மார்பு. (விந்துவின் இருப்பிடம் என்பது பொருள். (இது பிராண வாயுவுடன் இருப்பது.)

(4) அநாகதம் - இருதயம். (போக்கு வரவு என்பது பொருள்.)

(5) விசுத்தி-மூக்கு நுனி. (மாறல் என்பது பொருள்.)

(6) ஆக்ஞை - நெற்றி. (கட்டளை; அல்லது மிளிர்தல் என்பது பொருள்.)

மூலாதாரம் - சுவாசத்தின் அடிவேர்.

சுவாதிட்டானம் - சுவாசம் கும்பித்திருக்கும் இடம்.

மணிபூரகம் - சுவாசத்தின் நிறைவு நிலம்.

அநாகதம் - சுவாசப் போக்கு.

விசுத்தி - அசுத்தி கழித்து சுத்திகரிக்கும் நடுநிலை.

ஆக்ஞை - சுவாசம் ஒன்றுமற்று வெளியா யிருக்கும் யோக பூமி.

இவை மேலிருந்து கீழிறங்கும்போது, ஆக்ஞையையே மூலாதாரமாகக் கொண்டு வரும். இப்படியுள்ள பன்னிரு வழியிற் படர்பவர்க்கும் அருளும் பாதத்தான் என்பதும் ஒருவகை.

சமயங்கள் ஏற்றத் தாழ்வை யுடையன எனினும், அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குரு மூலமாகவே உருவாயின. அகச்சமயம் ஆறும் வலப்புயம்; புறச்சமயம் ஆறும் இடப்புயம்; ஆறு திசைகளே ஆறுமாமுகம் என்பது கௌமார சமயக் கொள்கை; "ஆறு திசையே முகமாய்ச் சமயங்கள் ஈராறே அடல் தோளாகி" என்பது போல்வன அவர்கள்தம் அறிவிப்பு. அதன்படி, அகம், அகப்புறம் எனும் பன்னிரு சமயத்தார்க்கும் ஒரு பொது நடை யருளுகிறது புனித மலரடி எனினுமாம்.

பிரமன் பிழைபட்டான்; அதனால் சேந்தனால் சிறைப் பட்டான்; பலகாலம் பொறுத்து, நந்திதேவர் சிவாக்ஞைப் படி வந்தார்.

"கடிகொள் பங்கயன் காப்பினை, எம்பிரான்
விடுதல் கூறி விடுத்தனன் ஈங்கெனை;
தடைபடா(து) அவன் தன்சிறை நீக்குதி!
குடிலை அன்னவன் கூறற்(கு) எளியதோ?"

என்றார்; அது கேட்ட கந்தசிவம்,

"அன்ன வூர்தி அருஞ்சிறை நீக்கலன்;
நின்னை யும்சிறை விட்டுவன் நிற்றியேல்!
உன்னி ஏகுதி ஒல்லையில் என்றலும்"

"வேற தொன்றும் விளம்பிலன் அஞ்சியே
ஆறு மாமுகத்(து) அண்ணலை வந்தியா,
மாறிலா வெள்ளி மால்வரை சென்றனன்
ஏறு போல்முகம் எய்திய நந்தியே"

எனும் கந்தபுராணத்தால், 'பெரியனும் நடுக்கமுறு கோபா' என்பதன் வரலாற்றை உணர்க. (அ)

தத்ததன தத்ததன தத்ததன தானா

மைக்கிரிந டத்தியொர்ம யிற்பரியும் ஊர்வாய்!
மத்தகயம் ஒற்றையுள்ம திக்கஇவர் வானே!
சுக்கிரன்அ டிப்பணிசெய் துட்டர்குல காலா!
சுத்தபர தத்துவசு கத்தர்குரு நாதா!
எக்கியம திற்றகர்இ றைச்சிநுகர் தீயோர்
இட்டமும்ஓர் சற்றருள்இ றைக்கினிய சேயே!
உக்கிரனுள் உற்றவஉ ருட்டுசிறு தேரே
ஒப்பில்பழ னிக்குகஉ ருட்டுசிறு தேரே. 99

(பொ-ரை.) மலைபோல் உயர்ந்த ஆட்டை (ஊர்தியாகச்) செலுத்தி, ஒப்பற்ற மயிலாகிய பரியையும் ஊர்பவனே!;

மதம் நிறைந்த (பிணிமுகம் எனும்) ஒரு யானையை, தியானத்தில் கருதுமாறு, (அதையும்) ஏறிச் செலுத்துபவனே!;

சுக்கிரனது குற்றேவல் செய்யும் துட்டர்(களான அசுர) குல அந்தகனே!;

---

99. மைக் கிரி - ஆடாகிய மலை; உருவகம். மத்தகயம் - மத யானை. சுகத்தர் - ஆநந்தமான ஞானிகள். எக்கியமதில் தகர் - வேள்வியில் உதித்த ஆடு.

தூய பர தத்துவ இன்பரான ஞானிகட்குக் குரு முதலே!;

வேள்வியில், ஆட்டின் இறைச்சியை உண்ணும் தீயோர் விருப்பத்தையும், ஒரு சிறிதளவு நிறைவேற்றும் சிவனார்க்கு இன்ப மைந்தனே!;

(வெற்றியை விரும்பிய) உக்கிரன் (எனும் பூதகணன்) உளத்துள் புகுந்து இருந்தவனே!; (சிறந்தநின்) சிறுதேர்ச் செலுத்தியருள்;

ஒப்பு சொல்லற்கு இயலாத பழனித் தெய்வமே! சிறுதேர் உருட்டியருள், (எ - று).

விரிவுரை

ஊர்வாய்! இவர்வானே! காலா! நாதா! சேயே! உற்றவ! குக! சிறுதேர் உருட்டுக எனக் கூட்டுக.

நீலகிரிபோல் நிமிர்ந்து அச்சுறுத்திய ஆட்டை, 'மைக்கிரி' என உருவகித்தார். (மை - ஆடு.)

ஆடு ஒன்று, மயில் ஒன்று, பிணிமுகயானை ஒன்று ஆக, இம் மூன்றும் முருகன் ஊர்திகள் எனல் எண்ணத் தருவன. ஆடும் மயிலும்தான் எனதைபடி, ஈராயிரம் தந்த முள யானையும் வாகனம் என்பது குறிப்பு.

சுக்கிரன் அசுர குரு. அவர் ஏவலின்படி நிற்பவர் அவுணர். தேவர்களின் ஊழிற்குத் தக்கபடி, அவர்கட்கு அவுணரால் அவதியை விளைவிப்பவர் அந்த அசுரர்கள்.

எல்லை மீறியபோது பழனிவாழ் பரன், அவுணர் குடியை அடியொடு கெடுப்பன் என்பதை, 'துட்டர்குல காலா' என்பதில் பெறவைத்தார்.

சுத்த பர தத்துவம் என்பது, முடிந்த நிலை. அதில் தோய்ந்தவர் ஆநந்தாதிசயர். நலம் சிறந்த அவர்தம்

'குருநாதர்' எனும் பகுதியை, நினையும்போதே நெஞ்சம் நெகிழ்கிறதே!

இச்சை காரணமாக வேள்வி செய்வர் சிலர். அந்த அஜமேத யாகம் பரிதாபகரமானது.

" அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று "

என்ற பொதுவேத உண்மைக்கு அன்னோர் புறமானோர். என்ன செய்வது? இரக்கம் காரணமாக, சுயநலவாதிகளான அவர்கட்கும், 'சற்று அருள் இறைக்கு இனிய சேயே' என்றார். நீயாயின், அச் சிறிய அருளும் செய்யாய் என்பது குறிப்பு.

உக்கிரன் என்பான், பூதகண அதிபருள் ஒருவன். அவன் அதிசூரனை எதிர்த்த அமயம், முருகா! முருகா!' என்று உருவேற்றியபடியே இருந்தான். அவனது அன்பு கண்டு, அவனுள் ஆவேசித்தான் பழனி அத்தன். அதன் பயனாக, அவன் வெற்றி கொண்டு விருது ஊதினன். இவ் வரலாறு கந்தபுராண யுத்த காண்டத்தில் இருக்கிறது. (கூ)

தனனதனத் தனனதனத் தனனதனத் தனன

அவனுதிமுப் பிரிவாகியெட்
டரிதாகுமெய்ப் பொருளே!
அருணசலத்(து) உறுகோபுரத்(து)
அவிர்சாருவிற்(கு) எளியாய்!
சவமாவிழற்(கு) இசையாமுழுத்
தவர்மாமனத்(து) அணைவாய்!
தமிழ்மாரிகொட் டிடுமேகம்ஒத்
தவர்மால்அறத் தொடர்வாய்!

100. சாரு - கிளி. சவம் - பிணம். கவளம் - கவள உணவு. உடுத்தவள் - (ஆடையாக) உடுத்த நிலமகள்.

கவளாசலத்(து) ஒருதோழமைக்
கருணைகரக் குமரா!
கடல்ஏழுடுத் தவள்வாழ்வுறக்
கருதார்உயக் குறியாய்!
சிவனார்விழிப் புதல்வா!எழிற்
சிறுதேர்உருட் டுகவே
திருவாழ்தகைப் பழனிபுரிச்
சிறுதேர்உருட் டுகவே. 100

(பொ - ரை.) அவன் (அவள் அது) முதலாக (ப் பேசும்) மூன்று பிரிவாகி, (மனம் வாக்குக் காயத்திற்கு) எட்டாத மெய்ப்பொருளே!;

அண்ணாமலையில் உள்ள கோபுரத்தில் அமர்ந்த (அருண கிரிக்) கிளிக்கு எளியவனே!,

(வீணே) பிணமாக விழுதற்கு உடன்படாத(முத்திவிழை) மாபெரும் தவத்தினர்தம், கம்பீர உளத்திற் கலந்தவனே!;

தமிழ்மழை பொழியும் காளமேகம் போன்ற கவிஞர் களின் (தொல்லை) மயக்கம் தொலைய, (அவர்களைத்) தொடர் பவனே!;

கவள உணவு கொள் மலைபோன்ற கணபதியின், ஒப் பற்ற தோழமையும் அருளும் பெற்ற அத்தா!;

(நெடுங்) கடல் ஏழையும் ஆடையாக உடுத்த நிலமகள் மகிழ்ந்துவாழ, நினையாதவர் கடைத்தேற நினையாதவனே!;

சிவனார் (நெற்றிக்) கண்வழி வந்த சேயே!; (சிறந்த நின்) சிறுதேர்ச் செலுத்தியருள்;

(எண்வகைத்)திருவும் வாழும் இயல்புடைய பழனியில், (சிறக்க நின்) சிறுதேரைச் செலுத்தியருள், (எ - று).

விரிவுரை

பொருளே! எளியாய்! அணைவாய்! தொடர்வாய்! குமரா! குறியாய்! புதல்வா! சிறுதேர் உருட்டியருள் எனக் கூட்டுக.

" அவன் அவள் அது எனும் அவைமூ வினைமையின்
தோன்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர் "

எனும் சிவஞானபோத முதற் சூத்திரத்தை நினைவூட்டியது முதலடி.

அவன் அவள் அது எனும் உயர்திணை, அஃறிணை உலகங்களைத் தோற்றுவித்துத் தொழிற் படுத்தி அமைதி காட்டும் நின்னை,

" நோக்கினும் நுழைகிலை, நுவலு கின்றதோர்
வாக்கினும் அமைகிலை, மதிப்ப ஒண்கிலை ;
நீக்கரும் நிலைமையில் நிற்றி, எந்தை! நீ
ஆக்கிய மாயம் ஈ(து) அறிகி லேம்அரோ "

என்று வானோர் அன்று வழுத்தியபடி, காட்சிக்கும், கருதல் அளவைக்கும், வாக்கிற்கும் 'எட்டரிதாகும் மெய்ப் பொருளே!' என்றார்.

" அவத்தினிலே இறத்தல் கொலோ? எனக்கு நீ தந்தை தாயென்
றேயிருக்கவும், நானும் இப்படி யேதவித் திடவோ? சகத்தவர்
[கண்கள்காண
பாதம் வைத்திடை யாதரித்தெனைத் தாளில் வைக்கநி யேமறுத்திடில்
யார்நகைக்கும் ஐயா "

எனவும்,

" எரிதனில் இடும் வாழ்வே...
இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ? பாச நாசனே!"

" நீயும் நானுமாய், ஏக போகமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள்
இடைமருதில் ஏக நாயகா "

என்றும், எத்திப்போற்றுவார் இதயத்தில் கலந்து இருப்பை.

அது கருதியே, 'சவமா விழற்கு இசையாமுழுத் தவர்மா மனத்து உறைவாய்' என்கிறேன்.

" கந்தா ! கடம்பா ! கதிர்வேலா ! கார்த்திகைமார்
மைந்தா ! பழனி மலைமகனே !—பந்தவினை
பாற்றவா ! சோதி பதியவா ! வெம்பிறவி
ஆற்றவா ! ஆறுமுக வா !"

" ஐயன் விழிபயந்த ஆறு முகமணியே
கைகளிரண் டாறுடைய கற்பகமே—செய்ய
வடிவேலா ! வள்ளி மணவாளா ! தெய்வப்
பிடிகேள்வா ! நீயே துணை "

என்று, பாடிக்கொண்டே யிருப்பார் பாவலர்கள். கவி மழை பொழி மேகமான அவர்கள், உலகியல் சூழ்நிலையை உணரார். எவரையும் நம்புவர்; எளிமைப் படுவர். அதனால், மாபெரும் உலகம் பலவகையில் அவர்களை மயக்கிவிடும். வேதனைகள் பல, அதனால் விளையும். 'அடிபேணுதல் தவமே' என்று பாடும் பாவலரை, மாயை பற்றாதபடி தொடர்ந்து அவர்கட்குத் துணைசெய் நின்னை, 'மால் அறத் தொடர்வாய்' என்று கூறி எம்மனம் குதூகலிக்கின்றது.

உலகை ஒரு கவளமாக விழுங்குவார், மலைபோல் தோற்றம் கொண்ட மகாகணபதி. விக்கிநம் தவிர்க்கும் அத் தும்பிமுகர் தம்பியாய், இன்ப அருட்கு இருப்பிடமாய், என்றும் பதினாறாக இருந்து, இறவாப் பிறவா ஏற்றமுள உன்னை உணர்கிறது என் உள்ளம். ஆதலின், 'கவளா சலத்து ஒரு தோழமைக் கருணாகரக் குமரா !' என்று, அந்த அருமை யறிந்தே அழைக்கின்றேன்.

புனிதர் பெருகினால் பூபாரம் குறையும்; அதமர் மிகுவரேல் அதிக பாரமாம்.

வாக்காலும் மனத்தாலும் ஒருவர் தீமை செய்வரேல், அப்பாவப் பயன் அவரோடுமட்டும் அமைவது இல்லை. உலகம் முழுதும் ஊடுருவும். இப்படியே பலர் செய்யும் பல

பாவங்கள், வியாபகமாகி எங்கும் விளங்கி, நிலமகள் கழுத்தை நெளியச் செய்யும். அந்நிலையில், பூதேவியின் புலம்பல் எழும். அது பொறுக்கல் ஆற்ருதாய்!

'கடல் எழுடுத் தவள்வாழ்வுறக் கருதார் உயக் குறி யாய்.' தீயோரைச் சாய்த்து, நல்லோரை வாழ்விப்பை!; பூபாரம் தீர்ந்த பூதேவியின் பொலிவு கண்டு உன்னைப் போற்றுவோம்.

பெரும! சிவஞர் விழிவரு செல்வமே! அகில உலக மும் அமைதி பெற, வாய்மை ஞானிகள் வாழ்வு பெற, உயர்ந்த கவிஞர்கள் உயர்வு பெற, அன்பர்கள் இன்புற, திருமகளிர் எண்மரும் தாண்டவம் செய்யும் பழனிப் பதி யில், என்றும் தேர்ப்பவனியில் இரு என்று விகயம் காட்டி வேண்டியபடி. (௬0)

சிறுதேர்ப் பருவம் மங்களம்.

மஹான் • வண்ணச் சரபம் முருகதாசர் என வழங்கும்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

**பழனிப் பிள்ளைத்தமிழ் விரிவுரை**

நிறைவு பெற்றது.

வளர்க திருவருள்! வாழ்க உலகம்!

ஓம்.

## தினப்பலன் : ஓரையும்—கௌரியும்—முக்குணமும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு ... | சுக்கிரன் அமுதம் 7—8 சாத்துவிகம் 7-30—8 | சந்திரன் 9—10 | குரு லாபம் 11—12 | எமகண்டம் 12—1-30 | சுக்கிரன் 2—3 சுகம் | சந்திரன் 4—4-30 | இராகு காலம் 4-30—6 |
| திங்கள் ... | சந்திரன் 6—7 அமுதம் சாத். 6—7 | இராகுகாலம் 7-30—9 | எமகண்டம் 10-30—12 | சந்திரன் 1—2 1—1-30 தனம் | குரு 3—4 சாத்துவிகம் 3—4 | சுக்கிரன் 6—7 சுகம் | சந்திரன் 8—9 சாத்துவிகம் 8—9 |
| செவ்வாய் ... | சுக்கிரன் 8—9 லாபம் | எமகண்டம் 9—10-30 | சந்திரன் 10-30—11 சுகம் | குரு 12—1 | இராகுகாலம் 3—4-30 | சந்திரன் 5—6 அமுதம் | குரு 7—8 |
| புதன் ... | சந்திரன் 7—7-30 லாபம் | எமகண்டம் 7-30—9 | குரு 9—10 சுகம் | இராகுகாலம் 12—1-30 | சந்திரன் 2—3 | குரு 4—5 அமுதம் 4—4-30 | சுக்கிரன் 7-8 அமுதம் 7—7-30 |
| வியாழன் ... | எமகண்டம் 6—7-30 | சுக்கிரன் 9—10 | சந்திரன் 11—12 சாத். 11—12 | குரு 1—1-30 அமுதம் | இராகுகாலம் 1-30—3 | சுக்கிரன் 4-5 லாப. 4—4-30 சாத். 4—4-30 | சந்திரன் 6—7 அமிர்தம் |
| வெள்ளி ... | சுக்கிரன் 6—7 சுகம் | சந்திரன் 8—9 | குரு 10—10½ சாத்துவிகம் 10—10-30 | இராகுகாலம் 10-30—12 | சுக்கிரன் 1-2 அமுதம் 1—1-30 | எமகண்டம் 3—4-30 | குரு 5—6 தனம் |
| சனி ... | குரு 7—8 சாத்துவிகம் 7-30—8 | இராகுகாலம் 9—10-30 | சுக்கிரன் 10-30—11 அமுதம் | சந்திரன் 12—1 சாத். 12—1 | எமகண்டம் 1-30—3 | சுக்கிரன் 5—6 சுகம் | சந்திரன் 7—7½ லாபம் சாத். 7½—8 |

இராகுகாலம் எமகண்டம் நீங்கலாக இவைகளில் குறித்த உத்தம காலங்களில் ஸ்ரீகண்டாயகபாணி சுவாமியைத் தியா




பழனிமலைத் தோற்றம்